தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

9 - JUN 1982

வியாழக்கிழமை, 1981 ஏப்ரல் 23.

சித்திரை 11, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண [illegible]

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

ஒருவருக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியாகும். கல்வி தவிர மற்ற பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற விடுதிகளில் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லை. அங்கும் வறட்சியாக இருக்கிறதே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்பாராத வகையில் மின்சாரத் தடை ஏற்பட்டதன் காரணமாக சட்டமன்ற புது விடுதியில் தண்ணீர் வருவதில் தடை ஏற்பட்டதாக அறிகிறேன். தற்போது அது சரி செய்யப்பட்டு விட்டது. தண்ணீர் வரத் தொடங்கி விட்டது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

சிதம்பரம் அருள்மிகு நடராஜர் ஆலயத் திருப்பணி.

*வினா எண். 772—திரு. எல். இளையபெருமாள : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் ஆலயத்திற்கு 1979-80 ஆண்டில் கோவில் திருப்பணி வேலைக்காக அரசு மூலமாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(ஆ) தனியார் மூலம் நன்கொடையாக எவ்வளவு தொகை கிடைத்தது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) சிதம்பரம் அருள்மிகு நடராஜர் ஆலயத்திற்கு 1979-80 ஆம் ஆண்டில் கோவில் திருப்பணி வேலைக்காக அரசு மூலமாக ரூ. 3,00,000 ஒதுக்கப்பட்டது. தனியார் மூலம் ரூ. 1,56,776.62 நன்கொடை கிடைத்தது.

பெருந்துறையிலுள்ள அப்பச்சிமார் மடம் கோவில்.

*வினா எண் 77—திரு தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை அப்பச்சிமார் மடம் கோவிலை அரசு அறநிலையக் கட்டளையின் கீழ் கொண்டு வரும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் இந்த அற நிலையத்தை இலாக்கா ஆளுகையின்கீழ் கொண்டு வருவதற்காக சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

திரு. கு மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த அப்பச்சிமார் மடம் சம்பந்தப்பட்ட இந்த கோவில், மடத் திற்குச் சொந்தமான கோவில். இந்தக் கோவிலுக்கு ஏராளமான வருமானம் வருகிறது. அறநிலையத் துறையின் கீழ் எடுத்துக் கொள்வதற்கு என்ன தடை உள்ளது? அதை சீக்கிரமாக அமைச்சர் அவர்கள் செய்வாரா ?

அந்த கோவிலுடைய வருமானம் சரியான முறையில் செலவு செய்யப்படாமல் மக்கள் மத்தியிலே அதிருப்தி ஏற்பட்டு ஏராள மான புகார்கள் வந்து கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? மக்கள் விருப்பத்திற்கு ஏற்ப வருமானத்தைச் செலவு செய்யும் வகையில் இந்தக்கோவிலை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அப்பச்சிமார் மடத்தோடு இணைந் திருக்கிற கோவில் இது என்பதற்குச் சரியான விவரங்கள் இல்லாத காரணத்தால் கோயம்புத்தூர் துணை ஆணையர் முன்னால் இது எழுப்பப்பட்டு 19—7—1978 அன்று அவர் இது ஒரு பொது ஆலயம் அல்ல என்று தீர்ப்பு வழங்கி இருக்கிறார். அதற்கு பிறகு நம்முடைய அரசுக்கு அதுபற்றிய சில புகார்கள் வந்தன. அந்தப் புகாரை எழுதியவரே தன்னுடைய பெயரை தயவு செய்து வெளியிலே சொல்லி விடாதீர்கள்., சொன்னால்

தம்முடைய உயிருக்கே ஆபத்து என்று குறிப்பிட்டு புகாரை அனுப்பினார். அந்தப் புகார் மீது ஒரு உதவி ஆணையரை அனுப்பி விசாரிக்கச் சொன்னோம். அவர் ஒரு சிவராத்திரி விழா அன்று அந்த கோவிலுக்குப் போயிருக்கிறார். சிவராத்திரி, அமாவாசை போன்ற நாட்களில் அந்த கோவிலில் மக்கள் பெரிய அளவில் கூடுகிறார்கள். சேரன் போக்குவரத்துப் பேருந்துகள் அதற்காக தனியாக விடப்படுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு சுமார் மூன்று இலட்சத்திற்கு மேல் வருமானம் வருகிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதுபற்றிய விவரங்களை யாருமே சொல்ல மறுக்கிறார்கள். மூன்று சன்னதிகள் பூட்டியே வைக்கப் பட்டிருக்கின்றன. அங்கு அதற்கு வெளியே $3\frac{1}{2}$ அடி உயரமும் $1\frac{1}{2}$ அடி விட்டமும் உள்ள ஒரு உண்டியல் வைக்கப்பட்டிருக்கிறது. நெல், காளை போன்றவைகள் அந்த ஆலயத்திற்கு வழங்கப் படுகின்றன. அந்த ஆலயத்தில், ''உத்தரவின்றி உள்ளே வரக் கூடாது'', எம். பி. இராஜு; ''இது தனியார் உடைமை. எம்.பி. இராஜு''; ''அனுமதி பெற்று உள்ளே செல், எம்.பி இராஜு, பி.ஏ.'' என்றெல்லாம் போட்டுக் கொண்டு, ஒருவர் இதை அனுபவித்துக் கொண்டிருக்கிறார் என்பதாகத் தெரிகிறது.

இப்போது உதவி ஆணையருடைய அறிக்கைமீது ஆணையர் அவர்கள் மேலும் அதைப் பரிசீலித்து துணை ஆணையர் தந்த அந்த உத்திரவை ரத்து செய்யவும், மேலும் பல சான்றுகளைத் தேடி அது ஒரு பொதுக் கோயில் தான், பொது மக்கள் நன்கொடை வழங்குகிற கோயில் என்று உறுதிப்படுத்தி அதை அறநிலையத்துறையோடு சேர்ப்பதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. சோ. அழகிசாமி: தலைவர் அவர்களே, இந்த அப்பச்சிமார் மடம் என்பது மடம் அல்ல. அது ஊரின் பெயர் தான். அங்கே மசிராயாத்தார் ராக்கியான் என்பது கோயில் பெயர். கார்த்திகை தீபம், சிவராத்திரி போன்ற மாசி மாத விழாக் காலங்களிலே அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் பல இலட்ச ரூபாய்கள் வருமானம் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த கோயிலுக்கு பெரியார் மாவட்டத்திலே கூகனூர், சிவகிரி, திங்களூர் ஆகிய இடங்களிலே நிலங்களும் இருக்கின்றன. இலட்சக்கணக்கான ரூபாய் சொத்துள்ள, வருமானமுள்ள அந்தக் கோயிலை அறநிலையத் துறையின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரவும் ஒரு சிலருடைய சுயநலத்திற் காக அவைகள் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? இவ்வளவு தாமதம் ஆனதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நான் இப்போது அந்த பதிலைத்தான் விளக்கமாகத் தெரிவித்தேன்.

ஒரு தனியார் ஏற்படுத்திய மடம் என்ற பெயரால் அது ஒருவரால் அனுபவிக்கப்பட்டு வருகிறது என்ற குறிப்பு இருக்கிறது நீண்டகாலமாக தமிழகத்திலே இப்படிப் பல பொது நிறுவனங் கள் அறநிலையத் துறையைச் சார்ந்த மடங்கள் அல்லது வேறு பெயர்களிலே இப்படித் தனியார்கள் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். அதை முன்னாலே இருந்தவர்கள் என்ன காரணத்தினாலோ இவைகளையெல்லாம் கூர்ந்து கவனிக்காமல் விட்டுவிட்டதன் காரணமாகவோ அல்லது செல்வாக்குப் பெற்ற வர்கள் அதிலே நுழைந்து கொண்டு அரசாங்கமோ அல்லது துறையோ அதிலே உள்ளே நுழையாமல் பார்த்துக் கொண்டதன் விளைவாகவோ என்னவோ இதைப்போன்று பொதுச் சொத்துக் களை சொந்தத்திற்கு அனுபவித்துக் கொண்டு வருகிற நிலைமை தமிழ்நாட்டிலே நீடித்துக்கொண்டு வருகிறது. அதுவும் அப்பச்சிமார்மடம் என்ற பெயரை வைத்துக்கொண்டு அங்கே ஆலயம் இருக்கிறது. அந்த ஆலயத்திலே ராக்கியண்ணன், அப்பச்சிமார், பேச்சியம்மன் என்ற 3 சன்னதிகள் இருக்கின்றன. அந்த 3 சன்னதிகளும் திறக்கப்படுவதே இல்லை. பூட்டியே வைத்திருக்கிறார்கள். உண்டியல்கள் வைத்திருக்கிறார்கள். நான் முன்னாலே சொன்னதுபோல், அங்கே நம்முடைய உதவி ஆணையர் சென்றபோதுகூட அங்கே வந்த மக்களிலே பலர் அங்கே நெல்லையெல்லாம் கொடுத்து காளையெல்லாம் கொடுத்து அதற்கு பி. வி. ராஜு என்பவர் சீட்டைக் கொடுத்து அந்தச் சீட்டை எம். பி. ஆர். என்று அச்சடித்த சிறிய சீட்டைக் கொடுத்து அதிலிருந்து கொஞ்சம் நெல்லை திரும்பக் கொடுத்து அதை அவர்கள் அரிசியாக்கி பொங்கி ஒரு பிரசாதமாக சாப்பிடு கிற வழக்கமெல்லாம் இருக்கிறதாம். அங்கே இந்தப் பிரச்னைக்குள்ளே நுழைந்து பார்க்கிறபோது மிகப் பெரிய அளவிலே இன்னும் பயங்கரமான உண்மை அந்தப் பகுதியிலே இத்தனை லட்சம் பேர்கள் வருகிறார்கள் அவர்களில் ஒருவர்கூட அங்கே என்ன நடக்கிறது என்பதை வெளியிலே சொல்வதற்கே அஞ்சுகிறார்கள். அரசாங்கத்திற்கு ஒருவர் புகார் எழுதி யிருக்கிறார். அந்தப் புகாரின்மீது நாம் அதிகாரிகளை அனுப்பி பார்வையிட வைத்தோம். ஆனால் அந்தப் புகார் எழுதியவரே அங்கே வந்து நேரே சொல்ல மறுத்து விட்டு என்னுடைய பெயரையும் வெளியிலே சொல்லாதீர்கள்; சொன்னால் என் னுடைய உயிருக்கே ஆபத்து என்று தெரிவித்து இருக்கிறார் என்றால் எந்த அளவுக்கு அந்த எம். பி. ஆர். என்று அழைக்கப் படுகிற எம். பி. ராஜு என்கின்றவர் இருக்கிறார் என்பது புரியும். அதுதான் போர்டே போட்டு இருக்கிறார், அனுமதி பெற்று உள்ளே செல் என்று, ஒரு ஆலயத்திலே போட்டிருக்கிறார் என்றால் இந்த இருபதாம் நூற்றாண்டில் பெரிய ஆச்சரியமாக இருக்கிறது, ஜனநாயக நாட்டிலே—ஆகவே அறநிலையத் துறை இப்போது தான் நுழைந்திருக்கிறது. உங்களுக்குத் தெரியும் அறநிலையத் துறை நுழைய ஆரம்பித்தால் குகைபோல் போய்க் கொண்டே இருக்கிறது, இருளும் இருக்கிறது. என்ன என்ன விஷ ஜந்துக்கள் எல்லாம் இருக்கின்றன என்பது நமக்குத் தெரியாமல இருக்கிறது. ஆகவே அறநிலையத் துறை இந்தப்

1981 ஏப்ரல் 23]

பிரச்னையில் தீவிர கவனம் செலுத்தி தனியார் இப்படிக் கொள்ளையடிக்கிற அல்லது பொது மக்களுடைய வருமானத்தை பக்தியின் பெயரால் தருகிறபோது அந்தச் செல்வங்களைச் சுரண்டாமல் இருப்பதற்கு தக்க நடவடிக்கைகளை அறநிலையத் துறை எடுக்கும்.

(முற்பகல் 9—10)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கின்ற விஷயத்திலே மிகவும் ஆச்சரியப்படக் கூடிய விஷயங்கள் வேதனை தரக்கூடிய விஷயங்கள் நிறைந் திருப்பதைப் பார்க்க முடியும். 3 லட்ச ரூபாய்க்கு மேலாக வருமானம் இருக்கும் என்று பணத்தினுடைய கணக்கைச் சொன்னார்கள்.

ஆனால் இரண்டாவதாகச் சொன்னதுதான் இதற்கெல்லாம் மேலாக இருக்கிறது. காளைகள், மாடுகள், பலவிதமான சாதனங்கள், வாழைக்காய், கத்தரிக்காய் என்று இப்படிச் சகல பொருட்களையும் கொண்டு வந்து ஜனங்கள் கொடுக்கிறார்கள். மடம் என்பது அமைச்சரவர்கள் சொன்னதைப்போல் கொள்ளை யடித்துச் சொத்து சேர்க்கும் இடமாக மாறி ஆலயத்தைப் பொதுமக்களுக்குத் திறந்து விடுவதுகூடக் கிடையாது என்ற நிலைமையிருக்கிறது. இதையெல்லாம் விடப் பெரிய கொடுமை எம். பி. ஆர். என்பவர் மோட்டார் காரிலே போகும்போது ரோட்டிலே வரும் பக்தர்கள் ரோட்டிலே படுத்து, விழுந்து சாஷ்டாங்கமாக காருக்கு நமஸ்காரம் செய்யும் நிலைமை இருக்கிறது. இவ்வளவு மோசமான நிலைமையிருப்பதால் இதை அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கை என்ற முறையில் பூரணமாக விசாரணை நடத்தி, அங்கே எப்படி ஜனங்கள் துன்பப் படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை விசாரணை செய்வதற்கான நடவடிக்கையை எடுத்து, இதை அறநிலையத் துறையின் பூரணக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இங்கே தெரிவித்த கருத்துக்கள் அத்தனையும் நாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று. இது அறநிலையத்துறைக்கு மட்டும் அவமானம் அல்ல ; தமிழ்நாட்டிற்கே இந்த ஜனநாயக யுக காலத்திற்கு அவமானம் தருகின்ற காரியமாகும். இருந்தாலும் இந்தக் கேள்வியைப் போட்டிருக்கின்ற பெருந்துறை தொகுதியின் சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் முயற்சியெடுத்து அற நிலையத்துறைக்கு உதவுவார்களேயானால் நல்ல பலன் கிடைக்கும். ஏனென்றால் அங்கே சாட்சிகள், சாட்சியம் சொல்ல வருவதற்கே அஞ்சுகிறார்கள். காரணம் பொது சமய நிறுவனம் என்று நாம் தீர்மானிக்க வேண்டுமென்றால் பொதுமக்கள் நமக்கு ஆதாரங்களைத் தந்தாக வேண்டும்.

அந்த விசாரணையின்மீது அறநிலையத் துறை ஒரு முடிவை எடுக்கும். அதற்குப் பிறகு அவர்கள் நீதி மன்றங்களுக்கெல்லாம் கூடப் போவார்கள், அது வேறு விஷயம். இந்தச் சட்டமன்றத்தில் இதுசம்பந்தமாக எழுப்பப்பட்டிருக்கின்ற கேள்விகளும், அவைகளுக்கு அரசின் சார்பிலே தரப்பட்ட பதில்களும் பொது மக்களுக்கு முறையாகத் தெரிவிக்கப்பட வேண்டும். அதையொட்டி மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் முயற்சியெடுத்துக்கொண்டு அறநிலையத் துறைக்கு உதவுவார்களேயானால் மிகவிரைவிலே அந்தச் சமய நிறுவனம் மக்களுடைய பொதுச்சொத்தாகப் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது பெருந்துறை தொகுதியிலுள்ள மக்கள் அரசு அதிகாரிகள் கேட்கும்போது சாட்சியம் சொல்ல வர முடியாத நிலையில் பயந்துபோய் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்படி தனிப்பட்ட நபருக்குப் பயப்படுகின்ற நிலைமை இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். ஆகவே, சாட்சியம் சொல்ல வருபவர்களுக்கு அரசு பாதுகாப்புக்கொடுத்து, அந்தச் சொத்துக்களை வைத்திருப்பவர்கள் பத்தாண்டுக் காலத்தில் எந்த அளவிற்குக் கோயில் நிதியிலிருந்து பணத்தைக் கையாடல் செய்திருக்கிறார்கள் என்று தெரிந்து, அதை வசூலிக்கும் முறையில், பத்து பதினைந்தாண்டுக் காலத்தில் அவர்கள் பெற்ற அந்தப் பணத்தைத் திரும்ப வசூலிக்கும் முறையில் ஒரு சட்டத்தையே அறநிலையத்துறையின் மூலம் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அரசுக்கு—அறநிலையத்துறைக்கு இந்த மடம் சம்பந்தமாகப் புகார் எழுதியவர் ஒருவர் தெளிவாக எழுதிதன் பெயரையெல்லாம் தந்திருக்கிறார். அதற்கு உதவி ஆணையர் அவர்கள் இதைப் பார்வையிட்டுப் பரிசீலித்தார்கள். ஆனால் பொதுமக்கள் வர மறுக்கிறார்கள் என்றால் என்ன செய்வது ? அரசு பாதுகாப்பு தருவதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால் அவர்கள் நினைப்பதெல்லாம், அரசு அந்த நேரத்திலே மட்டும் பாதுகாப்பு தரும் ; ஆனால் அதற்குப் பிறகு அங்கேயிருக்கின்ற எம்.பி. ஆரிடம் மாட்டிக்கொள்ள வேண்டுமே என்று அஞ்சுகிறார்கள் போல் இருக்கிறது. இருந்தாலும் இந்தக் காட்டாட்சி முறையில் நடப்பதை ஜனநாயக யுகத்தில் அரசு அனுமதிக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித்தேவர் அவர்கள் கூறிய இந்தக் கருத்தையொட்டி, எப்படி நீண்டகாலமாக நம்முடைய முன்னோர்கள் பொது மக்களின் நன்மையைக் கருதி அறவழிக்காக விட்டுச் சென்ற சொத்துக்களைச் சிலபேர் பரம்பரை தர்மகர்த்தாக்கள் என்று சொல்லிக்கொண்டு அனுபவிக்கிறார்கள். சுருக்கமாகச் சொல்லப்போனால் தங்களுடைய சுகபோகங்களுக்காக அதை

எடுத்துக்கொண்டு வரும் முறையை மாற்றுவதற்காக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதைப்பற்றிச் சட்டத்துறையிலே பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுமக்கள், அமைச்சரவர்கள் கூறியதைப்போல அச்சமில்லாமல் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வசதியாக அந்த எம். பி. ஆர். என்பவரை அரசு முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் அவரைப் பற்றிக் கிரிமினல் குற்றச்சாட்டு என்ற அளவில் தகவல்களைத் தருவார்களேயானால் துன்புறுத்தி, மிரட்டி, பொதுமக்களிடம் வசூலிக்கிறார்கள். என்று சொல்வார்களேயானால் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்க இயலும்.

மாண்புமிகு ரமணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் காரிலே போகிறபொழுதே கூட, ஆண்டவன் திருவுலா வருகிற பொழுது விழுந்து வணங்காத பக்தர்கள், அவர் காரிலே போகிற பொழுது விழுந்து வணங்குகிறார்கள், அல்லது வணங்க வைத்திருக்கிறார்கள் என்று. அந்நிலை இருக்குமேயானால் முதலிலே அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு கோவை மாவட்ட அல்லது பெரியார் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் முயற்சி எடுத்துக் கொள்வார்களேயானால், ஒரு மாதத்திற்குள்ளே அந்த அறநிலையத்தைப் பற்றிய நல்ல முடிவுகளை நம்முடைய அரசாங்கம் எடுக்க முடியும்.

செஞ்சியில் விவசாய விளைபொருள் விற்பனைக்கூடம் கட்டும் திட்டம்.

*வினா எண். 774—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், செஞ்சியில் விவசாய விளைபொருள் விற்பனைக் கூடம் கட்டுவதற்காக நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் விரைவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, எப்பொழுது கட்டப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நில எடுப்பு சட்டத்தின் படி 27-1-1981 அன்று 4.17 ஏக்கர் நிலமும், 11-3-1981 அன்று 0.31 ஏக்கர் நிலமும் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்காக வருவாய்த் துறைக்குப் பணமும் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே விரைவில் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படலாம்.

சின்னதாராபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 775—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னதாராபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) 30-3-1981 ல் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் துவங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 776 முதல் 779 வரை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

அரசு மருத்துவ மனைகளிலுள்ள நுட்பமான கருவிகள்.

*வினா எண். 780—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு மருத்துவ மனைகளில் நுட்பமான கருவிகளை செப்பனிடத் தெரிந்தவர்கள் இல்லையென்பதால் ஏராளமாக செலவிட்டுத் தருவிக்கப்பட்ட பல கருவிகள் செயல்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவை எப்பொழு செப்பனிடப்படும்,

(இ) வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டு செப்பனிடப் படும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) உதிரி பாகங்கள் உடனடியாகக் கிடைக்காத காரணத்தால் சில நுட்பமான கருவிகள் செயல்படுத்த முடியாமல் உள்ளன.

(ஆ) மருத்துவ மனைகளைப் பொறுத்தவரை தேவைக் கேற்றவாறு செப்பனிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(இ) இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த நுட்பமான கருவிகளை இயக்குபவர்கள் அந்தந்த ஆஸ்பத்திரிகளில், பெரிய மருத்துவர்களின் கண்ட்ரோலில் இல்லாமல் இருப்பதால் அந்த நுட்பமான கருவிகள் வேலை செய்வது தடைபடுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மூலக் கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்திலே, 'உடனடியாக கிடைக்காத காரணத்தால்' என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, சில நேரங்களில் தாமதமாகும். ஸ்பேர் பார்ட்ஸ் என்று சொல்லக்கூடிய உதிரி பாகங்கள் கிடைத்தஉடனே பழுதுபார்க்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரியான நுட்பமான கருவிகள் பல மருத்துவ மனைகளிலே அதுவும் குறிப்பாக தலைமை மருத்துவ மனைகளிலே கூட விநியோகிக்கப்பட்டு, அதை இயக்குவதற்கு ஆள் இல்லாமமலோ அல்லது ரிப்பேர் ஆனால், சரி செய்ய முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதோடு கோயில்பட்டியிலே இருக்கிற மருத்துவ மனையிலே இ.சி.ஜி. கருவி வாங்கி வைத்து ஒரு வருடமாகிறது. அதை இயக்குவதற்கு ஆள் இல்லாமல் ரிப்பேர் ஆனால் சரி செய்ய ஆள் இல்லாமல் இருப்பதால், அது உபயோகத்தில்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா? உடனடியாக, கோயில்பட்டி மருத்துவ மனையிலே உள்ள கருவியை ரிப்பேர் செய்யவும், இயக்குவதற்கும் ஆளை நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, கோயில்பட்டியிலே இருக்கிற இ.சி.ஜி. கருவி உபயோகத்தில் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அதற்கு நாம் என்ன செய்திருக்கிறோம் என்றால்

Electro Modicol Equipments Centre என்று மாவட்ட ரீதியாக தொழில் துறை மூலமாக அமைத்திருக்கிறோம். அந்தத் துறை மூலமாக உடனடியாகப் பழுது பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். கோயில்பட்டியைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் தெளிவாகத் தகவல் கொடுத்திருக்கிறார். இன்றே தொலை பேசி மூலமாகப் பேசி, அதை உடனடியாக ரிப்பேர் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளில் பொதுவாக இந்த நிலை நீடிக்கிறது. குளித்தலை மருத்துவ மனையில் எக்ஸ்-ரே யூனிட் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு ஆகிறது. கம்ப்ளிஷன் சர்ட்டிபிகேட் கொடுக்கவில்லையென்று தெரிகிறது. அதனால் அரசுக்கும் நஷ்டம், மக்களுக்கும் நஷ்டம். இம்மாதிரியான நிலையை மாற்றவும் இம்மாதிரியான செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி வேறு, இந்தக் கேள்வி வேறு, கம்ப்ளிஷன் சர்ட்டிபிகேட் என்பது வேறு. அது எக்ஸ்ரே மிஷன் பொருத்தப்பட்ட பிறகு சட்டிடம் கம்ப்ளிஷன் ஆகாமல் இருக்கலாம். அல்லது ஒயரிங் வேலை கம்ப்ளிஷன் ஆகாமல் இருக்கலாம். கம்ப்ளிஷன் சர்ட்டிபிகேட்டிலே தாமதம் இருக்குமானால், அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலக் கேள்விக்குப் பதில் சொல்லுகிறபோது அந்த நுட்பமான கருவிகளுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாததனால்தான் சில நேரங்களில் தாமதப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் அந்தக் கருவிகளை ரிப்பேர் செய்யத் தெரிந்தவர்கள் இல்லாத காரணத்தினால்தான் தமிழகத்திலே பல மருத்துவமனைகளிலே இவைகள் ரிப்பேர் செய்யப்படாமல் இருக்கின்றன. அப்படி ரிப்பேர் செய்வதற்கான ஆட்கள் போடாமல் இருக்கின்றதா? இப்படிப்பட்ட நுட்பமான கருவிகளை பல இடங்களில் வாங்கி, அவை ரிப்பேர் ஆன காரணத்தினால் 2 ஆண்டு 3 ஆண்டு என்று அவைகள் இயங்காமல் இருக்கின்ற காரணத்தினால், அபாயகரமான நோயாளிகளுக்கு வைத்தியம் செய்வதற்கும், ஆப்பரேஷன் தியேட்டர்களில் கூட அந்த மெஷின்கள் வேலை செய்யாமல் இருக்கிறதே இதை உடனடியாகத் தவிர்த்து அதற்கு வேண்டிய ஆட்களைப் போடவும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தத் துறைக்கு நான் பொறுப்பேற்றுக்கொண்ட உடனே ஒரு இடத்தில் கூட நான் பேசி யிருக்கிறேன். அது பத்திரிகையிலேயும வந்திருக்கின்றது. இப்படி நிறைய நுட்பமான கருவிகள் பழுது பார்க்கப்படாமல் பல இடங்களில் இருக்கின்ற காரணத்தினால், பல லட்சக் கணக்கான மதிப்புள்ள நல்ல முக்கியமான கருவிகள் பயன் படுத்தப்பட முடியாமல் இருக்கின்றன என்று சொல்லி அதற் காக உத்தரவைப் போட்டிருக்கிறோம். அந்தக் கருவிகளை நமக்குத் தருகின்ற நேரத்தில் அதனுடைய டெக்னிக்கல் நோ ஹௌ அதாவது அது வேலை செய்யக்கூடிய முறைகளை சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், எல்லா மாவட்ட மருத்துவ அதிகாரிகளுக்கும் டி. எம். இ. அவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி, இப்படிப்பட்ட மெஷின்கள் எங்கெங்கு வேலை செய்ய வில்லையோ அவைகளை ரிப்பேர் செய்து பயன்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டு நடவடிக்கை எடுத்திருக்கி றோம்.

திரு ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருவிகளை செப்பனிடுவதற்குத் தெரிந்தவர்கள் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அதைத் திறம்படச் செய்வதற்கு, அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு, அந்த ஆட்களை வெளிநாடு களுக்கு அனுப்பி அவர்கள் பயிற்சி பெறுவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன் வருமா என்பதை அறியவிரும்பு கிறேன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இங்கேயே அதற்கு வாய்ப்பு இருக்கிறது. கிண்டியிலே கூட 2 என்ஜினிரிங் கல்லூரிகள் இருக்கின் றன. கிண்டி என்ஜினிரிங் கல்லூரி, ஐ.ஐ.டி. இருக் கின்றன. இந்த இரண்டு கல்லூரிகளின் உயர்மட்ட அதிகாரி களைப் பார்த்து சொல்லி இருக்கிறோம். இப்படிப்பட்ட எக்விப் மென்டுகளை ரிப்பேர் செய்ய ஒரு பிரிவை ஏற்படுத்தினால் நல்லது என்று சொல்லி இருக்கிறோம். அவர்களும் இதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் பல முறைகளிலே நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

கொடுமுடி அரசு மருத்துவமனைக் கட்டிடம்.

*வினா எண் 781—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சித் தொகுதி, காடுமுடியில் அரசு மருத்துவமனைக்குக் கட்டப்பட்டு வரும் கட்டிடம் பாதியில் நின்றிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) இந்தக் கட்டிட வேலையை மேற்கொண்ட மருத்துவமனை வளர்ச்சி குழு முழுவதையும் கட்டி முடிக்கவில்லை. இந்தக் கட்டடத்தை உடனடியாக முடிப்பதற்காக இயக்குநர் அவர்கள் ரூ. 75,000-க்கு திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்து அரசின் அங்கீகாரத்துக்கு அனுப்பியுள்ளார். இந்த செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கல்ராயன் மலைப் பகுதியிலுள்ள மூலிகைகள்.

*வினா எண் 782 திரு சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்ராயன் மலைப்பகுதி சித்த மருத்துவத்திற்குத் தேவையான மூலிகைகள் உள்ள பகுதியென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதிகமாக மூலிகை வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) கல்ராயன் குன்றுகளில் மூலிகைகளை வளர்க்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவர் அவர்களே, கல்ராயன் மலைப் பகுதியிலே மிகவும் அபூர்வமான மூலிகைகள் விளைகின்றன. அந்த மூலிகைகளைப் பயன்படுத்தி மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்வதற்கு, அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வி போட்டதற்குப் பின்னாலே தான் இப்படி அந்தப் பகுதியில் ஒரு அரிய வாய்ப்பு இருக்கிறது என்று நான் அறிய நேர்ந்தது.

நானும் அதைத்தான் நினைத்துக்கொண்டு இருந்தேன். ஆகவே அந்தத் திட்டம் இப்போது இல்லை என்று இங்கே நான் சொல்லியிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்தைப் பற்றிய முழு விவரத்தையும் அறிந்து தருவார்களானால் நிச்சயமாக அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும்.

திரு. கோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்ராயன் மலைப் பகுதியிலே கடி சம்பந்தமான வியாதிகளுக்கு இலக்கணம் என்ற தழை, நல்ல முறையில் பயன்படுகிறது. சர்க்கரை வியாதிகளுக்கு எலிக்காய் தழையும், ரத்தக் கொதிப்பிற்கு வையான் தகரி தழையும், மஞ்சள் காமாலை நோய் போக்குவதற்கான மூலிகைத் தழையும், பொதுவாக அனைத்து வியாதிகளுக்கும் தேவையான ஆதுவேர், கரிசால், முசுமுசுக்கை போன்ற தழைகளும், பாம்பு கடிக்கு சிறியாநங்கை, பெரியாநங்கை என்ற தழையும், மூல வியாதிகளுக்கு நல்லிரைத் தாமரை என்ற தழையும், வாதம், நீரிழிவு நோய்களுக்கு சித்திரை மூலத்தழையும் மற்றும் பல மூலிகைகளும் பல நோய்களைக் குணப்படுத்த சிறந்தவைகளாக இருப்பவை அங்கே இருக்கின்றன. எனவே அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அங்கே ஒரு மூலிகைப் பண்ணை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்து இருக்கும் தகவலின் அடிப்படையில் நிச்சயமாக அதைஅரசாங்கம் பரிசீலிக்கும்.

சென்னை நகரில் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு இயந்திரம் பொருத்தும் திட்டம்.

*வினா எண். 783—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு இயந்திரம் பொருத்தி சைக்கிள் ஓட்டச் செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் 35 சி. சி. சக்தி வாய்ந்த இயந்திரங்களை சைக்கிள் ரிக்ஷாவில் பொருத்த அரசு அனுமதி வழங்கியது. தற்போது 120 சி. சி. இயந்திரங்களைப் பழைய சைக்கிள் ரிக்ஷாக்களில் பொருத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. புதிதாக 50 சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மட்டும் 120 சி. சி. இயந்திரம் பொருத்த அனுமதி அளிக்கலாம் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சைக்கிள் ரிக்ஷாவுக்கு இயந்திரம் பொருத்தும் வேலை எப்போது முடிவு அடையும்? அந்த இயந்திரத்தின் விலை என்ன ? அது உள் நாட்டில் தயாரிக்கப்பட்டதா ? வெளி நாட்டில் தயாரிக்கப் பட்டதா ? இனாமாகத் தரப்படுமா? தவணை முறையில் தரப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள்தான் அவைகள். எந்தெந்த இயந்திரங்களை அவர்கள் பொருத்துகிறார்களோ அதைப் பொறுத்து இருக்கிறது அவற்றின் விலையும். இத் தகைய இயந்திரங்களை பல கம்பெனிகள் தயாரித்துக் கொண்டு இருக்கின்றனர். எனவே என்ன விலை என்பதை நான் இங்கே சொல்ல முடியாது. ஏறத்தாழ 3 ஆண்டுகளில் எல்லா சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும்—சென்னையில் உள்ளவற்றிற்கு முதல் அடிப் படையில்—இந்த இயந்திரங்கள் பொருத்தப்பட்டு விட வேண் டும் என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது. அதற்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கந்தசாமி என்கிற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர்—அரசு சான்றிதழ் பெற்றவர்—அதிக பளு வைத்தாலும் சுலபமாக இழுக்கும் சக்தியை அளிக்க வகை செய்யும் முறையில் ஒரு புதிய பல் சக்கரம் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அவரை—ஜி. டி. நாயுடு போல் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள அரசு முன் வருமா ? அது மட்டுமல்லாமல், இந்த இயந்திரம் பொருத்தப் பட்ட பிறகு, மக்கள் ஏமாற்றப்படாமல் இருக்கும் பொருட்டு அத்தகைய வண்டிகளில் மீட்டர் பொருத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, யார் எதைத் தயாரித்தாலும் அது சரியான இயந்திரமாக இருந் தால், அதைச் சைக்கிள் ரிக்ஷாவில் வைப்பதைப் பற்றி நமக்கு ஆட்சேபணை இல்லை. சைக்கிள் ரிக்ஷா வைத்திருப்பவர்கள் அதை வைத்துக் கொள்ள இசைவு அளித்தால் நமக்கு எந்தவித மான கருத்து வேறுபாடும் அதில் இல்லை. இயந்திரம் பொருத் தப்பட்ட பிறகு மீட்டர் பொருத்தப்படுமா இல்லையா என்பதைப் பற்றி இப்போது சொல்ல முடியாது. ஆனால் தவறு நடக்காத அளவிற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும், பொது மக்கள் நலன் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத்தலைவர் அவர்களே, இந்த சைக்கிள் ரிக்ஷா ஏழை எளிய நடுத்தர மக்களின்வாகனம், இதற்கு இயந்திரங்கள் பொருத்துவது வரவேற்கத்தக்கதுதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்சொல்கிறபோது சென்னை யில் இன்னும் 3 ஆண்டுகளுக்குள் படிப்படியாக எல்லா சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டு விடும் என்று

சொன்னார்கள். இதே முயற்சியை தமிழகத்தில் உள்ள பல்வேறு பெரிய நகரங்களிலும் விரிவுபடுத்த விரைவிலே நடவடிக்கை எடுத்தால், பயணம் செய்பவர்களுக்கும் எளிதாக விரைவாகச் செல்ல வசதியாக இருக்கும், ஓட்டுநர்களுக்கும் வசதியாக இருக்கும், ஆகவே, அரசு அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துமா ?

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இப்போது கொண்டுவந்திருக்கும் திட்டமே சென்னை மாநகருக்கு மட்டுமல்ல, தமிழகம் பூராவும் பொருந்தும். ஆனால் கட்டாயமாக 3 ஆண்டுகளுக்குள் சென்னை மாநகரில் பொருத்தப்பட வேண்டும். அதன் பிறகு சைக்கிள் ரிக்ஷா அனுமதிக்கப்பட மாட்டாது. ஆகவே, படிப்படியாக மற்ற பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதில் அரசுக்குக் கஷ்டமில்லை.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, 120 சி. சி. மோட்டார் பொருத்தப்படுவதினால் அதிகம் செலவாகும். அந்தச் செலவுக்காக அவர்களிடமிருந்து வரி ஏதாவது வசூல் செய்யப்படுமா ? அப்படி வரி வசூல் செய்வதாக இருந்தால் எந்த அடிப்படையில் வரி விதிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, 35 சி. சி. க்கு மேல் இருக்கிற அத்தனை வாகனங்களுக்கும் வரி வசூல் செய்ய வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. 35 சி. சி. இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு வரி தேவையில்லை. ஆனால் இந்த சைக்கிள் ரிக்ஷாவைப் பொறுத்த வரையில் 120 சி. சி. இயந்திரம் பொருத்தப்பட்டாலும், அதை வைத்திருப்பவர்கள் ஏழை மக்கள் என்பதால், அவர்கள் வசதி பெறுவதற்காக அதற்கு வரி விலக்கு அளித்து பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, தற்போது ஓடுகின்ற சைக்கிள் ரிக்ஷாவை மனிதன் ஓட்டுகின்ற காரணத்தால் அதனுடைய அமைப்பு இருவர்மட்டும் அமர்ந்து செல்லும் வகையில் இருக்கிறது. இனிமேல் மோட்டார் மூலம் ஓட்டுவதால் அதிக ஆள் அதிலே உட்கார்ந்து செல்லும் வகையில் அதனுடைய அமைப்பை மாற்றியமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்பமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷாவிலே கூட இரண்டுபேர்கள்தான் செல்ல அனுமதி அளித்திருக்கிறோம். அப்படி இருக்கும்போது சைக்கிள் ரிக்ஷாவிலே 4 பேர், 5 பேர் போக முடியாது. ஓட்டுநர், மற்றும் இருவர் அமர்ந்து செல்வதுதான் சரியாக இருக்கும், அதற்குமேல் செல்வது சரியாக இருக்காது.

சென்னையிலிருந்து காரைக்குடிக்கு துரித இரயில் வண்டி விடும் திட்டம்.

*வினா எண்—784 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து மாயூரம் திருவாரூர் வழியாக காரைக் குடிக்கு எக்ஸ்பிரஸ் இரயில் வண்டி விட இரயில்வேத் துறைக்கு அரசு பரிந்துரை செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை.

மாயூரத்திலிருந்து சென்னைக்கு மேலும் ஒரு விரைவுப் பேருந்து விடும் திட்டம்.

*வினா எண். 785—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து சென்னைக்கு மேலும் ஒரு இரவு நேர விரைவுப் பேருந்து விட வேண்டும் எனும் கோரிக்கை வந்துள்ளதா

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை.

சேலம்—கன்னியாகுமரி விரைவு பேருந்துப் பணி.

*வினா எண். 786—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து கன்னியாகுமரி செல்லும்விரைவு பேருந்து (இரவு 9 மணி சுமாருக்கு) பெருந்துறையில் நிற்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

சேலம்—கன்னியாகுமரி துரிதப் பேருந்து தற்போது பெருந்துறை வழியாக இயக்கப்படவில்லை. எனவே, இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, பெருந்துறை ஒரு தாலுகாவின் தலைநகர். அது மட்டுமல்ல. அங்கிருந்து அதிகமாக பயணிகள் வெளி ஊர்களுக்கு செல்லவேண்டியிருக்கிறது ஆனால் பஸ் வசதி இல்லை. ஆகவே, புதிதாக சேலத்திலிருந்து பெருந்துறை வழியாக பேருந்து விடுவதற்கும், அந்த பேருந்து பெருந்துறையில் நின்று செல்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

1981 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, நான் பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்தவன். பெருந்துறை என்னுடைய ஊருக்குப் பக்கத்தில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைவிட எனக்கு அந்த ஊரைப்பற்றி அதிகமாகத் தெரியும், பழக்கம் இருக்கிறது. அந்த இடத்தில் எல்லா பேருந்துகளும் நின்று செல்கின்றன. ஆனால் சேலத்திலிருந்து கன்னியாகுமரி செல்லும் பேருந்து இப்போது அந்த வழியாக வரவில்லை. ஏனென்றால், அந்த வழி சுற்று, அதிக தூரம் இருக்கிறது. கன்னியாகுமரிக்குச் செல்லும் பயணிகள் அதை விரும்பவில்லை. ஆகவே, அந்த வழியை மாற்றி, தூரத்தைக் குறைத்து, குறுகிய பாதையில் செல்ல ஏற்பாடு செய்திருக்கிறோம். வேறு பேருந்துகள் எல்லாம் அங்கே நின்று செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. இ. கணேசன்: தலைவரவர்களே, சேலத்திலிருந்து கன்னியாகுமரிக்குப் போகும் பேருந்து, இடைப்பாடி அதன் வழியிலே இருப்பதால் அங்கே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெருந்துறையிலேயே நிற்கவில்லை; அப்படி இருக்கும்போது இடைப்பாடியில் எப்படி நிற்கும்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, வருகிற பேருந்துகளும் பெருந்துறையில் நிற்கவில்லை என்று கூறப்படுகிறது. அதைப்போல ஈரோட்டிலும் மற்ற இடங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் பேருந்திலே செல்ல வேண்டுமென்று பேருந்தை நிறுத்தினால் இடம் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். நாங்கள் பேருந்துகளில் செல்ல இலவச அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எங்களுக்கு இருக்கிற பொறுப்பின் காரணமாக பல்வேறு கிராமங்களுக்கு நாங்கள் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப் போவதற்கு பேருந்தை நிறுத்தினால் இடமில்லை என்று சொல்லி விடுகிறார்கள். எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற அனுமதிச் சீட்டிற்கு மரியாதை இல்லாமல் போகிறது. எனவே இந்த வி.ஐ.பி. சீட்டுக்கு உரிய மரியாதை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற அந்த அனுமதிச் சீட்டுக்கு மரியாதை இல்லை; சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் மரியாதை. அரசைப் பொறுத்தவரையில், எல்லா திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று இரண்டு இருக்கைகளை காலியாக வைக்க வேண்டுமென்ற ஒரு நிலையை வைத்திருந்தோம். அதன் பிறகு பொதுமக்களிடமிருந்து கருத்துக்களையும், நமக்கு ஏற்பட்ட சூழ்நிலைகளையும்—

அதனால் சுமார் 1 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதையுங்கருத்திற் கொண்டு, அந்த முறையை மாற்றியமைக்கும் வகையில் பேருந்து புறப்படும் இடத்தில் மட்டும் புறப்படும் வரை காலியாக வைத்திருக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதனால் இடையிலே கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதைக்கூட மாற்றி, வேறு வழிகளிலே ஏதாவது செய்யலாமா என்று ஆலோசனை செய்து வருகிறோம். விரைவிலே நல்ல முடிவு எடுக்கப்படும்.

ஒய்யாலிக்குப்பம் கிராமத்தில் கடல் அரிப்பைத் தடுக்க சுவர் எழுப்பும் திட்டம்.

* வினா எண் 787—திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு வட்டத்தில் ஒய்யாலிகுப்பம் கிராமமும் 72 மீனவர் கொட்டகைகளும் கடல் அரிப்பால் அழிக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் எழுப்பும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆறு ஆண்டு காலமாக தொடர்ந்து கடல் அரிப்பால் ஏறக்குறைய 72 மீனவர்களின் குடிசைகள் கடலில் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து அவர்களைக் காப்பதற்கு வேறு ஏதாவது திட்டம் இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு முதல் டிசம்பர் வரை கடலில் ஏற்படும் உயரமான அலைகளின் மூலம் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. இதுவரை, இக் கடற் பகுதிகளில் 500, மீட்டர் தூரத்திற்குள் மூன்று வரிசைகளாக இருந்த 65 குடிசைகளும் மற்றும் 100-க்கு மேற்பட்ட தென்னை மரங்களும் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி பூண்டியிலுள்ள நீரியல் மற்றும் நிலயியல் ஆய்வகம் கடல் அரிப்புத் தடுப்பு முறைகள் பற்றி ஆய்வு செய்து வருகிறது. அந்த நிலைய இயக்குநருடன் கலந்து பரிசீலனை செய்த பிறகு அப்பரிசீலனையின் முடிவின் அடிப்படையில் தேவையான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 23]

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடலோரப் பகுதியிலிருந்து ஒரு ஃபர்லாங் தூரத்தில் மேடான ஒரு இடம் குடியிருப்புக்கு ஏற்றதாக இருக்கின்றது. அந்தப் பகுதியிலே அவர்களைக் குடியமர்த்துவதற்குரிய யோசனை அரசிடத்திலே இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை எதுவும் அரசுக்கு இதுவரை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் ஏதோ பூண்டியிலுள்ள ஒரு ஆய்வகம் இதுபற்றி ஆய்வு செய்து வருவதாகச் சொல்லி இருக்கிறார். 500 மைல் அளவுக்கு இருக்கின்ற தூரங்களில் கடல் அரிப்பு ஏற்படுகின்றது என்று சொல்லி இருக்கிறார். ஆனால் நம்முடைய தமிழக அரசு கடந்த நிதிநிலை அறிக்கையில் கூட 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் சிலயிடங்கள் கத்திவாக்கம் மற்றும் இங்குள்ள திருவொற்றியூர் போன்ற இடங்களில் கடலரிப்பைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். திருவான்மியூர், ஒய்யாலிகுப்பம் போன்ற இடங்கள் பெருவாரியாகக் கடல் அரிப்பால் பாதிக்கப்படுகின்ற இடம். ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் இருப்பவர்களுக்கு மாற்று இடம் தந்து நிவாரணம் தந்துவிட்டு அவர்களுக்கு வீடு கட்டித் தர அரசு முன்வருமா? ஏராளமான வீடுகள் அவர்களுக்காகக் கட்டுவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அப்படியானால் ஒய்யாலிகுப்பம் பகுதியிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களுக்கு உடனடியாக வீடு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, கடல் அரிப்பு என்பது ஒய்யாலிக் குப்பம் பகுதியில் எப்போதும் இல்லை. குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே உயர்ந்து வரும் அலைகளால் பாதிக்கப்படுகின்ற நிலையில்தான் அங்கு பாதிப்பு ஏற்படுகின்றது. அந்த வகையில் இதுவரை 65 குடிசைகளும், நூற்றுக்கு மேற்பட்ட தென்னை மரங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எப்படி இருந்தாலும் அங்கே பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருப்பதன் காரணத்தால் அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் காதி வாரியத்தின் மூலம் செயல்பட்டுவரும் காகித ஆலைகள்.

* வினா எண் 788—திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காதிவாரியத்தின் மூலமாக தமிழகத்தில் எத்தனை காகித தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) புதிய காகிதத் தொழிற்சாலைகள் தமிழகத்தில் எங்கெல்லாம் ஆரம்பிக்க திட்டமிருக்கிறது?

(இ) கடையநல்லூரில் ஒன்று ஆரம்பிக்க திட்டமுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரிய நிர்வாகத்தின் கீழ் கீழ்க் கண்ட இடங்களில் எட்டு கைமுறை காகித அலகுகளும், ஆறு காகிதக் கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன.

அலகுகள்.

இடங்கள்.	மாவட்டம்.
1. வீரராகவபுரம்	செங்கற்பட்டு.
2. மாமண்டூர்	செங்கற்பட்டு.
3. அரப்பாக்கம்	வட ஆற்காடு.
4. பிடாகம்	தென் ஆற்காடு.
5. மகேந்திர மங்கலம்	திருச்சிராப்பள்ளி.
6. செண்பகபுதூர்	பெரியார்.
7. அத்தியூத்து	நெல்லை.
8. செய்துங்கநல்லூர்	நெல்லை.

காகிதக் கூட்டுறவுச் சங்கங்கள்.

1. செம்பனார் கோவில்	தஞ்சாவூர்.
2. கக்கன்புரம்	தருமபுரி
3. பரப்பாடி	நெல்லை.
4. வேப்பங்குளம்	நெல்லை.
5. பிரம்மதேசம்	நெல்லை.
6. கண்ணஞ்சேரி	கன்னியாகுமரி.

(ஆ) கீழ்க்கண்ட ஐந்து புதிய காகித அலகுகள் துவங்க வாரியம் அங்கீகாரம் அளித்துள்ளது:—

1. பொன்னவராயன் கோட்டை	தஞ்சை
2. வந்தவாசி	வட ஆற்காடு.
3. வடகீரமங்கலம்	புதுக்கோட்டை.
4. சித்தக்கன்னி	புதுக்கோட்டை.
5. கமுதி	இராமநாதபுரம்.

(இ) தற்போது இல்லை.

1981 ஏப்ரல் 23]

(முற்பகல் 9.40.)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற காகித தொழிற் சாலை ஒன்றை காஞ்சிபுரத்தில் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஐந்து இடங்களில் காகித ஆலைகள் துவங்குவதைப் பற்றிச் சொன்னார்கள். புதியதாக ஆறாவதைக் கேட்காதீர்கள்.

திரு. கு. ப. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காகித தொழிற் சாலைகளில் எவ்வளவுக் கெவ்வளவு உற்பத்தி செய்கிறார்களோ, அதைப்பொறுத்து கூலி நிர்ணயம் செய்யப்பெறுகிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பிடாகம் தொழிற் சாலையில் வேண்டுமென்றே குறைந்த வேலை செய்தால் போதும் என்று, உற்பத்தியைக் குறைத்து, கூலியைக் குறைத்துக் கொடுத்த காரணத்தால் அங்கே போராட்டம் நடந்துக் கொண்டிருக்கிறது அரசுக்குத் தெரியுமா? அவர்களுக்கு நியாயம் கிடைக்க வழி வகை செய்யப்படுமா? மேலும் இருக்கிற எல்லாக் காகித தொழிற் சாலைகளிலும் நமக்கு தேவையான அளவு உற்பத்தி செய்யப்படுகிறதா என்பன போன்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்விகள் என்றால் ஒன்றுதான் கேட்கலாம். மூலப் பொருள்களிலிருந்து ஆரம்பித்து உற்பத்தி செய்து விற்பனை செய்கிற வரையில் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி பதில் அளிக்க இயலும்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காகித உற்பத்தி என்பது அங்குக் கிடைக்கிற தண்ணீர் வசதி, மின் வசதி போன்றவைகளை பொறுத்துத்தான் உற்பத்தி செய்யப்படுகின்றது. அங்கு கூலி உயர்வைப் பற்றிச் சொன்னார்கள், கதர் வாரியத்தின் நோக்கமே, கிராமத்து மக்களுக்கு சுலபமாக வேலை வாய்ப்புக் கொடுப்பதே தவிர வேறல்ல. முதலாளி தொழிலாளி என்று சொல்லக் கூடிய பிரச்னைகளே அங்கு எழுவதற்கில்லை.

காந்தீய வழியிலே, கிராமத்து மக்களுக்கு சுலபமான, உபயோகமான வேலைகள் கொடுக்கிற சூழ்நிலை இதில் இருப்பதால், கூலி உயர்வு, கூலி குறைவு என்கிற நிலைமைக்கே இடம் இல்லை. உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களுக்கு தக்கபடி, கூலிகளும் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த கமுதியிலே ஒரு காகித தொழிற் சாலை ஆரம்பிக்க போவதாகச் சொன்னார்கள். அங்கு என்ன மூலப் பொருள் கிடைக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு என்ன மூலப் பொருள் கிடைக்கிறது என்கிற குறிப்பு என்னிடத்தில் இல்லை. அங்கே தண்ணீர் வசதி, கட்டிட வசதி, மின் சக்தி போன்றவை கிடைப்பதால் ஆரம்பிப்பதற்குரிய சூழ்நிலை இருக்கிறது என்று சொல்லி மட்டும் குறிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரப்பாடியில் உள்ள காகித தொழிற் சாலையில் உற்பத்தியாகிற அட்டைகள், காகிதங்கள் போன்றவை விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன என்று தெரிகிறது. அதை விரைவில் விற்பனை செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் இருக்கும் பரப்பாடி சங்கம் சிறிய யூனிட்டாகத்தான் அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தேக்கம் அதிகம் இல்லை என்றாலும் அங்கு உற்பத்தியாகிற அட்டைகள் காகிதங்கள் போன்றவைகளை சர்க்கார் யூனியன்களுக்கும், சர்க்கார் அலுவலகங்களுக்கும், வாங்கக் கூடிய ஒரு சூழ் நிலையை அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது, நெல்லை மாவட்டத்தில் பிரம்மதேசத்தில் ஒரு தொழிற்சாலை செயல் படுவதாகக் கூறினார்கள். அந்த சதர் இலாகாவினுடைய அட்டைத் தொழிற்சாலையை விரிவு படுத்தும் வகையில், பக்கத்தில் இருக்கக் கூடிய பாபநாசத்திலே, மின சாரம் கிடைக்கிறது, தண்ணீர் கிடைக்கிறது, கட்டிட வசதிகள் இருக்கின்றன—காகித தொழிற்சாலைக்கு தேவையான எல்லா வசதிகளும் அங்கே இருக்கின்றன. ஆகவே, பிரம்மதேசத்தில் இருக்கும் தொழிற்சாலையையே அபிவிருத்தி செய்கின்ற முறையில், பாபநாசத்திலும் அதை விரிவு படுத்தும் வகையில், ஒரு தொழிற்சாலையை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பிரம்மதேசத்தில் இருக்கும் காகித தொழிற்சாலையின் யூனிட் மிக நன்றாக நல்ல நிலையில் உற்பத்தியாகிறது. லாபமும் கிடைத்திருப்பதாக தகவல் இருக்கிறது. எனவே தற்போது அதைப் பிரித்து விரிவு படுத்துகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: இந்த காதிவாரியத்தின்மூலம் உற்பத்தி செய்யப்படுகிற இந்தக் காகிதத் தொழிற்சாலைகள் குடிசைத் தொழில்கள் போல் இயங்கி வருகின்றன. இந்த முறை, நெடுநாட்களாக இருந்து வருகிற உற்பத்தி முறையாக இருப்பதால் விற்பனையும் இலாபமும் குறைந்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்போது கையால் நூற்கும்படியான நூலுக்குக் கூட சில இயந்திரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதே

1981 ஏப்ரல் 23]

போல் காதி வாரியம் மூலம் உற்பத்திசெய்யப்படுகிற காகிதத் தொழிற்சாலைகளுக்கும் புதிதாக உற்பத்தியாகும் இயந்திரங்களைப் பொருத்தி இந்த காகித உற்பத்தியை அதிகப்படுத்தி இலாபத்தையும் அதிகப்படுத்த அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இயந்திரங்களைப் பொருத்துவது என்பது காதிக் கொள்கைக்கே விரோதமாகயிருக்கிறதே.

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : காதி வாரியத்தின் நோக்கமே அந்தந்த இடங்களில் கிடைக்கிற ராமெட்டீரியல்ஸை வைத்து அந்தப் பகுதியைச் சார்ந்த மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதுதான். அதன் அடிப்படையில் வேலை வாய்ப்பு அதிகப்படியானவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இப்போது இயங்கி வருகிற யூனிட்களை மாற்றுவதற்கு, அவற்றை இயந்திரமயமாக்குவதற்கான எண்ணம் அரசாங்கத்தினிடமும் இல்லை, வாரியத்தினிடமும் இல்லை.

வந்தவாசியிலுள்ள மத்திய கோரை உற்பத்தியாளர் மற்றும் பாய் நெசவாளர் கூட்டுறவு சங்கம்.

* வினா எண் 789— திரு. ஏ. சாகுல்ஹமீது, மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம் வந்தவாசியில் உள்ள மத்திய கோரை உற்பத்தியாளர் மற்றும் பாய் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் காதி வாரியத்திடம் கடன் கோரி மனு கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது வழங்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :

(அ) மற்றும் (ஆ) ஆம். வந்தவாசி மத்திய பாய் நெசவாளர் மற்றும் கோரை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மூலதனக் கடன் ரூ. 35,000 வழங்க கதர் கிராமத் தொழில் வாரியத்திலிருந்து வேலூர் உதவி இயக்குநருக்கு ஆணை வழங்கப்பட்டு விட்டது.

திரு. பாபு ஜனார்த்தனன் : வந்தவாசி மத்திய கோரை உற்பத்தியாளர் மற்றும் பாய் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கேட்ட தொகைக்கு ரூ. 35,000 வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு கேட்டார்கள்? வந்தவாசியில் உள்ள அந்தக் கோரை தொழில் பெருவாரியாக குடிசைத் தொழிலாக நல்லமுறையில் வளர்ந்து வெளி மாநிலங்களுக்கு, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி கூட ஆகிறது. ஆகவே இப்போது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசுமுன்வருமா? அது வளர எந்த வகையில் இந்த கதர் வாரியம் உதவி செய்யும்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : இந்தச் சங்கம் நல்லமுறையில் லாபகரமாக நடந்து வருகிறது. இவர்கள்

கேட்ட தொகை இரண்டு லட்சம் ரூபாய். சென்னை மண்டல துணை இயக்குநர் ரூ. 50,000-க்கு சிபார்சு செய்து வாரியத்திற்கு 9—3—1981-ல் அனுப்பினார். வாரியம் மேற்படி எடுத்துரையை பரிசீலனை செய்து பார்த்ததில் சங்கத்தின் துணைவிதி மற்றும் கதர் கிராமத் தொழில் குழுவின் நிதி உதவி வரம்பிற்குட்பட்டு வாரிய ஆணை 70, நாள் 8—4—1981-ல் ரூ. 35,000 மூலதனம் கடன் பெற ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : இப்படி காதி வாரியம் மூலம், நெசவாளர்கள் சங்கங்கள் மூலம் பல பொருள்கள் மார்க்கட்டுக்கு வருகின்றன. சம்பந்தப்பட்ட பொருள்களை விற்பனை செய்ய அரசு என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது? கதர் வாரியம் துணி விற்பனை செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கோரைப்பாய் பற்றியது

தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனைகளை அதிகப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 790—திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கால்நடை மருத்துவமனைகளை அதிகப்படுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை மருத்துவமனைகள் எங்கெங்கு ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்.—(அ) தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கால்நடை மருத்துவ மனைகளை அதிகப்படுத்தும் திட்டம் ஏதுவுமில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திரு. ப. தீர்த்தராமன் : தர்மபுரி மாவட்டத்தில் ஆடு மாடுகள், கால்நடைகள் அதிகமாக ஆகியிருக்கின்றன. ஆகவே கால்நடைகள் அதிகரித்திருப்பதற்கு ஏற்றவகையில் அரசாங்கம் கால்நடை மருத்துவ மனைகளை கூடுதலாக அமைத்துத் தரவேண்டும், அப்படி அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தர்மபுரி மாவட்டத்தில் 22 கால்நடை மருந்தகங்களும், ஐந்து மருந்தகம் இணைக் கேந்திரகிராம நிலையங்களும் உள்ளன. இவை தவிர கிருஷ்ணகிரி உதவி இயக்குநர் ஆளுகையில் ஒன்றும், தர்மபுரி உதவி இயக்குநர் ஆளுகையில் ஒன்றும் ஆக இரு இயங்கும் கால்நடை மருந்தகங்களும் இயங்கி வருகின்றன.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1977–78-ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டம் சித்தேரியில் ஒரு கால்நடை மருந்தகமும் 1980–81-ஆம் ஆண்டு கோட்டப்பட்டியில் ஒரு கால்நடைமருந்தகமும் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் தர்மபுரி மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின்கீழ் 1979–80-ல் தர்மபுரியில் கால்நடை மருத்துவமனை கால்நடை பிரதம மருத்துவ நிலையமாக நிலை உயர்த்தப்பட்டது.

தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பால் பண்ணை அபிவிருத்தி, தீவன பெருக்கத் திட்டம், கால்நடை நோய்க் கட்டுப்பாடு, கால்நடை செயற்கை கருவூட்டும் மற்றும் அது சம்பந்தமான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது பற்றி பிரச்னை ஒன்றுமில்லை.

(முற்பகல் 9-50).

திரு. ப. தீர்த்தராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் வட்டத்தில், பென்னாகரத்தில் மட்டும் ஒரு மருத்துவமனை இருக்கிறது. மற்ற இடங்களில் மருத்துவமனை இல்லை. அங்கேயிருக்கின்ற கால்நடைகளுக்காக அரசு கடன் பெற்று வாங்கியிருக்கின்ற காரணத்தினால், இன்ஷூர் செய்ய வேண்டியிருக்கிறது. கால்நடைகள் இறந்துவிட்டால், பென்னாகரத்திற்கு கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அங்கே அருகிலுள்ள பாப்பாரப்பட்டியில் ஒரு கால்நடை மருத்துவமனையை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். அந்த மாவட்டத்தில், இது வரைக்கும் கால்நடை மருத்துவமனைகள் ஒன்றுகூட இல்லாமல் இருக்கிறது. ஆக, கிருஷ்ணகிரியில்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கே மருத்துவமனைகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நீங்கள் ஒன்றுமில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்.

திரு. க. இரா. சின்னராசு: கிருஷ்ணகிரி தர்மபுரி மாவட்டத்திற்கு மையமான, போக்குவரத்திற்கு வசதியான பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், 100 ஆண்டுகளுக்கு முன் இருந்த மருத்துவமனை சிறியதாக இருப்பதால், அதைப் பெரிய மருத்துவமனையாக விரிவுபடுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதிலில் கூறி இருக்கிறேன். இருந்தாலும் மறுபடியும் கூறுகிறேன். தர்மபுரி மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்கான பகுதித் திட்டத்தின் கீழ் 1979-80-ல் அந்த கால்நடை மருத்துவமனை, பிரதம மருத்துவ நிலையமாக உயர்த்தப்பட்டுள்ளது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திற்கு இந்த அரசு ஏற்பட்டவுடன், பல கோடி ரூபாய் கொடுத்து, கால்நடை அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தியிருப்பது உண்மைதான். அதன் அடிப்படையில் பல மருத்துவமனைகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதே நேரத்திலே தமிழகத்திலே, கால்நடை வளர்ப்புக்கு ஏற்ற இடமாகக் கருதப்பட்டு, மத்தூர் கேட்டில் பார்ம் இருக்கின்ற காரணத்தினாலே, மேலும் அங்கே ஒரு இயக்குநர் அகமே ஏற்படுத்தலாமா என்ற அளவிற்கு இருக்கின்ற காரணத்தினால், வேலூரிலுள்ள தலைமை அலுவலகத்தை கிருஷ்ணகிரிக்கு மாற்றுவதற்குரிய வாய்ப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலுள்ள தலைமை அலுவலகத்தை கிருஷ்ணகிரிக்கு மாற்றத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

கிழக்கு முகவை மாவட்டத்தில் உறைவிந்து உற்பத்தி நிலையம் துவக்கம் திட்டம்.

(வினா எண். 79—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிழக்கு முகவை மாட்டத்தில் (Frozen Semen Bank) உறைவிந்து உற்பத்தி நிலையம் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: கிழக்கு முகவை மாவட்டத்தில் உறைவிந்து உற்பத்தி நிலையம் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, உறைவிந்து உற்பத்தி நிலையம் வேறு எந்தெந்த மாவட்டங்களில் துவக்க அரசு பரிசீலனையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்

TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 23]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணை ஒரு திரவ நைட்ரஜன் உற்பத்திக் கூடமும், ஈச்சங்கோட்டைப் பண்ணையில் ஒரு உறைவிந்து நிலையமும் ஆரம்பிக்கப்படுகின்றன.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடப்பு ஆண்டில் 1981—82-க்குள்ளாக தமிழகம் முழுவதும் உறைவிந்து நிலையங்களைப் படிப்படியாக துவக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலையைப் பொறுத்துத் தான் அது பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

I—2. தகவல் கோரல்.

பல சிறு பிரச்னைகள் குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எல்லாம் எழுதிக் கேட்டு அதற்கு பிறகு அவையிலே கொண்டு வரலாமே தவிர ஒழுங்குப் பிரச்னையில் கொண்டு வரக்கூடாது. இதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்புவதற்கு தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். ''காலம் பொன் போன்றது'', காலத்தைக் காட்டக் கூடிய நமது கடிகாரம் சரியாக ஓடாமல் உயிர் ஊசலாடுகிறது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அதற்காக ஊசலாட வேண்டாம். ''ஒல்ட்டேஜ் ட்ராப்'', ஆகியிருக்கிறது. அது தான் காரணம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கேள்வி நேரத்தின் போது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினேன். சரியாக பத்து மணியான உடனே கேள்விகளை பாதியிலே முடித்து, மீதியை அச்சடித்து தருவதாகக் கூறினீர்கள். இதனால் கேள்வி கேட்கின்ற வாய்ப்பினை இழந்து விடுகிறோம். துர்பாக்கியம், என்னுடைய கேள்விகள் அதிலே இருந்தன.

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நாளைக்கு 20 கேள்விகள் எடுத்துக் கொள்கிறேன். நேற்று திட்டக்குழு பற்றி கேள்வி வந்தது. எல்லாக் கட்சிக்காரர்களும் கேள்வி கேட்க விரும்பினார்கள். நான் அதை மறுக்கவில்லை. அனுமதித்தேன். அதன் பிறகு குழப்பம் வந்தது. அதை சபையும் அனுபவித்தது. நானும் அனுபவித்தேன்.

திரு. என்.எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைகளை எந்த சூழ்நிலையிலே எடுத்துக் கொள்ள முடியவில்லை என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. இன்னொரு நாளைக்கு தங்களின் வசதிப்படி எடுத்துக் கொள்வீர்களானால் முக்கியமான கேள்விகள் மீது துணைக்கேள்விகள் கேட்க வாய்ப்பு கிடைக்கும். ஏற்கனவே எப்போதாவது தான் கேள்விகள் வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்குக் கூட உங்களுக்கு துணை வினா ஒன்றை அனுமதித்தேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். நாங்கள் உட்காருகிற சீட்டில் கையால் தொட்டாலே ''டஸ்ட்'', ஒட்டிக்கொள்கிறது. தூசி நிறைய இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுத்தமாக வைத்திருக்க வேண்டியது என்னுடைய கடைமை. அதைக் கவனித்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இரவிலிருந்து, இன்று சட்டமன்றத்திற்கு வருகிற வரையில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தண்ணீர் வரவில்லை என்பது தானே, ஏற்கனவே அதுபற்றி சொல்லியாகிவிட்டது. நீங்கள் இப்போது தான் வந்திருக்கிறீர்கள். ''கரண்ட் ட்ராப்'' காரணமாக அது ஏற்பட்டிருக்கிறது. இதுநாள் வரைக்கும் இல்லாத நிலை இன்று தான் சட்டமன்ற விடுதியிலே ஏற்பட்டது. காலையில் $8\frac{1}{4}$ மணிக்கே அதுபற்றி விசாரித்தேன். காரணம் கேட்டேன். தொழிலாளர்கள், கரண்ட் வரவில்லை வோல்டேஜ் ட்ராப் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். மோட்டாருக்கு மூன்று பேஸ் கரண்ட் வேண்டும். உங்களுக்குத் தெரியும். தற்போது நிலைமை சரியாகிவிட்டது.

1981 ஏப்ரல் 23]

3. ஒத்தி வைப்புத் தீர்மானம்

தென்காசி தாலுக்காவில் மக்களுக்கும் போலீசாருக்கும் இடையே ஏற்பட்ட மோதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், கு. ரமணி, ரா. உமாநாத், கே. ஆர். சுந்தரம், ப. பொன்னுரங்கம், உ. சுப்பிரமணியன், என். எஸ். வி. சித்தன், ஆகியோர் ''திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தாலுக்காவிலுள்ள உதயசெல்வன்பச்சேரி என்ற கிராமத்தில் மக்களுக்கும், போலீசாருக்கும் இடையே ஏற்பட்ட பயங்கர மோதலில் போலீசார் உட்பட பலருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளதாலும், பலர் கைது செய்யப்பட்டுள்ளதாலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

(முற்பகல் 10-00)

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரத்திலே திருநெல்வேலி மாவட்டத்திலே உதயசெல்வன்பச்சேரியில் ஒரு சம்பவம் நடந்தது. ஏற்கனவே அதைப்பற்றித் தீர்மானத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி பலவிதமான தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தகவல்களை விவாதித்து நல்ல முடிவு காணவேண்டுமென்ற அடிப்படையிலேதான் இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டிருக்கிறது. சொல்லக்கூடிய காரணங்கள் இரண்டுவிதமாக இருக்கின்றன. ஒன்று, அந்தக் கிராமத்திலே உள்ள சுப்பையா என்பவரை போலீசார் கைது செய்ய வந்தபோது அந்தப் பொது மக்கள் சேர்ந்து அவர் ஒரு குற்றமும் செய்யாதவர் என்று சொல்லி அதற்கு ஆட்சேபணை செய்திருக்கிறார்கள். அதைச் சாக்காகக் காட்டி எங்களுடைய கைதி தப்பித்துப் போய் விடுவதற்கு வழிசெய்தார்கள் என்று சொல்லி பொய்யான காரணத்தைசிருஷ்டித்து அதைவைத்து கொண்டு அந்தக் கிராமத்திலே உள்ள முக்கியமான பிரமுகர்களைக் கைது செய்கிறார்கள். ரெய்ட் செய்திருக்கிறார்கள். தொடர்ந்து ரெய்ட் செய்ததன் காரணமாக அங்கே வசிக்கின்ற மக்களுக்கு கஷ்டமான நிலைமைகள் ஏற்பட்டு அங்கே உள்ள பல குடும்பங்கள் இரவிலேயே அங்கே தங்க முடியாத அளவுக்கு வெளியூருக்குச் சென்றுவிட்டு காலையிலேதான் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. இது அந்தக் கிராமத்து மக்கள் தரப்பிலே சொல்லப்படுகின்ற நிலைமையாகும். ஆனால் போலீஸ் தரப்பிலே அந்த நபர் கேடி, அந்தக் கேடியை கைது செய்வதற்காகச் சென்றோம். அவரைக் கைது செய்த பிறகு

அவர்கள் விடுவித்து கொண்டு போய்விட்டார்கள் என்று ஜால்சாப்புச் சொல்லப்படுகிறது. உண்மையிலேயே என்ன விவரங்கள் என்பதை ஆராய்வதற்காகவும் அந்த கிராமத்து மக்கள் மீது அடக்குமுறையைப் போலீசார் செய்வதைத் தடுத்து நிறுத்தக் கூடிய முறையிலேயும் கிராமத்திலே உள்ள வீடுகளிலே யாரும் இல்லாத ஒரு சூன்யமான நிலைமை இருக்கிறது. அதைப் பற்றி பூரண விவரங்களை விவாதிப்பதற்காகவும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்காகவும் மக்களைப் பாதுகாக்கவேண்டிய நிலைமை பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதாலும், இதைப்பற்றியெல்லாம் விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, கடந்த 14—4—81 அன்று வடகரை சுப்பையா என்ற ஒருவர் அருமைச் சகோதரர் சொரணம் அவர்கள் சொன்னது போல் ஒரு தரப்பிலிருந்து அவர் சமூக விரோதச் செயலில், சட்ட விரோதச் செயலில் ஈடுபட்டிருக்கிறார் என்றும் அங்கேயுள்ள பெரும் புள்ளிகள், செல்வாக்குள்ள புள்ளிகள் எல்லாம் அவருக்குத் துணையாக இருக்கிறார்கள், ஆகவே சமூக விரோதச் செயல்களிலே தாராளமாக ஈடுபடுகிறார் என்றும் சொல்லப்படுகிறது. அவரைக் கைது செய்த நேரத்திலே இப்படிப்பட்ட சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. அப்போது கல் எறிந்து இருப்பதாகவும் மற்றும் கொடுமைகள் நடந்து இருப்பதாகவும் காரணங்கள் போலீஸ் தரப்பிலே சொல்லப்படுகிறது. அதனால் சுப்பையா மீட்டுச் செல்லப்பட்டிருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறது. அதனால் அந்த ஊரைச் சேர்ந்த மக்களுக்கும் போலீசாருக்கும் இரண்டாவது தகராறு ஏற்பட்டு நாட்டு வெடிகுண்டு வீசப்பட்டு இருக்கின்றன என்று போலீஸ் தரப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டிலே யாரும் எதையும் வைத்துக் கொள்ளலாம் என்ற நிலைமைதான் இருக்கிறது. அந்த முறைக்யிலேதான்வெடிகுண்டு வைத்துக்கொள்ளக்கூடிய அவல நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட அவலநிலைமை நிலவுவதால் அந்தப் பகுதி மக்களுக்கு எந்த நேரத்திலும் எப்படிப்பட்ட கொடுமைகளும் நடக்கலாம் என்றும் போலீசார் மீது சுப்பையாவும் அவர் குழுவைச் சேர்ந்தவர்களும் தாக்குதல் ஏற்படுத்தலாம் என்றும் பொது மக்கள் மத்தியிலே பீதி ஏற்பட்டிருக்கிற காரணத்தினாலே பொது மக்களைக் காப்பாற்றுவதும், சட்டம் ஒழுங்கைப் காப்பாற்றுவதும், அரசாங்கத்தினுடைய கடமையாகும். ஆளும் தரப்பிலே இருக்கிறவர்கள் கூட சட்டம் ஒழுங்குக்கு முரணாக நடந்துகொள்வதற்கு உறுதுணையாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதையெல்லாம் விவாதிக்க இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 23]

*திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த மாதம் 2-வது வாரத்திலே தென்காசிக்கு அருகிலே நடைபெற்றிருக்கிற ஒரு சம்பவத்தைப் பற்றி விவாதிப்பதற்கு பேரவையினுடைய இதர அலுவலல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று தங்களுடைய அனுமதியை நான் கோருகிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல, தென்காசிக்கு வழக்கு சம்பந்தமாகச் சென்ற காவல்துறையினருக்கும், மக்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒரு கலவரம் தொடர்பாகக் காவல்துறையினர் நான்கைந்து பேர்கள் காயமடைந்தார்கள் என்ற செய்திகள் நாளேடுகளில் வந்திருக்கின்றன. அதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சிகள், இந்த வழக்கு தொடர்பாக இந்த நிகழ்ச்சிக்குப் பின் காவல்துறையினர் கிராமத்திற்குச் சென்று அங்குள்ள அப்பாவி மக்களை அதிகமாகத் துன்புறுத்தி வருகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நமக்கு வேதனையாக இருக்கிறது. இது போன்று பல்வேறு இடங்களில் நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஏதாவது சம்பவம் நடந்து விட்டால், காவல் துறையினர் சம்பந்தப்பட்ட கிராமங்களுக்குச் சென்று சம்பந்தம் இருக்கிறதோ இல்லையோ கிராம மக்கள் அத்தனைபேரையும் தொல்லைப்படுத்துகிறார்கள்; இன்னும் சற்று வரம்புக்கு மீறி அதிகமாக நடந்து வருகிறார்கள். அரசுத் தரப்பிலேயிருந்து மறுப்புச் சொல்லிவிட்டாலும்கூட இப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இவைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

கள்ள நோட்டு, கள்ளச் சாராயம் என்று நாம் கேள்விபட்டிருக்கிறோம். இப்பொழுது நான் ஆச்சரியப்படுகிறேன், கள்ள வெடி குண்டு அதிகமாகத் தயாரிக்கப்படுகிறதோ என்று எண்ணி வேதனைப்படுகிறேன்; எனவே, கள்ள வெடி குண்டுகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டுபிடிப்பதற்காகக் காவல் துறையில் ''தனி செல்'' கூட ஏற்படுத்தி அதைத் தயாரிப்பவர்களை எப்படித் தடுப்பது; அவர்களுக்கு எந்தவிதமான கடுந்தண்டனைகளைக் கொடுப்பது என்பதுபற்றி அரசு யோசிக்க வேண்டிய வேளை வந்துவிட்டது. ஏனென்றால், இரயிலிலே வெடிகுண்டு, விமானத்திலே வெடிகுண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே வெடிகுண்டு என்றெல்லாம் பரபரப்பாகப் பேசப்பட்டு, நம்முடைய தினசரி அலுவல்களைப் பாதிக்கின்ற அளவிற்கு நிலைமைகள் உருவாகியுள்ளன. எனவே, இதில் அரசாங்கம் சற்றுத் தீவிரமாக ஈடுபட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தமாதிரி நிகழ்ச்சிகளினாலே பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அரசு உதவி செய்ய வேண்டும். இனிமேல் தமிழகத்தில் தொடர்ந்து இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காமல் தடுத்து முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். காவல்துறையினர் பிறகு எடுத்துக்கொள்ளும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாகச் சுற்றியுள்ள கிராம மக்களிடையே பதட்ட நிலை உருவாகியிருப்பதால் பேரவையின் இன்றைய அலுவல்களை மட்டும் ஒத்தி வைத்து இதை விவாதிப்பதற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அருகில், கடந்த 13—4—1981-ந் தேதி, மாலை சுமார் 5 மணிக்கு, அச்சம்புதூர் காவல் நிலையக் குற்ற எண் 8/81 மற்றும் அச்சம்புதூர் காவல் நிலையக் குற்ற எண் 228/80, 229/80-ல் பதிவு செய்யப்பட்ட இரட்டைக் கொலை வழக்கு, மற்றும் கள்ள நோட்டு தயாரிப்பு, கொலை வழக்கு இவற்றில் சம்பந்தப்பட்ட எதிரி சுப்பையா என்பவரைத் தேடி அச்சம்புதூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. சிவசங்கரன் மற்றும் நான்கு காவலர்களுடன், தனியார் டாக்சியில் உதயசெல்வன் பச்சேரிக்குச் சென்று, சம்பந்தப்பட்ட எதிரி சுப்பையாவைக் கைது செய்து வைத்திருந்தபோது, உதயசெல்வன் பச்சேரியைச் சேர்ந்த சுமார் 100 பேர், பெண்கள் உட்பட, பயங்கர ஆயுதங்களுடனும், நாட்டு வெடிகுண்டுடனும் வந்து தாக்குதல் நடத்தி எதிரியை மீட்டுக் கொண்டதோடு, எதிரி ஷண்முகவேல், அவரது தம்பி வேலுச்சாமி ஆகியோர் உதவி ஆய்வாளரை அரிவாளால் தாக்கியுள்ளனர். மேலும், சுப்பையா, கருப்பன், கோவிந்தன், மூக்கன், வி. கருப்பன் மற்றும் சிலர் அரிவாள், கற்கள், கம்புகள் முதலியவற்றை எறிந்து காவல் துறையினருக்குக் காயங்கள் விளைவித்தனர். காவலர்கள் மீது நாட்டு வெடிகுண்டுகளையும் வீசியுள்ளனர்.

மேலும், காயமடைந்த ஷண்முகவேல் என்ற நபரை, திருநெல்வேலி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வதற்காகக் காவலர்கள் கொண்டுவந்த டாக்சி டிரைவரைப்பயமுறுத்தி காவலர்களது ரிக்கார்டுகள் வண்டியில் இருக்கும்போது, அந்த டாக்சியைக் காயமடைந்த ஷண்முகவேலுடன் திருநெல்வேலிக்கு எடுத்துச் சென்றனர். காயமடைந்த உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் ஆகியோர், செங்கோட்டை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருக்கிறார்கள். இது சம்பந்தமாக அச்சம்புதூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க, கூடுதலான காவலர்கள் அங்கு சென்றுள்ளனர். தற்போது அங்கு நிலைமை கட்டுக்கடங்கியுள்ளது. இவ்வழக்கு சம்பந்தமாக, 3 பெண்கள் உட்பட 18 பேர் கைது செய்யப்பட்டு, நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் சண்முகவேலுவும் ஒருவர். திரு. சுப்பையா, திரு. வேலுச்சாமி மற்றும் குற்றம் சாட்டப்பட்ட இதர நபர்களையும் கைது செய்ய தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சம்பவம் நிகழ்ந்த கிராமத்தில் பதட்ட நிலை தற்பொழுது ஏதும் இல்லை.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே பயங்கர ஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும் வைத்துக் கொள்ளலாம் என்ற சட்டம் எதுவுமில்லை ; வைத்துக் கொள்ளக் கூடாது என்றுதான் இப்பொழுது இருக்கிறது. ஆனால் சமூக விரோதிகள், வன்முறைச் செயல்களில் ஈடுபடக்கூடிய மனப்பாங்கு கொண்டவர்

கள். அதை மீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். காவல் துறையில் இருப்பவர்கள் பொது மக்களைப் பாதுகாக்கவும் அவர்களுடைய உடைமைகளைப் பாதுகாக்கவும், சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவும் இருக்கிறார்கள். நாட்டிலுள்ள மக்கள் எண்ணிக்கையையும், காவல் துறையினரின் எண்ணிக்கையையும் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது காவல் துறையினருக்குப் பொது மக்களுடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் இப்படிப்பட்ட சமூக விரோதச் செயல்கள் ஆங்காங்கு நடைபெறாமல் தடுக்க முடியும்.

(முற்பகல் 10–10)

ஆகவே, கூடுமான வரையிலே, முன்கூட்டியே அவை தெரிகின்றபொழுது, காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்கிறார்கள். அதையும் மீறி நடக்கிறபொழுது இப்படிப்பட்ட விபரீத சம்பவங்கள், நாமெல்லாம் வருந்தத்தக்க சம்பவங்கள், ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே தான் முறைப்படி வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. உள்ளபடியே, 3 வழக்குகளில் தேடப்பட்டவர் அவர். பயங்கர ஆயுதங்களின் மூலமாகத் தாக்கியதன் காரணமாக, இந்த விளைவுகள் ஏற்பட்டன. வேறு பல சேதங்கள் இல்லாவிட்டாலுங்கூட, வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, வழக்குகள் நடைபெற இருப்பதன் காரணமாகவும் உண்மையான நிலைமைகள் வழக்குகளின் மூலம் வெளிப்படும். குற்றங்களைச் செய்தவர்களுக்கு உரிய தண்டனைகள் வழங்கப்படும். எனவே, இந்த நிலைமையில் அது குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொண்டு, இது குறித்து விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை யென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்கு பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. அறிவிப்புகள்

(அ) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்ற பகுதிகளை பிரசுரித்த பத்திரிகைகளுக்கு எச்சரிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய தினம், வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்று, பிறகு இங்கு எழுப்பப்பட்ட சில ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்து, அவை அவைக் குறிப்பில் இடம் பெறாது என்று நான் தீர்ப்பு அளித்தேன். ஆயினும் அக்குறிப்புகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. எந்தப் பத்திரிகைகள் என்று நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றவை பிரசுரம் செய்யப்பட்டால் அது அவை உரிமை மீறிய குற்றத்திற்கு உள்ளாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும் பத்திரிகைகளும் நன்கு அறிவர்.

எனவே, இப்படி வெளியிடப்படுவது இதுவே கடைசி முறையாக இருக்கும் என்று நம்புகிறேன். இனி இம்மாதிரி நிகழுமானால், விதிகளின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட பத்திரிகைகளுக்கு எச்சரிக்க விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

5. அறிக்கை அளித்தல்

உறுப்பினர்களின் விடுதிகளில் கடைப்பிடிக்க வேண்டிய நெறி முறைகள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதிகளில் கடைபிடிக்க வேண்டிய சில நெறி முறைகளைக் குறித்து ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாள் அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்களும் அவைக் குழு உறுப்பினர்களும் கூடி, சில பல முடிவுகளை எடுத்தார்கள். அந்த முடிவுகளை நான் அறிவிக்க விரும்புகிறேன். அந்த முடிவுகளுக்கு சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் உரிய மதிப்பளித்து, அதைக் கடைப்பிடிக்க ஒத்துழைப்பு தருவதோடு, மற்ற பொது மக்களும் அதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அனைவருடைய ஒத்துழைப்பின் பேரில் இந்த விதி முறைகள் ஓரளவுக்கு வரையறை செய்யப்பட்டிருக்கின்றன.

பேரவை, மேலவை கூடும் நாட்களில் உறுப்பினர்களைக் காண வரும் பார்வையாளர்கள் உறுப்பினர்களைக் காண்பதற்கு மாலை 3·00 மணியிலிருந்து 6·00 மணிவரையில் என்று நிர்ணயிக்கப்படுகிறது. பேரவை, மேலவை கூடாத நாட்களில் இந்நேரம் காலை 9·00 மணியிலிருந்து மாலை 6·00 மணி வரை என்று நிர்ணயிக்கப்படுகிறது. இம்மாதிரியான பார்வையாளர்கள் முதலில் வரவேற்பாளர்கள் மூலமாக உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பெற்று, உறுப்பினர்கள் பார்வையாளர்களை அறைகளுக்கு அனுப்ப இசைவு தெரிவித்த பின்பே அவர்களை உறுப்பினர்களது அறைகளுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படும். மற்ற நேரங்களில் பார்வையாளர்கள் உறுப்பினர்களைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

உறுப்பினர் அறையில் உறுப்பினருடன் குடும்பத்தினர் அன்றி மற்றவர்கள் தங்கக் கூடாது. குடும்பத்தினர் என்ற சொல்லில் தாய், தந்தை, துணைவியர், குழந்தைகள் மட்டும்தான் அடங்கும். அவர்களும் உறுப்பினர்கள் அறையில் தங்கியிருந்தாலன்றி தனியாகத் தங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறு தங்குவதாக இருந்தால், 5 நாட்களுக்கு மேல் தங்கக் கூடாது. இதற்கான கட்டணம் ஏதும் இல்லை. மற்ற நாட்களில் அதாவது பேரவை, மேலவை மற்றும் குழுக்கள் கூடாத நாட்களில் தற்போதுள்ள விதிகளின்படி கட்டணம் வசூலிக்கப்படும்.

குடும்பத்தினருடன் தங்குவதாக இருப்பின் முன் கூட்டியே தெரிவித்து அதற்குண்டான பதிவேட்டில் பதிவு செய்து கையொப்பம் இடுதல் வேண்டும்.

உறுப்பினர்களுக்கு அரசினால் வீடுகள் ஒதுக்கப்பட்டு இருந்தாலும் அல்லது அவர்களுக்குத் தங்குவதற்குச் சென்னையில் வீடுகள் இருக்குமானால் அவர்களுக்குத் தங்கும் விடுதியில் அறைகள் ஒதுக்கப்பட மாட்டாது.

உறுப்பினர்கள் சென்னையை விட்டு வெளியே செல்லும் நேரங்களில் அறைகளை அலுவலகத்தில் ஒப்படைத்துவிட்டு செல்லலாம். அவ்வாறு செய்யாவிடில் அதற்கான வாடகை தற்பொழுதுள்ள விதிகளின்படி வசூலிக்கப்படும்.

சில முக்கியமான விதிகள் மட்டுமே மேலே கூறப்பட்டுள்ளன. மற்ற விதிகள் உறுப்பினர்களுக்குச் சுற்றறிக்கை மூலம் அனுப்பப்படும்.

மேற்கண்ட விதிகள் 23—4—1981 ஆகிய இன்று முதல் அமுலுக்கு வரும். இதற்கென சட்டம் அல்லது அதற்குண்டான விதிகள் திருத்தப்பட வேண்டியிருப்பின் அவை தகுந்தபடி திருத்தி அமைக்கப்பட்டு இந்தத் தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பாயிண்ட் ஆப் ஆர்டர் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் சென்னையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், எங்களுக்கு சென்னையில் வீடுகள் இருக்கின்றன. ஆகவே எங்கள் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தயவு செய்து அவை முன்னவர் அவர்கள் எங்களுக்கும் அறைகள் ஒதுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பேரவை, மேலவை உறுப்பினர்கள் தடங்கல் இல்லாமல் அறைகளுக்குப் போய் விட்டு வரலாம். மற்றவர்களைப் போல உறுப்பினர்கள் காத்திருக்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கேட்பது அதுவல்ல. அவர்கள், சென்னையிலே இருக்கின்றவர்கள், வீடுகள் வைத்திருக்கின்ற உறுப்பினர்களுக்கு, தனியாக அறைகள் ஒதுக்க வேண்டும் என்று கேட்கின்றார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : தயவு செய்து தாங்கள் முடிவு சொல்ல வேண்டும். ஏனென்றால் எங்களுக்கு அடிக்கடி அறைகளைச்காலி செய்யும்படி நோட்டீஸ் வந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏகமனதாக ஒருமித்து எடுத்த முடிவுதான் இது. இதில் பல சங்கடங்கள் வருகின்றன. எனவே, இந்த முடிவை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று அவை உறுப்பினர்கள் அத்தனை பேர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடம் இருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1981ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1981).

தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1981).

மேலும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 37/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்று, பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பட்டதாகவும் மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

6. அரசினர் சட்ட முன்வடிவு.

வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையில் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. வரவு-செலவுத் திட்டம் 1981–82—வாக்கெடுப்பு தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 31—பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண். 44—எழுதுபொருள்-அச்சுத்துறை தொடர்ச்சி

* மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற இந்த மானிய விவாதத்தின்மீது ஏறத்தாழ 19 உறுப்பினர்கள் பங்கு கொண்டு தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அது

1981 ஏப்ரல் 23]

மட்டுமல்லாமல், வெட்டுத் தீர்மானங்களையும் கொடுத்து இந்த அரசுக்கு பல்வேறு விஷயங்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையிலே இவற்றை எல்லாம் நல்ல முறையிலே கவனத்திலே கொள்ளும் என்பதை முதலிலே நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்........

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இங்கே உள்ள கடிகாரம் மிகவும் மந்தமாகத் தெரிகின்றது.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது மின்சார வோல்டேஜ் காரணமாக இப்படி இருக்கிறது.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த சட்டசபையிலே இப்படி இருந்தால், கிராமப் பகுதியிலே உள்ள மக்கள் எப்படி மோட்டார் போன்றவைகளை ஓட்டுவார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : வோல்டேஜ் கம்மியாக இருந்தால் கடிகாரம் ஓடுவது தாமதமாக இருக்கும். இது வேறு ஏதோ இயந்திரச் சாதனப் பழுதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேட்டரியிலே ஓடிக் கொண்டு இருக்கிறது.

(முற்பகல் 10–20)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்களும் தமிழகத்திலே இருக்கின்ற ஆதிதிராவிட மக்களின் நலன் குறித்துப் பேசுகின்ற நேரத்தில் அந்த மக்கள் எந்த நிலையில் இன்றைய தினம் இருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசைப் பொறுத்தவரையிலும் அந்த உணர்வுகளை மனதில் கொண்டு அந்த மக்களின் குறைகளையும் பிரச்னைகளையும் போக்குவதற்கு பாடுபடும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் தற்போது ஏறத்தாழ 93 லட்சம் ஆதித் திராவிட மக்கள் மற்றும் பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். இந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தோடு சமுதாயத்தில் நலிந்தநிலையில் இருக்கும் அவர்கள் மேன்மை நிலைக்கு வர வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த அரசு பணியாற்றுகிறது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தமிழகத்தில் இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் நன்மைகளைக் குறித்து பல்வேறு திட்டங்கள் தீட்டப் பெற்று, அவற்றைச் செயலாற்றி வருகிறார்கள் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மக்களைப் பொறுத்தவரையில், சமுதாய ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்துதான் பொருளாதார ரீதியில் அவர்

களுக்கு உயர்வு அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த அரசைப் பொறுத்தவரையில் சில பல திட்டங்களை இன்றைக்கு நிறைவேற்றி வருகிறது. பொருளாதார ரீதியாக அவர்கள் தாழ்ந்து இருப்பதற்கு தீண்டாமை ஒரு காரணமாக அமைகிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திருவேங்கடம் அவர்கள் தமிழகத்தில் இன்றைக்குள்ள தீண்டாமை நிலைபற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்—இந்த விஷயத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் அரசுக்கு முழு ஒத்துழைப்பு தந்து, தீண்டாமையை இந்த நாட்டை விட்டு விரட்டுவதற்கு முன்வருவார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தோடு அரசும் தன்னுடைய உணர்வுகளை இணைத்துக் கொண்டு, அந்தத் தீண்டாமையை அகற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள அந்த மக்களின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்பதற்காக தற்போது தமிழக அரசு வட்டியில்லாக் கடனை வழங்கி, அந்த மக்களை தொழில் துறையில் அறிமுகப்படுத்தி, தொழில் துறையில் அவர்கள் வருவதன் மூலம், சிறுசிறு தொழில்களை அவர்கள் தாங்களாகவே முன்வந்து தொடங்குவதன் மூலம், அவர்களும் மற்றவர்களுக்கு நிகராக உயர முடியும் என்கிற அடிப்படை எண்ணத்தில் அரசு இத்தகைய பணிகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த மக்கள் சிறுதொழில்கள் தொடங்குவதற்காக வழங்கப்படும் வட்டியில்லாக் கடன்கள் 100 மாதங்களில் திருப்பித் தர வேண்டும் என்கிற வகையில் ரூ. 125 முதல் ரூ.15,000 வரை வழங்கப்பட்டு வருகிறது. 1980–81-ல் எடுத்துக் கொண்டால் ஏறத்தாழ இந்த—ஆதித் திராவிட பெரு மக்களுக்கு 1,130 பேர்களுக்கு ரூ. 10,12,120 கொடுக்கப்பட்டது. மதம் மாறிய ஆதித் திராவிட மக்களுக்கு 113 பேர்களுக்கு ரூ. 91,223 கொடுக்கப்பட்டு இருக்கிறது. இத்தகைய உதவிகளைச் செய்து, இந்த அரசு இதுவரையில் அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு முயற்சிகளை எடுத்து வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், கிராமப் பகுதியில் வாழ்கின்ற ஆதி திராவிடர் மக்களின் நிலைமைகளை எண்ணிப் பார்த்தால், பெரும்பாலும் அவர்கள் விவசாயக் கூலிகளாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அத்தகைய மக்களின் நலன் கருதி, தமிழகத்தில் உள்ள ஆதித் திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஆதி திராவிடர்களின் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழக தலைமையிடத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்

1981 ஏப்ரல் 23] [திரு. எம். விஜயசாரதி]

துறையிலிருந்து ஒரு துணை இயக்குநரும் நீலகிரி மாவட்டம் நீங்கலாக 15 மாவட்டங்களிலும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் அந்த ஆதித் திராவிடர் மக்கள் பொருளாதார மேம்பாடு அடைவதற்கான தேவையான வழிகளைச் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் அந்த முறையில் பணியாற்றவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள். அந்த ஆதி திராவிட மக்கள் கொடுக்கின்ற மொத்த மூலதனத் தொகையில் 33–1/3 சதவீதம் ஒருங்கிலணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மானியமாக வழங்கப்படுகிறது; இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் ஆதி திராவிடர்களுக்கு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகம் ஓர் திட்டத்திற்கு ஆகும் செலவினத்தில் 25 சதவீதத்தை 4 சதவீத வட்டி விகிதத்தில் இறுதிநிலை முன்பணமாக வழங்குகிறது. எஞ்சிய தொகை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அந்த மக்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும், தாங்களாக சிறு தொழில்களைச் செய்வதற்கும் தேவையான வாய்ப்பாக இது அமைகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1980–81 ஆம் ஆண்டு மட்டும் அரசு இந்தத் திட்டத்திற்காக இரண்டு கோடி ரூபாய் (மாநில மற்றும் மைய அரசின் பங்கு மூலதனமாக) ஒதுக்கியிருக்கிறது. இதன் மூலம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டில் இருக்கிற 6—வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏறத்தாழ 9 இலட்சம் குடும்பங்கள் வறுமைக்கோட்டை கடக்கச் செய்ய முடியும் என்று கருதி, நாங்கள் இந்தத் திட்டத்தை செயல்படுத்துகிறோம்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலரும் ஆதித் திராவிடர் கல்வித் துறை பற்றிச் சொன்னார்கள். இந்தக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் இந்த சமுதாயத்தைச் சேர்ந்த குழந்தைகள் நல்லமுறையில் கல்வி வசதி பெற வேண்டுமென்று இந்த அரசு பாடுபடுகிறது. ஆதி திராவிட நலத்துறைக்கு ஒதுக்கப்படுகின்ற மொத்த நிதி ஒதுக்கீட்டில் 2/3 பங்கு இன்றைக்கு ஆதித் திராவிடர் நலப்பள்ளிகளை அமைப்பதற்கும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும் செலவிடப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு உறுப்பினர்கள் நலத்துறை பள்ளிகளுக்கு கட்டிடங்கள் சரியாக இல்லை என்று சொன்னார்கள். ஆதி திராவிட மாவட்ட நல அலுவலருக்கு 5,000 ரூபாய் வரையில் கட்டிட பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்கு இந்த அரசு அனுமதி அளித்திருக்கிறது. அத்தகையப் பணிகளை அவர்கள் செய்வதற்கு அவர்களாகவே அந்த தொகைக்கு உண்டான கட்டிட பராமரிப்பைக் கவனித்துக்கொள்ளவும் இந்த அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசும்போது ஆதி திராவிடர் நலத்துறை மூலமாகக் குழந்தைகளுக்கு வழங்கப்

படுகிற புத்தகங்கள் பற்றிச் சொன்னார்கள். இந்த ஆண்டி லிருந்து அத்தகைய குறைபாடுகள் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், 30-6-1981-க்கு தமிழ கத்தில் இருக்கிற அனைத்து மாணவர்களுக்கும் அந்த புத்தகங் கள் சென்றடைய வேண்டுமென்று பிரத்தியேகமாக ஆதி திரா விடர் மற்றும் பழங்குடி மக்கள் நல்வாழ்வு இயக்குநருக்கு பிரத்தியேக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிதம்பரத்தில் இருக்கிற நந்தனார் பள்ளியைப்பற்றிச் சொன்னார்கள். அந்தப் பள்ளி நலத்துறை பள்ளிகளிலே சிறந்த பள்ளி என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். அந்தப் பள்ளியைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கிற குறைபாடு என்று சொல்லி, குடிதண்ணீர் வசதி போன்ற வசதிகளை செய்துதர வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக இந்த ஆண்டு 97,000 ரூபாய் செலவில் ஒரு செயல் குறிப்பை இயக்குநர் அரசுக்கு அனுப்பியிருக்கிறார். அரசு அது பற்றி பரிசீலனை செய்துவருகிறது. அரசு கூடியவரையில் இதற்கான தொகையை ஒதுக்கித் தந்து, தேவையானவற்றைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விடுதிகளைப் பொறுத்த மட்டில், ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு 15 புதிய விடுதிகளைத் திறக்கிறது. இந்த ஆண்டும் 15 புதிய விடுதிகளைத் திறக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த 15 விடுதிகளும் கூடியவிரைவிலே திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விடுதிகளிலே தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு இதுவரையில் மாதம் 45 ரூபாய் உணவுக்காகச் செலவிடப்பட்டது. அதை இந்த அரசு 60 ரூபாயாக உயர்த்தி, அந்த மாணவர்களுக்கு நல்ல முறையில் உணவு அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு செய் திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விடுதி காப்பாளர்களைப் பற்றி பேசும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒட்டு மொத்தமாக மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அரசு அதுபற்றி பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமின்றி, தமிழகம் பூராவும் ஒவ்வொரு ஆண்டும் 30 ஆண்களுக்கான விடுதிகளும், 50 பெண்களுக்கான விடுதிகளும் புதிதாகக் கட்டப்படுகின்றன. இந்த ஆண்டிலும் அது கட்டப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் ஆதி திரா விடர் மக்கள் வசிக்கின்ற பகுதிகள் குடிதண்ணீர் வசதி பற்றிச் சொன்னார்கள். அதுகுறித்து ஒரு கருத்தைச் சொல்ல விரும்பு கிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு குடிநீர்

வழங்குவதற்காக நிலமட்ட நீர்த்தேக்கம் கட்டுவதற்கும் ஆழ் கிணறுகள் தோண்டுவதற்கும் உச்சவரம்பாக இருந்த 10,000 ரூபாயை இந்த அரசு 15,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10—30)

நடப்பாண்டில் இந்தத் திட்டத்திற்காக 32·30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இது தவிர கிராமப்புற தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 75 இலட்சம் செலவில் குடிநீர் முதலிய அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் பேசுகின்றபோது மயானத்திற்கு வேண்டிய இடம் பற்றியும், மயானத்திற்குச் செல்வதற்கான பாதை பற்றியும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். மயானத்திற்குச் செல்வதற்குரிய பாதைக்குரிய இடம் தனியார்களின் நன்செய் நிலங்களாக இருந்தாலும் கூட அதைக் கையகப்படுத்தலாம் என்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே குறைபாடுகள் ஏதேனும் இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வார்களேயானால் அது குறித்து தகுந்த நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலங்களைக் கையகப்படுத்துவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து, 1978, நிலங்கள் கையகப்படுத்தும் தமிழ்நாடு சட்டம் 31/78 சட்டத்தின் விதி 11-ல் ஏதாவது நிலங்களைக் கையகப்படுத்துகின்றபோது நில உரிமையாளர்கள் கோரிய தொகையை 5 தவணைகளில் தர வேண்டும் என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதிலே இருக்கின்ற சில குறைபாடுகளைக் கண்டறிந்து அதாவது இவ்வளவு நீண்ட காலத்திற்கு அந்தத் தொகை வழங்கப்படுவது குறித்து நிலத்தின் உரிமையாளர்கள் வழக்கு மன்றங்களுக்குச் செல்கின்ற நிலையிலுள்ள அந்தக் குறைபாடுகளை எல்லாம் கண்டறிந்து அதை மாற்றி அமைக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அந்தத் தொகையை இரண்டு தவணைகளாக ஒரே நிதியாண்டிற்குள்ளாக தருகின்ற அளவிலே மாற்றங்களை இந்த அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் இதிலே இருக்கின்ற குறைபாடுகளை அறிந்து அதற்காக தனியாக ஒரு சட்டத்திருத்தத்தைக் கொண்டு வருவதற்குரிய வகையிலே அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே பேசுகின்றபோது ஆதி திராவிடர் நலத்துறையின் மூலமாகக் கட்டப்படுகின்ற இலவச வீடுகள் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள் அவர்களுடைய கருத்துக்களை நிச்சயமாகத் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கவனத்திலே கொண்டு

செயலாற்றுவார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். 207 சதுர அடிப் பரப்பளவில் 5,060 ரூபாய்க்கு வீடுகளைக் கட்டவேண்டும் என்று இந்த அரசு ஆணை பிறபித்திருந்தது. ஆனால் தற்போது கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தின் காரணமாக அந்தத் தொகையில் வீடுகளைக் கட்டுவதற்கு சாத்திய ம்இல்லை என்று ஆதி திராவிட வளர்ச்சிக் கழகத்தின் மேலாளர், இயக்குநர் அரசுக்கு தெரிவித்திருக்கிறார். அது தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயலாற்றுவதா வேண்டாமா என்பது குறித்தும் இந்த அரசு பரிசீலனை செய்துகொண்டு வருகின்றது. இது குறித்து கொள்கை அளவிலே முடிவு எடுக்க வேண்டி இருப்பதால் கூடிய விரைவில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையும் மனதிலே கொண்டு ஒரு நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குடியிருப்புப் பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு அந்தச் சட்டத்தைத் தமிழகம் முழுவதும் செவ்விய முறையிலே செயலாற்றி அந்த மக்களின் மீது இழைக்கப்படுகின்ற இன்னல்களைத் தவிர்க்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அரசு முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. ஏற்கெனவே 13 மாவட்டங்களில் இயங்கும் காவல் படைகள் இருந்து வருகின்றன. மேலும் 7 மாவட்டங்களிலே இயங்கும் காவல் படை அமைப்பது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசுகின்றபோது இந்த சட்டத்தின் மூலமாக தொடுக்கப்பட்ட வழக்குகள் குறித்து எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அந்த வழக்குகள் நீண்ட காலமாக நிலுவையிலே இருக்கின்றது என்ற கருத்தையும் சொல்லி இருக்கிறார்கள். இந்தக் குறைபாட்டினைக் களைய வேண்டும் என்ற வகையில் இந்த வழக்குகளை விசாரிப்பதற்கு என்றே தனியாக நீதிமன்றம் ஒன்றை நிறுவுவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

அடுத்து, தீண்டாமையால் ஏற்படும் தீமைகளையும் கொடுமைகளையும் விளக்குகின்ற முறையிலே அரசின் சார்பிலே ஒரு சிறு விளக்கத் திரைபடம் ஒன்று தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஆகும் மொத்தச் செலவில் பாதியை மைய அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் வீட்டு மனைப்பட்டாக்களை வழங்குவது பற்றி தம் கருத்துக்களை எடுத்துச் சொன்னனார்கள். அவர்களுக்கு நான் பணிவோடு ஒன்றை சொல்லிக்

கொள்ள விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் எவ்வளவுக்கு அதிகமாக வீட்டுகமனைப் பட்டாக்களை ஆதி திராவிட மக்களுக்கு வழங்க முடியுமோ, அந்த அளவுக்கு அதில் மிக கவனத்தோடு ஈடுபட்டு வழங்கி வருகிறது என்பதை அந்த உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். உதாரணமாக, தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி ஏற்படுவதற்கு முன்பாக ஒரு பத்தாண்டுகளில் ஒன்றை எடுத்துச் சொல்லி, ஒப்பிட்டுப் பார்க்க நான் விரும்புகிறேன்.

1966 முதல் 1977 வரையில் கொடுக்கப்பட்ட வீட்டு மனைப் பட்டாக்கள் 1,10,712. அதனுடைய மதிப்பு ரூ.282·78லட்சம் ஆகும். ஆனால் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு 1977 முதல் 31—3—1981 வரையில் 1,10,299 பட்டாக்களை, 381·07 லட்சம் மதிப்பீட்டில் வழங்கியிருக்கிறது. (குறுக்கீடு).

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பட்டாக்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், குடியிருப்பு மனைச் சட்டம் என்று கொண்டு வரப்பட்ட சட்டத்தின் அடிப்படையிலே சொல்லப்படுகிற கணக்கா அல்லது ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து தரப்பட்ட பட்டாகளின் மொத்தக் கணக்கா என்று அறியவிரும்புகிறேன்.

மண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1949-ஆம் ஆண்டு முதல் செய்கின்ற முறையிலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய வகைகளைத்தான் தெரிவித்திருக்கிறேன். இதுவரையில் மொத்தமாக 1949 முதல் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய பட்டாக்கள் 3,72,990. அதிலேதான் நான் குறிப்பிட்டஅந்த கணக்கும் அடங்குகிறது.

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இது பொதுவாக அரிசனங்களுக்கு வேறு நிலங்களை எடுக்கப்பட்டதிலிருந்து கொடுக்கப்பட்ட பட்டாக்களின் கணக்குகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில், குடியிருப்பு மனைச் சட்டம் என்று ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு, தஞ்சை மாவட்டத்தில் மட்டும் லட்சத்திற்கும் அதிகமான பட்டாக்கள் கொடுக்கப்பட்டன. அந்த மனைகள் அங்கே குடியிருந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக்கப் பட்டது. அந்தக் கணக்கு இதிலே இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்பு மனைச் சட்டம் என்பதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. குடியிருப்பு மனைச் சட்டம் என்பது விவசாய தொழிலாளர்களுக்கும்

நிலம் இல்லாதவர்களுக்கு அவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், குடியிருப்பு மனைக் கட்டி கொடுப்பதாகும். ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்வது, ஆதித் திராவிட மக்களுக்கு மட்டும் கொடுத்திருப்பது பற்றியது என்றுதான் சொல்கிறார்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதை தான் அறிந்துக் கொண்டும், பார்த்துக் கொண்டும் தான் கேட்டேன். தஞ்சை மாவட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் குடியிருப்பு மனைச் சட்டம் என்று கொண்டு வரப்பட்ட சட்டத்தின் கீழ், ஒரு லட்சத்திற்கும் மேலான பட்டாக்கள் தஞ்சை மாவட்டத்தில் கொடுக்கப்பட்டன. அப்படி தரப்பட்ட பட்டாக்களில் 75 சதவீதத்தினர் அரிசனங்களாக இருந்தார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்தக் கணக்கு இதில் சேர்ந்திருக்கிறதா என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், புரிந்து கொண்டும், தெரிந்து கொண்டும் தான் சொன்னதாகச் சொன்னார்கள். முதலமைச்சராக இருந்தவருக்கு தெரியாது என்ற தவறான கருத்தில் நான் சொல்லவில்லை. குடியிருப்பு மனைச் சட்டம் என்பது வேறு, இது வேறு. ஆனால் அவர் சொல்வது எல்லாம் ஆதித் திராவிட மக்களுக்கு மட்டுமே, அதுவும் இப்போது கொடுக்கப்பட்டவை மட்டுமே தான் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் பேசுகிறபோது மலம் மற்றும் கழிவு நீர் போன்றவைகள் எடுப்பது பற்றியும், அவர்களுக்கு புதிய கருவிகள் அதிகமாக வழங்கவேண்டும் என்பது குறித்தும் கருத்துக்களைச் சொன்னார்கள். அரசுக்கு அந்தக் கருத்துக்களிலே எந்தவிதமான மாறுபாடும் இல்லை. நிச்சயமாக அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க, தீவிரமாக அரசு முனையும் என்பதனை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் தனபால் அவர்கள் பேசுகிறபோது, கலப்புத் திருமணம் பற்றிச் சொன்னார்கள். அப்படிக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன் உரிமை அளிக்கப்படுமா என்றும் கேட்டார்கள். அது தற்போது தீவிரமாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி: யசோதா அம்மையார் அவர்கள் பேசுகிறபோது, பள்ளிச் சீருடைகள் வழங்குவது பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1981 ஏப்ரல் 23] [திரு. எம். விஜயசாரதி]

(முற்பகல் 10–40)

தொழிலாளர்களுக்கு இப்போதுள்ள சீருடைகள் வழங்குகிற திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பாகவே சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள எம்.ஜி.ஆர். பள்ளிக்கூடத்தில் இந்த விதமான சீருடை வழங்குகிற பணியை தற்போதைய முதல் அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள் செய்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இன்றைய தினம் ஆட்சிப்பொறுப்பில் இருக்கிறபோது, நிச்சயமாக இந்தச் சீருடைகள் வழங்குவதில் எந்தவிதமான காலதாமதமும் இருக்காது என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முன்பு ஆண்டுக்கு இரண்டு ஜோடி துணிகள் கொடுக்கப்பட்டு வந்தன. இந்த ஆண்டு முதல் ஜூன் மாதமே இரண்டு ஜோடி துணிகளும் ஒன்றாகக் கொடுக்கிற எண்ணமும் அரசுக்கு உள்ளது என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் அரசு கருத்தில்கொண்டு கவனத்தோடு ஆராயும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எழுதுபொருள் அச்சுத்துறையைப் பொறுத்தவரையில் இங்கே பல உறுப்பினர்கள் கலந்துகொண்டு அந்தத் தொழிலாளர்கள் நலன்கள் குறித்து கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கமும் தொழிலாளர்கள் நலனில் அக்கறை, கொண்டுள்ளது என்பதை நான் முதலில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பன், தேநீர் போன்றவற்றிற்குக் கொடுக்கப்படுகிற படியை உயர்த்த வேண்டுமென்று எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். இரவிலே மாற்றுமுறையில் பணி செய்யும் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகிற படியை உயர்த்தவேண்டும் என்ற கருத்தைக் யும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் இதைப்பற்றி பரிசீலனை செய்து நிச்சயமாக கூடிய விரைவில் ஒரு நல்ல முடிவினை அறிவிக்கும் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடும்ப நலத் திட்டம் குறித்து, ரூ. 10,000 இந்தத் தொழிளாலர்களுக்கு கொடுக்கப்படவில்லை என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள்கூட சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குடும்ப நலத் திட்டப்படி ரூ. 10,000 அச்சகத்தில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்பட்டுத்தான் வருகிறது. அச்சகத் தொழிலாளர்களுக்கு அமைச்சுப் பணியாளர்களுக்குக் கொடுப்பதைப்போல் 18 மாத மருத்துவ விடுப்பு கொடுக்காதது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அச்சகத் தொழிலாளர் 12 மாத மருத்நுவ விடுப்புக்குத்தான் விதிகளின் படி தகுதி பெற்றவர்கள். ஆகவே அதுகுறித்து பரிசீலனை செய்வதற்கில்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது சென்னை, தண்டையார்பேட்டையிலுள்ள அரசு அச்சகப் பணியாளர்கள் குடியிருப்பில் சாலைகள் சரியாக இல்லை என்றும் சுற்றுச் சுவர் சரியாக இல்லை என்றும் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குடியிருப்பின் சுற்றுச்சுவர் 80 சதவீதம் வேலை முடிந்துவிட்டது. இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் அந்தப் பணி முழுமையாக முடிவுபெறும் என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சாலைகள் பராமரிப்பதும், குடிநீர் வசதியும் செய்து தருவதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எழுது பொருள், அச்சுத்துறை பொறுத்தவரையில் தொழிலாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் வழங்கும் கடன்களை 60 தவணைகளில் செலுத்துகிற முறைபற்றி உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய விதிகளின்படி இத்தகைய தவணைகளை மேலும் அதிகரிப்பதற்கில்லை என்று கூட்டுறவுப் பதிவாளர் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துப்படி அவர்களுக்கு உயர்த்தித் தருகிற எண்ணம் இல்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அச்சு இயந்திரங்கள் பற்றி பேசுகிற போது மாண்புமிகு உறுப்பினர்கள் 15 அச்சு இயந்திரங்கள் பழுதுபட்ட நிலையில் உள்ளன என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மைய அச்சகத்திலுள்ள 53 அச்சு இயந்திரங்களில் 15 அச்சு இயந்திரங்கள் பழுதடைந்துள்ளன. பட்டியலில் உள்ள இந்த 15 இயந்திரங்களில் 8 இயந்திரங்கள் பெரிதும் பழுதடைந்துள்ளன. மீதம் உள்ள ஏழு இயந்திரங்கள், சாதாரண நிலையில் பழுதடைந்துள்ளன. மேலே குறிப்பிட்ட இயந்திரங்களில் பல வெளிநாட்டில் செய்யப்பட்டவை குறிப்பாக ரஷ்ய நாட்டில் பி.டி. 5, இயந்திரம் செய்யப்பட்டது. தற்போது ரஷ்ய நாட்டில் இருக்கிற இந்த இயந்திரத்தைச் செய்து கொடுத்த நிறுவனம் மூடப்பட்டுவிட்டது. ஆகவே அங்கு இருந்து உதிரி பாகங்கள் கிடைக்காத காரணமாக இவை உடனடியாகப் பழுது பார்க்கப்படாமல் உள்ளன தற்போது அரசாங்கம் இங்கிலாந்து நாட்டிலிருந்து அவற்றை இறக்குமதி செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. உதிரி பாகங்கள் கிடைத்தவுடன் இந்த பழுது பட்ட நிலையிலுள்ள இயந்திரங்களுக்கு பொருத்தப்படும் என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஜே. எஸ். இராஜூ அவர்கள் பேசுகின்ற போது, எழுதுபொருள் அச்சகத் துறையிலே தினக் கூலிகளாக பணிபுரிந்த 131 நபர்களைப் பற்றி எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்கள் நீண்டகாலமாக அச்சகத்திலே தினக் கூலிகளாக பணியாற்றி வருகிறார்கள் என்பதை அரசு உணர்ந்து, இவர்களில் 12 நபர்கள் வேறு வேலைக்குச் சென்றும், பணி நீக்கப்பட்டும், மற்றவர்கள் இறந்தும் போய், தற்போது 119 தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் நீண்டகாலமாக பணியாற்றி வருவதை கணக்கிலே கொண்டு, அவர்கள் குடும்பத்தின் சூழ்நிலை, வயது, ஆகிய வற்றைக் கருத்தில் கொண்டு, அரசு கருணைகொண்டு, விதி முறைகளைத் தளர்த்தி, முறையாக அவர்களைப் பணியிலே அமர்த்தி அரசாணை எண். 475, போக்குவரத்துத்துறை, தேதி 20-4-1981-ல் உத்தரவிட்டிருக்கிறது என்பதை நான் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஈய அச்செழுத்துக்களைக் கோப்பதால் பாதிப்பு ஏற்படுகின்றது என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அரசைப் பொறுத்தவரையில்—தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர் கள், 20-வது அச்சக உரிமையாளர்கள் மாநாட்டிலே கலந்து கொண்டு பேசுகின்றபோது, தமிழகத்திலே இருக்கின்ற அச்சுக் கோர்ப்பவர்கள் கையால் கோர்க்கிறார்கள் என்றும், அதனால் அவர்கள் உடல்நிலை பாதிக்கப்படுகிறது என்றும்ஒருகருத்தினைச் சொல்லி இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவ வேண்டியது நம்முடைய கடமை என்ற கருத்தினை புரட்சித் தலைவர் அவர் கள் அந்த மாநாட்டிலே பேசுகின்ற போது சொல்லியிருக்கிறார் கள். தற்போது மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு அதே கருத்தைச் சொல்லி இருக்கின்ற காரணத்தினால், அரசு நிச்சயமாக இது குறித்து ஆவன செய்யும். இதர பணியாளர் களுக்கும் அந்த லெட் பாயிசன் அலவன்சு கொடுப்பதற்கு முயற்சி களை மேற்கொள்ளும் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விவாதத்தில் பங்கு கொண்டு பல்வேறு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் தீவிரமான முறையில் பரிசீலனை செய்யப்படும். அச்சகத் துறையைப் பொறுத்தவரையில், இந்தத் தொழிலாளர்கள் அரசுக்குச் சாதகமாக, எந்தவிதமான வேலை நிறுத்தத்திலும் பங்கு கொள்ளாமல் மிகவும் ஒத்துழைப் புத் தந்திருக்கிறார்கள். இந்த அரசின் சார்பிலும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் சார்பிலும் அரசுத் துறை அச்சுத் துறை தொழிலாளர்களுக்கு நன்றியை நான் தெரி வித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று, இந்த விவாதத்திலே பங்கு கொண்டு, பல்வேறு கருத்துக்களை, எடுத்துச் சொல்லியிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அனை வருக்கும், நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுடைய எண்ணங்களை இந்த அரசு நிச்சயமாக கவனத்தில் கொள்ளும் என்பதை நான் மீண்டும் எடுத்துச் சொல்லி, நீங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டுக் கொண்டு, அமர்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசியவர்கள் பலர் சொன்னார்கள். நானும், சென்ற ஆண்டு அரிசன மானியக் கோரிக்கையின் போது பேசியிருக்கிறேன். அரிசன மக்களுக்கு எல்லா இடங்களிலும் அரசாங்கத்தில் சலுகைகள் செய்து கொடுப்பதாக ஒரு பிரமை உண்டாக்கப்பட்டிருக்கிறதே தவிர, இன்றைக்கு எந்த ஒரு துறையிலும் 18 சதவீதம் பூர்த்தி செய்யப்படவில்லை. அதைப் பூர்த்தி செய்வதற்கு கேள்வி போட்டும், அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் கொடுக்கவில்லை. ஆகவே, இதற்காக செகண்டு செகரட்டரி அளவில் ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு, ஒவ்வொரு துறையிலும் அரிசனங்களுக்காக உள்ள இந்த விழுக்காடு பூர்த்தி செய்யக்கூடிய அளவில் கவனிக்கப்படுமா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

அதற்கடுத்து, ஆதித் திராவிடர்கள் என்பதில் 112 பிரிவுகள் இருக்கிறார்கள். அரிசனங்கள் இருக்கிறார்கள்; அதிலே ஒரு பிரிவினர்தான் ஆதி திராவிடர்கள். அந்த ஒரு பிரிவின் பெயரை மட்டும் வைத்து சட்டமாக்கியதால், பாக்கியுள்ள பிரிவினர்களுக்கு சலுகை இல்லாத அளவுக்கு ஆகிவிடுமோ என்று பல மக்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே, அதை மாற்றி ஷெடியூல்டு காஸ்ட் அண்டு ஷெடியூல்டு டிரைப்ஸ் அதாவது தாழ்த்தப்பட்ட மக்கள் என்பதுபோல் வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அப்படி மாற்றா விட்டால், எப்படி 230 பிரிவுகளை இணைத்து பிற்பட்டோர் நலம் என்று வைத்திருக்கிறார்களோ, அதைப் போல் ஆதித் திராவிடர்களையும் மாற்றுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. வெ. இராஜசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே தண்டையார்பேட்டையிலுள்ள பிரஸ் குவாட்டர்ஸ் சம்பந்தமாக, அதற்காக சில திட்டங்கள் தீட்டப்பட்டு உள்ளதாகச் சொன்னார்கள். அங்கே அச்சகத் தொழிலாளர்களின் வீடுகள் 300 வீடுகள் இருக்கின்றன. அங்கே இருக்கிற ரோடுகள் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான ரோடுகள். அவைகள் சரியாக போடப்படவில்லை. தொழிலாளர்கள் மிகுந்த சிரமப்படுகிறார்கள். அங்கே ஒரு விளையாட்டுத் திடல் ஒன்று இருக்கிறது. அங்கே குப்பைகளை குவித்திருக்கிறார்கள். பலமுறை கோரிக்கைகள் கொடுத்தும் அது செம்மையாக்கப்படவில்லை.

1981 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் உட்கார வேண்டும். இரண்டு கேள்விகள் கேட்டு விட்டீர்கள். மற்றதை அமைச்சரிடம் தனியாகக் கேட்டுக் கொள்ளலாம். வேறு மானியங்கள் வரும்போதும் பேசலாம். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. திருவாளர்கள் சு. பாலன், கே.எம். தங்கமணி கவுண்டர், என். பழனிவேல், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—பேரவை முன்னுள்ள கேள்வி.

''மானிய கோரிக்கை எண் 31—மலைவாழ் பழங்குடியினர், ஆதித் திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 24,95,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 44

திருவாளர்கள் சு. பாலன், என். எஸ். வி. சித்தன், ரா.கிருஷ்ணன், எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—பேரவை முன்னுள்ள கேள்வி.

''மானியக் கோரிக்கை எண் 44— எழுது பொருள்— அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,44,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண் 17—கல்வி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண் 17-கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,49,02,82,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, ஏழை, எளிய மக்களின் 3 வயது முதல் 6 வயது வரையில் தனிக் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டி நிலை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 17–கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,49,02,82,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு கே.எம். தங்கமணி கவுண்டர்: தலைவரவர்களே, திண்டிவனத்தில் உள்ள திரு அ. கோவிந்தசாமி அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட வகுப்பில் வேதியியல் பிரிவு தமிழ் இலக்கிய பிரிவு வகுப்புகளை வரும் கல்வியாண்டில் துவக்க வகை செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,49,02,82,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கி றசொரணம்: தலைவரவர்களே, ஆசிரியர்கள் அனைவரையும் அரசு ஊழியர்கள் என அறிவிக்க வேண்டியது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 17-கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,49,02,82,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு, பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, திருத்துறைப் பூண்டி மேல்நிலைப் பள்ளியில் 1,500 மாணவர்கள், மாணவிகள் படிப்பதால் இடநெருக்கடியாக உள்ளதால் மேலும் கட்டிடம் கட்டிக்கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,49,02,82,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் அவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவையின் முன் வைத்திருக்கிற அறிக்கைகளை* படிக்கப்பட்டதாக கருதி குறிப்பேட்டில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[874......ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

1981 ஏப்ரல் 23]

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு வைத்திருக்கின்ற கல்வி மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இப்போது 249 கோடி ரூபாய் கல்விக்காக செலவிடுவதாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால் மொத்த வருவாய்க் கணக்கில் 22 விழுக்காடு என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு 23 விழுக்காடாக இருந்த அந்தச் செலவினம் இந்த ஆண்டு 22 விழுக்காடாக குறையக் கூடிய நிலைமை இருக்கிறது என்றால் இந்தத் துறையிலே எந்த அளவுக்கு இந்த அரசு அக்கறை எடுத்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் கல்வியில் மிகவும் உயர்ந்திருந்த நிலையில் இருந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு கணக்கு எடுத்துப் பார்த்தால் இன்றைக்குப் படித்தவர்களின் எண்ணிக்கையில் தமிழகம் மூன்றாவதாகத் தள்ளப் பட்டிருக்கிறது. காரணம் அரசினுடைய திட்டங்களாலும் அரசினுடைய கல்வி ஏற்பாடுகளாலும்தான். நம் நாட்டு மக்கள் கல்வியறிவு பெற்றவர்களாகவும், அறிவாளிகளாகவும் வருவார்கள் என்பதுதான். அந்த அளவுக்கு இன்றைக்குத் தமிழகம் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக பொதுக் கல்விக்காக 207 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் எந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தாலும், எந்தக் கிராமத்தைப்போய்ப்பார்த்தாலும் அங்கே இருக்கின்ற பள்ளிக்கூடங்களுக்கு கட்டடங்கள் இல்லாமல் மேஜை, நாற்காலிகள் ஆசிரியர்களுக்கு இல்லாமல், ஆவணங்களை வைப்பதற்குக்கூட மேஜைகள் இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. 207 கோடி ரூபாய் என்பதை அதிகமான தொகை என்றுகூட எண்ணம் இருக்கலாம். ஆனால் கிராமத்திலே உள்ள ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சரிசமமான வாய்ப்பு தரப்படவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. அரசு ஊழியர்களாக்கப்பட்ட அந்த ஆசிரியர்கள் இன்றைக்கு கோரிக்கைகளை வைத்துப் போராடினார்கள். அவர்கள் 15 நாட்களாகச் சிறைச்சாலையிலே இருந்தார்கள். அவர்களை அமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசி ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறார்கள். அவர்களை ஒன்றியத்தை விட்டு மாற்றுவதில்லை என்று உறுதியளித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பை ஏற்று நடைமுறைப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்த வரையில் உயர் கல்விக்கு மிக முக்கியமாக விளங்குகின்ற சென்னைப் பல்கலைக்கழகத்திலே ஊழல்கள் மலிந்திருக்கின்றன, ஒழுங்கீனங்கள் இருக்கின்றன, முறை

[திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்] [1981 ஏப்ரல் 23

கேடுகள் இருக்கின்றன. அங்கே நிர்வாகத்திலேயிருந்து கொண்டிருக்கின்ற துணைவேந்தர் அந்தப் பல்கலைக்கழகத்தை தன் சுயநலத்திற்காகப் பயன் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்கே பல்வேறு பாட பிரிவுகள் இருக்கின்றன. அந்த வேலை வாய்ப்புகளில் அங்கேயெல்லாம் தனக்கு வேண்டியவர்களை, உறவினர்களை வேலையில் அமர்த்திக்கொள்கிறார்கள். நூலகத் துறையிலே கங்காதரராவ் என்பவர் பேராசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் டாக்டர் பட்டம் பெற்றவர் அல்ல, பி. எச்டி., பட்டம் பெற்ற ஒருவர்தான் நூலகத் துறையிலே பேராசிரியராக நியமிக்கப்படவேண்டும். அந்த விதிக்கு மீறிய வகையில், யு.ஜி.சி-க்கு வரம்பை மீறுகிற முறையில் அவரை நியமித்திருக்கிறார்கள். அங்கே பல்வேறு முறைகேடுகள் இருக்கின்றன. சட்ட இயல் துறையில் பேராசிரியர்களை மேற்பார்வைக்காக ராமாராவ் என்பவரைப் போட்டுயிருக்கிறார்கள். இந்த இருவரும் துணைவேந்தர் ஜி.ஆர். தாமோதரனுக்கு உறவினர்களாக இருக்கிறார்கள். அதே நேரத்தில் அந்த இருவரும் தமிழ் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். ஆந்திராகாரர்களாக இருக்கிறார்கள். தமிழகத்தின் மையப் பகுதியிலே அமைந்திருக்கின்ற பல்கலைக் கழகத்திலே சென்னை பல்கலைக்கழகத்திலே தமிழே தெரியாத ஆசிரியர்களை நியமித்து இருக்கிறார்கள். தமிழுக்காக வாதாடுகிறோம், போராடுகிறோம் என்று சொல்லுகிற ஆட்சியாளர்கள் உண்மையிலே தமிழ் தெரியாதவர்களை எப்படிப் போடார்கள் என்பதை விசாரணைக் கமிஷன் போட்டாவது கண்டறிந்து அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைப்போன்று கோயம்புத்தூர் பி.எஸ். ஜி. டெக்ஸ்டைல்ஸ் டெக்னாலஜி என்ற நிறுவனத்தை ஒரு உயர் கல்வி ஆராய்ச்சி நிறுவனமாக உயர்த்துவதற்காக முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த டெக்ஸ்டைல்ஸ் டெக்னாலஜியில் இதுவரை ஒரு டாக்டர் பட்டம் பெற்றவர்கூட பணியாற்றவில்லை. டாக்டர் பட்டம்பெற்றவர் பணியாற்றாத அந்த நிறுவனத்தை எப்படி டாக்டர்களை உருவாக்குகின்ற மையமாக ஆக்கமுடியும் என்பதை கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

''அடல்ட் அன்ட் கன்டின்யூயிங் எஜுகேஷன்.'' என்று ஒரு பிரிவு இருக்கிறது. அதில் பல்வேறு முறைகேடுகள் நடந்து இருக்கின்றன. அவைகளைப் பற்றிச் சின்டிகேட் கூட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டு, அதற்குப் பிறகு விசாரணைக் குழு போடப்பட்டு, அதனுடைய அறிக்கையும் பெறப்பட்டு, ஆனால் அதன் மீது, அந்தச் சம்பந்தப்பட்ட நபர்மீது நடவடிக்கை எக்கப்படவில்லை. நாகராஜன் என்ற அவர் சைகாலஜி டிபார்ட்மென்டுக்கு மாற்றப்பட்டுள்ளார். அது பற்றி என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அமைச்சரவர்கள் சொல்லக்கூடும், அது அட்டானமஸ் பாடி, அதில் தலையிடுவதற்கு விதி இல்லை என்று சொல்ல

கூடும். இந்தச் சட்டப்பேரவையில் நாம் இயற்றுகின்ற சட்டத்தின் மூலம் அவர்கள் நியமிக்கப்பட்டு, அரசாங்கம் கொடுக்கின்ற மானியத் தொகையின் மூலம் நடத்தப்படும் அந்தப் பல்கலைக்கழகம் முறையாக, சட்டவிதிகளுக்கேற்ப நடக்கிறதா என்பதைக் கண்காணிக்கின்ற பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு பதட்டமான சூழ்நிலை, மோசமான சூழ்நிலை சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடக்கிறது. மாணவர்களுக்கு தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஏற்கனவே மாணவர்கள் எழுதியிருக்கின்ற தேர்வுகளுக்கான முடிவுகள் இன்னும் வராத காரணத்தினால் இறுதியாண்டு பட்டப்படிப்பு மாணவர்களும், ஏற்கனவே எழுதிய தேர்வுகளின் முடிவுகள் வராத காரணத்தால் சிரமப்படுகிறார்கள். அவர்களுடைய தேர்வு முடியக்கூடிய நேரத்திலே அவர்கள் வெற்றி பெற்று விட்டார்களா என்று தெரியாத நிலையிலே அடுத்த ஆண்டு மேல்பட்டப்படிப்புகோ அல்லது வேலைக்கோ செல்ல வேண்டுமென்றால் முடியாத நிலையில் தேர்வு முடிவுகள் தெரியாமல் இருக்கிறது. முறையாகச் செய்யப்பட வேண்டிய இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாமல் அதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள், நிர்வாகப் பணியாளர்கள் ஆகியவர்களுக்கு வீடு கட்டுவதற்காக 48 ஏக்கரா நிலம் வாங்கப்பட்டது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. எஸ். அவர்கள் அந்த வீடு கட்டும் திட்டத்திற்காக அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். ஆனால் அடிக்கல் நாட்டப்பட்டதிலிருந்து இதுவரையில் வீடுகள் கட்டப்படவில்லை. பிறகு அடிக்கல் நாட்டுவது எதற்காக? விழா நடத்துவதற்காகவா என்று கேட்க விரும்புகிறேன். எனவே, அதில் முறையாக அணுகி, பெற வேண்டிய மானியத்தைப் பெற்று, செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யவில்லை. அரசு இதை எல்லாம் சரியாகக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதை எல்லாம் விட முக்கியமான இன்னொரு விஷயம் என்னவென்றால், தமிழ்நாட்டில் உள்ள ஆணைப்படி, பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் 50 சதவிகிதமும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் 18 சதவிகிதமும் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். ஆனால் அங்கே உள்ள துணைவேந்தர், ஆராய்ச்சி மாணவர்களைச் சேர்க்கும் பிரிவில் உள்ள பல்வேறு ஆசிரியர்களை உள்ளடக்கிய குழு ஒன்றின் மூலமாக அந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் அந்தக் குழு மிகவும் முன்னேறிய சமுதாயத்தினரை மட்டும் தகுதியானவர்கள் என்ற நிலையை உருவாக்கி அவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஏன் அப்படி நடக்கிறது? எத்தனை பேர்

[திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்] [1981 ஏப்ரல் 23

கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்? யார் யார் மனுச் செய் தார்கள்? மனுச் செய்தவர்களில் எத்தனை பேர் நிராகரிக்கப் பட்டார்கள்? அவர்களில் எத்தனை பேர் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள்? எத்தனை பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதை எல்லாம் பற்றி அறிய, அரசு அனைத்து ரிக்கார்டுகளையும் வரவழைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன். ஆராய்ச்சி மாணவர்களாகத் தாழ்த்தப் பட்ட மாணவர்கள், பின்தங்கிய மாணவர்கள் ஆகியவர்களை வரவிடாத சூழ்நிலை உருவாகி உள்ளது என்பதைக் குற்றச் சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகம் ''Centralised University'' என்று சொல்லும் அளவிற்கு இல்லை என்பதால் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட எல்லோரும் அங்கே பயன் பெறுகின்ற வகையில் பல்கலைக் கழகத்திலே இருக்கின்ற எல்லாப் பாடங்களையும் தமிழிலே கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் தெரியாத பல்வேறு பேராசிரியர்கள், பல்வேறு ஆசிரி யர்கள் அங்கே இருக்கிறார்கள். யார் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தாலும், இதுவரையில் அவர்களுக்குத் தமிழ் தெரியவில்லை என்றாலும் இனிமேலாவது ஒரு காலவரையறை வைத்து அவர்கள் தமிழ் கட்டாயம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுது தான் இந்த நாடு முழுவதும் தமிழ் தெரிந்த மக்களோடு ஒன்றாக இருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரால் அறக்கட்டளை ஒன்று மூன்றாண்டுகளுக்கு முன்பு நிறு வப்பட்டது. ஆனால் அந்த அறக்கட்டளை நிறுவப்பட்டதே தவிர, எந்தவிதமான சொற்பொழிவும் நிகழ்த்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குக் காரணம் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்ற காரணத்தால், அதனால் ஏற்பட்ட அழுக்காற்றின் காரணமாக அந்த அறக் கட்டளை ஒழுங்காகச் செயல்படுத்தப்படாமல் இருக்கிறதா என் பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திருக்குறள் துறையிலே அண்ணா அவர்கள் காலத்தில் உரு வாக்கப்பட்டு, மதுரைப் பல்கலைக் கழகத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தனித் துறையாக இயங்கிக் கொண்டு இருக்கும் நேரத்தில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் மட்டும் இந்தத் துறை தனியாக இயங்காமல் தமிழ்த் துறையோடு சேர் க்கப்பட்டிருக்கிறது. இதனால் அதனுடைய முக்கியத்துவம் குறைந்து, சரியாக இயங்க விட முடியாத நிலையிருக்கிறது. எனவே, அதையும் சரியான முறையில் செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 23] [திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்]

சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையில், சட்டக் கல்வி என்பது இன்றைக்குத் தமிழகம் முழுவதும் ஏறக்குறைய நான்கு கல்லூரிகள் இருக்கின்றன. சட்டக் கல்லூரியைப் பொறுத்த வரையிலும், மருத்துவக் கல்லூரிக்குப் பெறப்படுகின்ற ஒரே மனுவைப் போன்று, எல்லாச் சட்டக் கல்லூரிகளுக்கும் ஒரே மனுவைத்தான் போட வேண்டுமென்றுசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், சென்னைச் சட்டக் கல்லூரியிலே பயில்வதற்கு வட ஆற்காடு, தென் ஆற்காடு, சென்னை போன்ற பகுதிகளிலே இருக்கிற மாணவர்கள் மனு செய்கிறார்கள். அதே போல், மதுரையைச் சேர்ந்த மாணவர்களும் மனு செய்ய வாய்ப்பிருக்கிறது. அதே போன்று, மதுரையிலே இருக்கிற சட்டக் கல்லூரிக்கு மற்ற பகுதிகளிலே இருக்கிற மாணவர்களும் மனுச் செய்யலாம். மதுரையிலே இருக்கிற மாணவர்களும் மனுச் செய்யலாம். ஆகவே, எல்லா கல்லூரிகளுக்கும் ஒன்றாக, சட்டக் கல்வி இயக்குநர் மூலமாக, ஒரே விதமாக மனு செய்வதன் மூலமாக ஒரு நுழைவுத் தேர்வு மூலமாகத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, பேராசிரியர்களை நியமிக்கும்போது தமிழ்நாடு தேர்வாணைக் கழகம் மூலமாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், இப்பொழுது, அதை மாற்றி, அவர்களாகவே தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த முறை மாற்றப்பட்டதன் காரணம் என்ன ? ஏன் அப்படிச் செய்கிறார்கள் ? குறிப்பாக, பகுதி நேர ஆசிரியர்களாக வழக்கறிஞர்களை நியமிக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வழக்குகளைக் கவனிக்கப் போய்விடுகிற காரணத்தால், அங்கே மாணவர்கள் பாடங்கள் படிக்க முடியாமல் போய் விடுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் சட்டக் கல்லூரிக்குத் தனியாக கட்டிடம் கட்ட ரூ. 5 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை நான் மறுக்கவில்லை. அதே நேரத்தில், அதற்கு முன்பாக ஏற்படுத்திய மதுரை சட்டக் கல்லூரிக்கு கட்டிடம் கட்டாமல், கோவைக்குக் கட்டிடம் கட்டுவதற்கு என்ன காரணம் என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், கோயம்புத்தூர் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி கட்ட ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. மதுரை சட்டக் கல்லூரிக்குத் தனியாக நிதி ஒதுக்கி, விடுதியைக் கட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரில் சட்டக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று, சட்டக் கல்லூரியில் அட்மிட் பண்ணுவதற்காக காலக்

[திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்] [1981 ஏப்ரல் 23

கெடு முடிந்த பிறகு ஒரு பெண் அந்தக் கல்லூரியிலே அனுமதிக்கப் பட்டிருக்கிறார். அவர் மிகப் பெரிய செல்வாக்கு படைத்த ஒருவருடைய மகள் என்பதற்காக சேர்க்கப்பட்டிருக்கிறாரா என்பதை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே குறிப்பிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

புற்றீசல் போன்று உருவாகி வரும் நர்சரி பள்ளிகளை ஒழுங்கு படுத்தச் சட்டம் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். ஆனால் இது வரையில் எந்தச் சட்டமும் கொண்டு வரவில்லை. அப்படிப்பட்ட நர்சரி பள்ளிகளில் உருவாக்கப்படுகிற ஒழுங்கீனங் கள் எந்த அளவு இருக்கிறதென்றால், பல்வேறு மாணவர் களிடம் ரூ. 20, ரூ. 30 கட்டணம் வசூல் செய்து, ஒழுங்கில்லாத முறையில் அவைகள் நடத்தப்படுகின்றன. அதை எல்லாம் கன்ட்ரோலுக்குக் கொண்டு வர சட்டம் இயற்ற வேண்டும். அதே போல், அந்தப் பள்ளிகளிலே தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு வர சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த திண்டிவனம் கலைக் கல்லூரியில் பி. எஸ்.ஸி. வேதியல், தமிழ் பி.ஏ. ஆகிய பாடங் களைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், ரூ. 24.59 இலட்சம் ப்ளாக் கிராண்ட் தருவதாக அமைச்சர் அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் போது சொன்னார்கள். ஆனால், இது வரையில் அந்த ரூ. 24.59 இலட்சம் எந்த அளவு செலவு செய்யப்பட்டது? எப்படி செலவு செய்யப்பட்டது என் பதற்கு முறையான கணக்குகள் இருக்கிறதா? அரசு ஆணையை ஒழுங்காக நிறைவேற்றுகிறார்களா? அரசு விதித்திருக்கிற அந்தப் பின் தங்கியோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோருக்குத் தரப்பட வேண்டிய ஒதுக்கீடுகளை ஒழுங்காகத் தருகிறார்களா என்பதை அரசு கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் போராடுகிற நேரத்தில், பல்வேறு கோரிக்கை களை உள்ளடக்கிப் போராடினார்கள். அந்த ஆசிரியர்களை எல்லாம் ஊக்கப்படுத்தி, நீங்கள் போராடுங்கள், நீங்கள் போராடுங்கள் என்று மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். இந்தச் சட்டப் பேரவையிலும் சட்ட மேலவையிலும், அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்ன சொன்னார்கள்? அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திலேயிருக்கிற பல்வேறு முறைகேடு களை நீக்குவதற்காக வெகு விரைவிலே சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள். ஆனால், சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும் என்று சொன்னதற்குப் பிறகு அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். காரணம், ஏறத்தாழ ஓராண்டுக் காலம் சட்டத் திருத்தம் கொண்டு வருகிறோம் என்று சொன்ன

வர்கள் இது வரையில் கொண்டு வராததன் மர்மம் என்ன? இந்த ஓராண்டுக் காலத்தில் கை மாறியது என்ன என்பதை இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில். மேல்நிலைப் படிப்பில் குறிப்பாக, எம்.பி.ஏ. கோர்ஸ் போன்ற படிப்புகள் எல்லாம் இருக்கின்றன. அந்தப் படிப்பிற்கு மாணவர்களை அனுமதிக்கக் தேர்வு செய்யும் குழுவில், திரு. பத்மநாபன் என்ற ஜாய்ன்ட் டைரக்டர் இருக்கிறார். அவர் இல்லாமலே, எம்.பி.ஏ. கோர்சுக்கு, அட்மிஷன் எல்லாம் முடிந்தபிறகு, தனியாக, எந்த விதமான காரணமும் இல்லாமல், மிகவும் குறைந்த மதிப்பெண் கள் உள்ளவர்களையெல்லாம் சேர்த்திருக்கிறார்கள். எப்படி சேர்த்தார்கள் என்பதையெல்லாம் அரசு கண்காணிக்க வேண்டும். பல்கலைக் கழகம், அரசினுடைய விதிகளுக்கு உட்பட்டு வர வில்லை. இது ஏன் வரவில்லை? மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன்ஸ் என்று சொல்லப்படுபவற்றில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அடங்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். நிர்ணயிக்கப்பட்டுள்ள சட்ட விதிகளுக்குட்பட்டு அது நடக்கவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.10)

காரணம் இந்த அளவுக்கு ஒழுங்கீனமாக நடந்து கொண் டிருக்கின்றது. அரசாங்கம் வழங்கிய பணத்தை தன் சொந்த லாபத்திற்காக, சொந்த செலவிற்காக பயன்படுத்து நிறுவனமாக அது விளங்குகிறது. அப்படிப்பட்டகிற பல்கலைக் கழகத்தின் சட்ட விதிகளைத் திருத்து வதன் மூலமாக அரசின் கன்ட்ரோலில் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1981 ஆம் ஆண்டு ஆசிரியர் நல ஒப்பந்தத்தை நிறைவேற்றவேண்டும் என்று அங்கே இருக்கின்ற துணைவேந்தர் திரு. சிட்டிபாபு அவர்களைக் கேட்டபோது அவர் இது என்ன பெரிய ஈரான், ஈராக் ஒப்பந்தமா இதை நிறைவேற்றுவதற்கு என்று அந்த அளவுக்கு அகங்காரமாக, முறைகேடான முறையில் சொல்கிறார் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். மாணவர்களும் அரசாங்கமும், மாணவர் களும் ஆசிரியர்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமானால் இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அரசின் பொறுப் பில் கொண்டு வந்தால்தான் நல்லது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில் எல்லா மாணவர் களுக்கும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டிருக்கின்ற மாண வர்களுக்கும் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்களுக்கும், சாதாரணமாக சென்னையிலே படிக்கின்ற மாணவர் களுக்கும், கிராமத்திலே இருக்கின்ற மாணவர்கள் எல்லோருக்கும் சமமான வாய்ப்பு என்றைக்கு கல்வி நிலையங் களில் உருவாகுமோ அன்றைக்குத்தான் சமுதாய சோசலிச நிலை ஏற்படும். அப்படிப்பட்ட நிலையை உருவாக்குவதற்கு அரசு சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்து, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையிலே இன்றைக்கு பேசுகிற வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு வரவு-செலவிலே ஏறத்தாழ 332 கோடி ரூபாய் கல்வி வளர்ச்சிக்காக இந்த அரசு ஒதுக்கி இருப்பதற்காக முதலிலே என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே ஆசிரியர்களின் நலனிலே அக்கறை கொண்ட, தமிழக மாணவர்கள் நலனிலே அக்கறை கொண்ட, தமிழ்நாட்டுக் கல்வி வளர்ச்சியிலே அக்கறை கொண்ட ஒருவர் இந்த அமைச்சர் பொறுப்பினை ஏற்றுள்ளார். அதிலே பல முற்போக்கான திட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாக அவர் இங்கே அமல் நடத்தி வருவதற்காக விசேஷமாக கல்வி அமைச்சர் அவர்களுக்கு பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.......

திரு. என். எஸ். வி. சித்தன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் பெரிய எதிர்க்கட்சியாகும். அதற்கு அடுத்த பெரிய எதிர்க்கட்சி காங்கிரஸ்தான். எங்களை பேச அழைக்காமல் தற்போது திரு. நெடுமாறன் அவர்களைப் பேச அழைத்திருக்கிறீர்கள். அந்த முறையை மாற்றியதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இருப்பது ஒரே எதிர்க்கட்சி தான்.

திரு. ப. நெடுமாறன் : துணைத் தலைவர் அவர்களே, நான் விளக்கம் சொல்லுகிறேன். நான் அவசரமாக ஊருக்குச் செல்லவிருப்பதால் இப்போது நான் பேசுகிறேன்.

நமது அமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற கல்வித்துறை செயலாளர், மற்ற இயக்குநர்கள், நம்முடைய மாணவர்களின், கல்வி வளர்ச்சியிலே அவர்கள் காட்டி வருகிற அக்கறைக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்வதோடு இன்னும் சில முக்கியமான விஷயங்களை அவர்களின் கவனத்திற்கு வைக்கிறேன்.

பச்சையப்பன் அறக்கட்டளையை எடுத்துக் கொள்வதிலே நீங்கள் எவ்வளவு வேகம் காட்டினீர்கள். அங்கே இருக்கக் கூடிய ஊழலை ஒழிப்பதிலே நீங்கள் காட்டிய அக்கறையை நான் பாராட்டுகின்றேன். அதைப்போலவே இன்றைக்குத் தமிழகத்திலே பல்வேறு பல்கலைக் கழகங்களிலே இந்த அவையிலே அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டிய குறைபாடுகள் நீக்கப்படவில்லை. அமைச்சர் அவர்களும், மற்ற அதிகாரிகளும் அதிலே தீவிரமான கவனம் செலுத்தவேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆளுநர் உரையிலும், அதற்குப் பின்னால் முதலமைச்சர் அவர்கள் பேச்சிலும், கல்வி அமைச்சர் அவர்கள் உரையிலும் பல்கலைக் கழகச் சட்டங்களிலே உரிய திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்று ஒரு தடவை அல்ல பல தடவை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதற்கான திருத்தங்கள் இந்த அவையின் முன்னாலே வைக்கப்படவில்லை. மதுரை, அண்ணாமலை, சென்னைப் பல்கலைக்கழகங்கள் ஏதோ அந்த நாட்களில் பல ஆண்டுகளுக்கு முன்னாலே நிறைவேற்றப்பட்ட அந்த உளுத்துப் போன சட்டங்களின் அடிப்படையில் இயங்கி வருகின்றன. அதை முற்றிலும் திருத்தி அமைத்து, இன்றைய நாட்டின் தேவையை மனதில் கொண்டு, வளர்ந்து வரும் அறிவு ஆராய்ச்சி நிலையை மனதில்கொண்டு, அந்தச் சட்டங்களை உடனடியாகத் திருத்தவேண்டும். நாம் இன்னும் புதிதாக 3 பல்கலைக்கழகங்களை நிறுவ இருக்கிறோம். ஆகவே, அதற்கு முன்னதாக இந்தப் பல்கலைக் கழகச் சட்டங்களைத் திருத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்தில் உள்ள ஆசிரியர்கள் போராடினார்கள். அந்த ஆசிரியர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே அமைச்சர் அவர்கள் முயற்சியால் உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டிலே உள்ள முக்கியமான அம்சம் அந்தப் போராட்டத்திலே ஈடுபட்ட அந்த மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்குவது என்பதாகும். ஆனால் அந்த வழக்குகள் இன்னும் வாபஸ் வாங்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த வழக்குகளை உடனடியாக வாபஸ் வாங்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே, அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையே உடன்பாடு அமைச்சர் அவர்களின் சிரிய முயற்சியால் ஏற்பட்டது. ஆனால் அந்த உடன்பாட்டை மதிப்பதற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக நிர்வாகம் மறுக்கிறது, ஏளனம் செய்கிறது. ஆசிரியர்கள் இன்றைக்கு ஆதரவற்ற நிலையில் நின்று கொண்டுஇருக்கிறார்கள். ஆகவே அரசு தலையிட்டு அந்த உடன்பாட்டை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சட்டக் கல்வியைப் பொறுத்தவரையில் சில விஷயங்களை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்தில் மட்டுமல்ல, தென்னிந்தியாவிலேயே பழமையான சட்டக்கல்லூரி நம்முடைய சென்னை சட்டக் கல்லூரிதான். இதை போஸ்ட் கிராஜுவேட்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இன்ஸ்டிடியூட்டாகவும், ரிசர்ச்இன்ஸ்டிடியூட்டாகவும் உயர்த்த வேண்டும் என்று ஒரு கோரிக்கை ரொம்ப நாட்களாக இருந்துகொண்டு இருக்கிறது. தமிழகத்திலே அந்த மாதிரியான ஒரு அமைப்பு, ஒரு நிறுவனம் இருக்கவேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள். மிகப் பெரிய சட்டமேதைகள் எல்லாம் இந்தக் கல்லூரியில் படித்தவர்கள்தான். இந்தியாவிற்கு அரசியல் சட்டம் வகுக்கின்ற போது அந்தக் குழுவிலே அவர்கள் இடம் பெற்று இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சட்ட மேதைகளை உருவாக்கிய அந்தச் சென்னை சட்டக் கல்லூரி ஒரு போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிடியூட்டாகவும், ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டாகவும் ஆக்கப்படுவதாலே நம்முடைய தமிழகத்தின் பெருமை உயரும் என்பதில் சந்தேகம் இல்லை.

இதற்கு முதற்படியாக அந்தக் கல்லூரிக்கு ஒரு அடானமஸ் ஸ்டேட்டஸ் அளிக்கப்பட்டாக வேண்டும். அதற்கான விண்ணப்பம் அனுப்புவதற்கு அந்தச் சட்டக் கல்லூரிக்கு இன்னும் அரசு அனுமதி வழங்கவில்லை என்று தெரிகிறது. அதை உடனடியாக வழங்கி, அதற்கு ஒரு அடானமஸ் ஸ்டேட்டஸ் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை, கோவை, திருச்சி சட்டக்கல்லூரிகளுக்கு சொந்த ஆஸ்டல் வசதி இல்லை. கட்டிட வசதி இல்லை. சொந்தக் கட்டிடங்கள் இல்லை. மாணவர்கள் மதுரையில் ஐ.டி.ஐ. ஆஸ்டலில் ஒரு பகுதியில் தங்கி இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த 3 கல்லூரிகளுக்கும் உடனடியாக ஆஸ்டல் வசதி ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைஎடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்தநேரத்தில் வலியுறுத்திக்கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொரு விஷயத்தையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்தாலே இயற்றப்பட்ட அட்வகேட்ஸ் ஆக்ட், அடிப்படையில் பார் கவுன்சில் ஆப் இந்தியா அமைக்கப்பட்டிருக்கிறது அந்த பார் கவுன்சில் ஆப் இந்தியா சட்டக் கல்லூரிகள் எப்படி இயங்க வேண்டும் என்பதற்கான சில நார்ம்ஸ் வகுத்து இருக்கிறது. அந்த நார்ம்ஸ் அடிப்படையிலே எந்தச் சட்டக் கல்லூரியாவது இயங்காவிட்டால் அல்லது அந்த நார்ம்ஸ் வரையறைக்குள்ளே எந்தச் சட்டக் கல்லூரியவது வர விட்டால், அந்தச் சட்டக் கல்லூரிக்கு அளித்திருக்கக் கூடிய அங்கீகாரத்தை அது வாபஸ் வாங்கலாம்.

(முற்பகல் 11-20)

இதன் விளைவாக அங்கேபடிக்கக்கூடிய மாணவர்கள் பட்டம் பெற்றாலும் வழக்கறிஞர்களாக அவர்கள் அங்கீகரிக்கப்படமாட்டார்கள்; அவர்கள் தொழில் நடத்த முடியாது. அந்த அபாயகரமான சூழ்நிலை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. இதற்கு சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 23] [திரு. ப. நெடுமாறன்]

எல்லா சட்டக் கல்லூரிகளுக்கும் லைப்ரரிக்காக முதல் வருஷம் 50,000 ரூபாய் கொடுக்க வேண்டும் ; அடுத்த வருஷம் 15,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இங்கே சென்னையில் இருக்கிற சட்டக் கல்லூரிக்கு மொத்தம் அரசு வழங்கியிருப்பது 25,000 ரூபாய்தான் நூலகத்திற்காக. இது அந்த நார்ம்சுக்குள்ளே வரவில்லை. இதை பார் கவுன்சில் ஆட்சேபனை செய்தால், அதன் விளைவு, நம்முடைய சென்னை சட்டக் கல்லூரி அதனுடைய அங்கீகாரத்தை இழக்கக்கூடிய அபாயம் ஏற்படும்.

அதைப்போல திருச்சி, கோவை சட்டக் கல்லூரிகள் கூட இந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு இல்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல சட்டக் கல்லூரிகளிலே ஆசிரியர்-மாணவர்கள் விகிதாச்சாரமும் இருக்கிறது. 1:20 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும். ஆனால் நம்முடைய சட்டக் கல்லூரிகளில் அந்த விகிதாச்சாரம் நிச்சயமாக இல்லை. இங்கே சென்னையில் இருக்கக்கூடிய சட்டக் கல்லூரியிலே பார்த்தால் 'பார்ட் டைம் ஜூனியர் ப்ரொஃபசர்ஸ்' என்று சொல்லக் கூடியவர்கள் மொத்தம் இருக்கக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கையில் 25 சதவீதத்திற்குமேல் இருக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. ஆனால் அந்த விதிக்கு உட்பட்டு இல்லை ; அதிகமாக இருக்கிறார்கள். சென்னை சட்டக் கல்லூரியைப் பொறுத்த வரையில் ஃபுல் டைம் டீச்சிங் ஸ்டாஃபை விட ஏறத்தாழ 3மடங்கு அதிகமாக 'பார்ட் டைம் ஜூனியர் ப்ரொஃபசர்ஸ் இருக்கிறார்கள். இவர்கள் ஒன்று என்றால் அவர்கள் மூன்று என்ற விகிதத்திலே இருக்கிறது. இது எல்லாம் நம்முடைய பார் கவுன்சில் வைதிருக்கிற நார்ம்சுக்கு உட்பட்டு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை, திருச்சி சட்டக் கல்லூரிகளில் ஒவ்வொரு கல்லூரியிலும் மூன்றே மூன்று ஆசிரியர்கள் தான், அதற்குமேல் இல்லை. மூன்றே மூன்று ஆசிரியர்களை வைத்துகொண்டு அங்கே எப்படி மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க முடியும்? அதிலும் இரண்டாவது ஆண்டு படிப்புத் தொடங்கிவிட்டது. அங்கே இன்னும் போதுமான ஆசிரியர்கள் இல்லை. இது எதிர்காலத்திலே நம்முடைய மாணவர்களைப் பாதிக்கும். ஆகவே, அதை நம்முடைய கல்வி அமைச்சரவர்கள் கவனித்து, இந்தக் குறைபாடுகளை போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று; 1966 ஆம் ஆண்டு வரையில் பல்கலைக் கழக டிபார்ட்மெண்டுகளில் வேலை பார்க்கிற ஆசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் இதர கல்லூரிகளில் வேலை பார்க்கிற ஆசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் ஊதியங்கள் ஒரே விகிதத்தில் சமமாக இருந்தன. ஆனால் 1970-ல் எஞ்சினியரிங் காலேஜ் அக்ரிகல்சர் யூனிவர்சிட்டி ஆசிரியர்கள் ஊதியம் அரசாங்கத்தால் உயர்த்தப்பட்டது. அதேநேரத்தில் இதர பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஊதியம் உயர்த்தப்படவில்லை.

அண்மையில் கல்லூரி ஆசிரியர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் 1,100 ரூபாய் என்று அரசு ஏற்றுக் கொண்டு, அதைக் கொடுக்கிறது. To all Professors of Colleges of Engineering and Agricultural University. இவர்களுக்கு எல்லாம் கொடுக்கப்பட்டது. ஆனால் பல்கலைக் கழகங்களில் வேலை பார்க்கக் கூடிய ஆசிரியர்களுக்கு இந்த ஊதிய விகிதங்கள் அளிக்கப்படவில்லை. மேலும் 10 ஆண்டு அஸிஸ் டென்ட் ப்ரொஃபசர்ஸ் ஆக வேலை பார்த்தால் அவர்களுக்கு புரொஃபசர் பதவி உயர்வு அளிப்பதற்கு அரசு ஏற்றுக்கொண்டது; அளித்திருக்கிறது; அதைப் பாராட்டுகிறேன். ஆனால் பல் கலைக் கழகங்களில் வேலை பார்க்கிறவர்களுக்கு, டிபார்ட்மென் டில் லெக்சரர்களாக இருக்கிறவர்களுக்கு இந்த சிபாரிசு அமுல் படுத்தப்படவில்லை. ஒரே படிப்பு, ஒரே வகையிலான ஆராய்ச் சிப் பட்டம் பெற்றவர்களுக்குள் இந்த வித்தியாசம் இருப்பது சரியல்ல. இந்த முறை முற்றிலும் நியாயமற்றது. ஆகவே இதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற் புறுத்த விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழிலே எம். ஏ. படித்தவர்கள் மதுரை, அண்ணாமலை, சென்னை போன்ற பல்கலைக் கழகங்களிலிருந்து ஆண்டுக்கு சுமார் 300-க்கு மேற்பட்டவர்கள் வருகிறார்கள். இதிலே அடிஷனலாக பி.எட். படித்தவர்கள் என்ற வகையிலே எம். ஏ., பி. எட். படித்து வெளியே வருகின்றவர்கள் ஆண்டுக்கு சுமார் 150 பேர். 150 பேருக்குக் குறையாதவர்கள் வெளியே வருகிறார்கள். ஆனால் ஆண்டுதோறும் மேல்நிலைப் பள்ளிகளில் 250 ஆசிரியர்கள் பதவிகள் காலி ஆகின்றன. அந்த நிலையிலே தமிழில் எம்.ஏ., பி.எட், பட்டம் படித்துவிட்டு வெளியிலே வருகின்றவர்களுக்கு இந்தப் பதவிகள் கொடுக்கப்படுவதில்லை. ஏற்கெனவே பி.எஸ்.ஸி. பி.எட்., பி.ஏ., பி.எட். போன்ற பட்டங்களைப் பெற்று பள்ளிகளிலே பணியாற்றிக் கொண்டிருக் கின்ற ஆசிரியர்கள் தனியாக தமிழ் எம்.ஏ. படித்து பாஸ் செய்து வருகின்றனர். அவர்களுக்குத்தான் இந்தப் பதவிகள் கொடுக்கப் படுகின்றனவே தவிர புதிதாகப் படித்து வருகின்றவர்களுக்குக் கொடுப்பதில்லை. ஏற்கெனவே பணியாற்றுகின்ற ஆசிரியர் களுக்குக் கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் ஏற்கெனவே உத்தியோக வாய்ப்பைப் பெற்று உத்தி யோகத்திலே இருப்பவர்கள். ஆனால் இவர்களோ புதிதாகப் படித்துவிட்டு வேலை வாய்ப்புக்கள் எதுவும் இல்லாத நிலையிலே இருப்பவர்கள். ஆகவே உத்தியோகத்திலே இருப்பவர்களுக்கு மேல் பதவி கொடுப்பது என்பதைவிட இவர்களின் பிரச்சினைகளை அனுதாபத்தோடு கவனித்து உத்தியோகமே இல்லாத இவர்களுக்கு உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே இந்தப் பிரச்சினையை அணுகி இவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். முடியுமானால் 50 சதவீதம் பதவிகளை தனியாக எம். ஏ. எழுதிப் பாஸ் செய்கின்ற ஏற்கெனவே பணியிலே உள்ள ஆசிரியர்களுக்கு இந்தப் பதவிகளைக் கொடுக்கலாம். மீதி 50 சதவீதத்தை

புதிதாக எம்.ஏ., பி.எட். பட்டம் பெற்று வருபவர்களுக்கு கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போது தான் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்குரிய வழிவகைகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை

இதுபோன்றே கல்லூரியின் முதல்வர்கள் பலருக்கு ஒரு பெரிய மனக்குறை இருப்பதை இந்த அரசின் கவனித்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். யு.ஜி.சி. நிர்ணயித்தபடி கல்லூரி யிலே வேலைபார்க்கின்ற பேராசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துவது குறித்து இந்த அரசு ஏற்றுக்கொண்டு இருக்கின்றது. அந்த வகை யிலே பேராசிரியர்களின் ஊதியமாக ஏற்றுக் கொண்டது 1,100 ரூபாய். ஆனால் கல்லூரியின் முதல்வர்களுக்கு 1,500 ரூபாய் வரையிலே ஊதியம் கொடுக்கலாம் என்று யு.ஜி.சி. சொன்னாலும் கூட அரசு ஏற்றுக்கொண்டது 1,200 ரூபாய்தான். இதன் விளைவாகப் பல பேராசிரியர்களுக்கு முதல்வர் பதவிக்கு வருவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்ட போதிலும் 'எங்களுக்கு முதல்வர் பதவி வேண்டாம், ஏதாவது ஒரு துறையின் பேராசிரியர் களாகவே இருந்து விடுகிறோம்' என்று ஒதுங்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதனை அரசு மனதிலே கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு முக்கியமான பிரச்சினையை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கூட தன் னுடைய அறிக்கையிலே அதைச் சொல்லி இருக்கிறார்கள். தனி யார் பள்ளிகளை முறைப்படுத்துகின்ற சட்டத்தை இந்த அரசு 1—12—73-லே கொண்டு வந்தது. இதை எதிர்த்து சிறுபான்மை யோர் கல்வி நிலையங்கள் உயர்நீதிமன்றத்திலே வழக்கு தாக்கல் செய்தன. இந்த சட்டத்தின் பல்வேறு அம்சங்கள் சிறுபான்மை யோருக்குப் பொருந்தாது என்று அன்றைக்கு உயர்நீதிமன்றம் அவர்களுக்கு சாதகமான தீர்ப்பளித்தது. அதை எதிர்த்து இந்த அரசு சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருக்கின்றது. இதன் விளைவாக இன்றைக்கு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அரசாங்கத்தின் முறையான சட்டங்கள் எதுவாக இருந்தாலும் இந்த அரசாங்கம் ஆசிரியர்களுக்கு காட்டுகின்ற சலுகைகள் மற்ற ஊதியங்கள் பற்றிய எதுவாக இருந்தாலும், ஆசிரியர்களின் நிய மனங்கள் போன்றவையாக இருந்தாலும் சிறுபான்மையோர் நலன் என்ற போர்வையின் கீழ் மறைந்துகொண்டு அந்தச் சிறுபான்மை யோரின் கல்வி நிலையங்கள் அரசின் சட்டங்களைத் துச்சமாக மதிப்பதும், ஆசிரியர்களைத் துச்சமாக மதிப்பதும், தங்கள் இஷ் டம் போல் ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்குவதும், தங்கள் இஷ்டம் போல் ஆசிரியர்களைப் பழிவாங்குவதும போன்றதுமான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. இந்த ஆசிரியர்கள் தங்களின் நிலைமைகளை அரசாங்கத்தின் கவனத் திற்கு கொண்டுவர முடிகிறதே தவிர வேறு எதுவும் செய்ய அவர் களால் முடியவில்லை.

[திரு. ப. நெடுமாறன்] [1981 ஏப்ரல் 23
(முற்பகல் 11-30)

அரசாங்கமும் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை எதிர்பார்த்து எதுவும் செய்ய முடியாத நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறது. பல ஆண்டு காலமாக பல ஆசிரியர்கள், பள்ளிகளிலேயிருந்து அநியாயமான முறையிலே நீக்கப்பட்டு, அவர்களெல்லாம் தெருவிலே நிற்கக்கூடிய பரிதாபமான சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலை தமிழகம் பூராவும் இருந்து கொண்டிருக்கிறது.

சிறுபான்மையோர் மத உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதிலே, அவர்களுடைய மத அனுஷ்டானங்களை, பழக்கப்பட்ட முறைகளை பாதுகாக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. ஆனால் சிறுபான்மையோர் நலன் என்ற பெயரைக் கொண்டு, கல்வித் துறையிலே அவர்கள் இஷ்டப்படி எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலைமை இருப்பதை எந்த ஜனநாயக அரசும், எந்த மக்கள் அரசும் சகித்துக் கொள்ள முடியாது. இந்த விஷயத்திலே நம்முடைய தமிழக அரசு உறுதியாக இருப்பதை நான் பாராட்டுகிறேன். இந்த அரசுக்கு வழிகாட்டும் முகமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆந்திர மாநிலத்திலே இது போன்ற சட்டம் இருந்து, அந்தச் சட்டத்தை எதிர்த்து அந்த மாநிலத்தைச் சேர்ந்த சிறுபான்மையோர் சுப்ரீம் கோர்ட்டுக்கு வழக்கை எடுத்துச் சென்றபோது அந்தச் சட்டப்பிரிவுகள் செல்லுபடியாகும் என்று மிகத் தெளிவாகவே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதியான உயர்திரு சந்திரசூட் அவர்களே, இதிலே தெளிவான விளக்கத்தை அளித்திருகிறார்கள். 'சிறுபான்மையோர் நலன் என்ற போர்வையிலே ஆசிரியர்கள் உரிமைகளை காப்பாற்றுகின்ற அரசாங்கத்தின் சட்ட திட்டங்களை யாருக்கும் மாற்றுகிற அல்லது மீறுகிற அதிகாரம் இருக்கக் கூடாது' என்று அவரே வற்புறுத்தி எழுதியிருக்கிறார் அப்படிப்பட்ட ஆதாரம் இருப்பதை இந்த அரசாங்கம் மனதிலே கொண்டு, இதுவரையில் சிறுபான்மையோர் கல்வி நிலையங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும் ஏதாவது உதவி செய்யவும், இனிமேல் அப்படி எந்த நிறுவனங்களும் சிறுபான்மையோர் என்ற போர்வையில் ஆசிரியர்களை வெளியேற்றுகின்ற நடவடிக்கையை எடுக்கக் கூடாது என்ற வகையில் உத்தரவை அளிப்பதற்கும், உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, தமிழ் வளர்ச்சிக்காக பல வகையான பிரதான திட்டங்களை இந்த அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது தமிழ் பண்பாடுமையம், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ் மொழிபெயர்ப்புத் துறை, வரலாற்றுத் துறை என்று பல

வேறான துறைகள் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன, ஆனால் நான் மிக வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து முறையில் செயல்படுவது இல்லை. இந்த மூன்று துறைகளையும் அல்லது இன்னும் இதில் இருக்கக் கூடிய துறைகளையும் சேர்த்து ஒருங்கிணைத்து, அவர்கள் ஒன்று பட்டு செயல்பட்டால்தான் நாம் எதிர் பார்க்கிற தமிழ் வளர்ச்சி உண்மையாக ஏற்பட முடியும்.

ஒவ்வொரு கல்வி நிறுவனங்களிலே உள்ள ஆசிரியர்களுக்கும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் சிறந்த ஆசிரியர்களை தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் இந்த அரசு விருதுகளை வழங்கி வருகிறது. ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்குவதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் சிறந்த ஆசிரியர்கள் என்று விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர்களுக்கு, அவர்களுடைய பதவிக் காலத்தை மேலும் ஒரு மூன்றாண்டுகளுக்கு நீட்டித்துக் கொடுப்பதன்மூலம், அவர்களுடைய சேவையையும் இந்த அரசு பெற முடியும், அவர்களுக்கும் இது உதவியாக இருக்கும் என்பதைக் கூறி, அதை இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்று, முதியோர் கல்வி மையங்கள்.

(மணியடிக்கப் பெற்றது).

அந்த முதியோர் கல்வி மையங்களில் பி.ஏ., பி.டி. படித்துவிட்டு, 6 ஆண்டு காலம், 7 ஆண்டு காலம் பணிபுரியக் கூடிய ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு மத்திய அரசின் உதவியில்லா விட்டால், அந்த முதியோர் கல்வி மையங்களை செயல்படுத்த முடியாது என்ற நிலைமையில் இருக்கின்றன. அப்படியானால் அவர்களுடைய கதி என்ன ? அவர்கள் மீண்டும் வேறு இடங்களில் வேலைக்கு போக வேண்டும் என்றாலும் முடியாது, வயது வரம்பை கடந்திருப்பார்கள். இந்தப் பிரச்னையை அரசு சற்று மனிதாபிமான முறையில் கவனித்து, அவர்களை அரசு பள்ளிகளில் வேலைக்கு எடுத்துக் கொள்ள முன் வரவேண்டும்.

நம்முடைய நூலகங்களைப் பற்றி இறுதியாக ஓரிரு வார்த்தைகளைச் சொல்லி முடித்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழக நூலகத் துறை ஓரளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது. அவைகளையெல்லாம் ஏ.பி.,சி.டி. என்று நான்கு வகைகளாகப் பிரித்து செயல்படுத்தலாம் என்று முடிவு எடுத்திருக்கிறீர்கள். இந்த அரசாங்கத்தின் புதிய ஆணைப்படி ஏற்கெனவே இருக்கக் கூடிய பணியாளர்களில் 3,047 பேர்களிலே 1,948 பேர்கள் தான் இந்த புதிய ஆணைக்குள் வரவிருக்கிறார்கள்.

பாக்கியிருக்கக்கூடிய 1,529 பதவிகளில் உள்ளவர்கள் எதிர் காலத்தில் அவர்கள் பதவிக் குறைப்புக்கு உள்ளாவார்கள். ஆகவே ஏ, பி, சி, டி, என்று பிரிப்பதை சற்று செம்மைப்படுத்தி பணி யாளர்களின் நலனை மனதில் கொண்டு அதைச் செய்யவேண்டும்.

கல்விக்காக இந்த ஆண்டு ரூ. 332 கோடி செலவிடப் பட்டிருக்கிறது. ஆனால் நூலகத்தைப் பொறுத்தமட்டில் ரூ. 1.61 கோடி மட்டுமே செலவிடப்பட்டிருக்கிறது. இது போதுமானதல்ல. சாதாரணமாக கல்விச்செலவில் 10 சதவீத மாவது நூலகத்திற்குச் செலவிடப்படவேண்டும். அது முடியா விட்டாலும் ஒரு பர்செண்டாவது செலவிடப்படவேண்டும். அந்த 1 சதவிகிதத்திற்குக் குறைவாக இந்தத் தொகை ஒதுக்கப் பட்டிருப்பது சரியல்ல. இதன் விளைவாக தமிழக நூலகத் துறையில் ஒரு முடக்கம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையை மாற்றியமைக்க இந்த அரசு முன்வரவேண்டுமென்று வலி யுறுத்தி, என் உரையை இத்துடன் முடிக்கிறேன்.

*திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 17—கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு நல்லதொரு வாய்ப் பளித்தமைக்கு முதற்கண் தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 1981—82 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத் திற்காக 249 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக, மொத்தச் செலவில் 22 விழுக்காடு ஒதுக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். இந்தக் கல்வித் துறைக்கு பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் நல்ல பல மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள். மாணவர்கள் நல்லமுறை யில் கல்வி பெறுவதற்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு நல்ல சலுகைகளை வழங்கிடவும், இந்தத் துறையில் அவர்கள் பணி யாற்றியிருக்கிற காரணத்தால் கல்வித் துறையில் என்னென்ன மாற்றங்கள், எப்படி எப்படியெல்லாம் செய்யவேண்டும், என்றும் ஆசிரியர் பெருமக்களின் குறைபாடுகளை எப்படியெல்லாம் நீக்க வேண்டும் என்றும் நல்லமுறையில் ஆராய்ந்து நல்ல பல மாற்றங் களைச் செய்திருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆசிரியப் பெருமக்களுக்கு நல்ல பல மாற்றங்கள் செய்து சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்காக அத்தனை ஆசிரியப்பெருமக்களும் படித்தவர் களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டுவதை காண்கிறோம்.

இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்தில் மைய சமையல் கூடங் கள் அமைக்க ரூ. 144 இலட்சம் ஒதுக்கி 16 மைய சமையற்கூடங் கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கியிருப்பதற்காக எங்கள் மாவட்ட மக்கள் சார்பாக அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டின் விளையாட்டு வீரர்களை உலகுக்கு அறிவிக்கிற வகையில் நல்லமுறையில் விளையாட்டுப் பயிற்சிகளுக்கு ஆக்கம் தரவேண்டும் என்ற எண்ணத்தோடு நடுநிலைப் பள்ளிக்கூடங்களில் இருக்கிற சிறுவர்களுக்கு சிறிய வயதிலிருந்து பயிற்சி அளிக்கிற வகையில் நடுநிலைப்பள்ளிகளில் விளையாட்டு பயிற்சி ஆசிரியர்களை நியமித்து நல்லமுறையில் விளையாட்டுப் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து நடுநிலைப்பள்ளிகளில் விளையாட்டு விழாக்கள் நடத்த வாய்ப்பு தந்திருக்கிறார்கள். அது குறித்து நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் சில நடுநிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் பதவி நியமிக்கப்படாமல் இருக்கிறது அப்படி நியமிக்கப்படாமல் இருக்கிற பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமித்து, எல்லா நடுநிலைப் பள்ளிகளிலும் சிறுவர்களுக்கு சிறு வயதிலிருந்தே விளையாட்டுகள் கற்றுத் தருவதற்கு வேண்டிய வகையில் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–40)

அதோடு, ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு 8, 9, 10 ஆம் வகுப்புகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு பள்ளி நேரம் போக மீதி நேரத்திலே $1\frac{1}{2}$ மணி நேரம் ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பாடங்களை கற்றுத் தருவதற்காக ஒரு நல்ல திட்டத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளதிலிருந்து, இந்த அரசு இந்த மக்களின் வளர்ச்சிக்காக தந்திருக்கின்ற உதவிகளைப் பார்க்கின்றபோது, அதற்காக 12.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதையும் பார்க்கும்போது, ஆதி திராவிட மக்களின் கல்வி வளர்ச்சியிலே இந்த அரசு கொண்டிருக்கும் அக்கறையைப் பாராட்டாமல் இருக்க முடியாது என்று நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே, ஊராட்சி ஒன்றியங்களிலே பணியாற்றுகின்ற ஆசிரியப்பெருமக்களைத், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை அரசு அலுவர்களாக அறிவித்துள்ளார்கள். இதை இந்த நாட்டிலுள்ள அத்தனை ஆசிரியர்களும் பாராட்டுகின்றார்கள். இது ஊராட்சி ஒன்றியத்தோடு நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மேலும் நமது அமைச்சர் அவர்கள் நகராட்சிகளிலே பணியாற்றும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்களுக்கு மூக்குக் கண்ணாடி, காது கேட்கும் கருவிகள் போன்றவைகள் எல்லாம் வாங்குவதற்கு அரசு சலுகைகள் காட்டியிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது, இந்த அரசு ஆசிரியர்களை எப்படி மதிக்கிறது என்று தெரிகிறது. இன்னும் என்னென்ன சலுகைகள் தரலாமோ, அத்தனை சலுகைகளையும் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. அதோடு

மாத்திரமல்ல. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுடைய பிள்ளைகளுக்கு பட்ட மேற் படிப்பு படிப்பதற்காக அவர்களுக்கு இலவசக் கல்வி தருவதற்கு இந்த அரசு நிதி ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். குறிப்பாக, மருத்துவப் படிப்பு, பொறியியற் கல்லூரியில் படிக்கும் படிப்பு ஆகியவைகளுக்கு இந்தச் சலுகைகள் தந்திருப்பதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும், 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளுக்கு முன் தனியார் பள்ளிகளில் ஓய்வுபெற்ற ஆசிரியர், ஆசிரியர் அல்லாதவர்களுக்கும் ஓய்வூதியம் தருகின்ற வகையிலும், அதோடு மட்டுமல்லாமல் பணியாளர்களுக்கு குடும்பநல நிதியாக ரூபாய் 10,000 கொடுப்பதையும் இதிலே சேர்த்திருப்பதைக் கண்டு, உண்மையிலேயே தனியார் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும், மற்ற அலுவலர்களும் கண்டிப்பாகப் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1977—78 ஆம் ஆண்டிலிருந்து பணியில் ஓய்வு பெற்ற, இறந்து விட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி போன்ற தொழிற் பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கயிருக்கின்ற நல்ல திட்டத்தையும் இங்கே கொடுத்திருக்கிறார்கள். கண்டிப்பாக, அதற்காக அந்த சமுதாயத்தைச் சேர்ந்த அத்தனை பெருமக்களும் அமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள்.

அதோடு இன்னொன்றையும் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நீச்சல் குளங்கள் கட்டுவதற்கு 1980—81 ஆம் ஆண்டிலே வடஆற்காடு, சேலம் மாவட்டங்கள் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள், வரும் ஆண்டில், 14 லட்சம் ரூபாய் இரண்டு மாவட்டங்களில் கட்டுவதற்கு இருப்பதாக அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்த இரண்டு மாவட்டங்களில் தர்மபுரி மாவட்டத்தை ஒன்றாகத் தேர்ந்தெடுக்கும்படி நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, மொழிப் போராட்டத்திலே ஈடுபட்ட செம்மல்கள், தீக்குளித்து தங்கள் உயிரையே அர்ப்பணித்த தியாகிகள் சின்னசாமி, அரங்கநாதன் போன்றவர்களுக்கு அரசு மூலமாக அவர்கள் குடும்பங்களுக்கு பென்ஷன் கொடுப்பதற்கு 1978—79 ஆம் ஆண்டு ஆளுநர் அவர்கள் உரையிலே பரிசீலிக்கப் போவதாக குறிப்பிருந்தது. அதற்குப் பின்னர் அரசு அதைப் பற்றி

பரிசீலிக்கவில்லை. காரணம், நாங்கள் எல்லாம் மொழிப் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள்; என்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், மொழிப் போராட்டத்திலே ஈடுபட்டு, தீக்குளித்து, தங்கள் குடும்பத்தை விட்டுவிட்டுச் சென்ற தியாகிகள் இருந்திருக்கிறார்கள். எத்தனையோ பேர்களுக்கு, தமிழ்ப் புலவர்களுக்கு, தமிழ் அறிஞர்களுக்கு இந்த அரசு உதவி அளித்திருக்கிறது. தமிழுக்காக தங்கள் உயிரையே அர்ப்பணித்த தியாகிகளின் குடும்பங்களுக்கு இந்த பென்ஷன் தொகையை இந்த அரசு ஒதுக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மாத்திரமல்ல, மதுரையிலே, உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் அமைப்பதை நான் பாராட்டுகிறேன். அதேபோல், தஞ்சையிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்படுத்த இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆங்கிலேயர் காலத்தில் பன்னீர் செல்வம் அவர்கள் தந்தை பெரியார் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர் என்பதை நாடு அறியும். ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்கள் தஞ்சையிலே பிறந்திருக்கிற காரணத்தாலே தஞ்சையிலே அவரின் உருவச்சிலையை ஏற்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் தமிழக மக்களுக்காக அவர் அரும்பாடுபட்டவர். தந்தை பெரியார் அவர்கள்கூட அன்னார் இறந்த காலத்தில் ஒரு அறிக்கையை எழுதி இருக்கிறார்கள். "உடன் பிறந்தவர்கள் இறந்தபொழுது நான் கண்ணீர் வடிக்கவில்லை; என் அருமை நண்பர் பன்னீர்செல்வம் அவர்களை பிரிந்ததால் நான் கண்ணீர் வடிக்கிறேன்" என்று எழுதியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவருக்கு இந்த அரசு உருவச்சிலை அமைப்பதை தனது கடமையாக கருத வேண்டும்.

அடுத்து, தர்மபுரி மாவட்டம் எல்லாத் துறைகளிலும் பின்தங்கிய மாவட்டம் ஆகும். கல்வித் துறை புள்ளிவிவரப்படி 28 விழுக்காடு தான் படித்தவர்கள். இம் மாவட்டத்தில் உள்ளார்கள்; இரண்டு கல்லூரிகள் இருக்கின்றன. தர்மபுரியில் ஒன்றும், கிருஷ்ணகிரியில் ஒன்றும் இருக்கின்றன. ஏற்கெனவே, அமைச்சர் அவர்கள் அதில் எம்.எஸ்ஸி. வகுப்பிற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். அதோடு எம்.ஏ., எம்.காம்., பி.காம்., போன்ற பட்ட மேற்படிப்புகளை தர்மபுரியிலும், கிருஷ்ணகிரியிலும் இருக்கிற கல்லூரிகளில் ஏற்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். காரணம் அது அந்தப் பகுதி மக்கள் கல்வி அறிவில் வளர்ச்சி பெறுவதற்கு, நல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, இரண்டு கல்லூரிகளை தர்மபுரி மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டும். ஒசூரில் ஆண்கள் கல்லூரியும் கிருணஷ்கிரியில் பெண்கள் கல்லூரியும் ஏற்படுத்த வேண்டுகிறேன். அம்மாவட்ட மக்கள் கல்வி வளர்ச்சி பெறுவதற்கு ஆவன செய்ய அமைச்சர் அவர்

களைக் கேட்டுக்கொள்கிறேன். இந் நிலையில் சேலத்தில் ஆரம் பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரியை தர்மபுரி மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுகிறேன்.

கடைசியாக நான் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். தமிழை முக்கிய பாடமாக எடுத்து படித்திருக்கிற மேல்நிலை ஆசிரியர்கள் மேல்நிலைப்பள்ளிகளில பதவியில் நியமிப்பதற்கு முன்னுரிமை தரப்படுவதில்லை. அவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் இருக் கிறது. ஆகவே, இனி, 50 விழுக்காடு கல்லூரிகளிலே படித்து வருகிறவர்களுக்கும், மீதமுள்ள 50 விழுக்காடு பணியில் இருந்து வருபவர்களுக்கும் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாநில வரவு-செலவு திட்டத்தில் கல்விச் செலவும் நான் சார்ந்திருக்கிற இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார் பாக பேச வாய்ப்பு தந்ததற்கு நன்றியைத் தெரிவித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக எனக்கு முன் பேசிய திராவிட முன்னேற்ற கழக அங்கத்தினர் அவர்கள் சென்ற ஆண்டில் 23 சதவீதம் நிதி ஒதுக்கப்பட்டதெனவும், இன்று இந்த ஆண்டு குறைக்கப்பட்டதாகவும் கூறியிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு கல்வியின் முன்னேற்றத்திலே எத்தனை அக்கறையும், பாசமும் கொண்டிருக்கிறது என்பதை நிரூபிக்க இந்த உதாரணம் ஒன்றே போதுமானதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மேலும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்வி யின் தரம் எவ்வளவு குறைந்திருக்கிறது என்பதைக் காட்ட சென்ற சில ஆண்டுகளில் தமிழகத்தில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ எப்எஸ். பரிட்சைகளுக்குச் சென்ற மாணவர்களின் தேர்ச்சி விகிதம் குறைந்திருக்கிறது என்பதை சொல்லிக்கொள் கிறேன். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் நம்முடைய கல்வியின் தரம் குறைந்து வருகிறது. இதை மாற்றுவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

(குறுக்கீடு).

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் பொழுது கல்வியின் யின் தரம் குறைந்து வருகிறது என்று பேசினார்கள். நேற்றைய தினம் டெல்லியிலே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் கல்வித் தரம் அதிகமாக உயர்ந்திருக்கிறது என்று சொல்லியிருக் கிறார்கள். அது தவறு என்று உறுப்பினர் அவர்கள் எண்ணு கிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாற்றுத் தலைவர் அவர் களே, நான்கு, ஐந்து ஆண்டுகளாக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., ஆகிய தேர்வுகளில் பெர்சன்டேஜ் குறைந்து வரு றது என்பதைக் குறிப்பிட்டேன். தேசிய மாணவர்களின் ண்ணிக்கையிலே இருந்தே அது எந்த அளவுகுறைந்திருக்கிறது ன்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

1981 ஏப்ரல் 23]

(முற்பகல் 11–50)

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளுக்கு தமிழர்கள் வெற்றிபெறுவதில்லை என்பதை காங்கிரஸ் உறுப்பினர் ஒப்புக் கொண்டிருக்கிறார். அது வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பதற்கு ஒப்பாக தான் இருக்கிறது. தெற்கிலிருந்து செல்கிறவர்களை திறமையானவர்களைத் தேர்வு செய்கின்ற எண்ணம் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். பி. தங்கவேல்ராஜ் : மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய தரம் உயரவில்லை, நம்முடைய மாணவர்கள் தேறமாட்டேன் என்கிறார்கள். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பதல்ல. இப்படி கூறுவதிலிருந்து உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள் நான் பேசுகின்ற கருத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். நம் மாணவர்கள் நன்கு தேற வேண்டும். அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து நம்முடைய மாணவர்கள் நன்கு முன்னேறுவதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும். ஆகவே, வடக்கு தெற்கு என்று பேசுவது மாண்புமிகு உறுப்பினருக்கு அழகாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற 4,5 நாட்களுக்கு முன்னாலே நான் டெல்லி சென்றிருந்தேன். அங்கே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகள் நடைபெறுகின்றன. தமிழகத்திலிருந்து சென்ற தேர்வுக் குழுவிலே சிலர் அங்கம் வகிக்கிறார்கள். வரவர தமிழகத்திலே உள்ள மாணவர்களின் தரம் குறைந்து வருகிறது என்று சொல்லி வருத்தப்பட்டார்கள். தமிழக அரசு நம்முடைய மாணவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே நல்ல காரியங்களைச் செய்து பெருமை தேடித்தர முன்வரவேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலைகளிலே ஆங்காங்கு ஸ்ட்ரைக் நடப்பதுபோல் ஆரம்ப ஆசிரியர்கள் ஸ்ட்ரைக், பட்டப்படிப்பு ஆசிரியர்கள் ஸ்ட்ரைக்; முதுநிலை பட்டப்படிப்பு ஆசிரியர்கள் ஸ்ட்ரைக் என்று வருடம் பூராவும் ஸ்ட்ரைக் நடந்துகொண்டே இருக்கிறது. ஆசிரியர்கள் ஸ்ட்ரைக் செய்கிறபோது அரசு அவர்களை ஜெயிலில் தள்ளி, நாட்கணக்கில் மாதக்கணக்கிலே வைத்துவிடுகிற காரணத்தாலே அவர்களுக்கு சொல்லித் தருவதிலே உள்ள ஊக்கம் குறைகிறது. மாணவர்களுக்குப் போதிக்க வேண்டுமென்ற எண்ணம் குறைகிறது. இதற்கெல்லாம் அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். ஆசிரியர்களிலும் மினிஸ்ட்ரியல் ஸ்டாப்களிலும் ஏ விங் என்றும் பி விங் என்றும் இருக்கின்றன. அவர்கள் பலகாலமாக அதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் ஏ விங்கில் ஒருவர் 15 ஆண்டுகள் வேலை செய்திருந்தாலும் கூட பி விங்கில் ஒருவர் 7 ஆண்டுகள் வேலை செய்திருந்தால் அவர் 15 ஆண்டுவேலை செய்தவரைவிட சீனியாரிட்டி அதிகமாகப் பெற்று பதவி உயர்வு பெறுகிறார். 7 ஆண்டுகள் வேலை செய்தவர்

உயர் பதவிக்குச் சென்று விடுகிறார். அதைப் போலவே மினிஸ்ட்ரியல் ஸ்டாபை பொறுத்த வரையிலும் ஒருவர் பி விங்கிலே 5 வது இடத்திலே இருந்தாலும்கூட ஏ விங்கிலே 450 பேர்களை கடந்து புரமோஷன் பெறுகிறார். இதுபோன்ற நிலைமைகள் இருப்பதால் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதிலே கவனம் செலுத்தாமல் குடும்பப் பிரச்சினைகளிலே கவனம் செலுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு நல்ல காரியங்கள் செய்யப்படவில்லை. கல்வி அமைச்சர் அவர்களும், கல்வித்துறை செயலாளர் அவர்களும் சேர்ந்து பேசி அவர்களுக்கு என்ன என்ன குறைபாடுகள் என்பதைப் பார்த்து அவைகளைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆசிரியர்களுடைய இடர்களை உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சீனியாரிட்டி அடிப்படையில் எல்லோருக்கும் பதவி உயர்வு தர வேண்டும். பாரதபிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கி றார்கள். இந்தி யார்மீதும் கட்டாயமாகத் திணிக்கப்பட மாட்டாது. இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் ஒத்துக் கொள்கிற வரை இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களை எடுத்துக் கொண்டால் இந்தியை விருப்பப் பாடமாக கற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தியை விருப்பப்பாட மாக உயர்நிலைப்பள்ளிகளில் ஏன் அமல்படுத்தக்கூடாது என் பதைப் பார்க்கவேண்டும். வசதியுள்ளவர்கள் டியூசனை வைத்து ஆங்காங்கே ஆசிரியர்களை வைத்து இந்தியைக் கற்றுக் கொள்கிறார்கள். அமைச்சர்கள் குழந்தைகள், உறுப்பினர்கள் குழந்தைகளெல்லாம் தனியாக டியூஷன் வைத்து இந்தியைக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். இந்தியை விருப்பப்பாடமாக 6-வது வகுப்பிலிருந்து அமல் படுத்த ஏற்பாடுகளைச்செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். மேல்நிலைப் பள்ளிகளில், படிக்கிற எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்கள் கல்லூரி மாணவர்களாகவும் கருதப் படாமல், உயர்நிலைப்பள்ளி மாணவர்களாகவும் கருதப் படாமல் இரண்டும் இல்லாத நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு ஜூனியர் காலேஜ் என்று ஏற்படுத்தி மேல். நிலை பள்ளி மாணவர்களின் தரத்தை உயர்த்த வேண்டுமென்று இந்தச் சமயத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் சங்கம் என்று இருக்கிறது என்பது அவைனருக்கும் தெரியும். ஆசிரியர்கள் சங்கம் அமைத்துக்கொள்ளலாம். என்று சலுகை கொடுத்துவிட்டு, அதில் சில சட்டதிட்டங்களை ஏற்படுத்து கிறார்கள். ஆசிரியர் சங்கங்களுக்கு ஆசிரியர் அல்லாதவர்கள் தலைமை வகிக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். சென்ட்ரல் கவர்ன்மெண்டாக இருந்தாலும் சரி, ஸ்டேட் கவர்ன்மென்டாக இருந்தாலும் சரி, ஆசிரியர் தொழில் அல்லாத மற்றத் தொழில்களில் அந்தத் தொழில்களில் இல்லாதவர்கள் தலைவ

ராகவோ, செயலாளராகவோ வரலாம் என்பதை ஒத்துக் கொள்ளும்பொழுது இந்த ஆசிரியர் சங்கங்களுக்கு மட்டும் ஆசிரியர் அல்லாதவர்கள் தலைவராக இருக்கக்கூடாது என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள் என்பதைப்பார்க்கும்பொழுது இதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. சங்கம் அமைப்பதற்கு ஆதரவு கொடுத்துவிட்டு, மேலதிகாரிகள் செய்யும் கொடுமை பற்றிக் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது, வெளியிலே அதைப்பற்றிச் சொல்லக்கூடாது, பேசக் கூடாது எழுதக்கூடாது, நன்கொடை போன்றவைகளை வசூலிக்கக்கூடாது. என்று சட்ட திட்டங்களையெல்லாம் இந்த அரசு அண்மையில் அறிவித்திருக்கிறது. சங்கம் அமைப்பதற்கான அனுமதியைக் கொடுத்து விட்டு இது போன்று அவர்களது உரிமைகளைப் பறிக்கும் விதத்தில் செய்வது ஒரு ஜனநாயக அரசுக்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டெக்னிகல் எஜுகேஷனைப் பொறுத்த வரையில், ஐ.டி.ஐ., மற்றும் பாலிடெக்னிக் ஆகியவைகள் கிராமப்புறங்களில் நிறுவப்படவேண்டும். எஞ்சினியரிங் காலேஜ், எம். பி.பி.எஸ். ஆகியவற்றிற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதைப் போல ஐ.டி.ஐ. மற்றும் பாலிடெக்னிக் ஆகியவைகளுக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஐ.டி.ஐக்குத் தேர்வு செய்வதில் எக்கச்சக்கமான முறைகேடுகள் நடந்து வருகின்றன. அந்த முறைகேடுகளைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிட்-டே மீல்ஸைப் பொறுத்த வரையில் கல்வி போர்டு பத்து காசும், யூனியன் 5 காசும் கொடுக்கிறது. அது அந்தந்த யூனியன்களிலிருந்து சமயத்திற்குக் கிடைப்பதில்லை என்று ஒவ்வொரு ஊரிலேயும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, பத்து காசு, ஐந்து காசு என்பதை மாற்றி சர்க்காரே 25 காசாக உயர்த்திக் கொடுத்து, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்தை மேலும் நல்ல முறையில் கொண்டு வந்து, மாணவர்களுக்கு நல்ல சத்துள்ள உணவை வழங்குகின்ற முறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அநேக பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடங்கள் இல்லை. வேறு வகையான வசதிகள் இல்லை; பெஞ்சு, நாற்காலிகள் இல்லை. என்னுடைய தொகுதியிலே உள்ள கட்டளை, பஞ்சப்பட்டி, கடவூர் ஆகிய இடங்களில் பத்தாண்டுகளாகக் கட்டிடம் இல்லாமல் இருக்கிறது. குளித்தலை தொகுதியில் உள்ள ஆர். டி. மலை என்ற இடத்தில் உள்ள கட்டிடம் இடிந்து விழுந்து மாணவர்களைப பழிவாங்கும் நிலையில் இருக்கிறது. இதுபற்றி அந்தத் தொகுதி உறுப்பினர் திரு ஆர். கருப்பையா அவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அந்தக் கட்டிடம் இன்னும் செப்பனிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரத்திலே மாணவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். இராமநாதபுரத்திலே அண்மையில் ஏற்பட்ட கலவரத்தையொட்டி மதுரையிலிருந்து இராமநாதபுரத்திற்கு மாணவர்கள் சென்றாலும், இராமநாதபுரத்திலிருந்து அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு மாணவர்கள் சென்றாலும், அரிசன மாணவர்களைத் துன்புறுத்துகிறார்கள். ஜாதிக் கலவரங்கள் ஒழிந்திருந்தாலும் போலீசார் யார் யார் அரிசன மாணவர்கள், அவர்கள் எந்த பஸ்ஸிலே செல்கிறார்கள் என்பதைக்கண்டுபிடித்து, அவர்களைக் கீழே இழுத்துப் போட்டு, பல துன்பங்களை ஏற்படுத்துகிறார்கள். நேற்றுகூட, இராமநாதபுரத்திலிருந்து வந்த வழக்கறிஞர்களும் நண்பர்களும் என்னிடத்திலே இதைப்பற்றி முறையிட்டார்கள். ஆகவே, கல்வியமைச்சரவர்கள் இதைப் பற்றிக் கலந்து, அரிசன மக்கள் தாக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல தனியார் கல்விக்கூடங்களிலும், மைனாரிட்டி கம்யூனிட்டி கல்விக் கூடங்களிலும் சில பள்ளிகள், கல்லூரிகளில் அரிசன மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கப்படாமல், அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரசு இதில் முக்கியத்துவம் கொடுத்து 18 சதவீதம் அரிசன மக்களுக்குக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரையில் நான் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களும், அரசும் தீவிர முயற்சியை எடுத்துக்கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள மாணவ, மாணவிகளை ஊக்குவித்து, பரீட்சைகளில் நல்ல முறையில் தேர்ச்சி பெற்று விளங்குவதற்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(நண்பகல் 12—00)

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றுப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

மன்று மகாகவி பாரதியார் அவர்கள் சொன்ன கருத்திற்கிணங்க அவ்வியப்பினை பரவலாக்கிடவும் கல்விச் செல்வத்தை அனை

வருக்கும் அளித்திடவும், கல்லாதார் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்கிடவும் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், கல்விக்காக அரசு ஒதுக்கியிருக்கின்ற தொகை, ஆண்டுக்காண்டு, அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். 1974—75-ல் ரூ. 123 கோடியாகவும், 1975—76-ல் ரூ. 125 கோடியாகவும், 1976—77-ல் ரூ. 143 கோடியாகவும், 1977—78-ல் ரூ. 164 கோடியாகவும், 1978—79-ல் ரூ. 186 கோடியாகவும், 1979—80-ல் ரூ. 212 கோடியாகவும், 1980—81-ல் ரூ. 238 கோடியாகவும், இவ்வாண்டு இத்தொகையானது ஏறக்குறைய ரூ. 249.282 கோடியாகவும் ஆகியுள்ளது என்றால், கல்வி வளர்ச்சியில் புரட்சித் தலைவர் அரசு எந்த அளவுக்கு அக்கறையும் ஆர்வமும் கொண்டிருக்கிறது என்பதற்கு வேறு எடுத்துக் காட்டுத் தேவையில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, தொடக்கப்பள்ளி நிலையில் 1,000 ஆசிரியர்களும், உயர்நிலைப் பள்ளி நிலையில் 200 பி.டி. தர ஆசிரியர்களும், இடைநிலைப் பள்ளிகளுக்கு பி. டி. தரத்தில் 200 தலைமை ஆசிரியர்களும் நியமிக்கப்பட இருப்பது வரவேற்கத் தக்க ஒன்றாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப் போன்று, இடைநிலைப் பள்ளியில் புதிதாக 500 தமிழாசிரியர்களை நியமிக்க இருப்பதும் பெரிய கோயில்களில் தமிழாசிரியர்களை வேலையில் அமர்த்த இருப்பதும் தமிழ்ப் படித்து வேலையின்றி இருக்கிறோமே என்ற கவலையை அவர்கள் மத்தியில் போக்கவும் இந்த அரசு எந்த அளவு நல்லமுறையில் செயல்படுகிறது என்பதற்கு இது நல்ல எடுத்துக் காட்டாகும்.

அண்ணாவின் வழியிலே புரட்சித் தலைவர் அவர்கள் மதுரை மாநகரில் நடத்திய ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு ஏற்படுத்திய எழுச்சி எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற எண்ணத்தை, ஏற்படுத்தியிருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். இந்த நேரத்தில் தமிழ் படித்தவர்கள் அனைவருக்கும் புலவராக இருந்தாலும், பி. லிட். படித்தவர்களாக இருந்தாலும், பி. ஏ. தமிழ் படித்தவர்களாக இருந்தாலும், எம். ஏ. தமிழ் படித்தவர்களாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஏதேனும் ஒரு வேலையைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், தமிழினத்தின் தலைவராகவும் இருக்கின்ற புரட்சித் தலைவரும், அவருடைய தலைமையில் செயல்படும், அரசும், எதையும் முனைப்புடன்

செய்து முடிக்கும் திறம் படைத்த கல்வியமைச்சரும் இதற்கான வழிவகையைக் காண்பார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன்.

தமிழ் மொழியின் அரிய கலைச் செல்வங்களை இலக்கிய வளங்களை ஆழ்ந்தெடுத்து தமிழ்ப் பல்கலைக் கழகத்தை தஞ்சையிலும், தமிழ்ச் சங்கத்தை மதுரையிலும் நிறுவ இருப்பதைப் பாராட்டுகின்றேன். தமிழ்ப் பல்கலைக் கழகத்தை தஞ்சை மண்ணில் நிறுவ இருப்பதற்காக தஞ்சை மாவட்டத்து மக்கள் என்றென்றும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவரின் அறிவுரையின்படி தஞ்சை அரண்மனையில் ஆய்வு செய்த தொல்பொருள் ஆய்வுத் துறையினர் பல அறைகளையும் அதில் பல அழகிய சித்திரங்களையும் கண்டறிந்து இருப்பதை செய்தித் தாள்கள் மூலமாக அறிகின்றோம். அந்த வகையில் தமிழகத்தி னுடைய வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு எந்த அளவுக்கு அக்கரை கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் எனது தொகுதியில் பூம்புகார்ப் பகுதியில் சாயாவனம் என்ற இடத்தில் மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் சிலவற்றைக் கண்டறிந்தார்கள். ஆனாலும் அந்த இடத்தில் மேலும் எதனையும் கண்டுபிடிக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபடவில்லை. ஆகவே, நமது அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு அந்த ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர, வரலாற்று உண்மைகளை வெளிக் கொணர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி இயக்கத்தை பலப் படுத்த முயற்சிகள் மேற்கொண்டிருப்பதை வரவேற்கின் றேன். பல பிரிவுகளில் புதிய பாட முறைகளைத் தொடங்கு வதற்காக வரும் ஆண்டில் அரசு ரூ. 15 இலட்சம் ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

அதைப் போன்று 1975—76 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தால் கூட்டுறவு பாடத் திட்டம் கொண்டு வந்து இப்பொழுது சுமார் 6 கல்லூரிகளில் பி. ஏ. கூட்டுறவுப் பட்டப் படிப்பும், 2 கல்லூரிகளில் எம். ஏ. பட்டப் படிப்பும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால், அவர்களுக்குத் தேர்வு எழுதுவதிலும், வேலை வாய்ப்பிலும் கூட்டுறவுத் துறையில் வாய்ப்பு தராமல் பல இன்னல்களுக்கு ஆளாகி இருந்த நேரத்தில், தமிழக அரசு, அவர்களின் மிகப் பெரிய பிரச்னையான, கூட்டுறவுப் பயிற்சியில் இருந்து விதிவிலக்கு அளித்து, சுமார் 1,000 பி. ஏ. பட்டதாரி மாணவர்களின் வாழ்க்கையில், எம். ஏ. பட்டதாரி மாணவர்களின்

1981 ஏப்ரல் 23] [திரு. என். விஜயபாலன்]

வாழ்க்கையில் ஒளி விளக்கை ஏற்றி வைத்தமைக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று Deputy Registrar of Co-operative Societies, Senior Inspector and Junior Inspector of Co-operative Societies மற்றும் பல வேலைகளுக்கு தேர்வு நடத்தும் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் குரூப் 1, குரூப் 2-ல் கூட்டுறவு பாடத்தைக் கொண்டு வந்து பி. ஏ. எம். ஏ. கூட்டுறவு பட்டதாரிகளுக்கு தேர்வு எழுத வாய்ப்பும், வேலை வாய்ப்பில் முன்னுரிமையும் வழங்க வேண்டுகிறேன்.

மேலும் மேல்நிலைப் பள்ளிகளில் கூட்டுறவுப் பாடத்தை நடத்த ஆசிரியர்களாக எம். ஏ. (கூட்டுறவு) பட்டதாரிகளை நியமனம் செய்ய வேண்டுகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியான பூம்புகாரில் ஒரு மகளிர் கல்லூரியை நிறுவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பகுதியில் உள்ள சங்கரன்பந்தல் உயர்நிலைப் பள்ளி மிகவும் சீர்கேடடைந்து இருக்கிறது. அங்கே மாணவர்கள் வந்து படிக்கும் சூழ்நிலையில் இல்லை. அந்த அளவுக்கு அந்தக் கட்டிடம் இடிந்து விழும் நிலை இருக்கின்றது. அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறேன். அரசு அதை நிவாரணம் செய்யும் பணியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள வடகரையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நிறையபேர்கள் வாழ்கின்றார்கள்.

அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளியை உருவாக்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆக்கூர் பகுதியிலும் அதற்கு சுற்றுப்புறப் பகுதியிலும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். அங்கே உள்ள மேல்நிலைப் பள்ளிக் கட்டிடம் மிகவும் மோசமான சூழ்நிலையில் இருக்கின்றது. அந்தக் கட்டிடத்தை சீர்படுத்துகின்ற பொறுப்பினை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதற்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அந்த ஒன்றியத்தில் உள்ள ஆசிரியர்களை மாற்றுதல் வழக்கம் போல ஒன்றியத்திற்குள்ளேயே இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[திரு. என். வியஜபாலன்] [1981 ஏப்ரல் 23

பெரும்பாலான கிராமங்களில் உள்ள துவக்கப்பள்ளிகளில் ஒரு ஆசிரியரே 2, 3 வகுப்புகளை கவனிக்கும் சூழ்நிலை இருக்கின்றது. ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதம் மிகவும் குறைவதாக உள்ளது. அதை மாற்றி ஒவ்வொரு 20 மாணவர்களுக்கும் ஒரு ஆசிரியர் என்ற நிலை இருந்தால் கல்வித் தரம் உயரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துவக்கப்பள்ளி நிலையில் அறிவியல் அறிவை ஊட்டும் வகையில் ஒவ்வொரு துவக்கப்பள்ளியிலும் 'ஆய்வுக்கூடம்' அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும். (மணி அடிக்கப்பட்டது) ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி விடைபெறலாம் என்று கருதுகிறேன். மேல்நிலைக் கல்வி பிளஸ் 2 தொடங்கி இதுவரை அரசினர் பள்ளிகளில் எம். ஏ. தமிழ் படித்தவர்கள் ஒருவருக்குக்கூட புதிதாக வேலை வாய்ப்பு அளிக்கப்படவில்லை, என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைபட்டிருக்கிறேன். பி. எஸ். ஸி. அல்லது பி. ஏ. வேறு பாடங்களில் பட்டம் பெற்று பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் பலர் தனியாக எம். ஏ. தமிழ் படித்துள்ளார்கள். அவர்களையே இதுவரை அரசு பிளஸ் 2 வகுப்புகளுக்கு நியமனம் செய்துள்ளது. தனியாக தமிழ் படித்தவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போகிறது. எனவே எம். ஏ. தமிழ் படித்த புதிய வேலையில்லாத இளைஞர்களுக்கு அப்பதவியில் முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

தமிழுக்காவும், தமிழ் வளர்ச்சிக்காகவும் பல்வேறு நிலைமைகளை செய்கின்ற நமது அரசு அந்த தமிழ்படித்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நண்பகல் உணவுத் திட்டம் சம்பந்தமாக முதல் நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மைய சமையற்கூடம் செங்கற்பட்டு, தென்னார்காடு, வடார்காடு மாவட்டங்களில் இருப்பதைபோல மற்ற மாவட்டங்களிலும் பரவலாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர்கள் நலனில் இந்த அரசு அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஒய்வூதியம், வறுமையால் வாடும் தமிழ் அறிஞர்களுக்கு ஒய்வூதியம் போன்றவைகளை மனமார வழங்கும் இந்த அரசைப் பாராட்டி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று பாராட்டி விடைபெறுகிறேன்.

*திரு. ரா. கிருஷ்ணன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 23] [திரு. ரா. கிருஷ்ணன்]

இந்த கல்வி மானியத்தில் மொத்தச் செலவில் 80—81—லே கல்விக்கு 23 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1981—82—லே செய்யப்பட்ட ஒதுக்கீடு 22 சதவீதம். ஒரு சதவீதம் குறைந்திருக்கிறது. 1980—81 அறிக்கையின்படி பக்கம் 14—ல் ஊராட்சி மன்றப் பள்ளிகள தமிழகத்தில் 33,347 பள்ளிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1981—82—லே பக்கம் 11—ல் ஊராட்சி மன்றப் பள்ளிகள் தமிழ்நாட்டில் 33,306 தொடக்க பள்ளிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது 1 பள்ளிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இது ஏன்? அதே மாதிரி தலைமைக் கல்வி அலுவலர்கள் சி. இ. ஓ.—க்கள் 1980—81—லே 14 பேர்கள் இருந்தனர். புதிதாகப் புதுக் கோட்டைக்கு ஒன்று போட்டால் 15 ஆகத்தான் ஆகவேண்டும். ஆனால் 1981—82-ல் பக்கம் 7-ல் 16 என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஒரு சி. இ. ஓ. எப்படி அதிகம் வந்தது. அவர் எங்கிருந்து வந்தார்? இப்படிப்பட்ட சில குறைபாடுகள் இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12—10)

சென்சஸ்படி கல்வி கற்றோர் எண்ணிக்கை சதவீதம் கூடி யிருந்தாலும், நம்முடைய மாநிலம் 2-வது இடத்தில் இருந்து, 3-வது இடத்திற்குப் போய்விட்டது. யூனியன் டெரிடெரி யையும் சேர்த்துக்கொண்டால் 10-வது இடத்திற்குப் போய் விட்டது. கையெழுத்து மட்டும் போடத் தெரிந்தவர்கள் எல் லாம் சேர்த்து 45.78 சதவீதம் தான். இது மிகவும் குறைவு. ஏன் இந்த நிலை?

அதேமாதிரி என்.சி.இ.ஆர். டி. சர்வேபடி 6—13 வயதுடைய வர்களில் கல்வி பயில்பவர்கள் சுமார் 81 சதவீதம் இருந்தாலும், இடநிலைப் பள்ளியில் பயில்வோர் 38 விழுக்காடு என குறைகிறது. ஆக, இதில் டிராப் அவுட்ஸ் கிராமங்களில்தான் மிகவும் அதிகம். இதில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், மாணவி கள் தான் மிக அதிகம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். படிக்கும் மொத்த மாணவர்களில் தொடக்கப் பள்ளிகளில் 21 விழுக்காடும், இடைநிலைப் பள்ளியில் 14 விழுக்காடும் மட்டுமே தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் உள்ளனர் என்று என்.சி. இ. ஆர்.டி. ரிப்போர்ட் கூறுகிறது. காரணம் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை விட மற்ற திட்டங்களில் தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி ஆகியவற்றிற்கு பண ஒதுக்கீடு குறைவு. மேல்நிலைக் கல்விக்கு உள்ள அக்கறை இதற்குக் காட்டப் படவில்லை. நகர்ப்புறக் கல்விக் கூடங்களை விட கிராமப்புறங் களில் வசதிகள் மிகவும் குறைவு. இங்கு மாணவிகளுக்கு தனிப் பள்ளிக்கூட வசதி இல்லை. கிராமங்களில் சிறுவர்கள் ஏதாவது தொழில் செய்ய வேண்டிய குடும்ப நிர்ப்பந்தம். இதனால் கல்வி தடைபடுகின்றது. ஆகவே, கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய குடும்பங்களில் உள்ள மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு

செல்வதற்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 22 ஊக்க போனஸ் என்ற அடிப்படையில் மேற்கு வங்கத்தில் அளிப்பதாக அறிகிறேன். அப்படிப்பட்ட திட்டத்தை இங்கே அமல்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு—குறிப்பாக பெண் ஆசிரியர்களுக்கு குடி இருப்பதற்காகக் கட்டப்பட்ட வீடுகள் பயனற்று இருக்கின்றன என்று 1978-79-ஆம் ஆண்டு ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டின் 160-வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

(மண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

கிராமப்புறங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கு எந்த விதமான மருத்துவ வசதியோ, மற்ற வசதியோ கிடையாது. ஆகவே, வீடுகள் கட்டி இருந்தால் மட்டும் போதாது. இத்தகைய வசதிகளையும் அவர்களுக்கு அங்கே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைக் குறிப்பிடவிரும்புகிறேன். நாம் அளிக்கின்ற கல்வி பயன் உள்ள கல்வியாக இருக்கவேண்டும். விஞ்ஞானபூர்வமாக இருக்க வேண்டும். 1-வது பாடப்புத்தகத்தில் இப்படி ஒரு பாடம் வருகிறது. ஒரு பாட்டி வடை விற்றாள்—காகம் தூக்கிச் சென்றது—நரி ஏமாற்றியது. சிறு குழந்தைகள் உள்ளத்தில் இந்த ஏமாற்று என்பதுமனதில் பதிய வேண்டுமா? அதைப்போல நிலா நிலா ஓடிவா, நில்லாமல், ஓடி வா, மலைமேல் ஏறிவா, மல்லிகைப்பூ கொண்டு வா—மனிதன் நிலாவிற்குப் போய்வருகின்ற இந்த காலத்தில், அந்த நிலவே இங்கே வா என்று நாம் சொல்லி அழைக்கின்ற முறையில் இந்தப்பாடங்கள் தேவைதானா? ஆகவே நான் கேட்டுக்கொள்கிறேன், விஞ்ஞான முறையில் அந்தப் பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும். அதைப்போல ஒரு பேனாவை இரண்டு ரூபாய்க்கு வாங்கி மூன்று ரூபாய்க்கு விற்றால் லாபம் என்ன கிடைக்கும் என்று நம் நாட்டில் உள்ள மாணவனைக் கேட்டால் 1 ரூ. லாபம் கிடைக்கும் என்பான். ஆனால் சோசலிச நாட்டில் உள்ள மாணவனிடம் கேட்டால் 1 ஆண்டு சிறை தண்டனை கிடைக்கும் என்பான். இப்படி விடைகள் வருவதற்குக் காரணம், அங்கேயுள்ள கல்வி முறைக்கும், இங்கேயுள்ள கல்வி முறைக்கும் உள்ள வித்தியாசம் தான் என்பதை நான் தெரிவித்து, விஞ்ஞான பூர்வமான முறையில், ஆக்க பூர்வமான வகையில் பாடங்களை உருவாக்க முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதம் என்ற அடிப்படையில் ப்ரேயர் வைக்கிறார்கள். அதுவும் கிருஸ்துவ மதத்தினர் வைத்துள்ள பள்ளிகளில் கட்டாயமாக அவர்கள் அதை வைக்கிறார்கள். நாம் செக்குலர் ஸ்டேட் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம். அப்படி இருக்கிறபோது, மூட நம்பிக்கையை வளர்ப்பதாக ஆகாதா, இது நியாயம்தானா என்று கேட்கவிரும்புகிறேன்.

பெரும்பாலான பள்ளி மைதானங்களில் ஆர்.எஸ்.எஸ். டிரில் நடக்கிறது. குறிப்பாக சென்னை பெரம்பூர் கார்ப்பரேஷன் பள்ளி மைதானத்தில் ஆர். எஸ். எஸ். டிரில் நடக்கிறது. இது மாதிரி ஏராளமான பள்ளிகளில் - அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் - ஆர். எஸ். எஸ். டிரில் நடக்கிறது. இப்படி நடத்துவது சரிதானா? அதைத் தடை செய்து அரசாங்கம் உடனடியாக உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், அந்தக் கல்வி நிறுவனங்கள் குறைந்த மூலதனம் போட்டு, அதிகமான லாபம் சம்பாதிக்கும் நிறுவனங்களாக இருக்கின்றன. சம்பாதிப்பதையே, லாபத்தையே நோக்கமாகக் கொண்டு அவைகள் செயல்படுகின்றன. அதற்கு ஒரு உள் நோக்கம் நிச்சயமாக உண்டு. அப்படிப்பட்ட அடிப்படையில் தான் அந்தக் கல்வி நிறுவனங்கள் நிறுவப்படுகின்றன. மேலும், ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால் கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. அப்படி ஆரம்பிக்க அவர்களுக்கு உரிமை உண்டு. மைனாரிட்டி ரைட்ஸ் உடையவர்கள் ஆரம்பிக்கிறார்கள்.

ஆனால் ஒரு நிர்வாகத்திற்கு அங்கீகாரம் கொடுப்பது அரசாங்கம்தான். சமீப காலத்தில் குறிப்பாக, 2, 3 ஆண்டுக் காலங்களில் ஏராளமான கல்வி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படுகிறது. ஒரு பக்கம் மைனாரிட்டி என்ற முறையில் தனியார் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளிப்பதும், சலுகைகள் அளிப்பதும் இருக்கிறபோது இன்னொரு பக்கம் அங்கீகாரம் மறுக்கப்படுகிறது. குறிப்பாக அதிகாரிகளின் விருப்பு வெறுப்பின் அடிப்படையில் அங்கீகாரம் அளிக்கப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். இன்னும் சொல்லப்போனால் சில இடங்களில் மதம், ஜாதி அடிப்படையில் பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். மேலும் ஆரம்பிக்கிறார்கள். எந்தவிதமான சச்சரவும் இல்லாமல் இருக்கிற ஒரு கிராமத்தில் ஜாதி, மதத்தின் அடிப்படையில் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கும்போது அங்கே பல்வேறு தகராறு ஏற்பட்டு, அதனால் பல சங்கடங்கள் உண்டாகின்றன. இப்படிப்பட்ட நிலைமைகளைத் தடுக்க ஜாதி, மதத்தின் பெயரால் எந்தப் பள்ளிக்கூடத்திற்கும் அங்கீகாரம் அளிப்பது என்பது கூடவே கூடாது.

பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாக சம்பளம் பட்டுவாடா செய்யப்படவேண்டும். ஏற்கனவே அரசாங்கம் எல்லாம் கொடுக்கிறது. முன்னால் கிரான்ட் கொடுத்தார்கள். அதோடு தனியார் நிர்வாகம் ஒரு பர்சன்டேஜ் போடவேண்டியிருந்தது. இப்போது எல்லாமே அரசாங்கத்தால் கொடுக்கப்படுகிறது. இந்த நிலையில் நேரடியாக அந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் பட்டுவாடா செய்வதில் என்ன தடை இருக்கிறது?

நேரடியாக சம்பள பட்டுவாடா செய்யப்படாவிட்டால் 75-25 என்று குத்தகை வாரம் செலுத்துவதைப் போலத்தான். ஆசிரியர்கள் நிலையும் இருக்கும் சம்பளத்தில் அவர்களுடைய 10 சதவீதம் அல்லது 12 சதவீதம் வெட்டு இருக்கிறது. இது தொடர்ச்சியாக இருந்து வருகிறது. இந்த வெட்டு இருந்தாலும் இருக்கக்கூடிய நிர்ப்பந்தத்தின் காரணமாக, பணியைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் ஆசிரியர்கள் அதைக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். இந்த அவல நிலையைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு நேரடியாக சம்பளம் பட்டுவாடா செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிராவிடெண்ட் பண்டைப் பொறுத்த வரையில், இதற்கு முன்பாக அந்த தனியார் நிறுவனம் ஒரு பர்சென்டேஜ் போட வேண்டும்; இப்போது போட வேண்டிய அவசியம் இல்லை. இதன் காரணமாக ஆசிரியர்கள் பிராவிடெண்ட் பண்டு நிதியை அந்த மானேஜ்மென்டிடம் கொடுத்தால் அவர்கள் அதை செலவழித்துவிடுகிறார்கள்; பணத்தை ஒழுங்காகக் கட்டுவதில்லை. பல இடங்களில் இந்த நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, டி. இ. ஓ. மூலம் இந்த பிராவிடெண்ட் நிதியைச் செலுத்த ஒரு சிறப்பான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல தனியார்களைப் பொறுத்த வரையில் இங்கே ஒரு குறிப்பு வந்திருக்கிறது. திருச்சி மாவட்டம், அரசங்குளம் பக்கத்தில் இருக்கிற விளாங்குளம். அங்கே இருக்கக்கூடிய தனியார் பள்ளியை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக அரிசன நலத்துறை எற்றுக்கொள்ள வேண்டுமென்று, நஷ்டஈடு ஏதுமின்றி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறார். ஆனால் அவருடைய கோரிக்கை தள்ளப்பட்டிருக்கிறது. ஒரு தனியார் அரசாங்கத்திற்கு தன்னுடைய பள்ளியை நஷ்டஈடு ஏதுமின்றி கொடுத்தால் அதை ஏற்றுக்கொள்வதில் என்ன தடை இருக்கிறது? அதை ஏற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நர்சரி பள்ளிகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு புற்றீசல் மாதிரி பெருகிக்கொண்டிருக்கின்றன. இதைத் தடை செய்ய வேண்டும். நர்சரி பள்ளிகளே தேவையில்லை. ஏனென்றால் அதிலே ஏராளமான ஊழல் இருக்கிறது.

மதிய உணவைப் பொறுத்த மட்டில் அரசாங்கம் 10 காசு கொடுக்கிறது. உள்ளாட்சி 5 காசு கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. முனிசிபாலிட்டிகளிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் நிதி நெருக்கடி. காரணமாக அவர்கள் அந்த 5 காசை கொடுப்பதில்லை. அரசாங்கம் கொடுக்கிற 10 காசில்தான் மதிய உணவு வழங்கப்படுகிறது. அந்த 10 காசில்தான் 'பில்' பாசாகும்போது பணம் கொடுக்கவேண்டும். அதைப்போல அதிகாரிகள் வரும்போது அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் மதிய உணவு பல

பள்ளிகளில் போடுவதே இல்லை; மாணவர்கள் வயிற்றில் மண்ணுதான். ஆகையால் தமிழ்நாடு பூராவும் மதிய உணவை மைய சமையல்கூடங்கள் மூலமாக ஒழுங்காக போடுவதற்கு உரிய ஒரு நடைமுறைப் பின்பற்ற வேண்டும். அதோடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக அதற்குத் தேவையான பொருட்களை குறைந்த விலையில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முறை சாராக் கல்வியியை(நான் பார்மல் எஜுகேஷன்) மத சார்புடைய நிறுவனங்களிடம் ஒப்படைக்கக்கூடாது. அதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அதைப்போல் இதிலே ஏற்கெனவே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டாம்; புதிதாக ஆசிரியர்களை நியமனம் செய்யவேண்டும். இதிலே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம்.

கல்வி நிறுவனங்களின் விடுதிகளில் (ஆஸ்டல்) பணியாற்றும் ஊழியர்களுக்கு பணிப் பாதுகாப்பு இல்லை; அவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் கிடையாது. அவர்கள் 'காட்டரிங் எஸ்டாபிளிஷ்மென்ட்'டில் வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அந்த முறை அமுல்படுத்தப்படவில்லை. அதை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல கல்லூரி நிர்வாகங்கள் செய்யும் ஊழலை மறைக்க மாணவர்களிடையே மோதலை ஏற்படுத்துகின்றனர். மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் பற்றி பள்ளி விடுதி நோட்டீஸ் போர்டில் பெயர், வகுப்பு, ஜாதிப் பெயர் எல்லாம் போடுகிறார்கள். அதனால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதை தவிர்க்க வேண்டும்.

(பிற்பகல்12-20)

பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் செனட், சிண்டிகேட்டில் மாணவர்கள் அங்கம் வகிக்கக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். கேரளாவிலேயும், மேற்கு வங்கத்திலேயும் அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. ஏனென்றால், கல்வி என்பது மாணவர்களுக்குத்தான். ஆகவே, மாணவர்கள் கல்வியைப் பற்றியும், தங்களுடைய குறைபாடுகளைப் பற்றியும், தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

அடுத்து, மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் மீதுள்ள வழக்கு வாபஸ் பெறப்படவேண்டும். வெளி நாடுகளுக்குச் செல்வதற்குரிய வாய்ப்புக்கள் சிலருக்கு ஏற்பட்டிருந்தபோதிலும் இந்த வழக்குகள் காரணமாக அதிலே தடை ஏற்படுகின்றது.

அடுத்து, மாஸ் காப்பியை அனுமதிக்கக்கூடாது. போலீஸ் உதவியுடனாவது இதைத் தடுக்க வேண்டும். அடுத்து பயிற்று மொழியைப் பொறுத்தவரையில் தமிழில் பி. ஏ., பி. எஸ். ஸி. போன்ற பட்டப்படிப்புக்களைப் படிப்பவர்களுக்கு உதவித்

தொகையாக கொடுக்கப்படுகின்ற ரூ. 180 என்பது போதாது. இதை அதிகரிக்கவேண்டும். மேலும் அப்படிப் படித்தவர்களுக்கு போதிய வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

வாசுதேவநல்லூர் மேல்நிலைப்பள்ளியில் போதிய கட்டிடங்கள் இல்லாத காரணத்தால் சில இடங்களிலே ஷிப்டுமுறை இருக்கின்றது. ஆகவே கூடுதலாகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கி ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து சிதம்பரம் நந்தனார் மேல் நிலை பெண்கள் பள்ளியில் பாட்டனி, கெமிஸ்டிரி, இங்கிலீஷ் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் கிடையாது. அடுத்து மேல் நிலைப்பள்ளிகளில் டைப் ரைட்டிங், ஷார்ட்ஹான்ட் பாடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். அடுத்து தற்போது தமிழ் ஷார்ட் ஹான்ட் படிப்பதற்குப் புத்தகமே கிடையாது. ஆகவே தமிழ் ஷார்ட்ஹான்ட் புத்தகத்தை அச்சடித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தப் புத்தகத்திற்கு ஏகப்பட்ட கிராக்கி இருக்கின்றது. அடுத்து, ஐ.டி.ஐ. பாலிடெக்னிக் போன்ற படிப்புகளுக்கு கிராக்கி இருப்பதால் அவற்றிலே இடங்களை அதிகப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கெ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி இலாகா சம்பந்தப்பட்ட வகையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். மொத்தம் 249.280 கோடி ரூபாயிலே பள்ளிக் கல்விக்கென்று 207கோடி ரூபாய் செலவு செய்யப்படுகின்றது. ஆரம்பப் பள்ளியின் ஆசிரியர்களின் எண்ணிக்கை 1980-81-லே 1·93 இலட்சம் பேர்கள். இந்த விகிதாச்சாரத்தின் அடிப்படையிலே பார்த்தால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இருக்கின்ற விகிதம் 1.38 என்று சொல்லப்பட்டிருக்கின்றது. தமிழகத்திலே உள்ள மாணவர்களின் நிலைமையைப் பார்க்கின்ற போது 6 வயதிலிருந்து 11 வயது வரை உள்ளவர்களின் எண்ணிக்கை 66·64 இலட்சம், 11 வயதிலிருந்து 14 வயதுவரை உள்ளவர்களின் எண்ணிக்கை 29·99 இலட்சம். கிட்டத்தட்ட இந்த அளவுக்கு மாணவர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பள்ளியிலே சேர்க்கப்பட்ட மாணவர்களை பார்க்கின்றபோது 6 வயதிலிருந்து 11 வயது வரை உள்ளவர்களின் எண்ணிக்கை 63·46 இலட்சம் என்றால் ஏறக்குறைய 3 இலட்சம் மாணவர்களைக் காணோம். 11 வயதிலிருந்து 14 வயது வரை உள்ள மாணவர்களைப் பொறுத்தவரையில் 18·42 இலட்சம் பேர்கள் பள்ளியிலே சேர்க்கப்பட்டவர்கள் என்றால் அதிலே ஏறக்குறைய 30 இலட்சம் பேரைக் காணோம். ஆனால், அதே நேரத்தில் கல்லூரிக்குச் செல்கின்ற போது 14 வயதிலிருந்து 17 வயது வரை உள்ள மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது 6·73 இலட்சம் என்று கணக்கு காட்டப்பட்டி

1981 ஏப்ரல் 23] [திரு. செ. சிவசாமி]

ருக்கின்றது. ஆக அரசாங்கத்தின் கணக்குப்படி 63.46 இலட்சம் பேர்கள் ஆரம்பப் பள்ளியிலே சேர்க்கப்பட்டனர். ஆனால் அரசாங்கம் கொடுத்திருக்கின்ற கணக்குப்படி பார்த்தால் அதாவது சென்னைப் பல்கலைக் கழகத்திலே 110 கல்லூரிகள் இருக்கின்றன. மதுரைப் பல்கலைக் கழகத்திலே 77 கல்லூரிகள் இருக்கின்றன. இந்த 187 கல்லூரிகளிலேயும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1,54,700 பேர்கள் தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன மாதிரி ஆரம்பப்பள்ளியிலே பல இலட்சக்கணக்கான மாணவர்கள் சேர்க்கப்பட்டும் கல்லூரியின் கல்வியை முடிக்கின்ற மாணவர்களை பொறுத்தவரையில் 1 இலட்சத்து 54 ஆயிரத்து 700 பேர்கள்தான்.

அதுபோன்று முதியோர் கல்வியில் 13,000 சென்டரில் 4 இலட்சம் பேர்களுக்கு கல்வி அளிப்பதாகச் சொல்லப்படுகின்றது. எஸ். எஸ். எல். சி. தேர்வைப் பொறுத்தவரையில் 1979–80-ல் 2,40,000 பேர்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. 1980-81ல் 3,18,000 பேர்கள் தேர்வு எழுதியதாகச் சொல்லப்படுகின்றது. ஆகவே ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் தமிழகத்திலே கல்வியின் தரமும் குறைந்திருக்கின்றது. இதை நினைக்கும்போது மிகவும் பரிதாபகரமாக இருக்கின்றது. என்னிடம் கூட ஒரு நண்பர் கேட்டார், ஒட்டுமொத்தமாக இந்தியாவிலே கல்வி வளர்ச்சி பின் தங்கி இருந்தாலும் கூட தமிழகத்தில் கல்வி கூடியிருக்கிறது. என்று அதை மத்திய அரசு ஏதோ ஒரு சாக்காகச் சொன்னாலும் கூட இன்று இருக்கக்கூடிய நிலைமையிலே நாமும் அதற்குக் கீழேதான் போகவேண்டும் என்று அர்த்தம் இல்லை.

தமிழகத்திலே கல்வித்துறை மேலும் மேலும் வளர்ந்து வருகிறது என்று சொல்கிறார்களே தவிர, உண்மையில் அப்படி இல்லை. இங்கே அடிக்கடி பெருமையாகச் சொல்லப்படுகிறது எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று, ஆனால் கல்வியின் தரம், பள்ளிகளில் மிகவும் குறைந்துவிட்டது. மதுரை, உலகத் தமிழ் மாநாட்டிலே கூட முழக்கினார்கள், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று. ஆனால் டவுனிலே இருக்கக்கூடியவர்களின் பிள்ளைகள் எல்லாம் ஆரம்பக் கல்வியே இங்கிலீஷ் பள்ளிக் கூடத்தில்தான் படிக்கிறார்கள். அரசாங்கத்தின் தரப்பிலே எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லிவிட்டு, நடைமுறையில் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பிள்ளைகள் எல்லாம் இங்கிலீஷ் ஸ்கூலில்தான் படிக்கின்றன. இங்கே இருக்கக் கூடிய ஆபீஸர்களின் பிள்ளைகள் எல்லாம் இங்கிலீஷ் ஸ்கூலில் தான் படிக்கின்றன. ஆனால் அதே நேரத்தில், சாதாரண கிராமப்புறத்தில் இருக்கக் கூடிய ஏழை எளிய மக்களின் நிலை என்ன ? அவர்களுடைய பிள்ளைகள் ஒருவேளை வயிறாரக் குடிப்பதற்கு கஞ்சி கூட இல்லாத நிலையில், பள்ளிக்கூடங்களுக்கு போவது இல்லை. அதன் விளைவாகத்தான் இப்படி 36 இலட்சம் பேர்கள் 35 இலட்சம் பேர்கள் என்று திடீரென்று காணாமல் போய்விடுகிறார்கள். பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் கணக்கில் வருவதில்லை.

அவர்கள் எல்லாம் என்ன ஆனார்கள்? எங்கே போனார்கள் என்று அரசாங்கம் சிந்திக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்துக் கொண்டிருக்கின்ற வரைக்கும் தமிழகத்தில் கல்வியின் தரம் முன்னேற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே டவுனில் உள்ள பிள்ளைகள் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் படிப்பதால், அந்தப் பிள்ளைகளின் கல்வித்தரம் சிறப்பாக இருக்கிறது. கிராமப்புறங்களில் உள்ள குழந்தைகளின் கல்வித் தரம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வருகிறது. இங்கே நகராட்சிகளில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை 1,094. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை 20,199 என்று சொல்லியிருக்கிறார்கள். டவுன்களில் பள்ளிகளும் அதிகரித்து தரமும் அதிகரித்து படிக்கக்கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. ஆனால் கிராமப்புறங்களில், பள்ளிகளின் எண்ணிக்கையும் குறைநது, தரமும் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து, பிள்ளைகளின் எண்ணிக்கையும் குறைந்து கொண்டே வருகிறது.

இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், கிராமத்து பிள்ளைகள் யாரும் முன்னேற முடியாது. அவர்கள் யாரும் என்ஜினியரிங் கல்லூரியிலோ, தொழில் நுட்பக்கல்லூரியிலோ, எம். பி. பி. எஸ். பட்டப்படிப்பிலோ, ஐ. ஏ. எஸ். போன்ற படிப்புகளிலோ ஈடுபட்டு முன்னேறவே முடியாது என்கிற நிலைமை இன்றைக்கு தமிழகத்திலே இருந்துக் கொண்டு இருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, கிராமப்புறங்களிலே பள்ளிகளிலே சொல்லிக் கொடுக்க உபாத்தியாயர்கள் யாரும் அதிகமாக முன் வருவதில்லை. அங்கே வகுப்புகளுக்கு சரியான கட்டிடங்கள் இல்லை. நானும் மூன்றாண்டுகளாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே குறிச்சி பஞ்சாயத்திலே இருக்கக்கூடிய பள்ளியில் கிட்டத்தட்ட 250, 300 பிள்ளைகள் படிக்கிறார்கள். அந்தப் பிள்ளைகள் படிக்கிற அந்தப்பள்ளிகூட கட்டிடம் எப்போது தலையில் இடிந்து விழுந்துவிடுமோ என்ற சூழ்நிலையில் இருந்துக் கொண்டிருக்கிறது. நானும் தொடர்ச்சியாக பல முறை அதை எடுத்து இந்த அவையிலே சொல்லிவிட்டேன். ஆனால் பலன் தான் இல்லை.

ஏற்கெனவே இதுமாதிரி மதுரை குசவபாளையத்திலே இருந்த ஒரு பள்ளிக்கூடம் இவ்வாறு இடிந்து விழுந்து பிள்ளைகள் பாதிக்கப்பட்ட நிலைமை அனைவருக்கும் தெரியும். அது போலவே, மதுரையிலே ஆர். வி. மில்லுக்கு பக்கத்திலே உள்ள ஒரு பெண்கள் பள்ளிக்கூட கட்டிடம் இடிந்து விழுந்து, எத்தனை பெண் குழந்தைகள் இறந்தார்கள் என்பதும் அனைவருக்கும் தெரியும். இதுமாதிரி நிலைமைகள் பாதிப்புகள் ஏற்பட்டால்தான், போய் பார்க்கிறார்களே தவிர, பள்ளிக்கூட

கட்டிடங்கள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன என்று எடுத்துச் சொன்னால், அவைகளை உடனே பழுது பார்த்து, தேவையானதை செய்வது கிடையாது. நானும் மூன்றாண்டுகளாக இதை எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறேன். அமைச்சர் அவர்கள் இதை இந்த தடவையாவது கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, அங்குள்ள வாத்தியார்களின் நிலைமை என்னவென்று கேட்டால் மிகவும் மோசமாக இருக்கிறது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திலே வறட்சி ஏற்பட்டதன் காரணமாக பள்ளிகளில் குடிக்க தண்ணீர் கூட கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. ஆகையினால் ஆசிரியர்கள் அவர்கள் படிப்பு சொல்லிக் கொடுக்கும் ஊர்களில் தங்குவது கிடையாது. வெளியே, வேறு ஊர்களில் தங்கிக்கொள்கிறார்கள். அங்கேயிருந்து 10 மைல் தூரம் சைக்கில்களில் மனைவியையும், பின்னால் வைத்துக் கொண்டு, பள்ளிக்கு வந்து இருவரும் கற்றுக் கொடுத்துவிட்டு, திரும்பவும் மாலை அப்படியே போய்விடுகிறார்கள். அங்கேயே வீடு இருந்து அவர்கள் படிப்புச் சொல்லிக் கொடுத்தால், ஓரளவு நலமாக இருக்கும். ஆகவே அங்கேயே தங்கியிருந்து படிப்புச் சொல்லிக் கொடுக்கக்கூடிய முறையில் அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். மற்றும் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். (மணியடிக்க பெற்றது) இன்னும் 5 நிமிடம் கூட ஆகவில்லையே, அதற்குள் மணியடித்து விட்டீர்கள்.

அடுத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அரசு எடுத்துக் கொள்வது பற்றி நீண்ட நாட்களாக பேசப்பட்டு வருகிறது. அந்த நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை. இன்னும் போராட்டங்கள் நடக்கின்றன. அவர்கள் இன்றைக்கும் ஆசிரியர்களுக்கு பல தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பல ஊழல்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, கால தாமதத்தை தவிர்த்து உடனடியாக அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தை, அரசு எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30].

அதேபோல் என் தொகுதியில் திருப்பாலைக்குடி உயர் நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கவேண்டும் என்று கடந்த மூன்று ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நேற்று கூட அமைச்சர் அவர்களைத் தேடிப்பார்த்தார்கள். அவர்களைப் பார்க்கமுடியவில்லை. எனவே அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பரமக்குடி சௌராஷ்டரா பள்ளியில் 1,800 மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு ப்ளே கிரவுண்ட் வேண்டுமென்று பத்தாண்டுகளாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ரெவின்யூ டிப்பார்ட்மெண்டிலிருந்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதிருப்பதால் அந்த ப்ளே கிரவுண்டு கட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அரசு அதிகாரிகளுக்குக் கொடுப்பது போல் ஆசிரியர்களுக்கும் வேலை நாட்கள் அடிப்படையில் ஈட்டிய விடுப்பு நாட்கள் உயர்த்தப்பட வேண்டும். குறைந்தது 20 நாட்களாவது கொடுக்கப்படவேண்டும்.

ஆசிரியர்களுக்கு மருத்துவ அலவன்ஸ் பணமாகக் கொடுக்கப்படவேண்டும். மருத்துவ விடுப்பு எடுக்கும் ஆசிரியர்களுக்கு அவர்கள் செலவுகள் அதிகமாவதை உத்தேசித்து விடுப்பு மாதத்திலேயே விடுப்புக்கான சம்பளம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நகரம், கிராமம் என்ற வேறுபாடு இல்லாமல் வீட்டு வாடகையை சீரமைக்க வேண்டும், அதோடு வீட்டு வாடகைப் படியையும் உயர்த்தவேண்டும்.

தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கு முழு பணிப்பாது காப்புத் தர சட்டம் திருத்தப்பட வேண்டும்.

பெருந்துறை தொகுதி திங்களூர் உயர்நிலைப் பள்ளியில் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடம் இன்று எந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறது என்று கேட்டால் அந்தக் கட்டடம் சீராக இல்லை என்று என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதைச் சீர்படுத்தி அந்த உயர்நிலைப் பள்ளியை மேம்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும்.

திருச்சி மாவட்டம் ஆர். டி. பள்ளியின் கூரை இடிந்து கிடக்கிறது. அது மாணவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அதை சீர்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எமர்ஜென்ஸி காலத்தில் ஆசிரியர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட ஏ.டி.ஏ.டி.ஏ. திருப்பிக் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதனால் பல ஆசிரியர்கள் கிராமங்களிலிருந்து சென்னைக்கு வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அது கிடைப்பதற்கான வழிவகை செய்து தரவேண்டும். (மணியடிக்கப்பட்டது)

மதுரை யூனிவர்சிட்டியில் மார்க்ஸிஸம் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி பாடமாக வைக்கப்பட்டிருந்தாலும் அதை சொல்லிக்கொடுக்க சரியான உபாத்தியாயர்கள் இல்லை என்று கேள்விப்படுகிறேன். அந்த நிலையை மாற்றி மார்க்சிஸம்

சொல்லிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். காரணம் மார்க்ஸிஸம் உன்னதமானது, அது வளரக் கூடியது, அது வெற்றி காணக்கூடியது, அது விஞ்ஞானபூர்வ மானது.

விளையாட்டுகளில் நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். விளையாட்டுகளில் நாம் உலகத்தில் முன்னுக்கு வரவேண்டுமென்றால் அதன் அஸ்திவாரம் பள்ளிகளில் அமைக்கப்பட வேண்டும். இன்று பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஹாக்கியில் வெங்கல மெடல் பெறுகிறோம்., இல்லையென்றால் சீரோதான். ஆகவே பள்ளிக்கூடங்களில் விளையாட்டுகளில் பயிற்சி கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

கிராமங்களில் நூலகங்கள் இல்லாமல் இருக்கிறது. ஆகவே கிராமங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் நூலகங்கள் அமைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

பிற்பட்ட பகுதிகளில் பிற்படுத்தப்பட்ட மைனாரிட்டி சமூகம் நடத்தும் பள்ளிகள் என்று சொல்லி பலர் மோசடிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திடமிருந்து பணம் வாங்கிக்கொண்டு அந்தப் பள்ளிகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எல்லாத் தரப்பு மாணவர்களும் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே பணி புரியும் ஆசிரியர்களுக்கு அரசாங்கச் சட்டப்படி உள்ள சலுகைகளை கொடுக்கவேண்டும், அங்குள்ள ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான கோரிக்கைகள் மறுக்கப்படுகின்றன. இதை மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்தப் பள்ளிகளுக்கு என்று தனிப்பட்ட சலுகைகள் கொடுக்கக்கூடாது.

தமிழ் சுருக்கெழுத்துப் புத்தகங்கள் கிடைப்பதில் இப்போது கஷ்டமிருக்கிறது. அவை கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்று என்னிடம் பலர் சொல்கிறார்கள். தமிழ் சுருக்கெழுத்தைக் கற்றுக்கொள்ள ஆர்வமாக உள்ளவர்கள் இன்று அந்தப் புத்தகம் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சுருக்கெழுத்தாளர்கள் இதை தயவுசெய்து குறித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். தமிழ் சுருக்கெழுத்துப் புத்தகம் பரவலாக எல்லோருக்கும் கிடைக்கத்தக்க அளவிற்கு ஏற்பாடுகள் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் எம்.ஏ., பி.எட். படித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும், பலருக்கு 'ஓவர் ஏஜ்' ஆகிவிட்டது என்ற நிலையில் பலபேர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில். தமிழ் படித்தவர்களுக்கு ஆபத்து தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும். விகிதாசார அடிப்படையில் அவர்களுக்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கருத்துக்களை வழங்கிட அனுமதித்ததற்கு நன்றி. இங்கே அச்சிட்டுக் கொடுக்கப்பட்டுள்ள விவரக் குறிப்பில், அரசாங்கம் கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதும், அதன் முன்னேற்றத்திற்கு எந்த அளவிற்கு ஆர்வம் காட்டுகிறது என்பதும் சற்றென உள்ளங் கை நெல்லிக்கனி போல் தெரிகிறது. அவர்களுக்கு இருக்கின்ற வாய்ப்பு வசதிகளையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு ஏறத்தாழ மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவம், ஆதித் திராவிட பழங்குடியினர் போன்ற அனைத்தையும் சேர்த்தால் 332 கோடி ரூபாய்க்கு இங்கே திட்டமிட்டிருக்கின்கின்ற ஒரு நல்ல உள்ளத்தைப் பார்க்கின்றேன். அடிக்கடி நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைப் பார்க்கின்றபோது, அவர்கள் இப்போது 8-ஆம் வகுப்பை உயர்நிலைப் பள்ளியோடு சேர்க்கும் திட்டத்தை தன் சிந்தனையில் வைத்திருப்பதையும் அதைப்போலவே வெளிநாடுகளிலே இருக்கின்ற தமிழர்களுக்கு தமிழைப் பயிற்றுவிக்கின்ற ஏற்பாடுகளைச் செய்வதற்குரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதையும் நான் கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்; அதற்காகப் பாராட்டுகிறேன்.

அதைப்போலவே, கைத்தொழில் ஆசிரியர்கள் பகுதிநேர ஆசிரியர்களாக பலப்பல இடங்களுக்கும் நடந்து, அலுத்துக் களைத்துப் போவதை தீர்க்கும் வகையில், முழுநேர ஆசிரியர்களாக அவர்களை ஆக்கியதோடு 1,000 இடைநிலைப் பள்ளி ஆசிரியர் பதவிகளும், 250 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகளும், நடுநிலைப் பள்ளிகளுக்கு 500 தமிழாசிரியர்கள் பதவிகளும், மற்றும் பி.எட். தலைமை ஆசிரியர் பதவிகள், உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பதைக் கண்டு உண்மையிலேயே நான் அமைச்சர் அவர்களுக்கு பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு இப்படி நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று முனைகின்ற நேரத்தில், அவர்கள் நினைக்கின்ற அளவிற்கு நல்லது நடக்க முடிகிறதா? அதற்குரிய சூழ்நிலை சமுதாயத்தில் இருக்கிறதா? என்பதைப் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் ஆங்காங்கே கண்களிலே தட்டுப்படுகின்றதனை, நெஞ்சத்திலே நெடு நாட்களாக கொட்டி வைக்கப்பட்டிருப்பவைகளை எடுத்து, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இந்த அவையினருக்கும் தெரிவிக்க வேண்டியது எனது கடமை என்று கருதி நான் சொல்கிறேன்.

ஆங்காங்கே இருக்கின்ற பள்ளிகளைப் பார்ப்போமானால், ஆங்காங்கே எல்லோருக்கும் குடிதண்ணீர் கிடைக்கவில்லை. நான் அண்மையில் மணலியில் ஒரு பள்ளிக்கூட ஆண்டு விழாவிற்குச் சென்றிருந்தபோது, ஒரே அறையில் மூன்று வகுப்புகள் நடந்து

கொண்டிருந்த காட்சியினைக் காண நேர்ந்தது. அதேபோல் அங்கிருந்த மாணவர்களுக்கு கழிப்பிடம் இல்லாத காரணத்தினால் பக்கத்திலே இருக்கின்ற ஒரு வீட்டினுடைய அனுமதியோடு, அவர்கள் கருணைத் திருவுள்ளத்தால், அவர்கள் வீட்டின் ஒரு பகுதியை கழிப்பிடமாக உபயோகிக்கின்ற ஒரு சூழ்நிலையைக் கண்டு உண்மையிலேயே நான் மெத்த வேதனைப்படக் கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது.

இன்னும் பல இடங்களிலே, அரசுப் பள்ளிகளிலே எங்களுக்கு இன்னும் ஆசிரியர்கள் தேவை என்று சொன்னால், அந்த ஆசிரியர்களை எங்களுக்கு உடனடியாக ஒதுக்கீடு செய்து கொடுப்பதில்லை என்று சொல்லப்படுகின்ற குறைகள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு, அவைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன்.

அண்மையிலே, சென்னை மாநகரத்திலும், இன்னும் பிற நகரங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. அவைகளிலே என்ன சொல்லப்பட்டிருக்கின்றதென்றால், '$2\frac{1}{2}$ வயது, உங்கள் குழந்தைகளுக்கு ஆகிவிட்டதா? எங்கள் பள்ளியிலே கொண்டு வந்து சேருங்கள்' என்று விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. நகரெங்கும் காட்சி அளிக்கின்ற நிலையிருக்கிறது. $2\frac{1}{2}$ வயது ஆகிவிட்டால் எங்கள் பள்ளியிலே கொண்டுவந்து சேருங்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், கல்வி ஆய்வாளர்கள் என்ன சொல்கிறார்கள்? இந்த விளம்பர சுவரொட்டிகளை ஒட்டுகின்றவர்கள் என்ன சொல்கிறார்கள்? என்று பார்த்தால், விளம்பரங்களை ஒட்டுகின்றவர்கள் சொல்வது, $2\frac{1}{2}$ வயது குழந்தைகளை எங்கள் பள்ளியிலே கொண்டு வந்து சேர்த்தால், ஆங்கிலத்தை அற்புதமாகக் கற்றுக் கொடுத்து விடுவோம் என்று சொல்கிறார்கள். ஆனால், கல்வி வல்லுநர்கள் 9 வயது ஒரு குழந்தைக்கு ஆனதற்குப் பின்னர்தான் அந்நிய மொழியாகிய ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்ளுகின்ற மனப்பக்குவம், உடல் பக்குவம் பெறுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆக, பிஞ்சு குழந்தைகள் நெஞ்சில் அது தாங்க முடியாத ஒரு பெரிய பாரத்தைச் சுமத்துகின்ற பள்ளிக்கூடங்கள் நாடெங்கிலும் பல்கி வருவதனை அரசு கவனித்துக் கொண்டிருந்தாலும், அந்தத் தீமையைப் போக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–40)

சில பெற்றோர்களுடைய எண்ணம் என்ன இருக்கிறதென்றால், அப்படிபட்ட பள்ளிக்கூடங்களில் தான் செம்மையாக சொல்லிக்கொடுக்கிறார்கள் என்று கூட இருக்கிறது; அது ஒரு தவறான கருத்து என்பதனை நான் இங்கு வெளியிட விரும்பு

கிறேன். காரணம் அரசு அங்கீகாரத்திற்குட்பட்ட பள்ளிக்கூடங்களில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு கிடைக்கின்ற பயிற்சி இந்த நர்சரி பள்ளிகளிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு கிடைப்பதில்லை. உதாரணமாக சொல்வதென்று சொன்னால் இடைநிலை ஆசிரியர் பயிற்சி மாதந்தோறும் இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றது; 'மெல்ட்' என்ற பெயரிலே நடந்து கொண்டிருக்கிறது. அதிலே ஆங்கிலத்தை எப்படி சொல்லிக் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை சொல்லிக் கொடுக்கின்றார்கள். மூன்றாவது வகுப்பிலிருந்து தான் ஆங்கிலத்தை சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றும், அதுவும் வாய் வழி சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றும், வரி வடிவிலே அதனை சொல்லிக் கொடுக்கக் கூடாது என்றும் சொல்கிறார்கள். ஆகவே உள்ளத்திலே சில எண்ணங்களை எழுப்புதல் முடியுமே தவிர அந்த பிஞ்சு விரல்களை வைத்து எழுதச் சொல்லுதல் முக்கியம் அல்ல என்று, மூன்றாவது வகுப்பு குழந்தைகளுக்கே சில வரையறைகளை வகுப்பார்களேயானால் $2\frac{1}{2}$ வயது குழந்தைகளை அனுப்புங்கள் என்று சுவரொட்டி ஒட்டுறவர்களைப் பற்றி அரசாங்கமும், சமுதாயத் தொண்டர்களும் என்ன நினைக்க வேண்டும், என்பதனை நாம் சிந்திக்க கடமைப்பட்டிருக்கிறோம். 'மெல்ட்' என்று சொல்கின்ற அவர்களே தயாரித்து நடத்துகின்ற 'டீச்சர்ஸ் ஹேண்ட் புக்' நாற்பது நிமிடத்திலே இன்னின்ன சொற்களைத் தான் சொல்ல வேண்டும்; அவர்கள் உள்ளத்திலே ஒரு உருவத்தை எழுப்ப வேண்டும் என்பதற்கு மிக ஆய்ந்து, தேர்ந்து பாடத்திட்டங்களை வகுத்திருக்கின்றார்கள். இவைகளை கற்றவர்கள் எல்லாம் நர்சரியிலே இல்லை. அதேபோல தான் பொது அறிவியல் என்று சொல்கின்ற திட்டம் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அந்த திட்டத்திலே 'இன் ட்ரெயினிங் சர்வீஸ்' என்ற பணியிடை பயிற்சி பெறுகின்றார்கள் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளிலே இருக்கின்ற ஆசிரியர்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்கள் நர்சரியிலே இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இன்னும் ஒன்று, உடல் நல கல்வி என்ற கல்வியினை கற்றுக் கொடுக்கின்றார்கள். உடலை உழைக்கச் செய்வதற்கான மாவுச் சத்து அரிசியிலே இருக்கிறதென்றும், வளரச் செய்வதற்கு புரத சத்து பருப்பு வகைகளிலே இருக்கிறதென்றும், பாதுகாப்பதற்குரிய உயிர் சத்து கீரை வகைகளிலே இருக்கிறதென்றும் சொல்லிக் கொடுக்கின்றார்களே இந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் நர்சரியிலே இல்லை. இத்தனை பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் நர்சரியிலே இல்லாத போது, அந்த நர்சரிதான் நல்ல கல்வி கொடுக்கிறது என்று பொய் தோற்றத்தை, ஒரு மாயத் தோற்றத்தை நாட்டிலே பரவ விடுவது எவ்வளவு குழந்தைகளுக்கு ஊனம் செய்யக்கூடிய ஒன்று என்பதனை ஒவ்வொருவரும் உணர வேண்டும் என்பதை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியை கற்கத் துவங்குகிற வயது கூட நமது நாட்டிலே தான் ஐந்து என்று இருக்கிறது. பக்கத்திலே இருக்கின்ற மாகாணங்களிலே கூட ஆறு என்று இருக்கிறது. மருத்துவக் கல்லூரிக்கு இப்போது ஒரு மாணவன் சேர்கிற வயது 16, 17 ஆனாலே சேர்ந்து விடுகிறான். ஆனால் மேஜர் என்று சொல்கிற வயது கூட 18, 19 என்று தான் இருக்கிறது. ஆனால் மேஜர் என்று சொல்கிற வயது கூட ஆகாத நிலையிலே பிணத்தை அறுத்து பார்ப்பதற்கு உரிய ஒரு சூழ்நிலையை உருவாக்கி விடுவோமேயானால், மற்ற நாடுகளிலே இப்படி இல்லை. அவர்களுக்கும் நமக்கும் இந்த திட்டத்திலே வேறுபாடும், முரண்பாடும் இருக்கிறது என்பதை நாம் மனதிலே கொள்ள வேண்டும். இதற்காகத் தான் மருத்துவ கல்லூரிகளிலே கூட 10 சதவீதம் பட்டதாரிகளுக்கு ஒதுக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் அரசாங்கம் ஒதுக்கிற்று ; படிப்படியாக அதிகம் ஒதுக்க வேண்டும் என்பது திட்டம் ; ஆனால் அந்த 10 அப்படியே நின்று கொண்டிருக்கிறது. பக்கத்திலே இருக்கின்ற கேரளத்திலே கூட 30 சதவீதம் பட்டதாரிகளுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நாம் மனதிலே கொள்ளுதல் வேண்டும். மூன்று வயது முதல், ஐந்து வயது வரை இருக்கின்ற குழந்தைகளைப்பற்றி நான் இங்கே கூறினேன். இந்த குழந்தைகளை எல்லாம் எந்த பள்ளிகளுக்கும் அனுப்பக் கூடாது என்று தடை போட்டு விட முடியாது. ஆனால் பிரச்சாரத்தின் மூலமாக இதற்கு ஒரு முயற்சியினை மேற்கொண்டு, அந்த முயற்சிகளில் நாம் எந்த அளவிற்கு வெற்றி பெறுகிறோமோ அந்த வெற்றியை நமக்கு கிடைத்திருக்கிற ஊதியமாக வைத்துக்கொண்டு மிச்சமாக இருக்கிற தாய்மார்கள் குழந்தைகளை அனுப்பத் தான் வேண்டுமென்று விரும்பினார்களானால் நாமே அதற்கு வழிவகை தேடலாம். ஏனென்றுச் சொன்னால் உள்ளத்திற்கு ஊனமில்லாத வகையிலே பாடத்திட்டங்களை அமைத்து அவர்களை செம்மைப் படுத்தலாமே. இப்போதிருக்கிற அரசாங்க பள்ளிக்கூடங்களிலே அவைகளை இணைத்து தாய்-சேய் விடுதிகள் இருப்பதைப் போல குழந்தைகள் காப்பகங்களை நாமே உற்பத்தி செய்து அவைகளை நமது அரசினர் பள்ளிகளிலே இணைத்து விடலாமா என்பதை நாம் சிந்திக்க வேண்டும் என்று பணிவோடு இங்கே கேட்டுக் கொள்கிறேன். இது மாற்று ஏற்பாடு தான். மூன்று முதல் ஐந்து வயது வரை இருக்கிற குழந்தைகளை அப்படி நாம் தடுத்து நிறுத்த முடியவில்லை என்றுச் சொன்னால் நாமே செம்மைபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த செய்தியாக நமது குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்குகின்ற திட்டம் மிகச் செம்மையாக சிறந்த திட்டமாக அமைய வேண்டுமென்றுதான் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் கொண்டு வரப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் மட்டும் நடந்து கொண்டிருந்தாலும்கூட ஒரு குறைபாடு அதிலே இருப்பதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சான்றாக ஒரு இடத்தைச் சொல்ல விரும்புகிறேன். நெல்லை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட 48 பள்ளிக்கூடங்களில், 29 பள்ளிக்கூடங்கள் தனியார் பள்ளிக்கூடங்கள்; ஒரு பள்ளிக்கூடம் அரசு பள்ளிக்கூடம்; இன்னும் 18 பள்ளிக்கூடங்கள் நகராட்சி நடத்துகின்ற பளளிக்கூடங்கள். இந்த பள்ளிக்கூடங்களில் எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் அரசு கொடுக்கின்ற 10 பைசா போய் விடுகிறது. அவர்களுக்குக் கிடைத்து விடுகிறது. ஆனால் நகராட்சிகள் நடத்துகின்ற 18 பள்ளிக்கூடங்களுக்கு மட்டும்தான் நகராட்சிகள் அவர்கள் கொடுக்க வேண்டிய ஐந்து பைசாவை கொடுக்கிறார்கள். மற்ற பள்ளிகளுக்கு கொடுப்பதில்லை. கேட்டால் சொல்கிறார்கள், கௌன்சில் இல்லாத நேரத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அவை இல்லாத நேரத்திலே நாங்கள் கொடுக்க இயலாது என்று சொல்கிறார்கள். அதிலிருந்து உள்ளாட்சித் தேர்தல்கூட—சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு—அவை நடத்தப்படாத காரணத்தால் பாதகத்தை ஏற்படுத்துகிறது என்பதை அமைச்சரவை உணரவேண்டுமென்பதைத் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, முன்பு அரிசி வாங்குவதற்காக ரேஷன் கார்டுகள் கொடுக்கப்பட்டன, இப்போது அப்படி ரேஷன் கார்டுகள் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். அரிசி வெளி மார்க்கெட்டிலே அதிக விலை கொடுத்துவாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே ரேஷன்கார்டுகளைக் கொடுத்து அதைச் செம்மைப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆரம்பப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற தலைமையாசிரியர்களுக்கு ஏராளமான வேலைகள் இருக்கின்றன. ஆனால் அவர்களுக்கு மற்ற ஆசிரியர்கள் சம்பளத்தைவிட வெறும் 5 ரூபாய் தான் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அட்மிஷனைக் கவனிக்க வேண்டும், நிர்வாகத்தைக் கவனிக்கவேண்டும், வெளி அதிகாரிகளோடு தொடர்பு கொள்ளவேண்டும், மிட்டே மீல்ஸ் கவனிக்க வேண்டும். ரிக்கார்டுகளை மெயின்ட்டெயின் செய்ய வேண்டும், இத்தனையையும் செய்கின்றவர்களுக்கு, 300 மாணவர்களுக்கு குறைவாக இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகளிலே இருக்கின்ற தலைமையாசிரியர்களுக்கு 5 ரூபாய் தான் அதிமாகக் கொடுக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கருத்தில்கொண்டு அந்தத் தலைமையாசிரியர்களுக்கு அதிகமான சம்பளத்தைக் கொடுக்கக்கூடிய முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில தனியார் பள்ளிகளிலே என்ன நடக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பச்சையாகச் சொல்கிறார்கள். பே உனக்கு, டி. ஏ. எனக்கு, சம்பளம் உனக்கு, பஞ்சப்படியா அது எனக்கு, பேயை நீ எடுத்துக் கொள், பஞ்சப்படியை நான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லி வருகிற பஞ்சப்படியை எனக்கு கொடுத்துவிட வேண்டும் என்று ஒப்பந்தம் பேசிக் கொள்கிறார்கள். அரசாங்கம் அந்த ஒப்பந்தங்களை விரும்புவது இல்லை என்பதற்காக ராஜிநாமா போன்ற கடிதங்களை எல்லாம் முன்னமேயே கொடுக்கக்கூடாது என்ற நல்ல திட்டத்தைக் கொண்டுவந்தாலும்

இந்தத் திட்டத்தை முறியடிக்கிற வகையில் பல தனியார் பள்ளிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன்.

காரணம் என்னவென்றால் ஒரு சிறு பள்ளியைப் பற்றிய குறிப்பைக் காட்டுகிறேன். பக்கத்திலே இருக்கின்ற பூந்தமல்லியில் உள்ள பள்ளி, டி.வி.எம். பள்ளி என்று அதற்குப் பெயர். அந்தப் பள்ளி ஒரு காலத்திலே ஆங்கிலேயரால் நடத்தப்பட்டு வந்தது. அந்த ஆங்கிலேயர் அந்தச் சொத்துக்கள் அனைத்தையும் அரசாங்கத்திற்குக் கொடுத்து விட்டுச் சென்றதற்குப் பின்னாலே இன்னும் ஒருவர் அதனுடைய மேனேஜ்மென்டை நடத்திக்கொண்டு வந்தார். அவர் போனதற்குப் பிறகு அவருடைய துணைவியார் அதை நடத்திக்கொண்டு இருக்கிறார். அவர் டி. இ.-ஓவுக்கு, மேலதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். எங்களிடம் 750 மாணவர்கள் இருக்கிறார்கள், 750 மாணவர்கள் இருக்கின்ற காரணத்தால் ஒரு பட்டதாரி தலைமை ஆசிரியரைத் தரவேண்டுமென்று; பலமுறை கேட்டும் தரவில்லை. மீண்டும் கல்வி அதிகாரிகளுக்கு எழுதுகிறார். உடனே, கல்வி அதிகாரி போட்டுக் கொள்ளலாம், இருக்கின்ற ஆசிரியர்களிலேயே சீனியர் மோஸ்ட் யார் அதிகமாக சேவை செய்திருக்கிறாரோ அவரைப் போடவேண்டுமென்று சொல்லி இப்போது இருக்கின்ற தலைமை ஆசிரியருக்கு அடிஷனல் ஹெட் மாஸ்ட்டர் என்ற பெயர் இருக்கும், பதவி இருக்கும்; அவருடைய சம்பளத்திலே சரிவு இருக்காது என்று சொல்லி ஒரு குறிப்பிட்ட நாளிலே உத்திரவு அனுப்புகிறார். சீனியரை நியமிக்கவேண்டுமென்று அரசு உத்திரவிட்டதற்குப் பிறகு, சினியராக இருப்பவர் தமிழ்ப் புலவர் என்றாலும் அவரை நியமித்தார்களா? அவரை இத்தனை நாளைக்குள்ளே நியமிக்க வேண்டுமென்று வந்திருக்கின்ற உத்திரவு நாள்வரை காத்திருந்து இரண்டு நாட்களுக்குப் பின்னாலே எங்களுக்கு — அந்தத் தமிழ்ப் புலவர் தேவையில்லை என்று— சொல்கிறார். அவர் தமிழ்ப் புலவர் மட்டுமல்ல, தமிழ்ப் புலவரிலே வெற்றி பெற்றிருக்கிறார், பி. லிட்டிலும் வெற்றி பெற்றிருக்கிறார். தமிழ்ப் புலவரை தலைமை ஆசிரியராக்க வேண்டுமென்ற உத்திரவுகளை பெருந்தலைவர் காமராஜ் காலத்திலேயே போட்டுவிட்டோம். இப்போது தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் ஒரு இடத்திலே பேசுகின்றபோது தமிழ் ஆசிரியர்களைப் பார்த்து சொல்கிறார், ''உங்களுடைய தகுதி, உரிமைகளைக் காக்க, தலைமையாசிரியர்கள் போன்ற தகுதியினைப் பெற ஆவன செய்வேன். உரிமையும் தகுதியும் பிறருக்குக் கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கவேண்டிய நீங்கள் கேட்க வேண்டிய நிலையில் இருப்பதற்காக வருந்துகிறேன்'' என்று சொன்னார்கள். கேட்கவேண்டிய நிலையில் இருப்பதற்காக வருந்துகிறேன் என்று சொல்கிற முதலமைச்சர் அவர்களுடைய அரசாங்கத்தின் கல்வி இலாகாவிலிருந்து ஒரு உத்திரவு போனதற்குப் பின்னாலேகூட அந்த உத்தரவை

நிறைவேற்றுவதற்கு மனமில்லாமல் கடைசி நேரம் வரை காத்திருந்துவிட்டு அந்தப் பதவியே எங்களுக்கு வேண்டாம் என்று சரண்டர் செய்தார்கள். அப்படிச் சரண்டர் செய்ததை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்லி மாவட்ட கல்வி அதிகாரி மீண்டும் எழுதுகிறார். நிச்சயம் நீங்கள் அவரைப் போடவேண்டுமென்று சொல்லி எழுதுகிறார். இன்று வரை—அந்தப் பிரச்சினை எனக்கு வந்தது, இதை நாம் சற்று சிந்தித்து தொடர்ந்து பார்ப்போமே, ஊசிக்குப் பின்னாலே செல்கிற நூல்போல் தொடர்ந்து பார்ப்போமே என்று பார்த்து மதிப்பிற்குரியகல்விச்செயலாளர் அவர்களோடு தொடர்புகொண்டேன். இணைச் செயலாளரோடு தொடர்பு கொண்டேன், ஜாயின்ட் டைரக்டர் அவர்களோடு தொடர்பு கொண்டேன், டெபுடி டைரக்டரோடு தொடர்பு கொண்டதற்குப் பின்னாலேயும் அந்த அரசாங்க உத்தரவை நிர்வாகம் நிறைவேற்றுவதற்குத் தயாராக இல்லை. இன்று 202-வது நாள். நூறு நாள் விழா கொண்டாடுவது என்று சொன்னால் இரண்டு தடவை கொண்டாடி இருக்க முடியும். ஆனால், அரசாங்க உத்தரவை நிறைவேற்றுவதற்கு வழியில்லை. நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், அந்தப் பள்ளிக்கூடம் இருக்கின்ற இடம் அரசாங்க நிலம், அந்தப் பள்ளிக்கூடக் கட்டிடம் இருக்கின்ற கட்டிடம், அரசாங்கக் கட்டிடம்.

(பிற்பகல் 12-50)

இந்த அரசாங்கக் கட்டிடத்திலே, அரசாங்க நிலத்திலே இருந்துகொண்டு, அரசாங்க உத்தரவை நிறைவேற்ற முடியவில்லை என்று சொன்னால், கல்வி இலாக்கா இதைச் சாதிக்க முடியவில்லை என்று சொன்னால், எனக்கு மெத்த வேதனையாக இருக்கிறது. என்ன காரணம் என்று சொன்னால், ஒரு நாளைக்கு நாம் கணக்குப் பார்த்தால், மொத்தத்திலே செலவு செய்யும் தொகையை வைத்து கணக்குப் பார்த்தால், 332 கோடியிலே கணக்குப் பார்த்தால் ஒரு நாளைக்கு 94 இலட்சம் ரூபாயை நாம் கல்விக்காகச் செலவிடுகிறோம். ஒரு மணிக்கு மூன்றே முக்கால் இலட்சம் ரூபாயை நாம் செலவிடுகிறோம். ஒரு வினாடிக்கு ஒரு நொடிப் பொழுதுக்கு—கண்ணிமைக்கின்ற பொழுதுக்கு 1,400 ரூபாயை நாம் செலவழிக்கிறோம். ஆக, கண்ணிமைக்கின்ற பொழுதுக்கு—நொடிப் பொழுதுக்கு 1,400 ரூபாயை அரசாங்கம் செலவு செய்வதோடு மட்டுமல்லாமல், பள்ளி இயக்குநர் 1, இணை இயக்குநர் 4, துணை இயக்குநர் 6, சிறப்பு அதிகாரி 12, சி.ஈ.ஓ. 16, டி.ஈ.ஓ. 51, துணைக் கல்வி ஆய்வாளர் 463, பெண்கள் கல்லூரியை ஆய்வு செய்கின்றவர்கள் 10 என்று இத்தனை பேர்களும் இருந்து, இத்தனை ரூபாயையும் செலவழித்ததற்குப் பின்னால் இப்படிப்பட்ட தனியார் நிறுவனங்கள் ''மெயின்டெனன்ஸ் கிராண்டையும்'' வாங்கிக் கொண்டதற்குப் பின்னால், பெஞ்ச் செய்தாலும், மேசை செய்தாலும், விளக்குமாறு வாங்கினாலும்கூட அந்தப் பணத்தை இங்கிருந்து வாங்கிக்கொள்கின்றவர்களை நீங்கள் ஏன் அரசாங்க உத்தரவை நிறைவேற்றவில்லை என்று விளக்குமாறு

கேட்போம் என்று சொன்னால் அவர்கள் விளக்குமாறு இல்லை. 202 நாட்களுக்குப் பின்னாலும் அவர்கள் விளக்குகின்ற சூழ்நிலையிலே இல்லை என்று சொன்னால் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், இவைகளை யெல்லாம் எப்பொழுதுதான் கட்டுப்படுத்துவது ?

மத்தியிலே இருக்கின்ற கல்விக் குழுவின் சார்பிலே இருக்கிறோம் என்று சொல்லுகின்றவர்கள் சிலர் பணம் தந்தாலொழிய, கட்டிடத்திற்கு நன்கொடை தந்தாலொழிய உங்கள் பிள்ளைகளைப் பள்ளியிலே பரீட்சைக்கு நாங்கள் அமர்த்துவதில்லை என்று சொல்லுகிறார்கள். எப்பொழுது? அதைக்கூட நமது தமிழக அரசின் சார்பிலேயிருந்து கொண்டிருக்கின்ற கல்வி அதிகாரிகள் கட்டுப்படுத்த முடியவில்லையென்றால், இத்தனை ரூபாயையும் செலவழித்ததற்குப் பின்னால், இத்தனை அதிகாரிகளையும் வைத்ததற்குப் பின்னால் இவைகளையெல்லாம் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலையிருக்கிறது என்பது ஒன்று.

ஒரு தனியார் பள்ளியைப்பற்றிய தகவல் ஒன்றை உங்களுக்கு நான் தருகிறேன். விளையாட்டுப் போட்டிகளிலே வெற்றி பெற வேண்டுமென்று சொல்கின்ற ஒரேயொரு காரணத்திற்காக என்ன செய்கிறார்கள் தெரியுமா [அவர்கள் பிள்ளையினுடைய பிறந்த நாளையே மாற்றி மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். உதாரணத்திற்காகச் சொல்கிறேன், ராஜா என்ற சிறுவனுடைய பிறந்த நாளை ஒரு சர்ட்டிபிகேட்டிலே 27—11—1966 என்றும்; இன்னொரு சர்ட்டிபிகேட்டிலே 27-10-65 என்றும் போட்டிருக்கிறார்கள். இப்படி நிறைய வைத்திருக்கிறேன் போட்டோஸ்டேட் காப்பிகள். ஆக, ''பொய் சொல்லலாகாது பாப்பா'' என்று சொல்லிக் கொடுக்கின்றவர்கள் பொய் சொல்வதற்குக் கற்றுக் கொடுத்தால் என்னவாகும் என்பதைத் தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இது மட்டுமல்ல, இப்பொழுது மிக வேதனையான ஒரு செய்தியினை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். வீர வாஞ்சி என்று சொல்லப்படுகின்ற மிகப்பெரும் தியாகியை நீங்கள் அறிவீர்கள். அந்த வீரவாஞ்சியினுடைய பாடம் ஒன்பதாம் வகுப்புத் தமிழ்ப் பாடப் புத்தகத்திலே இடம் பெற்றிருக்கிறது. ஆனால். அந்த வீர வாஞ்சியினுடைய பாடத்தைச் சொல்லிக்கொடுக்க வேண்டாமென்று சொல்லுகின்ற வகையிலே சில பள்ளியிலிருந்து—பாடத் திட்டத்திலேயிருந்து எடுத்திருக்கிறார்கள். பாடப் புத்தகத்திலே அது இருக்கிறது ; ஆனால் பாடத் திட்டத்திலே அது இல்லை. வீர வாஞ்சிநாதனுடைய பெயர் ஒலிக்க வேண்டுமென்பதற்காகத்தான் 'மணியாச்சி' இரயில் நிலையத்திற்குக்கூட 'வாஞ்சி மணியாச்சி' என்று பெயர் சூட்ட வேண்டுமென்று நாங்களெல்லாம் கோரிக்கை விட்டுக்கொண்

டிருக்கின்ற நேரத்தில் அதனைப் பாடத்திட்டத்திலேயிருந்து எடுக்கிறார்கள். அதிலே டாக்டர் இராமலிங்கம் என்பவர் சொல்லியிருக்கிறார் :

வீர வாஞ்சி நாதனின் புரட்சி உள்ளம்—தியாக உள்ளம்
நாட்டுக்காக உயிர் கொடுக்கும் தீர உள்ளம்
நன்றியோடு நினைந்து போற்றத் தக்கது அல்லவா ?

இவ்வாறு எழுதியிருக்கிறார். ஆனால், என்ன நடக்கிறது? நன்றியோடு போற்றி அதனைப் பாதுகாக்காமல் பாடத் திட்டத்திலேயிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது என்பதனை மெத்த வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். ஒரு காலத்திலே பெரியார் அவர்களைப் பற்றிய பாடம் நீக்கப்பட்டதனை மீண்டும் இந்த அரசு கொண்டு வந்ததைப் போல வாஞ்சிநாதன் அவர்களுடைய பெயரிலே இருக்கின்ற அந்தப் பாடத்தை மீண்டும் கொண்டு வர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலத்தான் எஞ்ஜினீயரிங் கல்லூரி, தொழில் கல்லூரி படிப்புகளிலே அதிகமாக கவனத்தை நாம் செலுத்துதல் வேண்டும். அவர்களுக்குப் பரிசுகளெல்லாம் கொடுக்கிறோம். நல்ல திட்டத்தைக் கொண்டு வந்தால், இயந்திரங்களைக் கொண்டு வந்தால், அப்படி நல்ல திட்டங்களைக் கொண்டு வருவதைப்போலவே மேலும் தொழில் கல்விகளைப் பரவலாகச் செய்ய வேண்டுமென்பதற்காக நான் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன்.

பஞ்சாயத்து யூனியன் லெவலிலே சின்னச்சின்ன தொழிற் பயிற்சிக் கூடங்களை ஏற்படுத்தி, கல்விக் கூடங்களை ஏற்படுத்தி, சைக்கிள் ரிப்பேர் செய்வதைப்போன்றது, ரேடியோ ரிப்பேர் செய்வதைப் போன்றது, பம்பு செட்டுகளிலே காயில் போய் விட்டால் அதைச் சுற்றுவது போன்றது, பேக்கரி செய்வதைப் போன்றது, தையல் கலை சொல்லிக் கொடுப்பதைப் போன்றது ஆகிய இப்படிப்பட்டவைகளையெல்லாம் சொல்லிக்கொடுக்கின்ற எளிய கல்விமுறையை ஏற்படுத்தி அவர்கள் அந்தக் கல்வியினைக் கற்று விடுவார்களேயானால் தங்களுடைய வாழ்விலே அதனை ஒரு ஊன்றுகோலாக பயன்படுத்துகின்ற அளவிற்குப் பயன்படும். எனவே, அப்படிப்பட்ட கல்வியை நீங்கள் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலே, தனியார் தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் இருக்கின்றன, 76 கல்லூரிகள் இருக்கின்றன. அந்த 76 கல்விக் கூடங்களிலே 51 கல்விக் கூடங்களுக்கு நீங்கள் மானியம் கொடுக்கிறீர்கள். அந்த 51 கல்விக் கூடங்களுக்கு மானியம்

கொடுப்பதுகூட, படித்துக் கொடுக்கின்றவர்களுக்கு கொடுக்கிறீர்களே தவிர, பிற பணி புரிகின்றவர்களுக்கு அங்கே கொடுப்பதில்லை. எல்லாப் பள்ளிக் கூடங்களுக்கும் அங்கே பணிபுரிகின்ற அனைவருக்கும் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் இன்னும் எட்டே எட்டு இலட்சம் ரூபாய்தான் அதிகம் தேவைப்படுகிறது. அந்த எட்டு இலட்சத்தைக் கொடுத்து அத்தனை பேரும் உங்களுடைய கருணையினாலே நல்வாழ்வு வாழ்கின்றவர்கள் என்று சொல்லுகின்ற நிலையில் நல்லதொரு பெயரைப் பெற வேண்டுமென்று நான் உங்களை அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

பரீட்சையில் மதிப்பெண்கள் போடுவதற்காக அல்லது மார்க் ஷீட் கொடுப்பதற்காக நாம் இப்பொழுதும் கம்ப்யூட்டர் என்ற இயந்திரத்தை வைத்திருக்கிறோம். நான் கையிலே சில குறிப்புகளை வைத்திருக்கிறேன். தியாகராய கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கிற ஒரு மாணவனுடைய மார்க் ஷீட் இது. 5 செமஸ்டர் எழுதியதிலே 4 செமஸ்டரில் கம்ப்யூட்டர் செய்தது தப்பாக இருக்கிறது. அதுவும் பிழையாக இருக்கிறது. பிழையாக இருக்கிற காரணத்தினாலே மீண்டும் ஆசிரியர் திருத்துகிறார். ஆசிரியர் மீண்டும் திருத்துவது மட்டுமல்ல; ஒரு தடவை அந்தப் பிழையான அந்த ரிப்போர்ட்டின் காரணமாக, அவனுக்கு ஹால் டிக்கட் மறுக்கப்பட்டு, ஒரு செமஸ்டர் எழுத முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. தயவுசெய்து அவைகளையெல்லாம் தடுக்க வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் இங்கே ஒரு ஒரு செய்தியினை மிக அழுத்தமாகச் சொல்ல வேண்டும். கல்வியிலே கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அது சிறப்பாக வளர்ந்து வருகிறது என்று சொல்கின்ற புள்ளி விவரத்தை நீங்கள் தந்திருக்கிறீர்கள். ஆனால், அந்தப் புள்ளி விவரம் என்ன சொல்கிறது தெரியுமா? 1977-லே 189 கலலூரிகளாக இருந்தது, இன்று 187 கல்லூரிகளாகக் குறைந்ததாகச் சொல்கிறது. அது வளர்ச்சியையோ விரிவாக்கத்தையோ காட்டவில்லை. எனவே, 1977-லேயிருந்து நீங்கள் எந்தக் கல்லூரிக்கும் அனுமதி கொடுக்கவில்லை. அனுமதி கொடுக்காதது மட்டுமல்ல, இரண்டு கல்லூரி குறைவு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இனிமேல் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு நீங்கள் அனுமதி கொடுப்பது நல்லது. 1977-லிருந்து நீங்கள் கல்லூரிகள் தொடங்குவதற்கு அனுமதி கொடுக்கவிலலை.

உடல் ஊனமுற்றோரைச் சிந்திக்க வேண்டிய ஆண்டு இது. எப்பொழுதும் சிந்திகக வேண்டுமென்று சொன்னாலும், இப்பொழுது சற்று அதிகமாகவே சிந்திகக வேண்டும். அந்த உடல் ஊனமுற்றவர்கள், காது கேளாதவர்கள், கண் தெரியாதவர்கள்

இவர்களுக்கெல்லாம் கல்வி கற்பிக்கும் பொறுப்பு முன்பு கல்வி இலாகாவிடம் இருந்தது. அந்தக் கல்வி இலாகாவில் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டிய 'இன்—ப்ராஸ்ட்ரக்சர்' என்று சொல்வார்களே அதற்குரிய வழிமுறைகளை மட்டுமல்ல, அதற்குரிய கருவிகள் அத்தனையும் இருந்தன. இப்பொழுது அது சோஷியல் வெல்ஃபேர் டிபார்ட்மெண்டுக்குச் சென்றிருக்கிற காரணத்தினாலே பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதனை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலத்தான் இன்று மேல்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள் 10 ஆண்டுக் காலத்திற்குப் பணியாற்றி, தேர்வு நிலை தகுதி பெற்றவர்கள் கூட தலைமை ஆசிரியர்களாக ஆக முடியாத நிலைமையிலே இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிற செய்திகள் நமக்கு வந்திருக்கின்றன. தயவு செய்து அவர்களைப் பார்த்து, நீண்ட காலம் பணி செய்திருக்கிற, சேவை செய்திருக்கிற ஆசிரியர்கள் பாதிக்காத வண்ணம் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

கல்வியைப் பொறுத்த வரையில், புரட்சிகரமான சிந்தனை நமக்கு வேண்டும். ஆரம்பப் பள்ளிக் கூடங்கள் அத்தனையும் ஒருங்கிணைத்து, அதற்கென்று ஒரு தனி டைரக்டர் போடுவது என்பது மிக சாலச் சிறந்த ஒன்றாக இருக்கும். விரிந்து பரந்து கிடக்கின்ற இந்தக் கல்வியினுடைய பல கிளைகளை ஒரே இடத்திலேயிருந்து பார்ப்பது என்பது மிகக் கடினமான காரியம். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையிலே, இந்தக் கல்வித் துறையிலே அதிக அனுபவம் உடையவர்கள். அந்த அனுபவம் உடையவராக இருப்பது மட்டுமல்ல. நேரிடை அனுபவம் இருக்கிற காரணத்தாலே நன்றாகச் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். நன்றாகச் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டாலும் கூட, அவர்களுக்குத் துணை இருக்கிறவர்கள் இன்னும் நன்றாக இருக்க வேண்டும்.

ஆசிரியர்களுடைய உள்ளத்திலே சங்கடங்கள் இருக்கவே கூடாது. அவர்களுடைய உள்ளம் நிறைந்த உள்ளமாக இருத்தல் வேண்டும். படிப்புச் சொல்லுகின்ற ஆசிரியர்கள் உள்ளம் சலனமற்றதாக, சங்கடமற்றதாக, சாந்தி நிறைந்ததாக இருக்கிற நேரத்திலேதான் அவர்கள் குழந்தைகளை நல்ல முறையிலே தயாரிக்க முடியும். உருவாக்க முடியும். எனவே, அவர்களுடைய வேண்டுகோளை நீங்கள் கருணையோடு சரிசெய்து காரியம் ஆற்றித் தர வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

எங்கோ ஓரிடத்தில் மாணவர்கள் போராடினார்கள் என்று சொன்னாலே, நமக்கு மனதுக்கு வருத்தமாக இருந்தது. இந்தக் கல்வி நிலையம் என்று சொல்கின்ற கூரையிலே ஒரு ஓரத்திலே

1981 ஏப்ரல் 23] [திரு. குமரி அனந்தன்]

தீ பற்றுகிறதே என்று சொல்கிறபொழுது நமக்கு கவலை தந்தது. அந்தத் தீ விரைவிலே அணையும் என்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் அந்தத் தீ அணையாமல் அது பரவி, உத்தரத்திற்குக் கூட வருவதைப் போல அந்த ஆசிரியர் மத்தியிலே கூட பரவுகிற சூழ்நிலை வருகிறது என்று சொன்னால் நாமெல்லாம் வேதனைப்பட வேண்டும். எனவே, எங்காவது ஒரு பொறி தோன்றினாலும் போதும், பாரதி சொன்னதைப் போலே, ' அக்கினி குஞ்சு ' தோன்றினாலும் போதும், உடனடியாக அங்கே சென்று நாம் காரியம் ஆற்ற வேண்டும். இன்றிருக்கிற நிலைமை மாற்றி, அவர்களுக்கு உள்ளத்தில் நிம்மதியைக் கொடுக்க வேண்டும்.

கல்வி முறையை மாற்ற வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம், மெக்காலே ஒரு காலத்திலே எழுதினார், பிரிட்டிஷ் இராஜ்யத்திற்கு எழுதினார், ' நான் கல்விமுறை கொண்டு வந்திருக்கிறேன், இந்தியர்களுக்குக் கல்வி முறை கொண்டு வந்திருக்கிறேன். அவன் நிறத்தால், உருவத்தால் இந்தியனாக இருப்பான் ; உள்ளத்தால், சிந்தனையால் அவன் ஆங்கில இராஜ்யத்திற்குத் துணை போகிறவனாக இருப்பான்' என்று சொன்னார். அந்த நிலையினை மாற்ற வேண்டும். இப்பொழுது நாம் என்ன மாற்றியிருக்கிறோம் என்றால், பிரிட்டிஷ் ரூலை மாற்றியிருக்கிறோமே தவிர, பிரிட்டிஷ் ரூல்சை நாம் இன்னும் மாற்றி விடவில்லை. ஆக, பிரிட்டிஷ் போட்ட ரூல்களையும் மாற்றி, இந்தியத் தன்மையிலே, தமிழ் மரபைக் காக்கின்ற வகையிலே இந்த நாட்டுக்குத் தேவையான கல்வியைக் கொடுத்து, நாட்டுக்கு நல்ல பிள்ளைகளைக் கொடுத்து, நாட்டுக்கு நல்ல தலைவர்களைக் கொடுக்கின்ற கல்வித் திட்டத்தை வகுக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கிறவர்கள் இந்தச் செயலிலே வெற்றி பெற வேண்டுமென்றும் வாழ்த்தி, அதற்கான முயற்சிகளிலே இங்கே ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுகின்ற அந்தத் தொகையினை ஒதுக்கீடு செய்வதற்கு காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் ஆதரவு தருகிறது என்று சொல்லி, நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

(பிற்பகல் 1—00)

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 1981—82 ஆம் ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையில் ரூ. 249 கோடி கோரிப் பெறுகிற இந்த மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைப் பேச ஆசைப்படுகிறேன். முந்தைய ஆண்டு 23 விழுக்காட்டில் இருந்து இந்த ஆண்டு 22 விழுக்காடாக குறைந்துதான் இருக்கின்றது என்றும் கல்விக்காக அளிக்கும் சலுகையில் இந்த அரசு பின்வாங்கிவிட்டது என்றும் திராவிட முன்னேற்றக் கழக

உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். முந்தைய ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை 238 கோடி ரூபாய்கள். இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை 249 கோடி ரூபாய்கள். ஆக இடையிலே 11 கோடி ரூபாய்கள் அதிகமாக இருக்கின்றன. எங்களுடைய அரசு அதிக அளவிலே மிகப் பெரிய திட்டங்களைத் தீட்டி நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கின்ற காரணத்தால், நிதி நிலை அறிக்கையிலே அதிகமான தொகை ஒதுக்கி இருக்கிற அந்த வகையிலே 11 கோடி ரூபாய் அதிகப்படுத்தி இருககிறோம்.

அதே போல துவக்கப்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு துவக்கப் பள்ளிகளிலே பெரும்பான்மையாக ஆண் ஆசிரியர்கள் இருக்கின்ற காரணத்தால் 1-லிருந்து 3-வது வரையில் படிக்கின்ற இளம் சிறார்களுக்கு அவர்களால் முறையாக அன்போடு படிப்பு சொல்லித் தரும் நிலையில்லாத காரணத்தால், நம்முடைய அரசு கூடியமட்டும் பெண் ஆசிரியர்களை 1-வதிலிருந்து 3-வது வரையில் நியமிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

இன்றைக்கு துவக்கப்பள்ளி ஆசிரியர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கி இருப்பது வட்டாரத்திலே மிகப் பெரிய மகிழ்ச்சியை உண்டாக்கி இருக்கிறது என்பதை அறிகின்ற வகையிலே இந்த அரசுக்கு பாராட்டு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய சமையல் கூடம் அமைக்கும் திட்டத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய அரசு ஏற்கெனவே செங்கல்பட்டு, தென்னாற்காடு, வடஆர்க்காடு ஆகிய 3 மாவட்டங்களிலும் மிகச் சீரிய முறையிலே அதை செம்மைப் படுத்திக் கொண்டு வந்தாலும், இந்த ஆண்டு தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டத்தில் புதுதாக ஆரம்பிப்பதற்கு ஆவன செய்திருப்பதை வரவேற்கிறேன். என்னுடைய சேலம் மாவட்டத்திலும் இதேபோன்று துவக்குவதற்கு 'கேர்' நிறுவனம் மூலமாக துவக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரை வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சின்னராஜ் அவர்கள் சேலத்துக்கு வர இருக்கின்ற மருத்துவக் கல்லூரியை தர்மபுரிக்குத் தாருங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார். காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலேயும் தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயும், பலமுறை சேலம் மாவட்ட மக்கள் முறையோடு இந்தக் கோரிக்கையை எழுப்பியும், அவர்கள் செய்யாமல் இருந்ததை என்னுடைய இதயத்தெய்வமாம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இதை செய்து முடிக்கின்ற நேரத்தில் அருமை அண்ணன் சின்னராஜ் அவர்கள் தடையாக இருக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய தர்மபுரி மாவட்டம், தென்னார்க்காடு மாவட்டம், திருச்சி மாவட்டம் போன்றவைகளுக்கும்

1981 ஏப்ரல் 23] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

இது பயனுடையதாக அமையும் என்றும், நம்முடைய அரசு தரும் இந்த மருத்துவக்கல்லூரியை சேலத்திலேயே துவக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்குச் சில தனியார் கல்வி நிறுவனங்கள் ஆசிரியர்களையும், மாணவர்களையும் பல்வேறு வகையில் இடற்பாடு செய்து வருகிறார்கள். அவைகளை எல்லாம் போக்கும் வகையில், கடுமையான நடவடிக்கை எடுத்து அதை சீர்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நடமாடும் அறிவியல் கூடங்களை ஆரம்பித்து இருப்பது வரவேற்கத் தகுந்த ஒன்றாகும். கிராமப்புற மக்களுக்கு, கிராமப்புற மாணவர்களுக்கு பயனுடையதாக அமைகின்ற காரணத்தால் இன்னும் அவைகளை அதிகப்படுத்தி பல்வேறு பகுதிகளிலேயும் ஆரம்பிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுகிறேன்.

அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பேசும்போது இந்தியை விருப்பப்பாடமாக தமிழகத்திலே உள்ள பள்ளிகளில் வைக்கவேண்டும் என்று வேண்டுகோளை வைத்தார். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வேன். உலகத்திலேயே மிக தொன்மை வாய்ந்த என்னுடைய அன்னைத் தமிழ் மொழியை இந்தியத் துணைக்கண்டத்தின் முழுமையும் உள்ள பள்ளிகளிலே விருப்பப்பாடமாக வைக்க, தமிழ்நாடு மக்களுடைய வாக்குச் சீட்டுகளைப் பெற்று சட்ட மன்றத்திலே அமர்ந்திருக்கின்ற காங்கிரஸ் உறுப்பினர்கள், மத்திய அரசை வற்புறுத்துவார்களானால், நாங்களும் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் தமிழகத்திலே மாணவர்களின் தரம் குறைந்திருக்கிறது என்ற கருத்தை சொன்னார்கள். தமிழ்நாட்டு மாணவர்கள் ஒழுங்காக உண்மையாக கற்கின்ற வாய்ப்பிருக்குமானால், அகில இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே திறமை உள்ள மாணவர்கள் இங்கேதான் இருப்பார்கள் என்ற கருத்தை இங்கே வைக்க ஆசைப்படுகிறேன்.

மாணவர்களுக்குத் தரப்படும் உதவித் தொகையை அரசு நேரடியாக மாணவர்களுக்கே தந்து விடுகிற காரணத்தால், அவர்கள் பல்வேறு வகைகளில் அந்தப் பணத்தைச் செலவு செய்து விட்டு, கல்லூரிக்கும், கல்லூரி விடுதிக்கும் கட்ட வேண்டிய உணவுத் தொகை, விடுதித் தொகை ஆகியவற்றைக் கட்டாமல், தேர்வு நேரங்களில் தேர்வு எழுத முடியாமல் தவிக்கின்ற நிலைமையேற்படுகிறது. ஆகவே, அந்த உதவித் தொகையை நேரடியாக மாணவர்களுக்குத் தராமல், அந்தக் கல்லூரி நிறுவனத்தின் முதல்வருக்கோ அல்லது விடுதியின் காப்பாளருக்கோ நேரடியாக அனுப்பி, அதை அந்த மாணவர்களின் கணக்கில் வரவு வைத்து [illegible]ண்டு, விடுதித்

தொகை, கல்லூரிக கட்டணம் ஆகியவற்றைக் கழித்துக்கொண்டு மீதமுள்ள தொகையை மாணவர்களுக்குத் தருவதற்குண்டான வழிமுறையை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இளைஞர் நலம் காக்கப்பட வேண்டும் என்பதற்காக விளையாட்டுகளிலும், உடற்பயிற்சிகளிலும் இளைஞர்களை ஊக்குவிப்பதற்காக பல்வேறு திட்டங்கள் தீட்டப்பெற்று இருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இளைஞர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும் ஊக்கம் அளிக்க பல்வேறு திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். ஆங்காங்கு மாவட்டந்தோறும் விளையாட்டு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் ஒரு நீச்சல் குளம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதைப்போலவே ராசிபுரத்தில் ஒரு விளையாட்டு ஸ்டேடியம் அமைக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, வரவேற்று என் உரையை முடிக்கிறேன்.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1981-82ஆம் ஆண்டு கல்வித் துறை மானியக் கோரிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசின் தலையாய கொள்கை 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்றதாகும். அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தோடு, அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை செம்மையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றுவதற்கான வகையில் (இன்டன்சிவ் ஸ்கீம் பார் திரி இயர்ஸ்) மூன்றாண்டு முனைப்புத் திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளித்து, முதற்கண் 1981-82-ல் பத்திரப் பதிவுத் துறை, சீர்திருத்தப் பணித் துறை, தீயணைப்புத் துறை, சிறைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய ஐந்து துறைகளில் அத்திட்டத்தை அரசு செயல்படுத்த ஆணையிட்டுள்ளது என்பதை அறிந்து ந ன் அதை உள்ளபடியே வரவேற்கிறேன். அதற்காக இந்த அரசுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக வரலாறு இருக்கிறது. இந்திய வரலாறு இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு வரலாறு இருக்கிறது. சில புத்தகங்கள் இருக்கின்றன. அந்த வகையில், தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழனுடைய பெருமை, தொன்மை ஆகியவற்றை எடுத்துக்காட்டும் முறையிலே ஆறு தொகுதிகளுடைய தமிழ் நாட்டு வரலாற்று நூல் ஒன்றை உருவாக்கும் பணியில் இந்த அரசு ஈடுபட்டு இருப்பதற்காக இந்த அரசை நான் உளமாறப் பாராட்டுகிறேன்.

1981 ஏப்ரல் 23] [திரு. கே. குப்புசாமி

உலகத்தில் உள்ள தமிழர்களை எல்லாம் ஒன்று சேர்த்து, மதுரை மாநகரத்தில் தமிழர் மாநாடு நடத்தப்பட்டது. அதைப் போலவே, தமிழுக்குச் சங்கம் வளர்த்த மதுரையில் உலகத் தமிழ் சங்கம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்து இருப்பதை நான் வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழ் மொழி வளர வேண்டும் என்கிற அடிப்படையில் தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றை தஞ்சைத் தரணியில் ஏற்படுத்தி, தரணி முழுவதும் தமிழ் வளர முயற்சி எடுத்து இருப்பதையும் பாராட்டி, வரவேற்கிறேன்.

வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஒய்வூதியம் வழங்கு கிற திட்டத்தை நான் வரவேற்கிறேன். தற்போது மாத வருமானம் ரூ. 400-க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழறிஞர் களுக்கு மாதம் ரூ. 250 வீதம் ஒய்வூதியம் தரப்படுகிறது என்றும் இதுவரை 92 அறிஞர்களுக்கு இந்த ஒய்வூதியம் தரப்பட்டுள்ளது என்பதையும் அறிந்து உள்ளபடியே இந்த ஏற்பாட்டைச் செய்த தற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 1-10)

அதோடு முக்கியமான பிரச்னை ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியான ஒட்டன்சத்திரத் தில் தலைசிறந்த ஒரு தமிழ் அறிஞர் இருக்கிறார். அவருடைய பெயர் முருகேச கவிராயர். அவர் இந்த ஒய்வூதியத் திட்டத்தில் மனு போட்டிருக்கிறார். இதுவரை அவருக்கு ஒய்வூதியம் கிடைக்கவில்லை. அந்த தலைசிறந்த தமிழ் அறிஞர் இன்றைக்கு வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார். அந்த தலைசிறந்த தமிழ் அறிஞர் முருகேச கவிராயருக்கு இத்திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, இந்த மானியக் கோரிக்கையில் கூட இந்த aim and object of the school education என்பதில் சொல்லப் பட்டிருக்கிறது. அதில் முக்கியமாக 'to expand the schooling facilities and to achieve hundred percent enrolment of the age group between 6 and 11 and 11 and 14'

என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த கல்வித் துறையிலே உள்ள முக்கியமாகபிரச்சனை, இன்றைக்கு ஆரம்பப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் இல்லை. ஒரு பள்ளியிலே 100 மாணவர்கள் இருந்தால் இப்போது கட்டப்படுகின்ற கட்டிடங் களில் 50 பேர், 75 பேர் இருக்கின்ற வகையில் தான் இப்போது பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு ஊரிலும் மாணவர்களின் சேர்க்கை இன்றைக்கு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. ஆனால் கட்டிடங்கள் மட்டும் முன்பு இருந்த படியே இருக்கின்றன. தேவைக்கு ஏற்ப, மாணவர்களின் சேர்க்கைக்கு ஏற்ப அடிஷனல் பில்டிங் ஆரம்பப் பள்ளிகளுக்கு மேலும் மேலும் கட்டுகின்ற முறையில் கட்டிடங்களைக் கட்ட

வேண்டும். அதே மாதிரி உயர்நிலைப் பள்ளிகளுக்கும் அடிஷனல் பில்டிங்ஸ் கட்டுகின்ற முறையில் முதலிலேயே கட்டிடங்கள் கட்டப் பட வேண்டும். அதற்கு அதிகமான நிதியை அரசு ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியிலே உள்ள ஒடன்பட்டி, மார்கன்பட்டி, ஒட்டன்சத்திரம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆகிய உயர்நிலைப்பள்ளிகளுக்கு கட்டடிங்கள் போதுமான அளவில் இல்லாததால் மாணவர்களும் மாணவியர்களும் கட்டிடத் திற்கு வெளியே, மரத்தடி நிழலில் கல்வி கற்கும் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிகளுக்கு இன்னும் அதிகமான கட்டிடங்களைக் கட்டி இன்னும் அதிகமான மாணவர் கள் சேர்ந்து படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தனியார் பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. அரசு அவைகளுக்கு மானியம் தருகிறது. அங்கே கூட வேலையில் ரிசர்வேஷன் சரியாக பூர்த்தி செய்யப்படுகிறதா என்பதைக் கண் காணிக்க வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்க ளுக்கு 18 சதவீதம் வேலையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல பிற்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீதம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதற்கு உரிய ஆணையும் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் தனியார் நிறுவனங்கள் அரசு மானியத்தைப் பெற்றும் கூட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு உள்ள 18 சதவீதம் பிற்பட்ட வகுப்பினருக்குள்ள 50 சதவீதம் இவைகளை நடைமுறைப்படுத்தவில்லை. அவர்கள் எல்லாம் தங்களுடைய விருப்பம் போல் நியமனங்களை செய்து வருகிறார் கள். இதைக் கருத்திற் கொண்டு, தமிழகம் பூராவும் இருக்கிற அத்தனை தனியார் பள்ளிகளிலும் நியமனங்கள் வரும்போது இந்த விகிதாச்சார முறைப்படி பின்பற்றப்படுகிறதா என்பதை சரியான முறையில் கண்காணித்து, அதிலே அரசு அக்கறை செலுத்தி, அதை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிய உணவுக்காக ஆண்டுதோறும் பணம் ஒதுக்கப்படுகிறது. இந்த ஆண்டு, 1981-82 ஆம் ஆண்டுக்கு 5.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இது எந்த அளவுக்கு, என்ன முறையில் நடைபெறுகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். காரணம், இது மிக உயர்ந்த இலட்சியத்தின் அடிப்படையில் இதை அரசு அறிவித்து, செயல்படுத்துகிறது என்றாலும் ஆங் காங்கே பள்ளிவிவரங்களைப் பார்க்கிறபோது பல இடங்களில் இத்திட்டம் செயல்படவில்லை. ஆசிரியர்களைக் கேட்டால் இதிலே பல பிரச்சினைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு உணவு சமைக்கும் வேலையிலே பாதி நேரம் போய்விடுகிறது. இப்படி இருந்தால் அந்த மாணவர்

களால் எப்படி கல்வி கற்க முடியும்? படிக்கின்ற மாணவன் சமைக்கின்ற வேலையை விட்டு விட்டு, அவன் ஒழுங்காகப் படிப்பதற்குள்ள வாய்ப்பை ஏற்படுத்தவும், இந்த மதிய உணவுத் திட்டம் சரியாக நடைபெறவும் சமைப்பதற்கு என்று தனியாக ஆள் வைத்து, இந்தத் திட்டத்தை நல்ல முறையில் சீர்படுத்தி செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய ஒட்டன்சத்திரம் தொகுதி, வறட்சியால் பாதிக்கப்பட்ட தொகுதி. அங்கே எந்தவிதமான தொழில் கூடமும் இல்லை; கல்லூரி இல்லை, தொழில் பள்ளி இல்லை. ஆகையால் அங்கே ஒரு தொழில் பயிற்சி நிலையம் அல்லது தொழில் நுட்ப கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஓடன்பட்டி, மார்கன்பட்டி போன்ற பல இடங்களில் உயர் நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உயர்நிலைப் பள்ளிகள் பல இருந்தாலும் கல்லூரி ஒன்றும் இல்லை. கல்லூரிக்குப் போக வேண்டுமென்றால் 20 மைல்களுக்கு அப்பால்தான் பழனிக்கு அல்லது திண்டுக்கல்லுக்குப் போக வேண்டும். அங்கேயும் ஆண்களும் பெண்களும் படிக்கக்கூடிய ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது.

ஒட்டன்சத்திரத்தில் தனியார் ஒருவர் கல்லூரி ஏற்படுத்துவதற்காக 40 ஏக்கர் நிலம் தருவதாகச் சொல்கிறார். மேலும் பொருளாதார உதவியும் செய்யத் தயாராக இருக்கிறார். அதைப் பயன்படுத்தி என்னுடைய தொகுதியாகிய ஒட்டன்சத்திரத்தில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கின்ற ஒரு கல்லூரியை ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மிக்கப் பணிவோடு கேட்டு, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்திற்காக ஒதுக்கியுள்ள தொகை 249 கோடியாகும். அதிலே ஊராட்சிப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றின் கட்டிடங்கள் செலவுக்காக ஒதுக்கப்பட்டது 24 கோடி ரூபாய் ஆகும். தமிழ்நாட்டிலே உள்ள மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கை 36,675. அதிலே முதல் நிலைப் பள்ளிகள் 27,648, நடுநிலைப் பள்ளிகள் 5,658, உயர்நிலைப்பள்ளிகள் 3,247. இவற்றிலே மேல்நிலைப் பள்ளிகள் 1,243.

அடுத்து தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையிலே பல இடங்களில் போதிய கட்டிட வசதி இல்லாமல் இருக்கின்றது. ஆகவே அவைகளை எல்லாம் சீராக்கித் தர வேண்டும். அடுத்துத்

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் ஆண்பால் ஆசிரியரும், பெண்பால் ஆசிரியரும் ஒரே இடத்திலே வேலை செய்யவேண்டும் என்ற உத்தரவு இருந்தாலும் கூட அது எல்லா மட்டங்களிலும் நடைமுறைப்படுத்துவதில்லை. ஆகவே அவர்கள் இருவரும் ஒரே இடத்திலே பணிபுரிவதற்குரிய வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 1 முதல் 3-வது வகுப்பு வரை உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு மதிய உணவுக்காக அரசாங்கம் 10 பைசா கொடுக்கின்றது. ஊராட்சி ஒன்றியங்கள் 5 பைசா கொடுக்கின்றது. இது போதாது. மேலும் சமையல் செய்வதற்கு ஒரு ஆயா ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த நிலையிலே கொடுக்கப்படுகின்ற அந்த 15 காசு போதாது. ஆகையால் இதனை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். அடுத்து, கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளுக்கு இலவசப் புத்தகம், சிலேட்டு ஆகியவைகள் கொடுப்பதற்காக 50 இலட்சம் ரூபாய் செலவிடுகினறது நமது அரசு. ஆனால் அந்த சிலேட்டுப் புத்தகங்கள் குறித்த காலத்திலே கொடுக்கப்படுவதில்லை. அதைக் குறித்த காலத்திலே கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

அடுத்து மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகள் 1,243 இருக்கின்றன என்று குறிப்பிடப் பட்டிருக்கின்றது. அதிலே மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 60 இருக்கின்றன. இந்த 60 பள்ளிகளிலேயும் 41,000 மாணவர்கள் படிக்கின்றனர். 43 ஆங்கிலோ உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன. இதிலே 38,000 மாணவர்கள் கல்வி பெறுகிறார்கள். இந்த மாணவர்களுக்கும் கிராமப்புறங்களிலே படிக்கின்ற மாணவர்களுக்கும் அறிவு வளர்ச்சியிலே பெருத்த வேறுபாடுகள் உள்ளன. நகர்ப்புற மாணவர்களுக்கும், கிராமப்புற மாணவர்களுக்கும் கல்வி மற்றும் பொது அறிவு ஆகியவற்றிலே பெருத்த வேறுபாடு இருப்பதன் காரணத்தால் கிராமப்புற மாணவர்களை, என்ஜினியரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவற்றில் சேர்க்கின்றபோது அவர்களுக்கு ஓரளவு குறைந்தது 10 சதவீதம் குறைவாக இருந்தாலும் சேர்த்துக்கொள்ளப்படும் என்ற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து 1—6—1981 முதல் 95,000 ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியுள்ளீர்கள். ஆகவே ஓய்வூதியம் போன்றவற்றையும் மற்றவர்களுக்குக் கொடுப்பதுபோல் இவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்வதோடு, அவர்கள் ஓய்வு பெறுகின்றபோது 10,000 ரூபாய் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஆசிரியர்கள் நலனுக்கென்று தேசிய நிதி என்று 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளுக்காக மொத்தம் 80 படிப்புதவித் தொகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மாணவர்களுக்கு ரூ. 500 தான் கொடுக்கப்படுகின்றது. இந்தத் தொகையை சற்று அதிகப்படுத்திக்கொடுத்தால் மாணவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

அடுத்து மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் அவை மிகவும் பெரிதாக இருந்தால் அவற்றை இரண்டாகப் பிரிக்க வேண்டும். ஆத்தூரில் உள்ள மேல்நிலை உயர் நிலைப் பள்ளியிலே 3,000 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் படிக்கின்றனர். அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியரால் அந்தப் பள்ளியை நிர்வகிக்க முடியவில்லை. ஆகவே அதை பிரித்து இரண்டு பள்ளிக்கூடமாக ஆக்கித் தரவேண்டும். பள்ளிகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து அவற்றிற்கான கட்டிடங்களைக் கட்டித்தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்து மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகளில் முதுநிலைப் பட்டதாரிகளை நியமிக்க வேண்டும். மேலும் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை ரெகுலரைஸ் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அந்தப் பட்டதாரி ஆசிரியர்களை ரெகுலரைஸ் செய்து அவர்களுக்கு சர்வீஸ் ரெஜிஸ்டர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

(பிற்பகல் 1.20)

மொத்தம் உள்ள கல்லூரிகளானது 187 ஆகும். அதிலே சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 110 ம். மதுரை பல்கலைக் கழகம், காமராஜ் பல்கலைக் கழகத்திற்கு 77-ம் என்று உள்ளது

அதுபோலவே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை எடுத்துக்கொண்டால், அந்த பல்கலைக் கழகத்திலே, ஜனவரி மாதமும், பிப்ரவரி மாதமும் போராட்டம் நடந்தது. அப்பொழுது இந்த சட்டமன்றத்திலேயும், மேலவையிலும் அமைச்சர் அவர்கள் 1928-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக சட்டவடிவினை மாற்றப்போகிறோம் என்று கூறினார்கள். ஆனால் இதுநாள் வரையில் நிறைவேற்றப் பெறவில்லை. அப்படி நிறைவேற்றப்பெறாததின் காரணமாக, நிர்வாகத்தினருக்கும் அங்குள்ள ஆசிரியர்கள் மத்தியிலும், பேராசிரியர்கள் மத்தியிலும் சரியான ஒரு கருத்து ஒற்றுமை இல்லாமல் உட்பூசல்கள் இருந்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய வேலைக்கும் உத்தரவாதம் இல்லை. ஆகவே அந்த 1928-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக சட்டத்தினை மாற்றியமைத்துக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சியிலும் கோவையிலும் புதிய பல்கலைக் கழகம் நிறுவப்பெறும் என்பதற்கு மானியக் குழு இசைவைத் தந்துள்ளதாக சொல்லியிருக்கிறார்கள். அது போலவே தஞ்சாவூரிலும் தமிழ்க்கல்லூரி ஒன்று நிறுவப்பெறும் என்று அறிவித்துள்ளீர்கள். தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றை ஆத்தூரிலே, ஐ. டி. ஐ. போன்ற வகையில் நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆத்தூர் அறிஞர் அண்ணா கல்லூரியில, கலைக் கல்லூரி ஏற்படுத்தி 9 ஆண்டுகள் ஆகியும் அதிலே பி.ஏ. வகுப்பு ஒன்று தான் உள்ளது ஆகவே, அதில் பி.எஸ்.சி., பௌதிகம், எம்.ஏ.

பொருளாதாரம், வரலாறு, பி.காம். பட்டப்படிப்புகளை ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏற்படுத்தினால் அந்தப் பகுதியிலே உள்ள மாணவர்களுக்கு அங்கு சென்று எந்தத் துறையிலே வேண்டுமானாலும் படிக்க வசதி ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே பேசிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களில் இருவர் பேசும்போது, சேலத்திலே மருத்துவக் கல்லூரி அமைப்பது முடிவு செய்தது போல பேசினார்கள். அப்படி அமைப்பது பற்றி மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அதை விரைவில் கொண்டு வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். சேலத்திலே ரெயில்வே செஸ் என்று சொல்கிற செஸ்ஸிலே 40 லட்சம் ரூபாய் இருக்கிறது. அந்தப் பணத்தை கொண்டு அங்கே மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தினால் அது சாலச் சிறந்ததாகும். அப்படி ஏற்படுத்துவதற்கான மற்ற சூழ்நிலைகள் இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. ஆகவே, அந்த வகையிலோ, அல்லது வேறு எந்த வகையிலோ, சேலத்திலே மருத்துவக் கல்லூரியை அமைக்க வேண்டும் என்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 1978-ஆம் ஆண்டிலே கூட, சேலத்திலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் 17 பேரும் சேர்ந்து, சேலம் மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி வேண்டும் என்று, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளை விடுத்தோம். அப்போது கல்வியமைச்சர் அவர்கள் கூட சேலத்திலே சட்டக் கல்லூரி அமைப்பது என்பது அவசியமானது என்று கருத்து தெரிவித்திருந்தார். அதை செயல்முறைக்கு கொண்டு வந்து, உடனடியாக சட்டக்கல்லூரி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணம் என்னவென்றால், இப்பொழுது 10 பிளஸ் 2 வகுப்பு படித்தவர்களுக்கு 41 ஆண்டுகால சட்டக் கல்லூரி முறை அமுல்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்களே கூறியுள்ளார். ஆகவே, அந்த முறையிலே சேலத்திலே ஒரு சட்டக் கல்லூரி அமைப்பது சாலச் சிறந்ததாகும். மிக நியாயமான கோரிக்கையாக இருக்கிறது. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கல்லூரிகளிலே இப்பொழுது நடந்து முடிந்த தேர்வுகளின் ரிசல்ட்—கடந்த செமஸ்டர் ரிசல்ட் மிகவும் காலதாமதமாக வந்தது. அப்படி தெரிவித்த முடிவுகள் எல்லோருக்கும், அறிவிக்கப்பெறவில்லை. அப்படி அறிவிக்கப்பெற்றவர்களுக்கும் சரியான மார்க்குகள் கொடுக்கப்பெறவில்லை. முதல்தரமான மார்க்குகள் வாங்கக் கூடிய மாணவன் கூட தேர்வு பெறவில்லை. இதற்குக் காரணம் கம்பியூட்டர்களுடைய தவறேயாகும். இந்தக் குறையை மாற்ற வேண்டும்.

அடுத்தபடியாக பி.ஏ., பி.எஸ்.ஸி. படித்த மாணவர்களில் மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் கடந்த செமஸ்டரில் ஏதாவது ஒரு பாடத்தில் தேர்வு பெறாமல் இருந்தால், அவர்கள் தேர்வு பெறாமல் உள்ள பாடத்தை எழுத முடியாமல் போய்

விடுகிறது. எனவே அவர்களுக்கு ஒரு ஆண்டுக் காலம் வீணாகி விடுகிறது. இதுபோன்று காலத்தை வீணாக்குவதால் அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, செமஸ்டர் தேர்வு முறையை உடனடியாக எல்லா மாணவர்களுக்கும் தேர்வு முடிவை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான ஆத்தூரிலே கீரிப்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, கல்பனூரிலும் ஒரு புதிய உயர்நிலைப் பள்ளி வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தலைவாசல் தொகுதியைச் சேர்ந்த கங்தள்ளியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றையும், வீரகனூரில் மேல்நிலை உயர்நிலைப்பள்ளி ஒன்றும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாமக்கல் ஆண்கள் கலைக் கல்லூரியில் தாவர இயல் துறை பட்டமும், எம்.எஸ்.சி. பட்டமும் 77-ஆம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டும் கூட, இது வரையில் பி.ஜி. பட்ட மேற்படிப்பு படித்த பேராசிரியர் பதவி உருவாக்கப்படவில்லை என்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஆகவே, இது போன்ற பதவிகளை உடனடியாக நியமித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆத்தூர் அறிஞர் அண்ணா கல்லூரிக்கும், நாமக்கல் ஆண்கள் கலைக் கல்லூரிக்கும், விடுதி ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்

* திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று என்னை கடைசியாக பேச அழைத்திருக்கிறீர்கள். இருந்தாலும் ஐந்து நிமிடங்கள்தான் இருக்கின்றன, எனக்கு பத்து நிமிடங்களாவது தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1981—82-ம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கை மீது பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்விக்காக ஆண்டுக்காண்டு நிதி அதிகமாக ஒதுக்கப்பட்டாலும் எங்கள் மாவட்டமாகிய வட ஆற்காடு மாவட்டம் கல்வியில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும் குறிப்பாக என் தொகுதியாகிய திருப்பத்தூர் தொகுதியில் பல உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் இல்லை. பல நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் இல்லை. குறிப்பாக சொல்லவேண்டுமென்றால் ஜோலார்பேட்டை பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு 1974ல் மக்களிடம் வசூல் செய்து ஏறக்குறைய 12,500 ரூபாய் அந்தக் கட்டடத்திற்காக கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை அதற்காக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் நிச்சயமாக இல்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வட ஆற்காடு மாவட்ட பட்டதாரி ஆசிரியர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வந்தபோது அங்கே அந்தப் பள்ளிக்கூடத்தை பார்வையிட்டார்கள். ஆகவே இந்தக் கல்வி ஆண்டிலாவது உடனடியாக

நடவடிக்கை எடுத்து அந்தப் பள்ளிக் கட்டடத்தை முடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், திருப்பத்தூரில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி என்று ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளிக்கு கட்டட வசதி இல்லாத காரணத்தால் அந்தப் பள்ளி நல்லமுறையில் நடைபெற்று வந்தாலும், கட்டட வசதியில்லாத காரணத்தால் அங்கே ஷிப்ட் முறையில் பாடம் சொல்லிக் கொடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையைப் போக்க அரசாங்க மான்யத்தில் இருந்து அந்தப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்தைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. அந்தப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெரும்பாலான ஆசிரியர்கள் ஆண்களாக இருக்கிறார்கள். அது பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக இருப்பதால் அங்குள்ள ஆண் ஆசிரியர்களை மாற்றிவிட்டு பெண் ஆசிரியைகளை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல், எங்கள் திருப்பத்தூர்பகுதியில் எந்தக் கல்லூரியும் இல்லை. தனியார் கல்லூரி ஒன்றுதான் இருக்கிறது. எங்கள் திருப்பத்தூர் பகுதிக்கு ஒரு பெண்கள் கல்லூரி வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த நேரத்தில் நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோது அங்கே ஒரு பெண்கள் கல்லூரி அமைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் பின்னால் அந்த நிலைமை மாற்றப்பட்டிருக்கிறது.

திருப்பத்தூர் பகுதியில் ஏறக்குறைய பத்து மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. பத்து மேல்நிலைப்பள்ளிகள் இருந்தாலும் இரண்டு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள் தான் இருக்கின்றன. பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் படித்துவிட்டு மேல்படிப்பு படிக்கவேண்டுமென்றால் ஏறக்குறைய அறுபது, எழுபது மைல்கள் தூரம் சென்றுதான் படிக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எங்கள் பகுதியில் இருக்கிறவர்களில் பெரும்பாலோர் அரசாங்கக் கொள்கைப்படிக்கான வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள ஏழை எளிய மக்கள் ஆவார்கள். அந்த ஏழை எளிய மக்கள் படிக்க வசதி செய்துதர வேண்டும் என்றுதான் பெண்கள் கல்லூரி அந்தப் பகுதியில் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறார்கள், இந்த அரசு புதிய கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கான திட்டத்தை நிறுத்தி வைத்திருப்பதாக. இருந்தாலும் எங்கள் திருப்பத்தூர் பகுதி பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அரசும், அமைச்சர் அவர்களும் பரிசிலித்து அந்தக் கல்லூரியை ஏற்படுத்தித் தருவதற்கான முயற்சியினை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், எங்கள் பகுதியில் உள்ள பத்து மேல்நிலைப் பள்ளிகளில் ஐந்து பள்ளிகளில்தான் பொறியியல் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

மண்டிரும் மற்றுத் தலைவர்: (திரு. ஜே. சி. டி. பிரபாகரன்): பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

(பிற்பகல் 1-30)

திரு. ப. சுந்தரம்: அந்த பொறியியற் பள்ளியிலே தேர்ச்சி பெற்றவர்களுக்கு மேல் படிப்பிற்காக ஒரு பாலிடெக்னிக் க ஆரம்பிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, கந்தூரி ஊராட்சி ஒன்றியத்திலே வேலை செய்து கொண்டிருந்த பெண் ஆசிரியை ஒருவர் 1970-லே பிரசவ வேதனையால் இறந்து விட்டார்கள். ஆனால், அவருக்கு கொடுக்கவேண்டிய பிராவிடண்ட் பண்டு இதுவரைக்கும் கொடுக்கவில்லை. அவர்கள் குழந்தை இன்றைக்கு அனாதை யாக நிற்கிறது. அந்தக் குழந்தையை வாழ வைக்கவேண்டு மென்று, நான் அமைச்சர் அவர்களிடத்திலே ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். மனுவும் கொடுத்திருக்கிறேன். அதைக் கவனித்து, அந்த ஏழைக் குடும்பம் வாழ வழிவகை செய்ய வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை இந்த நேரததில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இங்கே அரசுக் குறிப்பிலே 1 முதல் 3 வகுப்பிலே உள்ள மாணவர்களுக்கு கரும்பலகையும், நோட்டுப் புத்த கங்களும் கொடுக்கப்படுவதாகவும், அதனால் பல இலட்சக் கணக்கான பேர்கள் பயனடைவதாகவும் சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால், அப்படி கொடுக்கப்படுகின்ற அந்த நோட்டுப் புத்தகங்களும், கரும்பலகைகளும் உரிய நேரத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்றும், அதை சரியான முறையில் கொடுக்க வேண்டிய நேரத்தில் கொடுப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், என்னுடைய ஊராட்சி ஒன்றியத்திலே பல ஆரம்பப் பள்ளிகளுக்கும், பல நடுநிலைப் பள்ளிகளுக்கும் கட்டிடம் இல்லாமல் இருக்கின்றது. அந்த ஊராட்சி ஒன்றியம் 7 ஊராட்சி மன்றங்களைக் கொண்ட ஊராட்சி ஒன்றியமாக இருக்கின்ற காரணத்தினால், பல கிராமங்களிலே ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டிடம் இல்லாமல் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஆண்டியப்பனூர் என்ற ஊரில் ஆரம்பப் பள்ளிக்கும், அதே போல் கேப்பாண்டுப்பட்டியில் நடுநிலைப் பள்ளிக்கும் நீண்ட நாட்களாக கட்டிடம் இல்லாமல், அங்கே மரத்தடியில் வகுப்புகள் நடததுகின்ற நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, அதைப் போக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், அங்கே கட்டிடங்கள் கட்டித் தர வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல்தான், கலசப்பாக்கம் தொகுதியில் நார்த் தாம்பூண்டி, கலசப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள பள்ளி

களுக்கு கட்டிடம் இல்லாமல், அங்கே படிப்பதற்கு வசதியில்லாமல், மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும், அங்கே கட்டிடங்கள் கட்டித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இங்கே குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், சென்னையிலே சட்டக் கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரி எத்தனை நாட்கள் நடைபெறுகின்றது என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்கள் அவர்கள் வீட்டிலேயே தங்கி படித்து, பரீட்சை எழுதுகின்ற நிலைமை இருக்கிறதே தவிர, வேறு வழியில்லை. ஆகவே, அந்தச் சட்டக் கல்லூரி எத்தனை நாட்கள் நடைபெறுகின்றது என்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, கவனித்து, அந்தக் கல்லூரி நல்ல முறையில் நடப்பதற்கான வழிவகைகளைச் செய்து தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல்தான், எங்கள் திருப்பத்தூர் பகுதியில் இருக்கின்ற நகராட்சிப் பள்ளியை அரசினர் உயர்நிலைப் பள்ளியாக மாற்றி, அந்தப் பள்ளியிலே வேலை செய்கின்ற ஆசிரியர்களை, இன்றைய தினம் 'சி' பிரிவிலே இருந்தவர்கள், 'ஏ' 'பி' பிரிவுகளிலே மாற்றுகின்ற நிலைமை இருக்கிறது. ஆனால், அவர்களுடைய பணிக் காலம் நிர்ணயிக்கும்போது, இணைக்கப்படுகின்ற நேரத்திலிருந்து இல்லாமல், அவர்கள் எந்தக் காலத்திலே பணியிலே சேர்ந்தார்களோ, அந்தப் பணிக் காலத்திலே இருந்து, அவர்களுடைய சர்வீஸை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப்போல், என்னுடைய தொகுதியிலே பல இடங்களில் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் இல்லாமல் இருக்கிறது; அந்தக் கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டும். அதேபோல் கல்லூரி ஏற்படுத்த வேண்டும்; அதேபோல் அங்கே பாலிடெக்னிக் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஜே. சி. டி. பிரபாகரன்): பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. நாளை 24-4-1981ம் தேதி காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிறபகல் 1.35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும். ஆணைகளும்.

எதுமில்லை

ஆ. அறிக்கைகள்: அறிவிப்புகள். ஏனைய தாள்கள்.

159. கோரிக்கை எண். 17 — தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. 1981-82 (தமிழ் ஆங்கிலம்)

160. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி பற்றிய செயல்முறைத் திட்டம், 1981-82 (ஆங்கிலம்).

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 1

[808 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

I தோற்றுவாய்

கல்விச் செலவும் மாநில வரவு–செலவுத் திட்டமும்

கல்விக்காக 1981–82 ஆம் ஆண்டில் ''மானியக் கோரிக்கை 17—கல்வி''—ன் கீழ் ஒதுக்கியுள்ள ரூ.249 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,138 கோடியில் 22 விழுக்காடாகும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1981–82 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு:—

	1981–82 வரவு–செலவு மதிப்பீடு		
	திட்டமில்லாத செலவினம்.	திட்டச் செலவினம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்,)		
259. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்பு செலவு ..	44	..	44
277. கல்வி—			
1. தொடக்கக் கல்வி	1,15,73	2,51	1,18,24
2. உயர்நிலைப் பள்ளிக் கல்வி	64,63	2,07	66,70
3. மேல்நிலைப் பள்ளிக் கல்வி	12.17	7,68	19,85
4. கல்லூரிக் கல்வி ..	24.45	88	25,33
5. சிறப்புக் கல்வி— முதியோர் கல்வி, தமிழ் வளர்ச்சி முதலியவை ..	76	1,69	2,45
6. விளையாட்டு மற்றும் இளைஞர் நலன், தேசிய மாணவர் படை	1,86	1,18	3,04

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 23]

1981—1982 வரவு-செலவு மதிப்பீடு.

(1)	திட்டமில்லாத செலவினம். (2)	திட்டச் செலவினம். (3)	மொத்தம். (4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
277. கல்வி—தொடர்ச்சி.			
7. தொழில் நுட்பக் கல்வி	817	1,64	9,81
	2,27,77	17,65	2,45,42
மொத்தம் 277. கல்வி—	அல்லது 2,27,78		அல்லது 2.45.43
278. கலை, பண்பாடு	34	30	54
தொல்பொருள் ஆய்வு ..	16	17	33
ஆவணக்காப்பகமும் அருங் காட்சியகங்களும்	37	5	42
பொது நூலகங்கள் ..	1,44	17	1,61
	2.32	69	3,00
288. சமூகப் பாதுகாப்பும் நலனும்	14	..	14
பல்வகை	2	..	2
மொத்த ''மானியக் கோரிக்கை 27—கல்வி''	2,30,99	18,34	2,49.03

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், முதலியவற்றிற்காக பிற மானியக் கோரிக்கைகளின் கீழ் 1981-82-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு:

(1)	திட்டத்தின் கீழ் வராத செலவு. (2)	திட்டச் செலவு. (3)	மொத்தம். (4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		

பொதுக்கல்வி.

(அ) வருவாய்க் கணக்கில் செலவு—

''மானியக் கோரிக்கை 28—சமுதாய வளர்ச்சிப்

(1)	திட்டத்தின் கீழ் வராத செலவு. (2)	திட்டச் செலவு (3)	மொத்தம் (4)
பொதுக் கல்வி—தொடர்ச்சி.			
(அ) வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.			
	(ரூபாய் இலட்சத்தில்.)		
பணிகள்—ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள்	..	7.55	7.50
நகராட்சி உயர்நிலைப்பள்ளி கட்டிட மானியம்	..	25	25
சமூகக்கல்வி		8	8
கோரிக்கை 37—பொதுப் பணி—அரசுப் பள்ளி. கல்லூரிக் கட்டிடங்கள்	3	9	12
266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஒய்வு ஊதியம் ..	8,98	..	8,98
(ஆ) வருவாய் கணக்கின் கீழ் வராத செலவு—			
459. அலுவலகக் கட்டடங்கள்	..	1	1
477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற் கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல் லூரிகள் முதலியவற்றுக் கான கட்டிடங்கள்	5	6,26	6,31
கடன்கள்—			
677. தேசியக் கடன் படிப்பு தவித் தொகைகள்	..	45	45
தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன்கள் ..	..	10	10
தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள்	7	..	7
767 தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கடன்கள்	1	..	1
மொத்தம்	9,14	14,74	23,84

1981 ஏப்ரல் 23]

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1981—82-ல் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 273 கோடியாகும்.

4. (1) ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதிதிராவிடர், பழங்குடி வகுப்பினர்,) பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவுகளும் சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள், ஊன முற்றோருக்கான பள்ளிகள் போன்றவற்றிற்கான செலவுகளும் மேற்படி செலவினங்களின் கீழ் வாரா. இந்த இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ. 42 கோடியாகும்.

(2) மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்கு, அந்தந்தத் துறைகளின் கீழ் தனித்தனியாக ஒதுக்கியுள்ள நிதி மொத்தம் சுமார் ரூ. 17 கோடி மேற்கண்ட இனங்களுக்கு ஆகும் செலவையும் (ரூ. 42 கோடி, யும் ரூ. 17 கோடியும்) கணக்கில் கொண்டால், 1981—82 கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 332 கோடியாக இருக்கும்,

1981—82-ல் கல்விப் பணிகளுக்கான திட்ட நிதி ஒதுக்கீடு:

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி; 477. கல்வி மூலதனச் செலவு; 677. கடன் (முதலியன) கல்விக்காக 1981-82-ம் ஆண்டில் திட்டப் பணிகளின் செலவு விவரம் வருமாறு (கூட்டல் குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்):—

	1981—82ல் பொறுப்பேற்ற செலவினம்.	1981—82ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள்.	மொத்தம்
(1)	(2)	(3)	(4)
			(ரூபாய்இலட்சத்தில்.)
பொதுக் கல்வி.			
1 பள்ளிக் கல்வி ..	12,04	3,97	16,01
(மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட)	+2		+2
2 முதியோர் கல்வி ..	75	7	82
	+75		+75
8 கல்லூரிக் கல்வி ..	97	47	1,44
	+48		+48

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

	1981—82-ல்		
	பொறுப்பேற்ற செலவினம்.	புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள்.	மொத்தம்.
	(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
4. விளையாட்டும் இளைஞர் நலனும்.	73 +28	33	1,06 +28
5 தமிழ் வளர்ச்சி	8	5	13
6 கட்டட வகையில் பொதுப் பணித்துறைச் செலவு ..	95	..	95
	15,52 +153	4,89	20.41 +153
தொழில் நுட்பக் கல்வி	1,75 +9	43	2,18 +9
கலைப் பணிகள் ..	72	28	1,00
	17,99	5,60	23,59
பெருமொத்தம்	+1,62		+1,62

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

II. பள்ளிக் கல்வி.

(i) பொது.

1981–82 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 249 கோடியில் பள்ளிக் கல்விக்கு (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூ. 207 கோடியாகும். 1980 அக்டோபர் 1-ம் தேதி அன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டில் மொத்தம் 36,675 பள்ளிகள் இருந்தன. அவற்றில் முதல்நிலைப் பள்ளிகள் 27,548; நடு நிலைப் பள்ளிகள் 5,658; உயர்நிலைப் பள்ளிகள் 3,247 (1,243 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட) மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 122 பள்ளிகளும் (65 உயர்நிலைப் பள்ளிகளும், 57 மேல்நிலைப் பள்ளிகளும்) மொத்தப் பள்ளிகள் எண்ணிக்கை யாகிய 36,975-ல் அடங்கும். அனைத்துப் பள்ளிகளிலும் பணி செய்து வந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 2.62 இலட்சம். பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை 91.28 இலட்சம். நிருவாக வாரியான விவரங்களை இணைப்பில் காணலாம்.

2. 1981—82 ஆம் ஆண்டில் (6—11 மற்றும் 11—14 வயதுத் தொகுதிகளுக்காக) 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகளும், (நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து) 250 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகளும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 500 தமிழாசிரியர் பதவிகளும், மற்றும் 200 பி.எட்., தர தலைமை ஆசிரியர் பதவிகளும்; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 பி.எட்., தர பதவிகளும் ஏற்படுத்தப்படும். நடுநிலைப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 25, முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும்.

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்:

3. பள்ளிகளில் உள்ள வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் மக்கள் முயற்சியையும் ஆர்வத்தையும் தூண்டும் வகையில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் அத்திட்ட தொடக்க காலம் முதல் 1980 டிசம்பர் முடிய 615 நடந்துள்ளன. அவற்றில் பொது மக்களிட மிருந்து ரூ. 19.23 கோடி மதிப்புள்ள பொருள்கள் பெறப் பட்டுள்ளன. இதில் 1980–81-ல் (31—12—1980 முடிய) பெற்றது ரூ. 3.70 கோடி. பொதுமக்களின் நன்கொடையைக் கொண்டு 1980 டிசம்பர் வரை சுமார் 41 இலட்சம் மாணவ) களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 1980—81-ல் 31 – 12 – 1980 வரை பயன் பெற்றவர்கள் 49,000 பேர்.

கல்வித்துறை நிருவாகம்:

4. தற்பொழுது தலைமைக் கல்வி அலுவலர்கள் 16: மாவட்டக் கல்வி அலுவலர்கள் 51; பெண்கள் பள்ளி ஆய்வாளர்கள் 10; பள்ளித் துணை ஆய்வாளர்கள் 463 பள்ளித் துணை ஆய்வாளர் சரகங்களின் பொறுப்பில் 411

பேர்களும், இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூட உந்து வண்டிகள் பொறுப்பு போன்றவற்றில் மீதம் உள்ளவர்களும்) உள்ளனர். 1981-82 ஆம் ஆண்டில் பெண்கள் பள்ளி ஆய்வாளர் பதவிகள் மேலும் இரண்டு புதிதாக ஏற்படுத்தப்படும். பள்ளிகளோடு நல்ல தொடர்பு வைத்துக் கொள்ளும் வகையில் இத்துறை தமிழகக் கல்வி என்னும் காலாண்டு இதழை வெளியிட்டு வருகிறது.

(ii). தொடக்கக் கல்வி.

மாணவர் சேர்க்கை:

1. வகுப்புகள் 1—5-க்குரிய 6—11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 95.22 விழுக்காட்டினரும், வகுப்புகள் 6—8-க்குரிய 11—14 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 61.42 விழுக்காட்டினரும், இதுவரை (1980—81) பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விரு வயதுத் தொகுதிகளின்கீழ் 1979—80 ஆம் ஆண்டில் 1.72 இலட்சம் மாணவ மாணவியரும், 1980—81 ஆம் ஆண்டில் 1.93 இலட்சம் பேரும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1980—81 ஆம் ஆண்டில் இருந்த 36,675 தொடக்கப் பள்ளிகளில் முதல் நிலைப் பள்ளிகள் (1—5 வகுப்புகள்) 27,648 நடுநிலைப் பள்ளிகள் (1—8 அல்லது 6—8 வகுப்புகள்) 5.658. படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 69.11 இலட்சமாகும். வேலை பார்த்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,80,587 ஆகும். ஒட்டு மொத்தமான ஆசிரியர், மாணவர் விகிதம் 1:38 ஆகும்.

2. தொடக்கப் பள்ளியில் சேரும் (6—11 வயது) மாணவ மாணவியர் தொடர்ந்து 5-ஆவது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியிலிருந்து நின்று விடும் நிலைமை அண்மை ஆண்டுகளில் சீர்பட்டு வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. அவ்வாறு நின்றுவிடுவோர் விழுக்காடு 1973-74 ஆம் ஆண்டில் 51 விழுக்காடு ஆக இருந்தது 1979—80-ல் 33 விழுக்காடு ஆகக் குறைந்துள்ளது. தொடக்கப் பள்ளி நண்பகல் உணவுத் திட்டம், இலவசமாகப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்கும் திட்டம் போன்றவை மாணவ மாணவியர் பள்ளியை விட்டு இடையில் நின்று விடாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டுமென்பதையும் நோக்கமாகக் கொண்டவை. இவற்றோடு 1977-78 முதல் இம்மாநிலத்தில் 1-3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்பிற்கனுப்பும் முறை செயல்படுத்தப்படுகிறது.

நண்பகல் உணவுத் திட்டம்:

3. முதல்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1-8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 20.25 இலட்சம் மாணவர்கள் நண்பகல் உணவு பெறுகின்றனர். ஆதிதிராவிடர் நலத்துறையும் பிற்பட்டோர் நலத்துறையும் நடத்தி வரும் பள்ளிகளில் பயிலும் சுமார் 1.65 இலட்சம் மாணவரும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர்.

மைய சமையற் கூடப் பகுதிகளில் 4 இலட்சம் பேரும் பிற பகுதிகளில் மீதியுள்ளவர்களும் மதிய உணவு பெறுகின்றனர். 1981—82 ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ ரூ 5.55 கோடி செலவிடப்படும்—மைய சமையற்கூட கட்டடங்களுக்கும், கிடங்குக் கட்டடங்களுக்குமான ரூ.22 இலட்சம் உட்பட.

4. மைய சமையற் கூடங்கள் இல்லாத பகுதிகளைப் பொறுத்த வரையில் மதிய உணவு மானியம் அந்தந்தத் தொடக்கப் பள்ளிக்கே நேரடியாகக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு மாநில அரசு ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 10 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மானியம் அளிக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 5 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டும் என்று உள்ளது. (1—10—1979 முதல் அந்த 5 காசு பங்குத் தொகையை உள்ளாட்சி மன்றங்கள் கட்டாயம் உள்ளாட்சி மன்றப் பள்ளிகள் அல்லாத பிற பள்ளிகளுக்கும் கொடுத்தாக வேண்டும் என்றும், இதற்காக ஆகும் செலவை ஏற்பளிக்கப்பட்டதாகக் கருதி தொடக்கப் பள்ளிக் கல்விக்கான அரசு மானியம் பெறும்பொழுது கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்றும் ஆணையிடப் பட்டுள்ளது.) இவ்வாறு பெறும் 15 காசு மானியத்தோடு 'கேர்' நிறுவனத்திலிருந்து இலவசமாக ஆண்டுதோறும் கிட்டும் சுமார் 20,000 டன் உணவையும் தொடக்கப் பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் பயன்படுத்துகிறது. ஓர் ஆண்டுக்கு மதிய உணவு அளிக்கப்படும் 200 நாட்களில், 100 நாட்களுக்குத் தேவைப்படும் தானியமும், 200 நாட்களுக்குமே தேவைப்படும் எண்ணெயும் ''கேர்'' இலவச உணவு மூலம் பெறப்படுகிறது. மீதி 100 நாட்களுக்கான தானியச் செலவுக்கும், 200 நாட்களுக்குமே ஆகும் மசாலா சாமான்கள், விறகுச் செலவு முதலியவற்றிற்கும் அரசு மானியமாகவும், உள்ளாட்சி மன்றப் பங்குத் தொகையாகவும் பெறப்படும், ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு 15 காசு, என்ற தொகை பயன்படுத்தப்படுகிறது.

5. மைய சமையற்கூடத் திட்டம், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. மைய சமையற்கூடங்களில் சமைத்த உணவு சுற்றுப் புறங்களிலுள்ள பள்ளிகளுக்கு சிக்கனமான முறையில், பெரும்பாலும் வண்டிகள் சைக்கிள்கள் மூலமும் இன்றியமையாத அளவுக்கு மட்டும் உந்து வண்டிகளின் மூலமும் எடுத்துச் சென்று வழங்கப்படுகிறது. இம்மாவட்டங்களில் இயங்கி வரும் 97 சமையற்கூடங்களும் 'கேர்' நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். அவையும் பிற பகுதிகளைப் போல கேர் இலவச உணவு பெறுகின்றன. இம் மாவட்டங்களில் சுமார் 4 இலட்சம் மாணவர்கட்கு அவை பகல் உணவு வழங்கி வருகின்றன. மைய சமையற்கூடங்களுக்கான முழுச் செலவும் நேரடியாக அரசுப் பணத்திலிருந்து செலவாவதால், இம்மாவட்டங்களில் 5 காசு உள்ளாட்சி மன்றப் பங்குத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்தப்படுகிறது.

6. மொத்தம் ரூ.144 இலட்சம் செலவில், தருமபுரி மாவட்டத்தில் (99,000 மாணவர்களுக்குப் பயனளிக்கத்தக்க) 16 மைய சமையற்கூடங்களும்; இராமநாதபுரம் மாவட்டத்தில் (1,76,000 மாணவர்களுக்குப் பயனளிக்கத்தக்க) 32 மைய சமையற்கூடங்களும் ஏற்படுத்துவதற்காக, அச்செலவில் 45 விழுக்காட்டை கேர் நிறுவனத்திடமிருந்து நிதி உதவியாகப் பெற அனுமதி கோரி 1969–80-ல் மைய அரசின் சமுதாய நல அமைச்சகத்துக்கு எழுதப்பட்டது. எனினும் 1979–80-ல் 5 சமையற்கூடங்களுக்கு மட்டுமே 'கேர்' உதவி பெற மைய அரசு அனுமதித்தது. அந்த 5 சமையற்கூடங்களும் இராமநாதபுரம் மாவட்டத்தில் கட்டப்பட்டு வருகின்றன. 1980–81-ல் இவ்வகையில் இம்மாநிலத்துக்கு 'கேர்' நிதி உதவி எதுவும் ஒதுக்கப்படவில்லை. 1981-82 ஆம் ஆண்டுக்கான திட்டத்தின்கீழ் மேலும் சமையற்கூடங்கள் அமைப்பதற்கான 'கேர்' நிதி உதவியை இம்மாநிலத்திற்கு ஒதுக்கிடுமாறு இவ்வரசு மைய அரசை வேண்டியுள்ளது. அவ்வுதவி கிடைத்தால் 1981–82-ல் தருமபுரி மாவட்டத்தில் மைய சமையற்கூடங்கள் தொடங்கப்படும்.

7. நண்பகல் உணவுத் திட்டத்தை மேலும் நன்முறையில் நிர்வகிப்பதற்காக ஏற்கெனவே இருந்த 2 கணப்பணி அதிகாரிகளோடு மேலும் 9 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர், 'கேர்' உணவைச் சேமித்து வைப்பதற்காக சென்னையில் ஒன்றும் தூத்துக்குடியில் ஒன்றுமாக இரண்டு கிடங்குகளை 'கேர்' பண உதவியுடன் கட்டுவதற்காக, 1981-82-ல் ரூ 17 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இலவச புத்தங்கள் கற்பலகைகள் வழங்குதல்:

8. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், இரண்டு மூன்று வகுப்புகளில் பாடப் புத்தங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 13 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர். 1972–73 ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் தருவதற்கு ஆகும் செலவினைத் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகிறது. இதற்காக அந்நிறுவனம் இப்பொழுது ஆண்டுதோறும் ரூ.50 இலட்சம் செலவிடுகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்கு சிலேட்டுகள் இலவசமாக வழங்கும் வகையில் ஆண்டுதோறும் அரசு சுமார் ரூ.6 இலட்சம் செலவிடுகிறது.

அறிவியல் கல்வி:

9. தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் போதனையை மேம்படுத்தும் பொருட்டு, அறிவியல் கருவிகளும் பயிற்றுவிப்பு உபகரணங்களும் வாங்குவதற்காக ஒவ்வொரு முதல் நிலைப் பள்ளிக்கும் முன்னூறு ரூபாய், ஒவ்வொரு நடுநிலைப் பள்ளிக்கும் ஆயிரம் ரூபாய் வீதம் இதுவரை 12,620 முதல் நிலைப் பள்ளிகளுக்கும், 4,200 நடுநிலைப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

1981 ஏப்ரல் 23]

1981—82ல் மேலும் 200 நடுநிலைப் பள்ளிகளுக்கு மொத்தம் ரூ. 7.50 இலட்சம் அறிவியல் கருவி மானியமாக வழங்கப்படும். ஒவ்வொரு நடுநிலைப் பள்ளிக்குமான மானியத் தொகை ரூ. 3,750 ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படும். பள்ளி நிர்வாகத்தினர் பணத்திலிருந்து அல்லது பெற்றோர்—ஆசிரியர் சங்கப் பணத்திலிருந்து மற்றொரு ரூ. 3,750 இவ்வகையில் செலவிட வேண்டும்.

10. தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் கற்பிக்கும்பொழுது சுற்றுச் சூழலையும் ஆங்காங்குள்ள வசதிகளையும் பயன்படுத்துவது குறித்து ஆசிரியர்களுக்கு உதவுவதற்கான கையேடுகள் ''யூனிசெப்'' உதவியுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

11. தொடக்கப் பள்ளி மாணவர்களிடையே உடல் நலக் கல்வி புகட்டுவதற்கான ''கேர்'' நிறுவன உதவி பெற்ற திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள்:

12. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதற் பொருட்டு உள்ளாட்சி நிறுவனங்கட்கும் தனியார் பள்ளிகட்கும் மானியம் வழங்கப்படுகிறது. 1974—75 லிருந்து தொடக்கப் பள்ளி கட்டிட மானியம் ரூ. 10,000/17,000 ஆகவும் நிர்வாகத்தினர் தர வேண்டிய குறைந்தபட்ச பங்குத் தொகை ரூ. 5,000/8,000 ஆகவும் உள்ளன. 1981—82ல் தனியார் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டிட மானியம் தர ரூ. 3 இலட்சமும் நகராட்சி தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டிட மானியம் தர ரூ. 24 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 750 இலட்சம் சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு தொடக்கப் பள்ளி கட்டிடங்களுக்கு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 23 இலட்சமாகும்.

உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்:

13. தமிழ்நாட்டிலுள்ள 33,306 தொடக்கப் பள்ளிகளுள் ஏறத்தாழ 29,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ளன. அந்த 29,000 பள்ளிகளில் 23,312 பள்ளிகளை (20,199 முதல்நிலைப் பள்ளிகளும், 3,113 நடுநிலைப் பள்ளிகளும்) ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தி வருகின்றன. தொடக்கக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்கட்கு மானியம் வழங்குவதற்கான திருத்திய முறைப்படி (ஒரு ரூபாய் நிலவரிக்கு 45 காசு என்று வசூலிக்கப்படும்) உள்ளூர் வரியில் 4/9 பாகம் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்கு வழங்கப்படுகிறது. 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள மக்கள் தொகைக்கு தலைக்கு ரூ. 6 வீதம் கணக்கிட்டு வழங்கும் மானியமும், ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்குச் செல்கின்றது. தொடக்கக் கல்விக்காக ஆகும் செலவில் எஞ்சியதை வட்டார வகைப்பாட்டிற்கு ஏற்ப, அரசும் ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து ஏற்கின்றன.

14. தொடக்கப் பள்ளிகள் 1492-ஐ (1,094 முதல்நிலைப் பள்ளிகளும், 398 நடுநிலைப் பள்ளிகளும்) நகராட்சிகளும், சென்னை, மதுரை மாநகராட்சிகளும் நடத்தி வருகின்றன. நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன், அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மதுரை மாநகராட்சி ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கில் துண்டு விழும் முழுத் தொகையினையும் அரசே ஈடு செய்து வருகின்றது.

(iii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி.

1. 1980-81ல் தமிழ்நாட்டில் 14-16 வயதுத் தொகுதியினர் 16.87 இலட்சம் பேர்கள் 40 விழுக்காடாகிய 6.73 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9—10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1980-81-ல் மொத்தம் இருந்த உயர்நிலைப் பள்ளிகள் 3'247. அவற்றில் 1,243 பள்ளிகளில் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளும் இருந்தன. இந்த 3,247 பள்ளிகளுக்கு மேலாக மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 122 பள்ளிகளும் (உயர்நிலைப் பள்ளிகள் 65-ம் மேல்நிலைப் பள்ளிகள் 57-ம்) இருந்தன. இவ்வனைத்துப் பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளிகளில் 4.58 இலட்சம் பேரும், உயர்நிலைப் பள்ளிகளில் 7.59 லட்சம் பேரும் ஆக மொத்தம் 22.17 லட்சம் பேர்கள் பயின்று வந்தனர். அந்த 22.17 லட்சம் பேர்களுள் 8-ம் வகுப்பிலும் கீழ் வகுப்புகளிலும் 12.78 லட்சம் பேர்களும், 9—10 வகுப்புகளில் 6.73 லட்சம் பேர்களும், மேல்நிலைப் பள்ளி இரண்டாண்டு வகுப்புகளிலும் 2.66 லட்சம் பேர்களும் பயின்று வந்தனர்.

2. 1980-81 இல் அரசுப் பள்ளிகள் 74, நகராட்சிப் பள்ளிகள் 2, தனியார் பள்ளிகள் 34, (அவற்றுள் சிறுபான்மையினர் பள்ளிகள் 27) ஆக மொத்தம் 110 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன.

அறிவியல் கல்வி :

3. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் 1980-81 முடிய 1018 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பள்ளிக்கு ரூ. 8,000 வீதம் அறிவியல் தளவாடங்களை மொத்தமாக பள்ளிக் கல்வி இயக்குநரே வாங்கி அனுப்பி வைக்கிறார்: 1980—81 லிருந்து அரசு உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை இத்திட்டத்தின் கீழ் ஆய்வுக்கூட கட்டட வகையில் பள்ளிக்கு ரூ. 80,000 செலவிடப்படுகிறது. உள்ளாட்சி மன்ற மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகள் கட்டடச் செலவில் 60 சதவிகிதம் அல்லது ரூ. 48,000, இதில் எது குறைவோ அது, என்ற அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் ஆய்வுக் கூடக் கட்டிட மானியம் பெறுகின்றன. 1981-82-ல் மேலும் 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம் அமைக்கப்படும்.

1981 ஏப்ரல் 23]

4. இதுவரை அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர் நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் கல்வி மாவட்டங்கள் 42-ல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி செயல்பட்டு வருகிறது. மேலும் நான்கு வண்டிகள் வாங்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. 1981–82-ல் மேற்கொண்டு 5 வண்டிகள் வாங்கப்படும்.

5. மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை வளர்ப்பதற்கான மாநில அறிவியல் கண்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 59-ல் அறிவியல் பயிற்றுவிக்கும் வசதிகள் யூனிசெப் உதவியுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிலும் ஆய்வுக்கூட மற்றும் தொழிற்கூட உதவியாளர் பதவி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6. உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன் பொருத்தமான நூலக புத்தகங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ. 11 இலட்சம் இதற்குச் செலவிடப்பட்டது. 1981–82 ல் இப் பணிக்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒலி–ஒளிக் கல்வி:

7. பெரும்பாலான பள்ளிகள் சுய முயற்சியின் மூலம் அல்லது வட்டார மக்களின் முயற்சியின் மூலம் வானொலிப் பெட்டிகளைப் பெற்றுள்ளதனால் அவை வானொலி கல்வி ஒலிபரப்பின் மூலம் பயன்பெறுகின்றன. மீதியுள்ள பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்கிட இயலும் வகையில் 4,000 வானொலிப் பெட்டிகளை இலவசமாகத் தர யூனிசெப் இசைந்துள்ளது. 750 உயர்நிலைப் பள்ளிகளில் 16 மி.மீ. திரைப்படம் காட்டும் கருவிகளும், 1,300 பள்ளிகளில் துண்டுப்படம் காட்டும் கருவிகளும் உள்ளன. அந்தந்தப் பள்ளிகளில் ஒலி–ஒளிக் கல்விக்கென மாணவர்களிடம் வசூலிக்கும் சிறப்புக் கட்டணத் தொகையைக் கொண்டு ஒலி-ஒளிக் கருவிகள் வாங்கலாம். விலை உயர்ந்தனவும் மிகப் பயனுள்ளவையுமான திரைப்படங்களை அத்தொகையிலிருந்து வாங்க இயலாதாகையால் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் உள்ள 'மாநில திரைப்படச் சுருள் சேமிப்பகம்' பள்ளிகளுக்கு திரைப்படங்களையும் துண்டுப் படங்களையும் கடனாக வழங்கி வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் அந்தச் சேமிப்பு நிலையத்தை வலுப்படுத்த கல்வித் திரைப்படங்களுடன் துண்டுப் படங்களும் ரூ. 1.50 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன. 1981—82 இல் இவ்வகையில் மேலும் ரூ. 50,000 செலவிடப்படும்.

8. சென்னையிலும் அதன் அண்மையிலும் உள்ள பள்ளிகள் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் கல்வி ஒளிபரப்பின் மூலம் பயனடைகின்றன. பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் உள்ள ''தொழில் நுட்ப வளர்ச்சியைக் கல்விப் பணிக்குப் பயன்படுத்துவதற்கான அமைப்பு'' பள்ளிகள் ரேடியோ மற்றும் தொலைக்காட்சி வசதிகளை கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்த உதவும் வகையில் ஆசிரியர்களுக்குப் பல பயிற்சிகளை நடத்தி வருகிறது.

சென்னை நிலைய ஒளிபரப்புப் பகுதியில் உள்ள பள்ளிகள் தம் மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் ரூ. 2 வசூலித்து தொலைக் காட்சிப் பெட்டிகள் வாங்கவும் பராமரிக்கவும் பயன்படுத்திக் கொள்ள அரசு ஏற்கெனவே அனுமதித்துள்ளது. கிராமப்புறங் களிலுள்ள 32 தொடக்கப்பள்ளிகளில் 1979—80லும், 1980-81-லும் தொலைக் காட்சிப் பெட்டிகள் அரசின் செலவில் வாங்கி அமைக் கப்பட்டன. 1981—82-ல் மேலும் 20 பள்ளிகளில் தொலைக் காட்சி பெட்டிகள் அமைக்க ரூ. 1 இலட்சம் செலவிடப்படும்,

உயர்நிலைப்பள்ளிக் கட்டடங்கள்:

9. நகராட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிட மானியம் தர 1981—82-ல் ரூ. 40 இலட்சம் ஒதுக்கப்பட் டுள்ளது— நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களுக்காக "மானியக் கோரிக்கை-28"ன் கீழ் ஒதுக்கியுள்ள ரூ. 25 இலட்சம் உட்பட அரசு உயர்நிலைப் பள்ளிகளின் கட்டிடப் பணிகளுக் காக 1981—82ல் ரூ. 98 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள் ளது (முன் ஆண்டுகளில் ஏற்பளித்த பணிகளுக்கு 1981—82ல் ஆகும் செலவுக்காக ரூ. 58 இலட்சமும், புதிய கட்டிட வேலை களுக்காக ரூ. 40 இலட்சமும்).

படிப்புச் சலுகைகளும், படிப்பு உதவித் தொகைகளும் :

10. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி எல்லா நிலைகளிலும் இல வசமாகும். கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களும், கல்வியில் சிறந்து விளங்குகிறவர்களுமான மாணவர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டுக்கு நான்கு மாணவர்கள் வீதம் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு முறை உதவித் தொகை பெற்ற மாணவர் பள்ளிக் கல்வியை (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையைப் பெறுவார். இது தவிர பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், ஆதிதிராவிடர் பழங்குடியினர், அரசியல் தியாகிகள் ஆகியோரது குழந்தைகளுக்கு தாராளமாகக் கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் மற்றும் பிற்பட்ட வகுப்பினர்களைச் சார்ந்த மாணவர்களுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறையும், பிற்பட் டோர் நலத்துறையும் படிப்புதவித் தொகைகளும் வேறு பல கல்விச் சலுகைகளும் வழங்கி வருகின்றன.

நடமாடும் மருத்துவ வண்டிகள்:

11. சென்னை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உயர் நிலைப் பள்ளி மாணவர்களின் மருத்துவ சோதனைக்கென நட மாடும் மருத்துவ வண்டிகள் இயங்கிவருகின்றன.

1981 ஏப்ரல் 23]

உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களை ஊக்குவித்தல்:

12. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களைச் சார்ந்த மாணவர்கள் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு 1981—82 ஆம் ஆண்டில் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 8, 9, 10 வகுப்புகளில் பயிலும் அம்மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் மொத்தம் $1\frac{1}{2}$ மணிநேரம் உரிய ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. இந்த முன்னோடித் திட்டத்துக்காக 1981—82 ஆம் ஆண்டு ரூ. 12.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்:

13. ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய மாணவர்களிடம் 1978—79 ஆம் ஆண்டிலிருந்து கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. அம்மாணவர்களின் பெற்றோர்களுடைய வருமானம் எவ்வளவாக இருந்தாலும் இச்சலுகை உண்டு (அப்பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்தியரல்லாத பிற மாணவர்கள் அக்கட்டணம் செலுத்த வேண்டும்) இச்சலுகையால் ஆங்கிலோ இந்தியப் பள்ளி நிருவாகங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட மானியம் தரப்படுகிறது. தற்பொழுதுள்ள 43 ஆங்கிலோ இந்திய உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் 38,000 மாணவர்கள் பயிலுகின்றனர்.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள்:

14. தமிழ்நாட்டில் 60 மெட்ரிக்குலேசன் பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயிலுவோர் 41,000 மாணவர்கள். இவை மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கின்றன. பாடமொழி ஆங்கிலமாகும். இவை அரசு மானியம் பெறுவதில்லை. மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக்காகத் தனி ஆயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(IV) பள்ளிப் பாடங்கள் பாடத்திட்டம் பள்ளிப் பாடநூல்கள்:

1972—73-லிருந்து 1976—77-க்குள் படிப்படியாக 10 ஆண்டுப் பள்ளிப் படிப்புக்கான புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. கல்வி வல்லுநர்களைக் கலந்து பல்வேறு பாடங்களில் அப்புதிய பாடத்திட்டத்தின் கீழ் உள்ள அதிகப்படி சுமை 1978—79 முதல் அனைத்து வகுப்புகளிலும் குறைக்கப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் 1,3 6, வகுப்புகளுக்கான கணித பாட புத்தகங்களின் புதிய வடிவங்கள் வெளியிடப்பட்டன. 4—6 வகுப்புகளுக்கு "நீதிக் கதைகளும்" வெளியிடப்பட்டன. இனிவரும் ஆண்டுகளில் பின்வரும் அட்டவணைப்படி பல்வேறு வகுப்புகளுக்கான பல்வேறு பாடங்களுக்கான புத்தகங்களின் புதிய வடிவங்களைத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தயாரித்து வெளியிட இருக்கிறது:—

பாடப்புத்தகங்களின் புதிய வடிவங்கள் அமுலுக்குவர இருக்கும் வகுப்புகள்.

ஆண்டு.	கணிதம்.	புவியியல்.	அறிவியல்.	வரலாறு.
(1)	(2)	(3)	(4)	(5)
1981–82 ..	4, 7, 9	4, 6	3, 4, 6	3, 4, 6
1982–83 ..	5, 8, 10	5, 7, 9	5, 7, 9	5, 7, 9
1983–84 ..	..	8, 10	8, 10	8, 10
1984–85 ..	..	..	..	..

ஆண்டு.	ஆங்கிலம்.	தமிழ்.	ஆங்கில துணைப் பாடம்.	தமிழ் துணைப் பாடம்.	தமிழ் இலக்கணம்.
(1)	(6)	(7)	(8)	(9)	(10)
1981–82 ..	3	1,3	..	9	..
1982–83 ..	4, 6	4,6	6	6	
1983–84 ..	5, 7,9	5, 7, 9	7, 9	7	9
1984–85 ..	8, 10	8, 10	8	8	8, 10

2. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாட நூல்கள் மொத்த விற்பனையாளர்களாக உள்ள 51 கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்படு கின்றன.

3. தமிழ்நாட்டுக்கு மைய அரசு (ஆண்டுக்கு சுமார் 5,000 டன் வீதம்) ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக் கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் வேலையையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே செய்துவருகிறது. 1979 அக்டோபர் முதல் 1980 ஆகஸ்டு முடியவுள்ள காலத்தில் மொத்தம் ரூ. 2.31 கோடி மதிப்புள்ள மலிவு விலைநோட்டுப் புத்தகங்கள் தயாரித்து விற்கப்பட்டன.

(V) ஆசிரியர் பயிற்சி.

இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்திட, இம்மாநிலத்தில் தற்போது 79 ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் உள்ளன (இளஞ்சிறார் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நான்கு, ஆங்கிலோ-இந்திய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று, லேடி விலிங்டன் மற்றும் புனித கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் கல்லூரிக்கு ஒன்றாக உள்ள செகண்டரி கிரேடு பயிற்சி வகுப்புகள் இரண்டு ஆகியவை உட்பட) கடந்த பல ஆண்டுகளாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடையே வேலை

யில்லாத் திண்டாட்டம் பெருமளவில் நிலவி வருவதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஒரு ஆண்டு விட்டு மறு ஆண்டு தான் மாண வர்கள் அதுவும் குறைந்த எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். கடைசியாக 1979—80-ல் மாணவர்கள் சேர்க்கப் பட்டார்கள். மீண்டும் 1981-82—ல் மாணவர்கள் சேர்க்கப்படுவர்.

2. பள்ளி ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி கற்பிப்பதில் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஏற்கனவே இருந்தவை ஒன்பதும், 1981 சனவரியில் புதிதாகத் தொடங்கிய ஒன்றும் சேர்ந்து ஆக மொத்தம் பத்து ஆகும். இவ 1980—81-ல் 6—8 மற்றும் 9—10 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத் தரும் ஆசிரியர்கள் 3,900 பேருக்கு மூன்று வார அல்லது நான்கு வாரப் பயிற்சிகள் அளித் தன.

VI தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம்.

பள்ளிக் கல்வி இயக்குநரே தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் இயக்குநரும் ஆவார். இந்நிறுவனம் மேல்நிலைப் பள்ளிக் கல்வி நிலைவரை கல்வியாராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றைக் கவனித்து வருகிறது.

2. தொடக்கக் கல்வியைச் சார்ந்தவையும், யுனிசெப் உதவி பெற்றுவருவனவுமான பின்வரும் சோதனைத் திட்டங்களை இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது:—

(1) ''தொடக்கக் கல்விப் பாடத்திட்டத்தைப் புதுப்பிக்கும் திட்டம்.''

(2) ''சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்விவளர்ச்சி.''

(3) தொடக்கக் கல்வி வாய்ப்புகளை பரவலாக்குதல், 1980—81-லிருந்து முதல் திட்டம், மேலும் நூறு தொடக்கப் பள்ளிகளுக்கும் இரண்டாவது திட்டம், மேலும் மூன்று மையங் களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

3. ''மக்கள் தொகைக் கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதி'' (UNFPA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு 1980 ஏப்ரல் முதல் 1983 மார்ச் முடியவுள்ள மூன்றாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியைச் செயல் படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளித்துள்ளது. மாநில அரசும் தன் பணத்திலிருந்து இத்திட்டத்திற்காக அம்மூன்றாண்டுக் காலத்தில் ரூ 3 இலட்சம் அளவில் செலவிடும். தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனமே இத்திட்டத்திற்கு பொறுப்பு வகிக்கிறது.

LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS

4. 1—3 வகுப்புகளில் பயிற்றுவிக்கும் 15,000 இளநிலை (ஹையர்கிரேடு) ஆசிரியர்களுக்கு இந்நிறுவனம் 300 சிறப்பு மறு பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. பின்வரும் முக்கியமான திட்டங்களையும் இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது:— அதாவது (1) இளநிலை ஆசிரியர்களுக்கான ''அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப்'' பாடமுறைப் பயிற்சியை நடத்துதல், (2) மைசூரிலுள்ள ''இந்திய மொழிகளுக்கான மைய அரசு நிறுவன'' உதவியுடன் அயல்நாடுகளில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் பயிற்றுவிப்பதற்கான பாடமுறைகளை உருவாக்குவதற்கான திட்டம்; ஆகியவற்றையும் இந்நிறுவனம் கவனித்து வருகிறது.

5. மைசூரில் உள்ள இந்திய மொழிகளுக்கான மைய அரசு நிறுவன உதவியுடன் இந்நிறுவனம் 1979–80, 1980–81 ஆண்டுகளில் முறையே 8, 9-ம் வகுப்புத் தமிழ் ஆசிரியர்களுக்கு அஞ்சல் பாட வகுப்புகளை நடத்தியது. 1981–82ஆம் ஆண்டில் இத்திட்டம் 10 ஆம் வகுப்புத் தமிழ் ஆசிரியர்களுக்கு விரிவாக்கப் படும்.

6. சென்னை, மதுரை, காரைக்குடி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஆசிரியர்களுக்கான ''தொடர் கல்வி மையங்கள்'' நன்கு நடைபெறுகின்றன. அவை ஆசிரியர்களுக்கு ஆலோசனை தருகின்றன. ஆண்டுக்கு 4,800 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப் படுகிறது. இவற்றை நடத்தும் செலவில் பாதியை தேசிய கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனமும் பாதியை மாநில அரசும் ஏற்கின்றன. இத்தகைய மையங்கள் மேலும் நான்கை நிறுவுவதற்கான கருத்துரு உள்ளது.

7. பிரிட்டிஷ் கவுன்சிலின் உதவியுடன் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இந்நிறுவனம் நடத்திவரும் ஆசிரியர் நிலையங்களில் ஆசிரியர்கள் கல்விப் பிரச்சினைகள் குறித்து அவ்வப்போது கருத்தரங்குகள், பயிற்சி முகாம்கள் முதலியன நடத்தி தங்கள் திறனை வளர்த்துக் கொள்கின்றனர்.

VIII பள்ளி ஆசிரியகர்ள் ஆசியரல்லாத பணியாளர் நலன் :

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் சுமார் 95,000 பேர்களும் 1—6—1981 முதல் அரசுப் பணியாளர்களாக ஆவார்கள் என்றும் அரசு ஊழியர்களுக்குரிய அனைத்துச் சலுகைகளும் அவர்களுக்கு அந்தத் தேதி முதல் கிட்டும் என்றும் அரசு ஆணை வெளியிட்டு உள்ளது. இது பற்றி மேலும் விரிவான விளக்கங்கள் விரைவில் வெளியிடப்படும்.

2. இடைநிலை (செகண்டரி கிரேடு) தகுதி பெற்ற இளநிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்களை அத்தகுதி பெற்றபின் அடுத்த செப்டம்பர் 1-ம் தேதி முதல் உடனுக்குடன் (யாதொரு தனி ஆணையுமின்றி) இடைநிலைக்கு உயர்த்தி இடைநிலைச் சம்பளம் தரவேண்டும் என்ற நிலையான அரசாணை ஒன்று 1979 ஏப்ரலில்

1981 ஏப்ரல் 23]

வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள இளநிலை ஆசிரியர்களும், இடைநிலைத் தகுதிபெற்று இடைநிலைச் சம்பளம் பெற வகை செய்து தமிழ்நாட்டு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் 5 மாத் அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பாடமுறை ஒன்றை நடத்தி வருகிறது. படிப்படியாக இளநிலை ஆசிரியர்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவர்.

தனியார் பள்ளிகள்.

3. 1973 ஆம் ஆண்டு இயற்றிய தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டமும், அச்சட்டத்தின் கீழ் வகுத்த விதிகளும் 1—12—1974 முதல் அமுலுக்கு வந்தன. அந்தச் சட்டத்தையும் விதிகளையும் எதிர்த்து சிறுபான்மையினர் கல்வி நிலையங்கள் பல உயர்நீதி மன்றத்தில் ரிட்மனு தொடுத்தன. அச்சட்டத்தின் பல பிரிவுகளும் விதிகளில் பலவும் சிறுபான்மை யினர் கல்வி நிலையங்களுக்கு பொருந்தமாட்டா என உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. இதன் மேல் இவ்வரசு டெல்லி உச்ச நீதிமன்றத்தில் செய்துள்ள மேல் முறையீடுகள் மீது விரைவில் தீர்ப்பளிக்கப்படும் எனக் கருதப்படுகிறது.

4. சிறுபான்மையினர் அல்லாத பிற தனியார் பள்ளிகள் எல்லாம் தங்கள் பணியாளர்களை வேலை வாய்ப்பகங்கள் மூலமாகத்தான் தேர்ந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பதவிகளில் 18 விழுக்காடு பதவிகளை ஆதி திராவிடர் மற்றும் மலை ஜாதியினருக்கும், 50 விழுக்காடு பதவிகளை பிற்பட்டோ ருக்கும் ஒதுக்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

5. தனியார் பள்ளி ஆசிரியர்களும், அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் விடுப்பு நலன்கள் அனைத்தையும் பெறத் தகுதியுடையவர்களாவார். அரசுப் பணியாளர்கள் ஏற்கெனவே பெற்று வந்த பின்வரும் சலுகைகளும் அண்மையில் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப் பட்டுள்ளன:—

(அ) அரசு நிதியிலிருந்து பின்வரும் முன்பணங்களைத் தருதல் :

(1) விழா முன்பணம்.

(2) கைத்தறி/காதி துணி வாங்க முன் பணம்.

(3) சைக்கிள் வாங்குவதற்கான முன் பணம்.

(ஆ) சி, டி பிரிவின் கீழ் வரும் ஆசிரியர்களும் கண்ணாடி தேவைப்படுபவர்கள் தங்கள் பணிக் காலத்தில் ஒரு முறை கண்ணாடி வாங்கும் செலவை ரூ. 40-க்கு மேற்படாமல் அரசுப் பணத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் சலுகை.

தனியார் பள்ளி ஆசிரியர்களில் சி, டி பிரிவுகளைச் சார்ந்தவர்களுள் தேவைப்படுபவர்களுக்கு காது ஒலி வழங்கும் கருவிகளை இலவசமாக வழங்கும் சலுகை 1981-82-ல் விரிவாக்கப்படும்.

6. ஆசிரியர்களுக்கான தேசிய நலநிதியின் பண வசதியைப் பயன்படுத்தி தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வசதி தருவதற்கான திட்டம் ஆய்வில் உள்ளது.

ஓய்வூதியம்.

7. மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் தாராள ஓய்வூதிய விதிகள் தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் பணியாற்றி 1–6–1970 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிகளிலிருந்து 1-4-1972 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு உள்ளன. அவர்கள் ஓய்வூதியம், பணிக்கொடை முதலியவற்றை அரசுப் பணியாளர்களையொப்ப பெறுகின்றனர். ஓய்வுபெற்ற பிறகு ஓய்வூதியம் பெறுவதற்கான இறுதி ஆணை பிறப்பிக்கப்படுவதில் ஏற்படும் காலத்தாழ்வினால் அல்லலுறாமலிருக்க தற்காலிக ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை பெறவும் (அரசு ஊழியர்களைப் போலவே இவர்களுக்கும்) வழி செய்யப்பட்டுள்ளது. 1—4—1972-க்கு முன் தனியார் பள்ளிகளிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் ஓய்வூதியச் சலுகையை விரிவாக்க அரசு முடிவு செய்துள்ளது.

8. பணியிலிருக்கும் போது ஒருவர் இறந்து விட்டால் அவரது குடும்பத்திற்கு ரூ. 10,000 வழங்குவதற்கான "குழு ஈட்டுறுதித் திட்டம்" தனியார் மற்றும் உள்ளாட்சிமன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துவதாகும்.

ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி.

9. ஆசிரியர்களும் அவர்கள் குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும்பொழுது இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படுகிறது. ஆசிரியர் நாளன்று 1980–81-ல் கொடிகள் விற்பதன் மூலம் 1980 டிசம்பர் வரை வசூல் ஆன தொகை ரூ.430 இலட்சம் ஆகும். இப்பொழுது கையிருப்பில் உள்ள தொகை ரூ. 50 இலட்சம் ஆகும். 1980–81-ல் இந்த நிதி பணத்திலிருந்து ஆசிரியர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் உதவித் தொகையாக மொத்தம் ரூ. 44,000 வழங்கப்பட்டது.

10. 1977–78-லிருந்து ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு தொழிற்படிப்பு படிக்க படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. பணியிலுள்ள ஓய்வுபெற்ற, மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இப்படிப்புதவித் தொகைகள் கிட்டும். பொறி

1981 ஏப்ரல் 23]

யியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளுக்கு மொத்தம் ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகள் புதிதாக அளிக்கப்படுகின்றன. இப்படிப்புதவித் தொகையின் மதிப்பு ஆண்டுக்கு ரூ. 500 ஆகும்.

ஆசிரியர்களுக்கான மாநில விருதுகள்.

11. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் உள்ள உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும் ஆண்டு தோறும் மாநில அரசு விருதுகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. விருது பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளிப்பதக்கமும் ஒரு சான்றிதழும் ரொக்கப்பணம் ரூ. 500-ம அளிக்கப்படுகின்றன. ஆண்டு தோறும் மாநில முழுவதுமுள்ள ஆங்கிலோ-இந்தியப் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், மெட்ரிகுலேசன் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும் விருது வழங்கவும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

III மேல்நிலைப் பள்ளிக் கல்வி.

மேல்நிலைப் பள்ளிக் கல்வி (10+2+3 ஆண்டு முறைக் கல்வியின் +2 நிலை) தமிழ்நாட்டில் 1978-79 முதல் தொடங்கப் பட்டது. இரண்டாண்டு மேல்நிலைப்பள்ளிப் படிப்பின் முதலாண்டு வகுப்பு 1978-79-லும், இரண்டாமாண்டு வகுப்பு 1979-80-ல் தொடங்கப்பட்டன.

பின்வரும் விவரப்படி 1980-81-ல், 1,243 மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வந்தன:—

பள்ளி வகை.	மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட ஆண்டு.			மொத் தம்.
	1978-79	1979-80	1980.	
(1)	(2)	(3)	(4)	(5)
எஸ்.எஸ்.எல்.சி. ..	870	152	150	1,172
ஆங்கிலோ-இந்தியன்	24	2	..	26
மெட்ரிகுலேசன் ..	18	7	6	32
தொழில்நுட்பப் பள்ளி	..	14	..	14
	912	175	156	1,243

(மைய அரசின் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 57 மேல்நிலைப் பள்ளிகளின் மேல்நிலைப்பள்ளி வகுப்பு களில் 8,000 மாணவர்கள் பயின்று வந்தனர். மேற்கண்ட 1,243 பள்ளிகள் என்ற எண்ணிக்கையில் இந்த 57 பள்ளிகள் சேர்க்கப்பட

வில்லை) 1980–81-ல் இந்த 1,243 மேல்நிலைப் பள்ளி வகுப்பு களில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு இருந்தது :—

	மாணவர்.	மாணவியர்	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
முதலாண்டு வகுப்பு ..	88,577	49,815	1,38,392
இரண்டாம் ஆண்டு வகுப்பு	75,190	44,006	1,19,196
மொத்தம்			2,57,588

கூடுதல் பணியாளர்கள்.

3. 1978–79-ல் மேல்நிலைப் பள்ளிகளில் கலை, அறிவியல் பாடங்களைக் கற்றுத் தருவதற்கான ஆசிரியர் தேவையில் பெரும்பகுதி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை (முழுத் தகுதி பெற்றவர்களும் பெறாதவர்களும்) மேல்நிலைப் பள்ளிகளில் நியமித்து பூர்த்தி செய்யப்பட்டது. மேற்கொண்டு தேவையாய் இருந்த அப்பாட ஆசிரியர்கள் தேவையை பூர்த்தி செய்ய அவ்வாண்டில் 1,300 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப் பட்டன. மேல்நிலைப் பள்ளிகளுக்கான கூடுதல் ஆசிரியர் பதவிகள் 1979–80-ல் 2,490-ம், 1980–81-ல் 2,100-ம் ஏற்படுத்தப்பட்டன. 1980–81-ல் உடற்பயிற்சி இயக்குநர் பதவிகள் 200 ஏற்படுத்தப் பட்டன. 400 மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்கனவே ஆய்வுக்கூட உதவியாளர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1981–82-ல் மேலும் 500 ஆய்வுக்கூட உதவியாளர் பதவிகள் ஏற்படுத்தப்படும்.

4. கடந்த மூன்று ஆண்டுகளில் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு மொத்தம் ரூ.28 இலட்சம் செலவில் பணியிருப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. அதில் ரூ.18 இலட்சத்தை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் ஏற்றுக்கொண்டது. 1981–82-லும் இவ்வகையில் பாடநூல் நிறுவனம் உதவும்.

மேல்நிலைப் பள்லிகளில் தொழிற்பாடங்களு.

5. மொத்தம் 944 மேல்நிலைப் பள்ளிகளில் 1980–81-ம் ஆண்டில் தொழிற் பாடங்கள் கற்றுத்தரப்பட்டன. சில டள்ளி களில் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற்பாடங்கள் இருந்தன. மொத்தம் 1,510 தொழிற்பாடங்கள் கற்றுத்தரப்பட்டன.

1981 ஏப்ரல் 23]

மேல்நிலைப்பள்ளிகளில் 1980-81-ல் பயின்று வந்த 2,58 இலட்சம் மாணவர்களில் 22 விழுக்காடு அதாவது 57,093பேர்கள் பின்வரும் விவரப்படி தொழிற்பாடங்களை பயின்று வந்தனர்:—

தொழிற் பாடம் எந்தப் பெரும் பிரிவைச் சார்ந்தது என்பது.	மேல்நிலைப் பள்ளிகளில் 1980—81-ல் பயின்ற மாணவ—மாணவிவர் எண்ணிக்கை. முதலாண்டு.		
	மாணவர்.	மாணவியர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1. வேளாண்மை ..	2,829	27	2,856
2. மனையியல் ..	20	1,552	1,572
3. வாணிகத்துறை ..	10,482	5,533	16,015
4. பொறியியலும் தொழில் நுட்பவியலும் ..	9,113	44	9,157
5. உடல்நலம் ..	170	2,153	2,323
6. பலவகை ..	16	39	55
மொத்தம்.	22,630	9,348	31,978

தொழிற்பாடம் எந்தப் பெரும் பிரிவைச் சார்ந்தது என்பது.	மேல்நிலைப் பள்ளிகளில் 1980—81-ல் பயின்ற மாணவ—மாணவியர் எண்ணிக்கை. இரண்டாம் ஆண்டு.		
	மாணவர்.	மாணவியர்.	மொத்தம்.
(6)	(5)	(6)	(7)
1. வேளாண்மை ..	2,201	27	2,228
2. மனையியல் ..	9	1,605	1,614
3. வாணிகத்துறை ..	8,239	4,339	12,578
4. பொறியியலும் தொழில் நுட்பவியலும் ..	6,232	42	6,274

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொழிற்பாடம் எந்தப் பெரும் பிரிவைச் சார்ந்தது என்பது.	மேல்நிலைப் பள்ளிகளில 1980-81-ல் பயின்ற மாணவ-மாணவியர் எண்ணிக்கை. இரண்டாம் ஆண்டு.		
	மாணவர்.	மாணவியர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
5. உடல்நலம் ..	152	2,181	2,333
6. பலவகை ..	23	65	88
மொத்தம் ..	16,856	8,259	25,115

6. மேல்நிலைப் பள்ளித் தொழிற்பாடங்களுக்கான ஆசிரியர் தேவையில் ஒரு பகுதி, முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுனைப் பாடங்களைக் கற்பித்து வந்த ஆசிரியர்களை மாற்று வதன் மூலம் நிறைவேற்றப்பட்டது. மேற்கொண்டு தேவைக்கு மாதம் ரூ. 150 ஊதியத்தில் 4.324 பகுதி நேர தொழிற் பாட ஆசிரியர்களை நியமிக்க ஆணையிடப்பட்டது. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலை செய்பவர்களில் பொருத்த மானவர்கள் இருக்குமிடங்களில் அவர்களும், பிற இடங்களில் வெளி நபர்களும் பகுதி நேர தொழிற்பாட ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

7. "படிக்கும் போதே பணம் ஈட்ட வகை செய்தல்" என்ற கொள்கை அடிப்படையில் உருவாக்கப்பட்ட தொழிற்பாட மானிட்டர்கள் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளி யிலும் ஒவ்வொரு தொழிற்பாடத்திற்கும் முதலாண்டு வகுப்புக்கு ஒருவரும் இரண்டாவது ஆண்டு வகுப்புக்கு ஒருவரும் ஆக இருவர் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு ஆளுக்கு மாதம் ரூ. 20 வீதம் 10 மாதங்களுக்கு ஊதியம் தரப்படுகிறது.

8. தொழிற்பாடங்களைக் கற்றுத்தர தேவையான தளவா டங்களை வாங்க ஒவ்வொரு அரசு/அரசு அல்லாத மேல்நிலைப் பள்ளிக்கும் ரூ. 5,000/2500 வீதம் செலவுக்கு/மானியத்துக்கு அரசு ஏற்பளித்து வருகிறது. கூடுதலாக தேவைப்படும் பணத்தை பள்ளிகள் தங்கள் வசதிக் கட்டண நிதியிலிருந்தும் சிறப்புக் கட்டண நிதியிலிருந்தும் எடுத்துச் செலவு செய்து கொள்ளலாம்.

கட்டடங்களும் தளவாடங்களும் :

9. 1978-79, 1979-30 ஆண்டுகளில் தொடங்கிய 477 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பறையும் ஒரு ஆய்வுக்கூடமும் கட்ட மொத்தத்தில் பெருந்தொகையாகிய ரூ. 8

1981 ஏப்ரல் 23]

கோடிக்கு மேல் அரசு ஏற்பளித்துள்ளது. 400 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மற்றவையும் விரைவில் கட்டி முடிக்கப்படும். 1980-81-ல் தொடங்கிய அரசு மேல்நிலைப் பள்ளிகள் 86-க்கும் மொத்தம் ரூ 1.93 கோடி செலவில் கட்டடம் கட்டித்தர 1981—82-ல் ஏற்பளிக்கப்பட்டு அவ்வாண்டு அவ்வகையில் செலவு ரூ. 1.45 கோடி அளவில் செய்யப்படும்.

10. இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்துக்கும் தேவையான ஆய்வுக்கூட தளவாடங்களுக்காக மொத்தம் ரூ. 5 கோடி செலவுக்கு அரசு ஏற்பளித்துள்ளது. சிறு தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு அரசு நிறுவனமான ''தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்'' (சிட்கோ) மூலமாக இந்தத் தளவாடங்கள் வாங்கப்படுகின்றன.

11. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சிமன்ற மேல்நிலைப்பள்ளி கட்டிடங்கள் கட்டவும், தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. 1 இலட்சம் என்ற வரம்புக்குட்பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் மானிய உதவிக்கு சுமார் 310 அரசல்லாத மேல்நிலைப் பள்ளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 1981—82-ல் இத்திட்டத்தின்கீழ் மேலும் பல பள்ளிகள் பயன்பெறும்.

12, கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக் கூட வசதிகளை மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யும் நோக்குடன் ''கல்லூரி இணையங்களும்'', ''பாலிடெக்னிக் இணையங்களும்'' இயன்ற இடங்களில் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நூலக வசதிகள் :

13. மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியைப் பெருக்க 1979—80, 1980-81 ஆண்டுகளில் மொத்தம் ரூ. 43 இலட்சம் செலவுக்கு ஏற்பளிக்கப்பட்டது. அரசு மேல்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 6.000 செலவுக்கும் அரசல்லாத மேல்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் (ரூ. 2.400 என்னும் வரம்புக்குட்பட்டு) 40 சதவீதம் இணை மானியத்துக்கும் ஏற்பளிக்கப்பட்டது. பள்ளிகள் தரமான புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கவும் விரைவில் அவற்றை வாங்கவும் உதவி செய்யும் வகையில் இத்திட்டத்தின்கீழ் வாங்கக்கூடிய பொருத்தமான புத்தகங்களின் பட்டியல் ஒன்று வல்லுநர் குழு ஒன்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டு பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

IV. அரசுத் தேர்வுகள்.

1975 பிப்ரவரியில் அமைக்கப்பட்ட அரசுத் தேர்வுத்துறையானது முக்கியமான இரண்டு தேர்வுகளான உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.), மேல்நிலைப் பள்ளித் தேர்வு ஆகிய இரண்டு தேர்வுகளை நடத்தி வருகிறது. அத்துடன் தொழில் கல்வி, ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றைச் சார்ந்த வேறு 38 தேர்வுகளையும் நடத்தி வருகிறது. இவ்வாண்டு இந்த தேர்வுகள் அனைத்தையும் எழுதியவர்கள் மொத்த எண்ணிக்கை 6-1/2 இலட்சம் ஆகும். 1980–81-ல் மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு வட்டார அலுவலகங்கள் இத்துறைக்கு அமைக்கப்பட்டன. இந்த வட்டார அலுவலகங்கள் எஸ்.எஸ்.எல்.சி., மேல்நிலைப் பள்ளித் தேர்வு ஆகிய தேர்வுகளுக்கான பூர்வாங்க வேலைகளைக் கவனிக்கும்.

மேல்நிலைப் பள்ளித் தேர்வு:—

2. 1980 ஏப்ரலில் மேல்நிலைப் பள்ளித் தேர்வு எழுதியவர்கள் 1,17,013 பேர்களாவர் (தொழிற் பாட மாணவர்கள் 24,827 பேர் உட்பட). அவர்களுள் 59 விழுக்காட்டினரான 69,946 பேர்கள் தேறினர். அத்தேர்வில் வெற்றி பெறாதவர்களுக்காக 1980 செப்டம்பரில் நடத்திய தேர்வில் 38,900 பேர்கள் கலந்து கொண்டனர். 1981 ஏப்ரல் தேர்வை எழுத 1,47,000 பேர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

3. எஸ்.எஸ்.எல்.சி. தேறியுள்ளவர்களுள் 18 வயது முடிந்தவர்கள், 1981 ஏப்ரல் மேல்நிலைப் பள்ளித் தேர்விலிருந்து தொழிற் பாடம் அல்லாத கலைப் பாடங்களில் (அதுவும் செயல் முறைத் தேர்வு இல்லாத பாடங்களில்) தனிப்பட்ட முறையில் மேல்நிலைப் பள்ளித் தேர்வை எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு:—

4. 1980 மார்ச்-ஏப்ரலில் பத்தாண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதிய 2,40,000 பேர்களுள் (ஓரியண்டல் பள்ளி இறுதித் தேர்வு எழுதியோர் சிலர் உட்பட) தேறியோர் விழுக்காடு 57 சதவீதமாகும். 1981 மார்ச்சில் எஸ்.எஸ்.எல்.சி. எழுத 3,18,000 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

5. 1978 மார்ச்சில் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. நடைமுறைக்கு வந்த பின் அதில் தேர்ச்சி பெற்றால் மேல்நிலைப் பள்ளியில் சேரலாம் என்ற நிலை உள்ளது. மேல்நிலைப் பள்ளியில் சேருவதற்கு உள்ள தகுதியே அரசுப் பணிகளில் சேரும்போது கணக்கிடப்படும் "குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி"யாகவும் இருக்கும் என்று அரசு நிர்ணயித்துள்ளது.

6. பழைய 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி.-யை தனிப்பட்ட முறையில் எழுத 1980 அக்டோபர் வரை தரப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தியும் அத்தேர்வில் தேர்ச்சி பெற இயலாதவர்கள் 198 அக்டோபர் முதல் 10 ஆண்டு

1981 ஏப்ரல் 23]

எஸ்.எஸ்.எல்.சி. எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர். ''1969 எஸ்.எஸ்.எல்.சி'' திட்டத்தின் கீழ் படிக்க வேண்டிய விருப்பப் பாடம் நீங்கலாக மற்றப் பாடங்களில் எவ்வெவற்றில் 35-க்குக் குறைவாக மதிப்பெண்கள் பெற்றுள்ளனரோ அவற்றில் மட்டும் அவர்கள் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதித் தேர்ச்சிப் பெற்று விட்டால் அவர்களுக்கு 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். 1978-ல் இவ்வரசு முதன்முதலாக அமுலுக்குக் கொண்டு வந்த பகுதிமுறைத் தேர்ச்சி (கம்பார்ட்மெண்டல்) முறை அண்மையில் பின்வருமாறு தாராளமாக்கப்பட்டுள்ளது: பழைய 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி.யில் ஒவ்வொரு பாடத்திலும் (ஒரு தடவையே பல தடவைகளிலோ) 35-க்குக் குறையாமல் மதிப்பெண் பெற்று இருந்தும் பழைய முறைப்படி எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெறாதவர்களாகக் கருதப்பட்டவர்கள் எல்லாம் 1—10—1978 முதல் எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்களாகக் கருதப்படுவார்கள். விருப்பப் பாடங்களைப் பொறுத்தவரை (1969-ம் ஆண்டு திட்டத்தின் கடைசி தேர்வான) 1979 அக்டோபர் எஸ்.எஸ்.எல்.சி. அல்லது அதற்கு முன் விருப்பப்பாடத்தில் 35-க்குக் குறையாத மதிப்பெண் பெறாதவர்களும் 1—10—1978 முதல் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்களாகக் கருதப்படுவார்கள். அதாவது அவர்களைப் பொறுத்தவரை விருப்பப்பாடம் ஒரு கணக்குக்கும் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

7. தேர்வு முறையைச் சீர்திருத்தும் நோக்குடன் 1981-82-ல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வைப் பொறுத்தவரை கேள்வி வங்கி முறையைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. பள்ளிகளில் பாடம் கற்றுத்தரும் ஆசிரியர்களைக்கொண்டு மாதிரிக்கேள்விப் பட்டியல்களைத் தொகுத்து, வல்லுநர்களையும் கலந்து அப்பட்டியல்களைச் சரிப்பார்த்து கேள்வி வங்கிகள் அமைக்கப் படும். மாணவர்கள் கல்வித்தரத்திற்கு இசைந்த வகையில் பொதுத் தேர்வில் வினாக்கள் அமைக்கப்பட இம்முறை உதவும்.

பிற தேர்வுகள்:—

8. இத்துறை நடத்திவரும் பிற தேர்வுகளுள் முக்கியமானவை ஆங்கிலோ-இந்திய பள்ளி இறுதித் தேர்வு, மெட்ரிக்குலேஷன் தேர்வு, ஆசிரியர் பயிற்சிப் பட்டயப்படிப்பு டிப்ளமா, மர வேலை, நெசவு, தையல் வேலை போன்ற தொழில் தேர்வுகள் ஆகியவையாகும். 14 வயது முடிந்தவர்கள் தனிப்பட்ட முறையில் கலந்துகொள்ளும் வகையில் நடத்தப்பெறும் தொடக்கப்பள்ளி இறுதி பொதுத் தேர்வு (இ.எஸ்.எல்.சி.) ஆண்டுக்கு ஒரு முறை (1980 பிப்ரவரி முதல்) நடைபெறுகிறது. ஆண்டுக்கு 2,000 பேர்கள் இத்தேர்வில் கலந்து கொள்கின்றனர்.

V. முதியோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்.

முதியோர் கல்விக்கும் பள்ளிச் சாராக் கல்விக்கும் 1981-82 நிதி நிலை அறிக்கையில் ரூ. [illegible],60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

முதியோர் கல்வி.

2. எழுத்தறிவு பெற்றவர்கள் சதவீதம் தமிழ்நாட்டிலும் அனைத்திந்தியாவிலும் பின்வருமாறு இருந்துவருகிறது:—

சென்சஸ் ஆண்டு.	தமிழ்நாடு		
	ஆண்.	பெண்.	மொத்தம்.
1971	51.78	26.36	39.46
1981	57.19	34.12	45.78

சென்சஸ் ஆண்டு.	இந்தியா.		
	ஆண்.	பெண்.	மொத்தம்.
1971	39.51	18.44	29.34
1981	46.74	24.88	36.17

3. முதியோர் கல்விப்பணி இம்மாநிலத்தில் முனைப்புடன் நடைபெற்று வருகின்றது. பின்வரும் பலவகைத் திட்டங்களின் கீழ் மொத்தம் 13,000 மையங்களில் 4 இலட்சம் பேர்களுக்கு முதியோர் கல்வி அளிக்கப்படுகிறது:

(1) கிராமப்புற (தொழிற்சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணி:—

மைய அரசின் முழுப் பண உதவியுடன் நடைபெறும் இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, நீலகிரி தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 300 மையங்கள் வீதம் 3,600 மையங்கள் செயல்படுகின்றன. இம்மையங்களில் 1980 அக்டோபரில் நடந்து முடிந்த 10 மாத வகுப்புகளாகிய முதல் தொகுதியில் 1,22,000 பேர் (95,000 ஆண்களும் 27,000 பெண்களும்) பயன் பெற்றனர். 1980 நவம்பர் முதல் இம்மையங்கள் அதே மாவட்டங்களில் வேறு ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டாவது தொகுதி வகுப்புகளை நடத்தி வருகின்றன. அவற்றில் பயன் பெறுவோர் 1.11,000 பேர் (57,000 ஆண்களும், 54,000 பெண்களும்). இந்த இரண்டாம் தொகுதி வகுப்புகளுக்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ. 5.2 இலட்சம் வீதம் மைய அரசு மானியம் கிட்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புற பகுதிகளில் அருகருகே உள்ள மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ளாக இந்த 300 மையங்களும் செயல்படுகின்றன. 30 மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளார்.

அந்தந்த வட்டாரத்திலுள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரி களிடையேயிருந்து மேற்பார்வையாளர் நியமிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் முதியோருக்கு கல்வி புகட்டுபவர்கள் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேறி வேலை வாய்ப்பின்றியுள்ள இளைஞர்கள், பாலவாடி ஆசிரியர்கள், சிவில்/இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், மகளிர் மன்ற உறுப்பினர்கள், முறையான பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரிலிருந்து நியமிக்கப்படுகிறார்கள். இதற்காக அவர்களுக்கு இதுபற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. வகுப்புகள் 10 மாதம் நடக்கின்றன. அந்தந்த இடத்திற்கு வசதியான நேரங்களில் இம் முதியோர் கல்வி வகுப்புகள் நடக்கின்றன.

(2) மாநில அரசுத் திட்டம்—தன்னிறைவுத் திட்ட வட்டாரங்களில்:—

இம்மாநிலத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் வரும் 61 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 6,100 மையங்களில் இவ்வரசு தன் பணத்திலிருந்து அமுலாக்கிய இந்த முதியோர் கல்வித் திட்டத்தின் கீழ் 1980 நவம்பர்-டிசம்பரில் நடந்து முடிந்த முதல் தொகுதி முதியோர் கல்வி வகுப்புகளில் 1,93,000 பேர் (97,000 ஆண்களும், 96,000 பெண்களும்) பயன்பெற்றனர். அந்த 61 வட்டாரங்களிலும் பழைய இடங்களிலோ அல்லது வேறு இடங் களிலோ வேறு முதியோர்கள் மொத்தம் சுமார் 1,75,000 பேர் பயனடையும் வகையில் இரண்டாம் தொகுதி வகுப்புகள் 1981 மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்டுள்ளன. 100 மையங்கள் கொண்ட ஒரு ஒன்றியத்திற்கு இந்த இரண்டாம் தொகுதி வகுப்பு களுக்காக ஆகும் செலவு ரூபாய் 1.78 இலட்சமாகும். 61 ஒன்றி யங்களுக்கும் சேர்த்து மொத்தம் ரூபாய் 1.08 கோடி செலவாகும்.

மேற்சொன்ன 61 ஒன்றியங்களில் 1980-ல் நடந்த முதியோர் கல்வி வகுப்புகளில் கலந்து கொண்டு எழுத்தறிவு பெற்றவர் களுக்கு எழுத்தறிவுக்கு மேலான நிலையில் அடுத்த கட்டக்கல்வி அளிப்பதற்கான 100 மையங்கள் அந்த ஒன்றியங்களில் தெரிந் தெடுக்கப்பட்ட இடங்களில் 1981—82-ல் தொடங்கப்படும். ஒரு மையத்துக்கு ரூ. 900 வீதம் இந்த 100 மையங்களுக்கும் ஓராண்டுக்குச் செலவு ரூ. 90,000 ஆகும். அம் மையங்களில் அவர்களுக்குத் தகுந்த புத்தகங்களும் இதழ்களும் வழங்கப்படும். புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் படிக்கத்தக்க வெளியீடுகளைத் தயாரித்து வெளியிட மொத்தம் ரூ. 3 லட்சம் செலவில் எழுத்தாளர் முகாம்கள் 16ஐ (மாவட்டத்திற்கு ஒன்று வீதம்) நடத்தவும் அரசு ஏற்பளித்துள்ளது.

(ஆ) உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி பெற்றோர்–ஆசிரியர் சங்கங்கள் நடத்தும் முதியோர் கல்வி மையங்கள்:—

1980-81-ல் 600 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் முதியோர் கல்வி மையங்களைத் தொடங்கி மொத்தம் 18,000 பேருக்கு எழுத்தறிவிப்பதற்கான திட்டத்துக்கு ஏற்பளிக்கப்

பட்டது. ஒவ்வொரு பள்ளிக்கும் தரப்படும் அரசு மானியம் ரூபாய் 500. அந்தந்தப் பள்ளியின் பெற்றோர்–ஆசிரியர் சங்கம் தர வேண்டியது ரூபாய் 500 ஆகும்.

(3) தனியார் அமைப்புகள்—

தமிழ்நாட்டில் தனியார் அமைப்புகள் 34, மைய அரசுப் பண உதவியுடன் நடத்திய 1,710 முதியோர் கல்வி மையங்களின் முதல் தொகுதி வகுப்புகளில் 68,000 பேர் எழுத்தறிவு பெற்றனர். அவ் வகுப்புகள் 1980-ல் முடிவு பெற்றன. இரண்டாவது தொகுதி வகுப்புகளை நடத்த மைய அரசுப் பண உதவி நீடித்தால் அவை தொடங்கும்.

(4) பிற திட்டங்கள்—

கல்லூரி மாணவர்கள் நடத்தும் 736 மையங்களில் சுமார் 20,000 பேர்களும், நேரு இளைஞர் நிலையங்கள் நடத்தும் 225 மையங்களில் சுமார் 7,000 பேர்களும் பயன் பெற்றனர்.

4. முதியோர் கல்வி மையங்கள் பயன்படுத்தத் தக்க பயிற்றும் கருவிகள், காட்சிச் சாதனங்கள், விளக்க வெளியீடுகள் ஆகியவற்றை இத் துறை தயாரித்துள்ளது. அவை அச்சிட்டு அம்மையங்களுக்கு வழங்கப்படும். முதியோர் கல்விப் பணியிலும் பள்ளி சாராக் கல்விப் பணியிலும் ஈடுபட்டுள்ளவர்களின் பயனுக்காக மாதாந்திர இதழ் ஒன்றையும், முதியோர் கல்வி பள்ளி சாராக் கல்விப் பாடநூல்களையும் தயாரித்து வெளியிட 1981–82-ல் வெளியீட்டுப் பிரிவு ஒன்று அமைக்கப்படும். முதியோர் கல்வி பயலுபவர்களுக்கு உதவக்கூடிய கல்வித் திரைப்படங்களைக் காட்டக்கூடிய இயங்கும் உந்துவண்டி ஒன்று (காட்சி—கேள்வி சாதனங்களுடன்) மதுரை மாவட்டத்துக்கு 1981–82-ல் வாங்கித் தரப்படும்.

பள்ளி சாராக் கல்வி.

5. பள்ளி சாராக் கல்வி மையங்கள் 1976–77-ல் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் தொடங்கப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை 1977-78-ல் இரண்டு ஆகவும், 1978–79-ல் நான்கு ஆகவும் உயர்த்தப்பட்டது. இம் மையம் ஒவ்வொன்றும் மூன்று ஆண்டு வேலை செய்யும். பத்து மாத வகுப்புகள் மூன்றை நடத்தும்—ஒவ்வொன்றும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்காக. 1976–77-ல் தொடங்கிய முதல் மையம் மூன்று தொகுதி மாணவர்களுக்கு வகுப்புகளை நடத்தி முடித்துவிட்டு 1979 அக்டோபரில் மூடப்பட்டது. 1977–78 ல் தொடங்கிய இரண்டாவது மையம் 1980–81-ல் முற்றுப்பெற்றது. 1980–81-ல் இரண்டு புதிய மையங்கள் திறக்கப்பெற்றன. ஆக, தற்பொழுது ஒன்றியத்துக்கு நான்கு வீதம் 1,496 மையங்கள் உள்ளன. இம் மையங்கள் அனைத்திலும் பயில்வோர் தொகை சுமார் 45,000 ஆகும். 1981–82-ல் தன்னிறைவு வட்டாரங்களில் மொத்தம் ரூபாய் 3.41 இலட்சம்

[1981 ஏப்ரல் 23

செலவில் மேலும் 240 மையங்கள் தொடங்கப் பெறும். ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களில் இவ் வகுப்புகள் நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 50 மதிப்பூதியம் பெறுகின்றனர். (அரசு நடத்தும் மேற்சொன்ன பள்ளி சாராக் கல்வி மையங்களோடு ஊராட்சி ஒன்றியங்களும் தங்கள் பணத்திலிருந்து சுமார் 300 பள்ளி சாராக் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன).

6. இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசி பகுதியிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் ஏழைச் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக ஆண்டுக்கு ரூபாய் 1.80 இலட்சம் செலவில் 30 பள்ளி சாராக் கல்வி மையங்கள் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்திலும் 30 சிறுவர் சிறுமியருக்கு காலை அல்லது மாலை வேளைகளில் கற்றுத் தரப்படும். மூன்று ஆண்டு முடிந்த பின் அவர்கள் தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுத ஆயத்தம் செய்யும் வகையில் அக் கல்வி இருக்கும்.

7. நகர்ப்புறப் பகுதிகளில் 1980 டிசம்பரில் தொழிற் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளி சாராக் கல்வி மையங்கள் 150 தொடங்கப் பட்டன. இம்மையங்களில் 5 மாத காலம் எண்ணும் எழுத்தும் கற்றுத் தரப்படுவதோடு ஆடை தைத்தல், ஆடைகளில் பூவேலை செய்தல், பிளாஸ்டிக் பை செய்தல், நீர் இறைக்கும் பொறியைப் பழுதுபார்த்தல், புத்தக பைண்டிங், ஊறுகாய், ஜாம் செய்தல், மின் இயக்கிகள் பின்னுதல் (motor winding) சைக்கிள் பழுது பார்த்தல் போன்ற தொழில்களிலும் பயிற்சி அளிக்கப்படும்.

VI. கல்லூரிக் கல்வி.

தமிழ்நாட்டில் கலை அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி களின் எண்ணிக்கை தற்பொழுது 187 ஆக உள்ளது. அவற்றில் 1979–80 ஆம் ஆண்டில் படித்து வந்தவர்கள் 1,35,700 பேர். 1980–81 ஆம் ஆண்டில் படித்து வருபவர்கள் 1,54,700 பேர் ஆவர். இக் கல்லூரிகளில் 110 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும், 77 மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துடனும் இணைந்தவையாகும். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒற்றை வகையைச் சார்ந்தது. கல்லூரிக் கல்வி இயக்குநரின்கீழ் செயல்பட்டு வரும் இந்த 187 கல்லூரிகள், மற்றும் பிற கல்லூரிகளைப் பற்றிய விவரங்களை இணைப்பில் காணலாம்.

2. இத்துறையில் 1979–80 ஆம் ஆண்டு முதல் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஐந்து ஊர்களில் அந்தந்த வட்டாரத்துக்கு ஒன்று என்ற வகையில் கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அலுவலகங்கள் 5 செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வட்டார அலுவலகத்திலும்,

ஒரு துணை இயக்குநர் பிற பணியாளர்களுடன் வேலை செய்து வருகிறார். இயக்குநரகத்தையும் வட்டார அலுவலகங்களையும் வலுப்படுத்த மொத்தம் ரூபாய் 2 இலட்சம் செலவில் 1981-82 ஆம் ஆண்டில் கூடுதல் பதவிகள் ஏற்படுத்தப்படும். அவ்வாறு இயக்குநர் அலுவலகத்தில் தலைமைக் கணக்கு அதிகாரி பதவி ஒன்றும் ஒரு பிரிவும் ஏற்படுத்தப்படும். சென்னை தவிர பிற வட்டார அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.

3. திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு புதிய பல்கலைக் கழகங்களை நிறுவ பல்கலைக் கழக மானியக் குழு இசைவு அளித்துள்ளது. இவை கல்லூரிகளுக்கு இணைப்புத் தரும் வகையைச் சார்ந்தவையாக இருக்கும். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள கல்லூரிகள் திருச்சிராப்பள்ளிப் பல்கலைக் கழகத்தின் கீழும், கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மாவட்டங்களிலுள்ள கல்லூரிகள் கோயம்புத்தூர் பல்கலைக் கழகத்தின் கீழும் வரும். இப்புதிய பல்கலைக் கழகங்களை அமைப்பதற்கான சட்ட வரைவுகள் விரைவில் கொண்டுவரப்படும்.

4. ஒற்றை வகையைச் சார்ந்த பல்கலைக் கழகம் ஒன்றை காரைக்குடியில் அமைப்பதற்கும், தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கும் அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதுபற்றி அரசுக்கு ஆலோசனை கூற இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூரில் அமைக்கப்படும். அது அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளன்று தொடங்கவிருக்கிறது.

தன்னுரிமையுள்ள கல்லூரிகள்.

5. கல்லூரிகளுக்குச் சுய ஆட்சி உரிமை தரப்பட்டுள்ள முதல் மாநிலம் தமிழ்நாடு தான். சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள 6 கல்லூரிகளும், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள 4 கல்லூரிகளும் ஆக மொத்தம் 10 கல்லூரிகளுக்கு இவ்வுரிமை தரப்பட்டு அதன் மூலம் கல்வித் தரம் உயர வகை செய்யப்பட்டுள்ளது. அக்கல்லூரிகள், தாமே பாடத் திட்டங்களை வகுக்கவும் தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை. எனினும் பட்டங்களை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே வழங்கும்.

தொடர் கல்வி.

6. மாலை நேர வகுப்புகளை நடத்தி வரும் கல்லூரிகளின் எண்ணிக்கை 33—மதுரை காமராஜ் பல்கலைக் கழகமும், சட்டக் கல்லூரிகளும் உட்பட. இம் மாலை நேர வகுப்புகளில் பயில்வோர்கள் சுமார் 8,000 பேராவர். பட்ட மேற்படிப்பு வகுப்புகளுள்ள மூன்று அரசுக் கல்லூரிகளில் 1978-79 ஆம்

1981 ஏப்ரல் 23]

ஆண்டிலிருந்தும், மேலும் ஒரு கல்லூரியில் 1980–81 ஆம் ஆண்டு முதலும், அறிவியல் பாடங்களில் எம்.எஸ்.சி. வகுப்புகள் மாலை நேர வகுப்புகளாகத் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வசதியைப் பயன்படுத்தி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் எம்.எஸ்.சி. தேர்ச்சி பெற்றுக் கொள்ளலாம். மேல் நிலைப் பள்ளிகளில் இன்னும் பட்ட மேற்படிப்புத் தகுதி பெறாமல் ''உட்படுத்தப்பட்ட'' இன்டக்டட் ஆசிரியர்களாகப் பணி செய்பவர்கள் சுமார் 3,300 பேருக்கு கணிதத்திலும், அறிவியல் பாடங்களிலும் பட்ட மேற் படிப்புத் தகுதி பெற வசதி செய்ய வேண்டியிருக்கிறது. அரசுக் கல்லூரிகளில் மாலை நேர பட்டமேற் படிப்பு வகுப்புகள் தொடங்க 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் 1972–73 ஆம் ஆண்டிலிருந்தும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1979-80 ஆம் ஆண்டிலிருந்தும் அஞ்சல் முறை வகுப்புகளை நடத்தி வருகின்றன. 1981-82 ஆம் ஆண்டிலிருந்து சென்னைப்பல்கலைக் கழகமும் இவ்வகுப்புகளைத் தொடங்க இருக்கிறது. அஞ்சல் முறை வகுப்புகளில் 1980–81ல் மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் 58,810 பேர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 14,208 பேர்களும் பயின்றுவந்தனர்.

8. மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் ''அனைவரும் படிக்கத்தக்க பல்கலைக் கழக'' வகுப்புகளையும் 1977ஆம் ஆண்டில் தொடங்கியுள்ளது. இந்தியக் குடி மக்களுள் தமிழ் நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் வசிப்பவர்களும், 21 வயதுக்கு மேற்பட்டவர்களுமான எவர் வேண்டுமானாலும் இந்த வகுப்பில் சேரலாம். 1980-81 ஆம் ஆண்டில் இவ்வகுப்பில் 3,000 பேர்கள் பயின்று வந்தனர்.

கல்வித்தர மேம்பாடு.

9. இம் மாநிலத்தில் கலை, அறிவியல் கல்லூரிகளின் தேவைக்கு இப்பொழுது உள்ள 187 கல்லூரிகள் போதுமானவையாகும். சில குறிப்பிட்ட நகர்ப்புற கல்லூரிகளில் சேருவதற்கே மாணவர்கள் அதிகமாக முன் வருகின்றனர். ஆனால், கிராமப் புறப் பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் இப்பொழுதே பல இடங்கள் காலியாக இருந்து வருகின்றன. 1980–81 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் 9,200 இடங்கள் (ஆங்கிலப் பாட மொழி—6,440; தமிழ்ப் பாட மொழி–2, 60) காலியாக இருந்தன. எனவே கடந்த சில ஆண்டுகளாக அரசுக் கல்லூரிகளில் கல்வித் தர மேம்பாட்டுக்கே முதன்மை அளிக்கப் படுகிறது.

10. அண்மை ஆண்டுகளில் அரசுக் கல்லூரிகளில் புதிதாகத் தொடங்க ஏற்பளித்துள்ள வகுப்புகளின் விவரங்கள் வருமாறு:—

ஆண்டு.		பட்ட வகுப்பு.	பட்ட மேற்படிப்பு வகுப்பு.
1978-79	..	13	5
1979-80	..	46	5
1980-81	..	36	8

1981-82ஆம் ஆண்டில் புதிய பட்ட வகுப்புகளைத் துவக்க ரூபாய் 10 இலட்சமும், புதிய பட்டமேற்படிப்பு வகுப்புகளைத் துவக்க ரூபாய் 5 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

11. அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக் கல்லூரிகளில் ஆய்வகக்கூட வசதிகள் பெருக்கப்படுகின்றன. இதற்காக கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் ரூபாய் 21 இலட்சம் ஏற்பளிக்கப்பட்டது. அரசுக் கல்லூரிகளில் மாணவர்கள் பயன் படுத்திட பாட புத்தகங்களைக் கொண்ட புத்தக நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

12. கல்லூரி மாணவர்கள் வசதிக்காக உணவருந்தும் இடம், சிற்றுண்டிச்சாலை, மிதி வண்டி நிறுத்துமிடம் ஆகியவை படிப்படியாக அமைக்கப்படுகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் இவ்வகையில் அரசு கல்லூரிகளுக்கு ரூபாய் 13 இலட்சமும், தனியார் கல்லூரிகளுக்கு ரூபாய் 5 இலட்சமும் செலவிட ஏற்பளிக்கப்பட்டது. அரசுக் கல்லூரிகளுக்குப் புதிய அல்லது கூடுதல் கட்டடங்கள், மாணவர் விடுதிக் கட்டடங்கள், உணவருந்தும் இடம், சிற்றுண்டிச்சாலை, மிதிவண்டி நிறுத்துமிடம், கழிவறை வசதிகள், சுற்றுச் சுவர் போன்றவற்றுக்காகவும், சிறு வேலைகளுக்காகவும், 1981–82ஆம் ஆண்டில் ரூபாய் 46 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது—(புதிய வேலைகளுக்காக ரூபாய் 19 இலட்சமும், முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1981—82ஆம் ஆண்டில் ஆகும் செலவுக்காக ரூபாய் 27 இலட்சமும்). தனியார் கல்லூரிகளுக்கு கட்டட மானியம் தர 1981-82ஆம் ஆண்டில் ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

13. கல்லூரி ஆசிரியர் கல்வித்தர உயர்வுக்காக அவர்களை ஆராய்ச்சிப் படிப்புக்கு அனுப்புவதற்கான பல்கலைக் கழக மானியக் குழுவின் திட்டத்திற்கு இவ்வரசு ஏற்பளித்துள்ளது. இது தவிர, மாநில அரசே செயல்படுத்தும் தர உயர்வுத் திட்டத்தின் கீழ் கல்லூரிகளிலிருந்து எம்.பில். படிப்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர். புகுமுக வகுப்பு நீங்கி விட்டதால் உபரியான ஆசிரியர்களுக்குள் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் இத் திட்டத்தின் கீழ் 1979-80 ஆம் ஆண்டில் 494 ஆசிரியர்களும்,

1981 ஏப்ரல் 23]

1980—81ஆம் ஆண்டில் 132 ஆசிரியர்களும் எம்.பில். படிப்புக்கு அனுப்பப்பட்டனர். மேலும் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி.எச்.டி) பட்டம் பெறுவதற்காக அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள் முகாமையில் அனுப்பப்பட்டு வருகின்றனர். 1973-74 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் 29 பேராசிரியர்கள் ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

14. கல்லூரி ஆசிரியர்களுக்கு 1981—82ல் மொத்தம் ரூ. 1.22 லட்சம் செலவில் மறுபயிற்சி வகுப்புகள் நடக்கும். பட்ட வகுப்புகளுக்கான த முயர்த்தப்பட்ட பாடத் திட்டத்தின்படி நன்கு கற்றுத் தருவதில் பட்ட வகுப்பு ஆசிரியர்களுக்கும், பட்ட வகுப்பு மூன்றாம் பிரிவு ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் பயிற்றுவிப்பதிலும், மற்றும் எம்.ஏ., ஆசிரியர்களுக்கும் இம்மறு பயிற்சி வகுப்புக்கள் நடத்தப் பெறும்.

படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப் பணமும்.

15. கல்லூரிகளில் செயல்படும் படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் மிக முக்கியமானவை வருமாறு:—

திட்டம்.	1980—81ல் புதிதாக தந்த படிப்புதவி தொகைகள் எண்ணிக்கை.	1980-81ல் (புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை) எண்ணிக்கை.	1981-82ல் வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள பணம் ரூபாய் லட்சத்தில். (மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் தரப்பட்டவை உட்பட).
(1)	(2)	(3)	(4)
தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம்.	1,618	3,703	50
தேசிய கடன் படிப்புதவி தொகைத் திட்டம் ..	1,413	5,664	45
பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய தேசிய படிப்புதவித் தொகை.	70	91	4

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978–79லிருந்து மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு இம் மூன்று திட்டங்களும் விரிவாக்கப்பட்டுள்ளன. 1978-79ம் ஆண்டின் இறுதியில் தேசிய படிப்புதவித் தொகைத் திட்டத்தின் கீழ் என்ன அளவுக்குச் செலவாகி வந்ததோ அந்த அளவு செலவை [ரூ. 39 லட்சம்] மாநில அரசே 1979–80 முதல் ஏற்று வருகிறது. அந்த அளவுக்கு அதிகமாக ஆகும் செலவை மட்டுமே 1979–80லிருந்து மைய அரசு ஏற்று வருகிறது. தேசிய கடன் படிப்புதவித் தொகையில் செலவு முழுவதையும் அவ்வரசு ஏற்று வருகிறது. பள்ளி ஆசிரியர் குழந்தைகள் படிப்புதவித் தொகைத் திட்டத்தின் முழுச் செலவையும் மாநில அரசே ஏற்று வருகிறது. விடுதலைப் போர் வீரர்களின் குழந்தைகள், மற்றும் பர்மா, ஸ்ரீலங்கா முதலிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர் குழந்தைகள் போன்றவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டங்களும் மற்றும், மாரிஷியஸ், மலேசியா, பிஜீ போன்ற அயல்நாடுகளில் வசிக்கும் தமிழர்களின் குழந்தைகள் பள்ளி இறுதி வகுப்புக்கு மேல் (பட்ட மேற்படிப்பு உட்பட) பயில்வதற்கான படிப்புதவித் திட்டங்களும் உள்ளன.

16. 1977–78லிருந்து பட்ட வகுப்புகளிலும் அதற்கு மேலான வகுப்புகளிலும் பயிலும் ஆதி திராவிடர் பழங்குடிகள் ஆகியோருக்கு அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் எவ்வளவாயிருப்பினும் முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல இயக்குநர் துறை அவர்களுக்குப் படிப்புதவித் தொகைகளை அளிக்கிறது. பிற்பட்டவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து கிடைக்கின்றன. மேலும் ஆண்டுதோறும் ஆதி திராவிடர், பழங்குடி மாணவர்களுள் மேல்நிலை பள்ளித் தேர்வில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவுவதற்காக ஆளுக்கு ரூ. 300 உதவிப்பணம் வழங்கப் படுகிறது.

கல்லூரிகளில் தமிழ்ப்பயிற்று மொழி.

17. 1966–67ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் கலைப் பாடங்களில் தமிழும் பயிற்று மொழியாக ஆனது 1967-68ஆம் ஆண்டிலிருந்து பி.ஏ, வகுப்பிலும் 1968–69 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் அறிவியல் பாடங்களிலும், 1969–70 ஆம் ஆண்டிலிருந்து பி.எஸ்.சி., வகுப்பிலும் 1979–80லிருந்து எம்.ஏ., (வரலாறு) வகுப்பிலும் தமிழ் பாட மொழி ஆனது. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பி.ஏ.,பி.எஸ்.சி., வகுப்புகளில் பயிலும்மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப்பணம் புத்தகப் படியாக 180 ரூ. தரப் பட்டு வருகிறது. 1980-81ல் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு, பட்ட வகுப்பில் பயின்ற 18,040 பேர்களுக்கு இவ்வுதவிப் பணவகையில் ரூ. 32.50 இலட்சம் செலவானது. 1981–82ல் இப்பணிக்கு ரூ. 33 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 23]

18. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இது வரை 901 பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. தொழில் நுணுக்கச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களைக் கொண்ட 13 தொகுப்புகளையும் அது வெளியிட்டுள்ளது. 901 பாட நூல் களில், 172 மொழிபெயர்ப்புநூல்களும், 729 மூல நூல்களும் ஆகும். 31-12-1980 வரை இத்திட்டத்திற்கு ரூ. 1.5 கோடி செலவாகியுள்ளது, இதுவரை விற்பனையாகியுள்ள புத்தகப் படிகள் வகையில் வரவு ரூ. 52 இலட்சம். இத்திட்டத்தை மதிப்பீடு செய்ய அண்மையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி மாணவர் ஆசிரியர் நலக்குழுக்கள்.

19. கல்லூரி ஆசிரியர்கள், பிற்பணியாளர்கள் மாணவர்கள் ஆகிய அனைவரின் குறைகளையும் உடனுக்குடன் தீர்ப்பதற் காக கல்லூரிகளில் பின்வரும் குழுக்களை அமைக்க ஆணையிடப் பட்டுள்ளது:—

1 ஆசிரியர் நலக்குழு.

2 ஆசிரியரல்லாத பணியாளர் நலக்குழு.

3 மாணவர் நலக்குழு.

கல்லூரி ஆசிரியர் பிற பணியாளர்கள் நலன்.

20. கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மை ஆண்டுகளில் செய்துள்ள நன்மைகளில் மிக முக்கியமானவை: பல்கலைக் கழக மானியக் குழு சம்பள வீதங்களை அளித்தது; தகுதி பெற்ற பயிற்றுநர்களையும் விளக்குநர்களையும் உதவிப் பேராசிரியர்களாக உயர்த்தியது; 10 ஆண்டு பணி முடித்த உதவிப் பேராசிரியர்களை 1-4-1980 முதல் பேராசிரியர்களாக உயர்த்தியது ஆகியவையாகும்.

21. கல்லூரி ஆசிரியர்களுள் சிறப்பாக பணியாற்றுபவர் களைப் போற்றுவதற்காக 1979-80 முதல் கல்லூரி ஆசிரியர் களுக்கும் மாநில அரசு விருதளிக்கும் திட்டம் தொடங்கப் பட்டு, அதன் கீழ் ஆண்டுதோறும் கல்லூரி ஆசிரியர்கள் 10 பேருக்கு ஆளுக்கு ரூ. 1,000 ரொக்கப்பரிசு, வெள்ளிப் பதக்கம், சான்றிதழ் ஆகியவை அடங்கிய விருது அளிக்கப் படுகிறது.

22. தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு முழுமையாகவும் காலத் தாழ்வின்றியும் சம்பளம் கிடைக்கச்செய்ய தனியார் கல்லூரிகளுக்கு மானியம் வழங்குவதில் அரசு 6-6-1977-ல் செயல்படுத்தியுள்ள புதிய முறையின் கீழ் அக்கல்லூரிகளின் சம்பளச் செலவில் நிகரப்பற்றாக்குறை முழுவதையும் அரசே ஏற்று வருகிறது. சம்பளம் அல்லாத பிற செலவினங்களில்—

அதாவது பழுதுபார்த்தல், சில்லரைச் செலவினம், எழுது பொருள் போன்றவற்றில்—அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களுக்கு 80 சதவீதம் சம்பளமில்லாத செலவின மானியமும் தனியார் கல்லூரிகளுக்குத் தரப்படுகிறது.

23. தமிழ்நாட்டிலுள்ள தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஒய்வூதியம் போன்ற ஒய்வு காலப் பலன்களை 1–4–1962-லிருந்தும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் 1–4–1976-லிருந்தும் பெற்று வருகின்றனர். எனினும் அவர்கள் பெற்று வந்த ஒய்வூதியச் சலுகைகளில் சில கட்டுப்பாடுகள் இருந்தன. அதாவது (1) சாவு மற்றும் ஒய்வு பெறும் கால பணிக்கொடை அவர்களுக்குத் தரப்படாமை; (2) குடும்ப ஒய்வூதியம் குறைந்த விகிதத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. ஆகியவையே அந்தக் கட்டுப்பாடுகள். அவை 29–7–1980 முதல் நீக்கப்பட்டு, அரசுக் கல்லூரிப் பணியாளர்களுக்குரிய ஒய்வூதியச் சலுகைகள் முழுமையாக தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கும் அந்தத் தேதி முதல் கிடைத்து வரும். தனியார் கல்லூரிகளிலிருந்து 1–4–1976-க்குமுன்னர் ஒய்வு பெற்ற ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் ஒய்வூதியம் தர அரசு இப்பொழுது முடிவு செய்துள்ளது.

24. பின்வரும் நன்மைகளும் தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கு அண்மையில் விரிவாக்கப்பட்டுள்ளன:—

1. பணியிலிருக்கும் பொழுது ஒருவர் இறந்து விட்டால் அவர் குடும்பத்துக்கு ரூ. 10,000 தர வகை செய்யும் 'குழு ஈட்டுறுதித் திட்டம்' 2–6–1979 முதல் விரிவாக்கப்பட்டுள்ளது.

2. அரசுக் கல்லூரிகளைப் போலவே விடுப்புச் சலுகைகள்.

3. அரசு மருத்துவ மனைகளில் இலவசமாக மருத்துவம் செய்து கொள்ளும் சலுகை.

25. தமிழ்நாடு தனியார் கல்லூரி (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் 38 (1) பிரிவின்கீழ் 1979–80–ல் தீர்ப்பாயமாக ஒரு மாவட்ட செஷன்ஸ் நீதிபதி (இரண்டாம் நிலை) நியமிக்கப்பட்டுள்ளார்.

26. பொது நன்மையைக் கருதி பச்சையப்பன் அறநிலைய நிர்வாகத்தை இரண்டு ஆண்டு காலத்துக்கு அரசு மேற்கொண்டுள்ளது.

சட்டக் கல்வி—

27. சென்னை சட்டக் கல்லூரி, 1974–7ல் தொடங்கிய மதுரை சட்டக் கல்லூரி, 1979–80–ல் தொடங்கிய கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி சட்டக்கல்லூரிகள் ஆகிய நான்கும்

1981 ஏப்ரல் 23]

சட்டக் கல்வி இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகின்றன. 1980–81-ல் அக்கல்லூரிகளில் பயின்று வந்தோர் எண்ணிக்கை வருமாறு:—

	முறையான பட்ட வகுப்புகள்.		மாலை நேர	பட்ட மேற்
சட்டக் கல்லூரியின் பெயர்.	மொத்த மாணவர்.	அவர்களுள் தமிழில் பயின்றவர்.	பட்ட வகுப்பு.	படிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)
சென்னை	1,041	130	743	120
மதுரை	726	44	140	..
கோயம்புத்தூர் ..	240	8	..	..
திருச்சிராப்பள்ளி ..	240	46	..	..

28. 1980–81-ல் கோயம்புத்தூர் சட்டக் கல்லூரிக்கு ரூ. 5 லட்சம் செலவில் கட்டடம் கட்டவும், மதுரை சட்டக் கல்லூரி மாணவியருக்கு ரூ. 1.50 இலட்சம் செலவில் விடுதி கட்டவும் ஏற்பளிக்கப்பட்டது. 1981-82-ல் கோயம்புத்தூர் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு விடுதி கட்ட ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

VII. தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பக் கல்விக்காக 1981–82-ல் சுமார் ரூ. 10.89 கோடி (கட்டடங்கள், கடன்கள் ஆகியவற்றுக்கான செலவுகள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ் 6 பொறியியல் கல்லூரிகளும், 44 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் (மகளிர் பயிலகங்கள் மூன்றும், தனித்தொழில் பட்டயடிப்ளமா-கல்வியகங்கள் எட்டும் உட்பட) 14 (தொழிற் பாட) மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன.

2. இவற்றில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கைபொறியியற்கல்லூரிகளில்(திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டார பொறியியல் கல்லூரியில் தமிழ் பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரியில் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கியுள்ள இடங்கள் உட்பட) முழு நேரப்பட்ட வகுப்புகளில் 1,350 பேர்கள்; பல்தொழில் நுட்ப பயிலகங்களில் பட்டயப் படிப்புகளில் 5,730 பேர்கள், (தொழிற் பாட) மேல்நிலைப் பள்ளிகளில் 840 பேர்கள் என்பதாகும். 9 பல்தொழில் பயிலகங்களில்(அரசு 3, தனியார் 6) ஒவ்வொன்றிலும்சேர்க்கப்படும் மாணவர்

[1981 ஏப்ரல் 23

எண்ணிக்கை 1980–81 முதல் 120-லிருந்து 180 ஆக உயர்த்தப் பட்டது. பிற பல்தொழில் பயிலகங்களும் எத்தனை மாணவர் சேர்க்கலாமென முன்னர் ஏற்பளித்திருந்ததோ அதற்கு மேலாக 10 விழுக்காடு சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டன. 1980–81-ல் இரண்டு மகளிர் பல்தொழில் பயிலகங்கள் உட்பட ஐந்து தனியார் பல்தொழில் பயிலகங்கள் புதிதாக தொடங்க அனுமதிக்கப்பட்டது.

3. இம்மாநிலத்திலுள்ள பிற 7 பொறியியற் கல்லூரிகளின் விவரம் வருமாறு:—

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்.

1. பொறியியல் கல்லூரி, கிண்டி.

2. அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பவியல் கல்லூரி, கிண்டி.

3. கட்டடவியல் மற்றும் நகரமைப்புப் பள்ளி, கிண்டி.

4. சென்னை தொழில் நுட்பக் கல்வியகம், குரோம் பேட்டை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

5. பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, தன்னுரிமையுள்ள நிறுவனங்கள்—

6. வட்டார பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

7. இந்தியத் தொழில் நுட்பக் கல்வியகம், கிண்டி.

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்

4. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் 1978-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4-ம் தேதி அன்று நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகத்துக்கு 1980–81-ல் ரூ. 2.10 கோடி மானியம் தரப்பட்டது. 1981-82-ல் இப்பல்கலைக்கழகத் துக்கு மானியம் தர ரூ. 1.80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய தொழிற் கல்வி நிலையங்கள்.

5. புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய அரசு பல்தொழில் பயிலகம் 1981–82-ல் செயல்பட தொடங்கும், திருச்சிராப் பள்ளியில் மைய அரசு உதவியுடன் உணவுத் தொழில் கல்வியகம் ஒன்று 1981–82 -ல் தொடங்கப்படும்.

1981 ஏப்ரல் 23]

பல்கலைப் பாடப்பிரிவுகளைத் தொடங்குதல்

6. 1980-81-ல் பின்வரும் புதிய பாட முறைகள் தொடங்கப் பட்டன:—

அரசு பல்தொழில் பயிலகம், கோயம்புத்தூர்.	வார்ப்படப்பொறியியலில் பட்டய மேற்படிப்பு,
பி.ஏ.சி. இராமசாமி ராசா பல்தொழில் பயிலகம், இராசபாளையம்.	குளிர்பதனம், மற்றும் குளுமை வசதி பட்டயபடிப்பு.
இராமகிருஷ்ணா மிஷன் தொழில் நுட்பக் கல்வியகம், சென்னை.	நவீன விவசாயக் கருவிகள் தொழில் நுட்பவியல் விருப் பப்பாடம்.

7. 1980-81—ல் பின்வரும் புதிய பாடமுறைகள் தொடங்கப் படும்.

பட்டய மேற்படிப்புகள்—

மைய பல் தொழில் பயிலகம், சென்னை.	கட்டட அமைப்புத் தொழில் நுட்பவியல்
நாச்சிமுத்து பல்தொழில் பயிலகம், பொள்ளாச்சி.	தொழில் முறை மின்னணுவியல்
சேஷசாயி தொழில் நுட்பவியல் கல்வியகம், திருச்சிராப்பள்ளி.	இயந்திரங்களைப் பராமரித்தல்
சங்கர் பல் தொழில் பயிலக கல்வியகம், சங்கர்நகர்.	உற்பத்திப் பொறியியல்.

பட்டயப் படிப்புகள்—

அரசு பல்தொழில் பயிலகம், கோயம்புத்தூர்.	உற்பத்திப் பொறியியல்.
தியாகராசர் பல்தொழில் பயிலகம், சேலம்.	உற்பத்தி பொறியியல்.
நாச்சிமுத்து பல்தொழில் பயிலகம், பொள்ளாச்சி.	மின்னணுவியல்.

விருப்பப் பாடங்கள்—

பி.ஏ.சி. இராமசாமி ராசா பல்தொழில் பயிலகம், இராசபாளையம்,	தொழில் முறை மின்னணுவியல.

சி.ஐ.டி. சாண்ட்விச் பல் கருவியல்.

தொழில் பயிலகம் கோயம்புத்தூர்.

கூடுதல் வசதிகள்—

8. 1981–82–ல் கோயம்புத்தூரிலுள்ள அரசுப் பொறியியல் கல்லூரியில் ரூ. 50 இலட்சம் செலவில் மின் கணக்கீட்டுப் பொறி மையம் ஒன்றும், காரைக்குடி அழகப்ப செட்டியார் பொறியியல் கல்லூரியில் ரூ. 12.38 இலட்சம் செலவில் கண்ட்ரோல் சிஸ்டம் ஆய்வுக்கூடமும் அமைக்கப்படும். இக் கல்லூரிகளிலும், பிற தொழில் நுட்பக் கல்வி நிலையங்களிலும் 1981–82–ல் வேறு பல ஆய்வுக் கூடங்களுக்கும் பணிக்களரிகளுக்கும் புதிய கருவிகள் வாங்கித் தரப்பட்டு மேம்படுத்தப்படும்.

9. முத்தையா பல்தொழில் பயிலகம், அண்ணாமலை நகர்; ராஜகோபால் பல்தொழில் பயிலகம், குடியாத்தம்; எஸ். எஸ் மாரிசெட்டியார் நெசவுத் தொழில் நுட்பக் கல்வியகம், குமார பாளையம்; தியாகராசர் பல்தொழில் பயிலகம், சேலம்; தியாகராசர் பொறியியற் கல்லூரி, மதுரை ஆகியவற்றுக்கு மாணவர் விடுதிகளை கட்டுவதற்காக 1981–82–ல் மொத்தம் ரூ. 7 இலட்சம் கடனாகக் கொடுக்கப்படும்.

சில தன்னாட்சியுரிமையுள்ள கல்வி நிலையங்கள்

10. தன்னுரிமையுள்ள வேறு சில நிறுவனங்களில் உள்ள தொழில் நுட்பக் கல்வி வசதிகளைப் பற்றிய விவரங்கள் வருமாறு;—

(1) வட்டாரப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.—இப்பொழுது இக்கல்லூரியில் ஆண்டு தோறும் 220 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இதிலுள்ள இடங்களில் பாதி இம்மாநில மாணவர்களுக்கும், பாதி பிற மாநில மாணவர்களுக்கும் தரப்படுகிறது. தொடரும் செலவை மைய அரசும் மாநில அரசும் பாதி பாதியாக ஏற்றுக்கொள்கின்றன. தொடரா செலவு முழுவதையும் மைய அரசே ஏற்கிறது.

(2) கணித அறிவியல் நிறுவனம் சென்னை;—அடையாற்றில் உள்ள கணித அறிவியல் நிறுவனம் அடிப்படைக் கணிதம் மற்றும் கணிதம் சார்ந்த இயல்பியல் துறைகளில் உயர் ஆராய்ச்சி நடத்தி வருகிறது. இது இவ்வரசிடமிருந்து ஆண்டுக்கு ரூ. 5 இலட்சம் மானியம் பெறுகிறது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் அருங்காட்சிகள்:

11. சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் அருங்காட்சியகங்களை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

1981, ஏப்ரல் 23]

சென்னையில் தந்தை பெரியார் ஈ.வே. இராமசாமி பெயரில் அடையாறு மைய தொழில் நுட்பப் பயிலக வளைவில் இவ்வருங் காட்சியகம் அமைக்கப்படும். திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகம் பாரத கனரக மின்கருவிகள் நிறுவன உதவியுடனும், கோயம்புத்தூர் அருங்காட்சியகம் அங்குள்ள தொழிலதிபர்கள் உதவியுடனும் அமைக்கப்படும். இந்த அருங்காட்சியகங்கள் அமைக்கும் பணியை ஒருங்கிணைத்து வழி நடத்திச் செல்ல கல்வி வல்லுநர்கள், அறிவியலறிஞர்கள், தொழில் நுட்பவியாளர்கள், இந்தியவிலுள்ள ஏனைய அறிவியல் அருங்காட்சியகங்களில் பணி மூப்புடைய அதிகாரிகள், தொழிலதிபர்கள், நிர்வாகிகள் ஆகியோரைக்கொண்ட ஒரு ''திட்டமிடும் குழு'' அமைக்கப்படும்.

12. திருநெல்வேலியில் மாவட்டன் அறிவியல் காட்சியக மையம் ஒன்றை நிறுவ மைய அரசு ஏற்பளித்துள்ளது. இம்மையம் 1981-82-ல் செயல்படத் தொடங்கும்.

தனியார் தொழில் நுட்பக்கல்வி நிலையப் பணியாளர்களுக்குச் சலுகைகள்.

13. தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையங்களிலிருந்து 1-1-1975 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும், 1.4.1977 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியரல்லாத பணியாளருக்கும் ஓய்வூதியச் சலுகைகள் ஏற்கனவே தரப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரியிலிருந்து 1-1-1975 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்கும் (ஆசிரியர்களுக்கும், பிற பணியாளர்களுக்கும்) ஏற்கெனவே ஓய்வூதியச் சலுகைகள் தரப்பட்டுள்ளன. மேற்சொன்ன தேதிகளுக்கு முன்னர் தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையங்களிலிருந்தும், வட்டாரப் பொறியியல் கல்லூரியிலிருந்தும் ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கிட அரசு இப்பொழுது முடிவு செய்துள்ளது. தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையப் பணியாளர்களுக்கும் 'மூன்று நிலை காப்புறுதித் திட்டத்தை' விரிவாக்குவது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

VIII விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலனுக்காக 1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பெரும் தொகையான ரூ. 324 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது—கட்டிடங்களுக்கான ரூ. 20 இலட்சம் உட்பட, அதில் தேசீய மாணவர் படைக்கு ரூ. 130 இலட்சமும், தேசீய பணித் திட்டத்துக்கு ரூ. 55 இலட்சமும், சாரண சாரணியருக்கு ரூ. 3 இலட்சமும், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறைக்கு ரூ. 136 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன,

(1) விளையாட்டும் இளைஞர் நலனும்

2. 1979 ஆம் ஆண்டு செப்டம்பரில் புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறையின் இயக்குநரக அலுவலகம், சென்னை சேத்துப்பட்டு நேரு பூங்கா அருகில்

அமையவிருக்கிறது. அந்த அலுவலகத்துக்கும், மற்றும் விளையாட்டுகளுக்கான எல்லா வசதிகளும் அமைந்த விளையாட்டுக் கேந்திரம், விளையாட்டு பயிற்றுநர்களுக்கான வட்டாரமையம் ஆகியவற்றுக்கும் சேர்த்து சேத்துப்பட்டு பகுதியில் கட்டிடம் கட்டுவதற்காக 1981–82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் துறையை வலுப்படுத்துவதற்காக 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 1.80 இலட்சம் செலவில் கூடுதல் பதவிகள் ஏற்படுத்தப்படும். விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்றுவதில் உதவி செய்யும் வகையில் திரைப்பட சேமிப்பகம் ஒன்றும் இத்துறையில் அமைக்கப்படும். கட்டிடத்திற்குள் விளையாட்டுக்கள் நடத்துவதற்கான விளையாட்டு அரங்கம் ஒன்றை அடுத்த ஆண்டு சென்னை மாநகரில் இவ்வரசு கட்டக் கருதியுள்ளது.

விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்கு தனி விடுதிகளும்.

3. 1980–81 ஆம் ஆண்டில், சென்னை (ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி), கோயம்புத்தூர் (பெரிய நாயக்கன் பாளையம் மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி), அண்ணாமலை நகர் (இராணி சீதை ஆச்சி மேல்நிலைப்பள்ளி) ஆகிய மூன்று இடங்களில் விளையாட்டுப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. அவை மூன்றிலும் சேர்த்து மொத்தம் சேர்க்க அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 175 ஆகும். அவ்வாண்டில் திருநெல்வேலி, மதுரை திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அந்தந்த வட்டாரத்திலுள்ள மாணவர்களில் விளையாட்டுக்களில் வல்லவர்களாக உள்ளவர்கள் முப்பது பேர் தங்க வசதி அளிக்கும் தனி விடுதிகள் அமைக்கப்பட்டன.

4. அனைத்துப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வி கட்டாயமாகும். எந்தெந்த நடுநிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள், உள்ளனரோ அந்தந்த நடுநிலைப்பள்ளிகளில் 6–8 வகுப்புகளிலும், அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் 6–9 வகுப்புகளிலும், உடற்பயிற்சிக் கல்வி தேர்வுக்கான பாடங்களிலும் ஒன்றாகும். ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் உள்ள நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும், பத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளைக் கொண்ட தொகுதி ஒவ்வொன்றுக்கும் தனி விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் இத்துறை நிதி உதவி தந்து வருகிறது.

5. சென்னை, மதுரை காமராஜ், அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் உள்ள விளையாட்டுக் கேந்திரங்களை மேம்படுத்த 1981–82—ல் இத்துறை மொத்தம் ரூ. 1 இலட்சம் மானிய உதவி செய்யும். அக்கேந்திரங்களுக்கும் கல்லூரிகளுக்கும் பல்வேறு விளையாட்டுகளுக்கான பயிற்றுநர்கள் 14 பேர்களுடைய சேவையை இத்துறை தன் செலவில் கிடைக்கும்படி செய்யும்.

6 தஞ்சாவூர், தருமபுரி, புதுக்கோட்டை, பெரியார் மாவட்டங்களில் திறந்த வெளி விளையாட்டரங்கங்கள் கட்ட 1980–81-ல் மாவட்டத்துக்கு ரூ. 1 இலட்சம் வீதம் நிதி உதவி

1981 ஏப்ரல் 23]

தரப்பட்டது. 1981-82-ல் அந்நான்கு மாவட்டங்களுக்கும் இவ்வகையில் மாவட்டத்துக்கு ரூ 1 இலட்சம் வீதம் மேலும் மானியம் தரப்படும். 1980-81-ல் வட ஆற்காடு, சேலம் மாவட்டங்களில் நீச்சல் குளம் அமைக்க நிதி உதவி தரப்பட்டது. மேலும் இரு மாவட்டங்களின் தலைமையிடங்களில் நீச்சல் குளங்கள் அமைக்க 1981-82-ல் ரூ. 14 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. ஊராட்சி ஒன்றியத் தலைமையிடங்கள் அனைத்திலும் கிராமப்புற விளையாட்டு மையங்கள் அமைக்க முன்னரே ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1981-82-ல் அத்தகைய மையங்கள் மேலும் 150 அமைக்கப்படும். விளையாட்டுகளில் ஆற்றல் பெற்ற சிறுவர் சிறுமியரை (16 வயதுக்குக் குறைந்தவர்களை) விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து அவர்களுக்கு தீவிரமான பயிற்சி அளித்து அவர்கள் திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை செயல்படுத்தி வரும் திட்டம் வரும் ஆண்டின் மேலும் விரிவாக மேற்கொள்ளப்படும்.

8. மாவட்டத் தலைமையிடங்கள் இரண்டில், மாவட்டத்துக்கு ஒன்றாக இரண்டு இளைஞர் விடுதிகள் கட்ட 1980-81-ல் மானியம் தரப்பட்டது. 1980-91-ல் இளைஞர் விடுதிகள் மேலும் இரண்டு அமைக்கப்படும். கிராமங்களில் இளைஞர் மன்றங்கள் தொடங்குதல், இளைஞர்களிடையே மலையேறுதல் முதலிய தீரமிகு முயற்சிகளை வளர்த்தல் ஆகிய திட்டங்களுக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

9. வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி தருவதற்கான திட்டத்தின் கீழ் இதுவரை 25 விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

10. தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களை இத்துறை கவுரவித்து வருகிறது. ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் பெறும் சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனை ஒவ்வொருவருக்கும் சுமார் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பில் வீடு ஒன்றை தமிழக அரசு வழங்கும் என்று 2-10-1980 அன்று சிறந்த விளையாட்டு, வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் விருந்து அளிப்பதற்காக திருச்சிராப்பள்ளியில் நடந்த விழவில் பேசும் போது முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். 1980-ல் மாஸ்கோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வெற்றிபெற்ற இந்திய ஹாக்கி அணியின் தலைவரான திரு. பாஸ்கரனுக்கு ரூ. 1,47,000 செலவில் வீடு வாங்கித்தர அரசு ஏற்கெனவே ஏற்பளித்து உள்ளது.

தேசிய மாணவர் படை

11. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையில் தற்பொழுது 21,000 மாணவர், மாணவியர்களைக் கொண்ட 50 முதுநிலைப் பிரிவுகளும், 66,850 மாணவ-மாணவியர்களைக் கொண்ட 667

இளநிலை பிரிவுகளும் உள்ளன. தேசிய மாணவர் படைக்கு இவ்வரசு 1981-82 ஆம் ஆண்டில் செலவிட விருக்கும் தொகை ரூ. 130 இலட்சங்களாகும். இத்துறையின் கீழ் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள்—அமைச்சுப் பணியாளர்கள் ஓட்டுநர்கள், கடைநிலை ஊழியர்கள் முதலியோர் எண்ணிக்கை 1,100 ஆகும்.

12. தேசிய மாணவர் படையில் சிறந்த முறையில் பங்கேற்கும் மாணவ மாணவியருக்கு படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம் ஒன்றுக்கு 1980–81 முதல் ஏற்பளிக்கப்பட்டுள்ளது 170 படிப்பு உதவித் தொகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முதுநிலைப் பிரிவில் மாதம் ரூ. 50 வீதமும், இளநிலைப் பிரிவில் மாதம் ரூ. 25 வீதமும் இப் படிப்புதவித் தொகை வழங்கப்படும். அம் மாணவ மாணவியர் தங்கள் படிப்பை முடிக்கும் வரை இத்தொகைகள் வழங்கப்படும்.

தேசிய பணித் திட்டம்.

13. தேசிய பணித் திட்டத்தில் பங்கேற்ற கல்லூரி மாணவர் எண்ணிக்கை 1976–77-ல் 20 000 ஆக இருந்தது. 1979–80 முதல் 40,000 ஆக உயர்ந்துள்ளது. 1980–81 லிருந்து மேல்நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. 1980–81-ல் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 10,000 பேர் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டனர். 1981–82-ல் மேலும் 10,000 மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் சேர்க்கப்படு வார்கள். ஆண்டுதோறும் இத்திட்டத்தில் பங்கேற்கும் மாண வர்களில் பாதி பேர் விடுமுறைக்காலங்களில் சுமார் 10 நாள் அளவுக்கு கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தி கிராமப்புற வளர்ச்சிப் பணிகளை (குறிப்பாக எழுத்தறிவிக்கும் பணியை) செய்கின்றனர். இத்திட்டத்திற்கு 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 55 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

IX. கலைப் பணிகள்.

(1) இசை, நடனம், நாடகம், ஓவியம் முதலியவை.

இயல், இசை, நாடக மன்றம்;

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் அரசின் முழு நிதி உதவியுடன் இயங்கி வரும் தன்னாட்சி உரிமையுள்ள ஒரு நிறுவன மாகும். அது நடனம், நாடகம், இசை ஆகிய கலைகளைப் பேணி வருகின்றது. திறம் மிக்க சிறந்த கலைஞர்களை ஊக்கு விக்கிறது. சிறந்த கலைஞர்களுக்கு "கலைமாமணி" பட்ட மளித்து சிறப்பிக்கிறது. இம்மாநிலத்திலிருந்து பிற மாநிலங் களுக்கும், பிற மாநிலங்களிலிருந்து இம்மாநிலத்திற்கும் போய் வரும் கலைக் குழுக்களை கவனிக்கின்றது. 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இம்மன்றத்தின் வெள்ளி விழா கொண்டாடப் பட்டது.

2. அமைக்கவிருக்கும் நாடகக் கலைத் தனிப்பயிற்சிப் பள்ளிக்கான பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

இசைக் கல்லூரிகள்

3. சென்னையிலும் மதுரையிலும் உள்ள அரசு இசைக் கல்லூரிகளில் மொத்தம் சுமார் 540 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஒய்வூதியம்

4. வறுமையால் வாடும் ஏறத்தாழ 1,000 கலைஞர்கள் மாதந்தோறும் அத்திட்டத்தின்கீழ் ரூ. 150 ஒய்வூதியம் பெற்று வருகின்றனர். ஒய்வூதியம் முதற்கண் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகின்றது. ஒய்வூதியம் பெறுபவர் வறுமை நிலையிலேயே தொடர்ந்தால், மீண்டும் மூன்று ஆண்டு, மூன்று ஆண்டாக புதுப்பிக்கப்படுகிறது. அவ்வாறு ஒய்வூதியம பெறும் கலைஞர் இறந்துவிட்டால் அவரது மனைவிக்கும் அவர் நிலையைப் பொறுத்து, இறக்கும் வரை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்து இந்த ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் இந்த ஒய்வூதிய வகையில் மொத்தம் ரூ. 21 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓவியம் நுண்கலைக் குழு

5. ஓவியம் முதலிய நுண்கலைகளைப் பேணி வளர்க்கும். தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு, தன்னாட்சியுரிமையுள்ள நிறுவனமாகும். அது ஆண்டுதோறும் ரூ. 2 இலட்சம் மானியம் பெறுகிறது. அதன் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது.

ஜவஹர் பால பவன்

6. ஜவஹர் பால பவன் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. கலை, இசை, நடனம், முதலியவற்றில் இளஞ்சிறார்களிடம் மறைந்துள்ள திறமைகளை வளர்த்துக்கொள்ள வசதி அளிக்கும்படி, கல்வி மற்றும் மனமகிழ் மன்றமாக அது இருக்கும் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை முதலிய மாவட்ட தலைமையிடங்களுக்கும் அது தன் பணியை விரிவாக்கியுள்ளது.

(2) ஆவணக் காப்பகமும் அருங்காட்சியகங்களும்

ஆவணக்காப்பகம்

1. தமிழ்நாடு ஆவணக் காப்பகம் ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன், அரசு ஆவணக் காப்பகமாகவும் செயல்படுகிறது. 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆவணங்கள் அதில் உள்ளன. கடந்த 30 ஆண்டுகளுக்கு முந்திய ஆவணங்கள் ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுக்குத் தரப்படுகின்றன. ஆராய்ச்சியாளர் கூடத்தில் ஆராய்ச்சியாளர்களுக்கு சிறந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2. 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பெற்ற தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு தென்னகத்தின் பல்வேறு வாழ்கை அம்சங்கள் குறித்த ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்காக இரண்டாண்டு கால ஆராய்ச்சி மாணவப் பணியிடங்களை வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆராய்ச்சி மாணவருக்கும் ரூ 5,000 சில்லரைச் செலவினங்களுக்காக ஆண்டுதோறும் அளிக்கப்படுகின்றது. 1980-82 இரண்டாண்டு காலத்தில் ஆராய்ச்சிப் பணியில் நால்வர் ஈடுபட்டுள்ளனர்.

3. தெரிந்தெடுத்த ஆவணங்களை அச்சிட்டு வெளியிட ஒரு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. 'திருநெல்வேலி கலவர சதி வழக்கும் ஆஷ் கொலையும்', 'சிறைகளிலிருந்து வெளிவரும் கைதிகளுக்கு உதவுவதற்கான மாநில சங்கம்' ஆகிய பொருள்களைப்பற்றிய ஆவணத் தொகுப்புகளை அச்சிட்டு வெளியிட ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

4. மாவட்ட விவரச் சுவடிகளை திருத்தியமைத்து மீண்டும் எழுதுவதற்கான மாவட்ட விவரச்சுவடிகள் பிரிவும் இத்துறையின் கீழ்தான் செயல்படுகின்றது. புதுக்கோட்டை மாவட்ட விவரச்சுவடி அச்சில் உள்ளது. தருமபுரி மாவட்ட விவரச்சுவடி வெளியீடு விரைவில் ஏற்பளிக்கப்படும். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் விவரச்சுவடிகளை எழுதுவதற்கான விவரங்கள் தொகுக்கப்பட்டு வருகின்றன.

அருங்காட்சியகங்கள்

5. சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை ஆகிய இடங்களில் அரசு அருங்காட்சியகங்கள் அருங்காட்சியக இயக்குநரின் கீழ் செயல்படுகின்றன. 1981-82 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் அல்லது வேலூரில் மாவட்ட அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படும்.

6. சென்னையில் ரூ. 29 இலட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்று அமைக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியகத்தைச் சார்ந்துள்ள தேசிய கலைக் கூடத்துக்கு ரூ. 27 லட்சம் செலவில் புதிய கட்டிடம் ஒன்று கட்டவும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

பொது நூலகங்கள்

1. கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். அதில் 3.20 லட்சம் புத்தகங்கள் உள்ளன. உறுப்பினர்கள் 13,700 பேராவர். 1981-82-ல் ரூ. 45,000 செலவில் இந்நூல் நிலையத்தில் புத்தக பைண்டிங் பிரிவு ஒன்று அமைக்கப்படும். 1977 ஆகஸ்டு முதல் நாகர்கோயிலிலுள்ள கவிமணி நிலைய நூலகமும் இத்துறையின் கீழ் செயல்படுகிறது.

1981 ஏப்ரல் 23]

7. புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு நூலக ஆணைக்குழு உள்ளது. மாவட்டத்திற்கு ஒரு நூலகம் வீதம் தற்போது 14 மாவட்ட மைய அலுவலகங்களும், 1,419 கிளை நூலகங்களும் உள்ளன. 5,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருந்தும் இன்னும் கிளை நூலகங்கள் திறக்கப்படாத ஊர்களில் கிளை நூலகங்கள் திறப்பதற்காக சென்னை தவிர பிற மாவட்ட நூலக ஆணைக்குழுக்களுக்கு அரசு சிறப்பு மானியமாக 1981-82—ல் மொத்தம் ரூ. 5 லட்சம் தரும். கிளை நூலகம் ஒன்றுக்கு ரூ. 26,000 வீதம் மொத்தம் 20 கிளை நூலகங்கள் தொடங்க மானியம் தரப்படும்.

3. தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948-ஐ மாற்றப்பட்ட, பகுதியாகிய கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்துக்கு விரிவாக்க அரசு கருதியுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மாவட்ட நூலக ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும்.

4. மாவட்ட நூலக ஆணைக்குழுக்களின் கீழுள்ள நிலையங்கள் அனைத்திலும் உள்ள புத்தங்களின் மொத்த எண்ணிக்கை 79 இலட்சம். இவையனைத்தின் மொத்த உறுப்பினர்கள் 8.70 இலட்சம் பேர்கள். உறுப்பினர்களல்லாதவர்களும் நூல் நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள புத்தகங்களைப் பயன்படுத்தலாம். நூலகப் பணியில் உள்ளவர்கள் எண்ணிக்கை சுமார் 3,520 ஆகும்.

5. மைய அரசுக் கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி உரிமையுள்ள அமைப்பாகிய "இராசாராம் மோகன் ராய் நூலக நிறுவனம்,, பொது நூலகங்கள் தரும் பங்குத் தொகைக்கு இரு மடங்கு மதிப்புள்ள நூலக புத்தகங்களை அவைகளுக்குக் கொடுத்து வருகிறது. 1981-82 ஆம் ஆண்டில் அவ்வாறு இம்மாநில நூலகங்கள் ரூ. 4 லட்சம் மதிப்புள்ள புத்தகங்களை அந்நிறுவனத்திடமிருந்து பெற வகை செய்வதற்காக ரூ. 2 லட்சம் அந்நிறுவனத்திற்கு பங்குத் தொகையாகத் தர நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

6. 1979-80-ல் மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் நூலக மேல் வரியாக ரூ. 146 லட்சம் பெற்றன—(சென்னை மாவட்டக் குழு பெற்ற ரூ. 69 லட்சம் உள்பட). சென்னை தவிர பிற மாவட்டங்களில் உள்ள நூலக ஆணைக் குழுக்கள், நூலக மேல்வரி மூலம் வசூலிக்கப்படும் தொகைக்குச் சமமாக இணை மானியத்தையும் அரசிடமிருந்து பெறுகின்றன. 1973-74 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய இணை மானியத்தில் 25 விழுக்காடு புத்தகங்களாக கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு 1979-80 ஆம் ஆண்டில் கொடுத்த புத்தகங்கள் 3,087, மொத்தம் கொடுத்த படிகள் 4·94 இலட்சம்; செலவு ரூ. 31 லட்சம். சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு மேற்கொண்டுள்ள ஒரு கட்டிடத்

திட்டத்தின் கீழ், வட்டார நூலகக் கட்டிடங்கள் மூன்று முற்றுப் பெறும் நிலையில் உள்ளன. கிளை நூலகக் கட்டிடங்கள் 5 கட்டப்பட்டு வருகின்றன. கிளை நூலகங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்காக சென்னை தவிர பிற மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்கு மானியம்தர 1981-82-ல் ரூ. 5 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

7. நூலக ஆணைக்குழுக்களின் பணியாளர்களுக்கு ஓய் ஊதியச் சலுகையை அரசு 1—4—1974 முதல் விரிவாக்கி யுள்ளது. பணப்பயன் 1—4—1979 முதல் கிடைக்கும். 10—10—1979 முதல் குடும்ப நலத்திற்கான "குழு ஈட்டுறுதித் திட்டமும்" அவர்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

(V) தொல்பொருள் ஆய்வுத்துறை.

மாநிலத் தொல்பொருள் ஆய்வுத்துறை, இம்மாநிலத்தில், உள்ள வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களைப் பாதுகாத்து வருகிறது. தமிழ்நாடு வரலாற்றுச் சின்னப் பாதுகாப்புச் சட்டம் (1966)ன்படி இதுவரை 75 வரலாற்றுச் சின்னங்களைப் பாது காக்க, இத்துறை மேற்கொண்டுள்ளது. 1981-82 ஆண்டில் தஞ்சாவூர் அரண்மனை போன்ற வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கவும், பழுதுபார்க்கவும் ரூபாய் 5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. இந்த துறையானது தமிழ் நாட்டிலுள்ள வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களில் அகழ்வாய்வுகளையும் மேற்கொண்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் கோவலன் பொட்டல், கங்கைகொண்ட சோழபுரம், கரூர், கொற்கை, போளுமாம்பட்டி ஆகிய இடங்களில் அகழ்வாய்வுகளை இத்துறை தொடர்ந்து செய்யும்.

3. தமிழ்நாட்டில் பழங்கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள், சென்னைக்கு அருகில் குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பல இடங்களிலும், புதுக் கற்காலக்கருவிகள் திருநெல்வேலி மாவட்டத்தில் குலசேகரப்பட்டணம் அருகில் தேரி ஆகிய பகுதிகளிலும் கிடைக்கின்றன. இவற்றை ஆய்வதற்கு இத்துறையில் "வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தை ஆயும் பிரிவு" ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

4. திருச்சிராப்பள்ளி அருகில் கங்கைகொண்ட சோழ புரத்திலும், மதுரை மாவட்டம் கோவலன் பொட்டலிலும், வரலாற்றுக் காட்சிக் கூடங்கள் அமைக்க ஏற்கெனவே ஏற்பளிக் கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில், மேலும் நான்கு வரலாற்றுக் காட்சிக் கூடங்களை, பின்வரும் நான்கு இடங்களில் அமைக்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது.—அதாவது (1) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பூண்டியில் வரலாற்றுக்கு முற்பட்ட பொருட்கள் காட்சிக் கூடமும்; (2) திருநெல்வேலி

1981 ஏப்ரல் 23]

மாவட்டம் கொற்கையில் அங்கும் அருகிலுள்ள வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களான தேரி, சாயர்புரம், ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களிலும் அகழ்வாய்வில் கிடைத்த வரலாற்றுச் சிறப்புள்ள பொருட்களை உள்ளடக்கிய ஒரு காட்சிக் கூடமும்; (3) வட ஆர்ககாடு மாவட்டம் ஆர்க்காட்டில் இசுலாமிய கலையைச் சித்தரிக்கும் ஒரு காட்சிக் கூடமும்; (4) திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் கிராமியக் கட்டிடக் கலைக் காட்சிக் கூடமும்; ஆக நான்கு காட்சிக் கூடங்கள் அமைக்கப்படும். மதுரையில் வேதியியல் முறையில் தொல் பொருட்களைத் தூய்மை செய்யும் ஆய்வுக்கூடப் பிரிவும் அமைக்கப்படும்.

5. தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையான சோழ மண்டலக் கடற்கரையில் குறிப்பாக காவிரிப்பூம்பட்டினத்தில், கோவாவில் உள்ள தேசிய ஆழ்கடல் ஆராய்ச்சி நிறுவனத்தோடு இணைந்து ஆழ்கடல் அகழ்வாய்வு செய்யும் பணியையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

6. அரசு ஓலைச்சுவடி நூலகமும் தற்போது இத்துறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நூலகத்தில் 65,000 பழமையான ஓலைச்சுவடிகள் உள்ளன. 1981-82-ல் இந்நூலகத்தில் ரூ. 70,000 மதிப்பில் ஓலைச்சுவடிகளைப் படியெடுக்கும் நிழற்படக்கருவி அமைக்கப்படும்.

X தமிழ் வளர்ச்சி.

தமிழ்வளர்ச்சி இயக்ககம்.

பிற துறைகளிற்போல அரசுப் பணியிலும் ''எங்கும் தமிழ் எதிலும் தமிழ்'' என்று நடைமுறைக்கு வரவேண்டுமென்பதே அரசின் கொள்கை. அனைத்துத் துறைகளிலும் அரசுப் பணிகள் அனைத்திலும் தமிழைப் பயன்படுத்தச் செய்வதற்கான முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ் வளர்ச்சித்துறை எடுத்து வருகிறது. அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை செம்மையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றுவதற்கான மூன்றாண்டு முனைப்புத் திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளித்து முதற்கண் 98-82-ல் பத்திரப்பதிவுத்துறை சீர்திருத்தப்பணித்துறை, தீயணைப்புத்துறை. சிறைத்துறை; கால் நடை பராமரிப்புத்துறை, ஆகிய ஐந்து துறைகளில் அத்திட்டத்தை செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

2. 1867-1925 ஆம் ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களின் விவர அட்டவணை 13 தொகுதிகளாக முன்னரே வெளியிடப்பட்டுள்ளது. 1925-க்குப்பின் வெளியான தமிழ் நூல்களுக்கான விவர அட்டவணையைத் தொகுக்கும் பணி நடந்து வருகிறது.

3. தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும் தமிழ் வளர்ச்சித்துறை செயல்படுத்தி வருகிறது. தமிழ்க்

[1981 ஏப்ரல் 23

கலைக் களஞ்சியத்தின் இரண்டாவது பதிப்பை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலமாகத் தயாரித்து வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4. சிறந்த தமிழ் நூல்களுக்கு விருது அளிக்கும் திட்டத்தின் கீழ் 1975–80 ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களில் சிறந்தவற்றைத் தெரிந்தெடுக்கும் பணி நடந்து வருகிறது.

தமிழ் நாட்டு வரலாறு.

5. தமிழ் நாட்டு வரலாற்றை எழுதுவதற்காக வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆறு தொகுதிகளுடைய இவ்வரலாற்றில் தொல் பழங்காலத்தைப் பற்றிய முதல் தொகுதி முன்னரே வெளியிடப்பட்டு விட்டது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி இரண்டு பகுதிகளாக வெகு விரைவில் வெளியிடப்படும்.

மொழி பெயர்ப்புப் பணி.

6. பிறமொழி நூல்களில் சிறந்தவற்றைத் தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்குமான திட்டம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. தமிழிலிருந்து பிற மொழிகளிலும், பிற மொழிகளிலிருந்து தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்ட இலக்கியங்களின் பட்டியல் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. பின்வரும் மூன்று ஆங்கில நூல்களின்—அதாவது ஆனந்த குமாரசாமியின் ''சிவன்நடனம்'' கலீல்கிப்ரான் எழுதிய ''தீர்க்கதரிசி'' என்னும் நூல்; ''சோவித் இலக்கியத்திலிருந்து 100 கவிதைகள்''; ஆகியவற்றின் தமிழ் வடிவங்களும், ''பதிற்றுப் பத்து'' பாரதியாரின் ''ஞான ரதம்'' சங்க இலக்கியப் பாடல்களின் தொகுப்பான ''அணிலாடு முன்றில்'' ஆகியவற்றின் ஆங்கில வடிவங்களும் 1981 சனவரியில் வெளியிடப்பட்டன. வில் டுராண்ட் எழுதிய ''நாகரிக வரலாறு'' என்னும் 11 மடலம்கொண்ட மாபெரும் புத்தகமும், கிப்பன் எழுதிய ''ரோமானியப் பேரரசின் தாழ்வும் வீழ்ச்சியும்'' என்னும் வரலாற்று நூலும், தமிழாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இனி வெளியிட இருக்கும் நூல்களில் ஜிம்மர் முதலியோர் நூல்களின் தமிழாக்கங்களும், அறிஞர் அண்ணாவின் ''ரங்கோன் ராதாவின்'' பிரெஞ்சு மொழி பெயர்ப்பும் அடங்கும்.

தமிழ் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் பாராட்டு.

7. இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உமறுப் புலவர் பெயரில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்றையும், பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளையும் இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. பாவேந்தர் பாரதிதாசன் ''விருது'' ரூ. 10,000

இதுவரை கவிஞர்கள் திருவாளர்கள் சுரதா, வாணிதாசன், எஸ். டி. சுந்தரம் ஆகியோருக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ் எழுத்தாளர்களுக்கான திரு. வி. க. விருது ரூ. 10,000, 1980-ல் திரு. நாரண துரைக்கண்ணனுக்கு வழங்கப்பட்டது.

வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஒய்வூதியம்.

8. மாத வருமானம் ரூ. 400-க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழறிஞர்களுக்கு மாதம் ரூ. 250 வீதம் ஓய்வூதியம் தரப்படுகிறது. இதுவரை 92 அறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது.

பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் தமிழ்க் கல்வியையும் தமிழாராய்ச்சியையும் ஊக்குவித்தல்.

9. பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவைகள் 24-க்கு இதுவரை நிறுவனத்துக்கு ரூ. 15,000 வீதம் மானிய உதவி அளிக்கப்பட்டுள்ளது. திருவனந்தபுரத்திலுள்ள ''திராவிட மொழிகளின் மொழியியல் ஆராய்ச்சிகான பன்னாட்டுப் பள்ளியின்'' ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும் இவ்வரசு மானியம் தந்துள்ளது.

10. மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் உலகத்தில் பல்வேறு நாடுகளிலிருந்தும் வெளிநாட்டினர் பெருமளவில் கலந்து கொண்டது, வெளிநாட்டினர்க்குத் தமிழ் மொழியினிடத்து எத்துணைப் பற்று உள்ளது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. தமிழைப் பயிலுவதற்காக இந்நாட்டிற்கு வருகிற வெளிநாட்டு மாணவர்களுக்குத் தாராளமாகப் படிப்பு உதவித் தொகைகள் வழங்குமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்ளும். அதே போன்று வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்கள் தமிழ் கற்க ஆசிரியர்கள் தேவைப்படும்போது, அத்தகைய ஆசிரியர்களைத் தமிழக அரசு அவர்களுக்கு அனுப்பி உதவி செய்ய மத்திய அரசு துணை நிற்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளும்.

11. வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்குத் தமிழ் கற்றுத் தருவதற்கான பாட முறைகளை உருவாக்குவதற்கான திட்டம் ஒன்றை வகுப்பதற்காக மைசூரிலுள்ள ''இந்திய மொழிகளுக்கான மைய அரசு நிறுவன''த்தில் தமிழாசிரியர்கள் தமிழ் அறிஞர்கள் ஆகியோர் 23 பேருக்கு பணிமுகாம் ஒன்றை அரசு அண்மையில் நடத்தியுள்ளது.

செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலி.

12. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்தின் இயக்குநர், தமிழிலும், திராவிட மொழிகளிலும் சிறந்த அறிஞர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் மறைவுக்குப் பின்

இத்திட்டத்தை தமிழ் வளர்ச்சித் துறையின் ஒரு பிரிவாக தமிழறிஞர் குழு ஒன்றின் உதவியுடன் தொடர்ந்து செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

13. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தன்னுடைய தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்கிறது. அதாவது தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு இதழை வெளியிடுதல்; வெளிநாட்டு மற்றும் பிறமாநில மாணவர்களுக்குத் தமிழ் கற்றுத் தருதல்; தமிழ் இலக்கியக் கொள்கைகள் பற்றிய மாதாந்திர கருத்தரங்குகளை நடத்துதல்; இலக்கியம், பண்பாடு போன்ற துறைகளில் தமிழரின் மரபுச் செல்வம் பற்றிய கருத்தரங்குகளை நடத்துதல்; தமிழ் இலக்கியம், வரலாறு பற்றிய சிறந்த நூல்களையும் இதுகாறும் வெளியிடப்படாத சில ஓலைச் சுவடிகளையும் வெளியிடுதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

14. ஸ்ரீலங்காவிலிருந்து டாக்டர் ஏ. வேலுப்பிள்ளை இங்கிலாந்து எக்செடர் பல்கலைக் கழகத்திலிருந்து திரு. கிரிகரி ஜேம்ஸ், ஹாலந்து நாட்டில் உட்ரெக்ட் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் கமில் சுவலெபில் போன்ற பெயர் பெற்ற தமிழறிஞர்களைக் கொண்டு சிறப்பு விரிவுரைகளை இந்நிறுவனம் நடத்தியுள்ளது. ''இந்தியா-செக்கோஸ்லோவாகியா கலாச்சாரப் பரிமாற்றத் திட்டத்தின்'' கீழ் செக்கோஸ்லோவாகியா நாட்டினர் தமிழ் பயில்வதற்கான தமிழ் பாட நூல் ஒன்றை உருவாக்குவதில் இந்நிறுவனம் ஒத்துழைத்து வருகிறது.

15. இந்நிறுவனத்தில் ''சுவடியியல்'', ''மொழிபெயர்ப்பியல்'' எனும் பட்ட மேற்படிப்புப் பட்டய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

உலகத் தமிழ்ச் சங்கம்.

16. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி அறிவித்த உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு நிறுவப்படும். இந்த நிறுவனத்தில் தமிழ் மொழி வல்லுநர்கள் பணி புரிவர். இவர்கள் தமிழ் ஆராய்ச்சிப் பணியினைத் தீவிரமாக மேற்கொள்வார்கள். அந்தச் சங்கம் ஆராய்ச்சித் துறையில் முழு தன்னாட்சி உரிமை உள்ளதாகச் செயல்படும். அது உலகெங்கணும் உள்ள பல உலகத் தமிழ்ச் சங்கக் கிளை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இயங்கும். இச்சங்கம் நிறுவ இறுதிச் செலவு ரூபாய் ஒரு கோடி ஆகும். தொடக்கம் நிதி ஒதுக்கமாக 1981–82-ல் ரூ. 5 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

1981 ஏப்ரல் 23]

தமிழ்ப் பல்கலைக் கழகம்.

17. புதிய தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவது குறித்து அரசுக்கு ஆலோசனை கூற அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. அப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சாவூரில் தொடங்குவதென அரசு முடிவு செய்துள்ளது. இதனை அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ல் இவ்வாண்டு தொடங்க அரசு முயற்சி செய்து வருகிறது.

செ. அரங்கநாயகம்,
கல்வி அமைச்சர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 1.

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

	1973–74	1976–77	1977–78	1978–79	1979–80	1980–81
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
			(மாணவர்கள் இலட்சத்தில்)			
அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை—						
வயதுத் தகுதி 6–11—						
சிறுவர் ..	30,45	31.93	32.39	32.84	33.27	33.69
சிறுமியர் ..	29.79	31.23	31.68	32.11	32.54	32.95
மொத்தம் ..	60.24	63.16	64.07	64.95	65.81	66.64
வயதுத் தொகுதி 11—14—						
சிறுவர் ..	13.71	14.37	14.58	14.78	14.97	15.16
சிறுமியர் ..	13.40	14.05	14.25	14.45	14.64	14.83
மொத்தம் ..	27.11	28.42	28.83	29.23	29.61	29.99

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வயதுத் தொகுதி 14–17—						
சிறுவர் ..	11.31	11.86	12.03			
சிறுமியர் ..	11.07	11.60	11.77			
மொத்தம் ..	22.38	23.46	23.80			
வயதுத் தொகுதி 14–16—						
சிறுவர்				..	..	8.54
சிறுமியர்				..	..	8.33
மொத்தம் ..				16.32	16.51	16.87
ஆ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை—						
வயதுத் தொகுதி 6–11—						
சிறுவர் ..	30.64	32.02	33.11	33.83	34.34	34.80
சிறுமியர் ..	23.74	25.50	26.74	27.38	27.94	28.66
மொத்தம் ..	54.38	57.52	59.85	61.21	62.28	63.46

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வயதுத் தொகுதி 11–14—						
சிறுவர் ..	9.10	9.74	10.26	10.73	11.02	11.48
சிறுமியர் ..	5.09	5.76	6.12	6.29	6.65	6.94
மொத்தம் ..	14.19	15.50	16.38	17.02	17,67	18.42
வயதுத் தொகுதி 14–17—						
சிறுவர் ..	4.97	5.34	5.24			
சிறுமியர் ..	2.42	2,68	2.69			
மொத்தம் ..	7.39	8.02	7.93			
வயதுத் தொகுதி 14–16—						
சிறுவர் ..				..	..	4.45
சிறுமியர் ..				..	..	2.28
மொத்தம் ..				6.28	6.34	6.73

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்—						
வயதுத் தொகுதி 6—11—						
சிறுவர் ..	100.6	100.3	102.2	103.21	103.21	103.30
சிறுமியர் ..	79.5	81.7	84.4	85.27	85.87	86.97
சிறுவரும் சிறுமியரும்.	90.2	91.7	93.4	94.25	94.64	95.22
வயதுத் தொகுதி 11—14—						
சிறுவர் ..	66.3	67.7	70.3	72.26	73.60	75.73
சிறுமியர் ..	37.9	41.0	42.9	43.39	45.44	46.79
சிறுவரும் சிறுமியரும்.	52.3	54.4	56.8	58.25	59.68	61.42
வயதுத் தொகுதி 14—17—						
சிறுவர் ..	43.0	44.9	43.7	..	..	..
சிறுமியர் ..	21.8	23.1	22.9	..	..	..
சிறுவரும் சிறுமியரும்.	33.0	34.1	33.4	..	..	..

வயதுத் தொகுதி 14—16—						
சிறுவர் ..	..	..	..	..	..	52.07
சிறுமியர் ..	..	..	..	..	..	27.40
சிறுவரும் சிறுமியரும்	..	..	..	38.46	38.44	39.90
ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை—						
முதல்நிலைப் பள்ளிகள்	26,726	27,306	27,395	27,425	27,662	27,648
நடுநிலைப் பள்ளிகள்	5,773	5,730	5,709	5,705	5,685	5,658
உயர்நிலைப் பள்ளிகள்	2,828	3,030	3,058	2,196	2,088	2,069
மல்நிலைப் பள்ளிகள்	..	..	..	912	1,138	1,300
மொத்தம் ..	35,322	36.066	36,162	36,238	36,573	36,675

மேல் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர்-மாணவர் விகிதம் போன்ற வகையில் பின்தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் (10-ம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்.

உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை—

முதல்நிலைப் பள்ளிகள்	1,06,332	1,11,033	1,11,184	1,11,808	1,12,535	1,11,071
நடுநிலைப் பள்ளிகள்	66,843	67,846	68,794	69,279	66,568	69,516
உயர்நிலைப் பள்ளிகள்	65,959	72,838	73,039	75,136 (உயர்நிலை, மேல்நிலை சேர்த்து)	34,102	32.427
மேல்நிலைப் பள்ளிகள்	..	..	..		45,257	53,843
மொத்தம் ..	2,39,134	2,51,717	2,53,017	2,56,223	2,58,462	2,66,857

ஊ. ஆசிரியர்—மாணவர் விகிதம்—(ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி)—

(1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகையில் சேர்த்து)—

முதல்நிலைப் பள்ளிகள்	35	36	37	38	39	40
நடுநிலைப் பள்ளிகள்	33	33	33	36	37	36
உயர்நிலைப் பள்ளிகள்	24	24	24	24	23	23
மேல்நிலைப் பள்ளிகள்	..	..	..	..	28	27

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களை, ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)—

முதல்நிலைப்பள்ளி வகுப்புத் தொகுதி.	37	36	37	39	38	38
நடுநிலைப்பள்ளி வகுப்புத் தொகுதி.	33	33	33	33	32	31
உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி.	29	30	27	26	26	24
மேல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி.	..	..	..	..	22	20

[1] 1980–81-ல் (–10-80-ல் இருந்தவாறு) பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய புள்ளி விவரங்கள்.

பள்ளிகள். (1)	பள்ளிகள் எண்ணிக்கை. (2)	மாணவர்கள் (இலட்சத்தில்.) (3)	ஆசிரியர்கள் (4)
முதல் நிலை (பிரைமரி) பள்ளிகள்—			
அரசு	1,421		
நகராட்சி	1,094		
ஊராட்சி ஒன்றியம்	20,199		
தனியார்	4,934		
	27,648	44·16	1,11,70

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)		(3)	(4)
நடுநிலைப்பள்ளிகள்—				
அரசு	181			
நகராட்சி	398			
ஊராட்சி	3,113			
தனியார்	1,966			
		5,658	24·95	69,516
மொத்தம் தொடக்கப் பள்ளிகள்		33,306	69·11	1,80,587
உயர்நிலைப் பள்ளிகள்—				
சாதாரணம்:				
அரசு	1,486			
நகராட்சி	72			
தனியார்	400			
		1,958	7·04	29,898
ஆங்கிலோ இந்தியன்		17	0·12	361
மெட்ரிகுலேசன்		29	0·13	535
சி. பி. எஸ். ஈ. முதலியவை ..		65	0·30	1,633
மொத்தம் உயர்நிலைப் பள்ளிகள் ..				
		2,069	7·59	32,427

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மேல்நிலைப்பள்ளிகள்—				
சாதாரணம்—				
அரசு	572			
அரசு (தொழில் நுட்பம்)	14			
நகராட்சி	57			
தனியார்	543			
		1,186	13·39	49,146
ஆங்கிலோ இந்தியன்		26	0·26	799
மெட்ரிகுலேசன்		31	0 28	1,141
சி. பி. எஸ். ஈ. முதலியவை		57	0·65	2,757
மொத்தம் மேல்நிலைப் பள்ளிகள்		1,300	14·58	53,843
மொத்தம் அனைத்து பள்ளிகளும் சேர்த்து ..		36,675	91·28	2,66,857
	மாணவர்		52·44 }	
	மாணவியர்		38·84 }	

ஏனைய பள்ளிகள்—

(1)	எண்ணிக்கை. (2)	மாணவர்கள். (3)	ஆசிரியர்கள் (4)
இளஞ்சிறார் பள்ளிகள்	31	4,709	111
கீழ்த்திசை பள்ளிகள்	18*	3,346	193
ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்	79	2,162	279
கைத்தொழில் பயிற்சி மையங்கள் ..	7	500	40

*கீழ்த்திசைப் பள்ளிகள் 18-ல் இரண்டு மேல் நிலைப் பள்ளிகள் ஆகும். அவ்விரண்டு பள்ளிகளின் எண்ணிக்கை மேலே தனியார் மேல் நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை எனக் கண்டுள்ள 543 பள்ளிகளில் சேர்ந்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1980-81-ல் பள்ளிகளில் பணி செய்து வந்த ஆசிரியர்களின் நிருவாகவாரி விவரம்.

பள்ளிகள்.	அரசு.	நகராட்சி.	ஊராட்சி ஒன்றியம்.	தனியார்.	மொத்தம்.	ஆசிரியர்களில் ஆண்.	ஆசிரியர்களில் பெண்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
முதல் நிலைப் பள்ளிகள் ..	6,907	9,340	65,479	29,345	111,071	68,372	42,699
நடுநிலைப் பள்ளிகள்	3,461	6,996	29,279	29,780	69,516	36,647	32,869
உயர்நிலைப் பள்ளிகள்	21,220	1,449	..	9,758	32,427	21,404	11,023
மேல்நிலைப் பள்ளிகள் ..	22,721	3,018	..	28,104	53,843	34,330	19,513
மொத்தம் ..	54,309	20,803	94,758	96,987	266,857	160,753	106,104

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II.

கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

விவரங்கள். (1)	1973–74. (2)	1976–77. (3)	1977–78. (4)	1978–79. (5)	1979–80. (6)	1980–81. (7)
1. மொத்த மாணவர் எண்ணிக்கை—						
(1) புகுமுக வகுப்பு	72,646	84,257	89,423	77,802	..	..
(2) பி. ஏ. ..	51,698	44,697	43,077	42,871	47,872	53,903
(3) பி. எஸ். சி.	49,057	48,110	48,948	51,622	56,847	65,980
(4) பி. காம். ..	14,859	19,195	20,451	20,725	21,744	23,834
(5) பட்ட மேற் படிப்பு ..	6,993	7,043	7,012	7,509	9,263	10.994
மொத்தம் ..	195,253	203,302	208,911	200,529	135,726	154,711

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
2. ஆசிரியர்களின் எண்ணிக்கை—						
(1) அரசுக் கல்லூரிகள் ..	2,969	3,733	3,812	3,813	3,752	3,857
(2) தனியார் கல்லூரிகள் ..	7,090	7,883	8,394	3,329	8,438	8,713
மொத்தம் ..	10,059	11,616	12,206	12,142	12,190	12,570
3. கல்லூரிகள் எண்ணிக்கை—						
(1) அரசு ..	51	51	51	51	51	51
(2) தனியார் ..	127	138	137	137	136*	136
மொத்தம் ..	178	189	188	188	187	187

*அண்ணாமலைப்பல்கலைக்கழக புகுமுகக் கல்லூரி 1979-80 முதல் மூடப்பட்டு விட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிறகல்லூரிகளுக்கான 1980-81-ம் ஆண்டு விவரங்கள்.

வகை.	கல்லூரிகளின் எண்ணிக்கை.		மாணவர் எண்ணிக்கை.	ஆசிரியர்களின் எண்ணிக்கை.
	அரசு.	தனியார்.		
(1)	(2)	(3)	(4)	(5)
(1) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்	7	16	3,354	231
(2) உடற்பயிற்சிக் கல்லூரிகள்	..	3	321	36
(3) புலவர் கல்லூரிகள்	..	15	1,765	141
(4) சமுதாயப் பணி பள்ளி	..	2	191	16
(5) கிராமப்புற உயர் கல்வி நிலையம் ..	..	1	583	70
(6) இசைக் கல்லூரிகள்	2	..	542	51
(7) ஆயுர்வேத கல்லூரி	..	1	18	6
மொத்தம்	9	38	6,774	551

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III.

1980-81 இல் தொழில் நுட்பக் கல்வி பற்றிய விவரங்கள்.

	கல்வி நிலையங்களின் எண்ணிக்கை.	மொத்த மாணவர் எண்ணிக்கை.
(1)		(2)
1 பொறியியற் கல்லூரிகள்—		
(1) அரசு	3	8,083
(2) தனியார்	3	7,300
(3) தன்னுரிமையுள்ளவை	7	
2 பாலிடெக்னிக்குகளும், சிறப்பு பட்டயப் படிப்பு நிலையங்களும்—		
(1) அரசு	20	17,770
(2) தனியார்	24	280
(3) தன்னுரிமையுள்ளவை	1	
3 தொழிற் பாட மேல்நிலைப் பள்ளிகள்—		
(1) அரசு	11	2,094
(2) தனியார்	3	
மொத்தம் ..	72	35,527

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS